# சோவியத் பொருளாதாரம்

தா. செல்லப்பா

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—475

# சோவியத் பொருளாதாரம்

ஆசிரியர்

**தா. செல்லப்பா,** எம்.ஏ. (பொருளாதாரம்),
எம்.ஏ. (அரசியல்), எம்.லிட்.,
முதல்வர்,
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி,
உசிலம்பட்டி

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition–July, 1973

T.N.T.B.S. (C.P.) No. 475

© Tamil Nadu Text Book Society

# SOVIET ECONOMY

D. CHELLAPPA

*Price Rs. 4-00*

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

*Printed by*
**Nanbargal Achagam,**
**Madras-600018.**

# அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதின்மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப்படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'சோவியத் பொருளாதாரம்' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 475ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க்குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 510 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

# முன்னுரை

பொதுப்படையாக, தமிழ் மொழியில் எல்லா நாடு களின் பொருளாதார அமைப்பு பற்றிய நூல்கள் வெளி வர வேண்டும். சிறப்பாக, இற்றைய உலகில் வல்லரசுகளாகக் கருதப்படுகிற இங்கிலாந்து, அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளின் பொருளாதாரத் தைப் பற்றிய நூல்கள் வெளிவருவது அவசியம். பிற நாட்டுச் சாத்திரங்களில் காணப்படும் கலைச் செல்வங் களையும், பேருண்மைகளையும், கருத்துகளையும், தமிழ் நாட்டவருக்கு அறிமுகப்படுத்துவது பயனுள்ளதாக இருக்கும். 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும்' என்பது கவிஞனின் கட்டளை. உலகம் வியக்கத்தக்க வகையில் தனது பொருளாதார அமைப்பினைக் கொண்டுள்ள சோவியத் யூனியனின் பொருளாதாரம் பற்றிப் பயில்வது தமிழனின் கடமை. இந் நூல் அதனை நிறை வேற்றும் முகத்தான் எடுக்கப்பெறும் முயற்சியாகும்.

சோவியத் யூனியனின் பொருளாதாரக் கூற்றுகள் பற்றிப் பற்பல நூல்கள் எழுதப் பெற்றுள்ளன. பொருளாதார வரலாற்று நூல்களும் வெளிவந்துள்ளன. இந்த நூலில் இவை இரண்டும் கலந்து எழுதப்பெற் றுள்ளது. வரலாற்றைவிட, பொருளாதாரக் கூற்று களுக்கும் பொருளாதார வளர்ச்சி அம்சங்களுக்கும் முக்கிய இடம் தரப்பட்டுள்ளது.

இப்படிப்பட்டதொரு நூலில் ஆசிரியரின் சொந்தக் கருத்துகளுக்கு அதிக இடமில்லை. அறிமுக நூல் களில் ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்துகளே கூறப்படுமாகையால் கருத்து வேறுபாடுகள் இந் நூலில் எடுத்துக்காட்டப் பெறவில்லை. பல பேராசிரியர்களின் நூல்களிலிருந்து இந் நூல் திரட்டப்பட்டதாகும்.

வரலாறு, அமைப்பு, செயல்திறம் என்ற வரிசையில் அதிகாரங்கள் எழுதப்பட்டுள்ளன.

ஆசிரியர்

# பொருளடக்கம்

பக்கம்

1. சோவியத் யூனியனின் பொருளாதார வரலாறு (புரட்சிக்கு முன்) ... 1
2. சோவியத் யூனியனின் பொருளாதார வரலாறு (புரட்சியிலிருந்து திட்டம் வரை) ... 16
3. சோவியத் பொருளாதாரத்தின் தத்துவப் பின்னணி ... 30
4. சோவியத் யூனியனில் திட்டப் பொருளாதாரம் ... 41
5. தொழில் அமைப்பும் நிருவாகமும் ... 51
6. சோவியத் யூனியனில் தொழில்துறை வளர்ச்சி ... 63
7. சோவியத் விவசாயத் துறையின் அமைப்பு ... 71
8. சோவியத் விவசாய வளர்ச்சி ... 77
9. சோவியத் பொருளாதாரத்தில் போக்குவரத்துத் துறை ... 99
10. சோவியத் யூனியனில் தொழிற்சங்கம் ... 107
11. சோவியத் யூனியனில் சமூகப் பாதுகாப்பு ... 112
12. சோவியத் நாட்டின் நிதி அமைப்பு ... 123
13. சோவியத் யூனியனின் பன்னாட்டு வாணிபம் ... 133
14. முடிவுரை ... 148

மேற்கோள் நூற்பட்டியல் ... 156

கலைச்சொற்கள் ... 159

# அட்டவணைகளின் பட்டியல்


பக்கம்

1. முக்கியப் பொருட்களின் உற்பத்திப் பெருக்கம்... 10
2. உற்பத்திப் பெருக்கம் 1860–1913 ... 12
3. 1917-20-ல் பொருளாதார நிலைமை ... 17
4. எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1966-70) சோவியத் பொருளாதார வளர்ச்சி ... 46
5. நுகர்வாளர் பண்டங்களின் உற்பத்தி உயர்வும், மூலதனப் பண்டங்களின் உற்பத்தி உயர்வும்—வருடாந்தர சராசரி வளர்ச்சி வீதம் ... 47
6. பண்டங்களின் உற்பத்தி உயர்வு ... 47
7. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் விவசாயத் துறையின் இலக்குகள் ... 48
8. கனரகத் தொழில் உற்பத்தி அதிகரிப்பு ... 66
9. மென் ரகத் தொழில்துறை, உணவுப் பொருள் துறை ஆகியவற்றின் வளர்ச்சி ... 67
10. தொழிலாளர் பணிப் பிரிவுகள்—சதவிகிதக் கணக்கில் ... 69
11. உலகத் தொழில் துறை உற்பத்தியில் சோவியத் நாட்டின் பங்கு ... 70
12. கூட்டுப் பண்ணை, அரசாங்கப் பண்ணை, விவசாயிகளின் பண்ணை ஆகியவற்றின் எண்ணிக்கை... 75
13. விவசாயிகளில் பலதரப்பட்டவர் ... 80
14. 1970-ல் அரசுக் கொள் முதலில் கூட்டுப் பண்ணை, அரசுப் பண்ணைகளின் பங்கு ... 84
15. அரசுப் பண்ணைகளின் சராசரி அளவு ... 85
16. 1965-ல் அரசுப் பண்ணைகள் மொத்த உற்பத்தியிலும் கொள்முதலிலும் வகித்த பங்கு ... 86

17. சோவியத் விவசாயத்தில் பயன்படுத்தப் பெற்ற இயந்திரங்களின் எண்ணிக்கை ... 89

18. சோவியத் விவசாயம் இயந்திரமயமாக்கப்படல் ... 90

19. சோவியத் விவசாயம் மின்மயமாதல் ... 91

20. விவசாயத்தில் செயற்கை உரங்கள் பயன்படுத்தப்பட்டது ... 93

21. சாகுபடியாகும் நிலப் பரப்பளவுகள் ... 94

22. சோவியத் யூனியனில் பயிர் வகைகள் உற்பத்தியும் கால்நடைகளின் எண்ணிக்கையும் ... 95

23. நடப்புத் திட்ட காலத்தில் சராசரி உற்பத்தி உயர்வு ... 96

24. விவசாய இயந்திரங்களின் அதிகரிப்பு ... 97

25. சோவியத் பட்ஜெட்—10கோடி ரூபிள் கணக்கில் 128

26. சில உற்பத்தித் துறைகளும் அவை தரும் மகசூல் வரியும் (1939) ... 129

27. 1940ஆம் ஆண்டுக்கான இலாப வரி ... 130

28. ஆரம்ப காலத்தில் சோவியத் பன்னாட்டு வாணிபம் ... 135

29. 1927-க்கும் 1932-க்கும் இடையில் பன்னாட்டு வாணிபம் ... 136

30. 1933-க்கும், 1940-க்கும் இடையே பன்னாட்டு வாணிபம் ... 136

31. ஏற்றுமதி இறக்குமதி அளவுகள் ... 137

32. 1946-க்கும் 1966-க்கும் இடைப்பட்ட காலத்தில் சோவியத் பன்னாட்டு வாணிபம் ... 138

33. வியாபாரப் பகிர்வு ... 138

34. சோஷியலிச நாடுகளுடன் வாணிபம் ... 139

35. பல்வேறு திட்டங்கள் ... 140

36. சில வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளுடன் வாணிபம் ... 141

37. சோவியத் ஏற்றுமதியில் பண்டங்கள் ... 142

38. சோவியத் இறக்குமதியில் பண்டங்கள் ... 143

# 1. சோவியத் யூனியனின் பொருளாதார வரலாறு

## (புரட்சிக்கு முன்)

**பிரபுத்துவப் பண்ணையடிமைப் பொருளாதாரக் காலம்**

ஏனைய நாடுகளில் நிகழ்ந்தது போலவே சோவியத் ருஷ்யாவிலும் புராதனப் பொது உடைமைச் சமுதாயம், அடிமையுடைமைச் சமுதாயம், பிரபுத்துவச் சமுதாயம், முதலாளித்துவச் சமுதாயம் போன்ற சமுதாய அமைப்புகள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றி மறைந்தன. இதன் உச்சக்கட்டத்தில் மாபெரும் அக்டோபர் புரட்சி "ஆகாவென்று அதிசயிக்க" எழுந்தது. அதன் பயனாய் அங்குச் சோஷலிசம் உறுதியாக நிலைநிறுத்தப் பெற்றுத் திகழ்கிறது.

ஒன்பதாம் நூற்றாண்டில் பிரபுத்துவப் பண்ணை அடிமை முறை கீயெவ்ஸ்காயா ரூஸ்ஸில் தோன்றிற்று. 19ஆம் நூற்றாண்டு வரை பிரபுத்துவச் சகாப்தம் இருந்தது. நில உடைமையை அடிப்படையாகக் கொண்டுதான் இங்கும் இம் முறை வளர்ச்சி பெற்றது. நிலப் பிரபுவின் நிலங்கள் என்றும், உழவர்கள் நிலங்கள் என்றும் இரு கூறாக நிலங்கள் பிரிக்கப்பட்டிருந்தன. உழவர்கள் நிலங்கள் எல்லாம் நிலப் பிரபுக்களால் அவர்களுக்கு அளிக்கப்பெற்ற நன்கொடைகளாகக் கொள்ளப்பட்டன. இந்தப் பிரபுத்துவ முறையில் மூன்று வகையான வாரம் அல்லது திறை பிரபுவுக்குக் குடியானவன் கொடுத்ததாகக் காண்கிறோம். உழவரின் உழைப்பாலான வாரம், பண்டங்களைத் திறையாகச் செலுத்தும் வாரம், பணமாகச் செலுத்தும் வாரம் ஆகியவையே இவை.

குறிக்கப்பெற்ற நாட்களில் பிரபுவின் பண்ணையில் உழைத்தது போக எஞ்சிய நாட்களில்தான் தனது சொந்தப் பண்ணையில் உழவன் பயிரிட முடியும். தானியம், இறைச்சி,

வெண்ணெய் முதலான பண்டங்களை முறைப்படி நிலப் பிரபுவின் குடும்பத்துக்குச் செலுத்த வேண்டும். பண்ட வகைகள் கொடுப்பதோடு பணமாகத் திறை கொடுத்தலும் வேண்டும்.

ஏனைய ஐரோப்பிய நாடுகளில் காணப்பெற்ற அளவில் ருஷ்யாவில் நிலப் பிரபுத்துவ முறை ஓர் ஆழமான, அடித் தளத்தைப் பெற்றதில்லை. அதன் புராதன பொது உடைமைச் சமுதாய இயல்புகள் முழுவதாக மறைந்து விடவில்லை; அவை இங்கும் அங்குமாகக் காணப்பட்டு வந்தது. இந்த நிலப் பிரபுக்கள் மற்ற ஐரோப்பிய நாடுகளில் குறுநில மன்னர்களாக மாறி நிலப் பிரபுத்துவ முறையை ஆழப்படுத்தி அரசியல் சார்பு ஏற்படுத்தினர். ருஷ்யாவில் இது நடைபெறவில்லை.

பிரபுத்துவம் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் ருஷ்யாவில் விவசாய வளர்ச்சி குன்றி இருந்தது. தரிசாக விடும் முறை, இருவயல் சாகுபடி முறை ஆகிய முறைகளின் மூல மாகத்தான் விவசாயம் நடைபெற்று வந்தது. தொடர்ந்து பல ஆண்டுகளுக்குக் குறிப்பிட்ட ஒரு பயிரைச் சாகுபடி செய்தபின் நிலம் நீண்ட காலத்துக்குத் தரிசாக விடப்பட்டது. அல்லது ஒரு பகுதி நிலம் சாகுபடி செய்யப்படும். மற்றப் பகுதி தரிசாக விடப்படும். இது மாறி மூவயல் முறை கையாளப்பட்டது. இதன்படி ஒரு நிலத்தில் முதல் பருவத்தில் மாரிக்காலப் பயிர் களும், அடுத்த பருவத்தில் வசந்தகாலப் பயிர்களும், மூன்றாவது பருவத்தில் அந்த நிலம் தரிசாகவும் விடப்பட்டது.

பயிர்த் தொழிலோடு சேர்ந்து குதிரை, காளை, பசு, ஆடு, பன்றி முதலிய கால்நடைகளை வளர்ப்பது விவசாயத்தின் கிளையாக இருந்தது. பிரபுக்களிடமும், மடாலயங்களிடமும் ஏராளமான கால்நடைகள் இருந்தன. விவசாயிகளிடம் கால் நடைகள் இருக்கவில்லை.

விவசாயக் கருவிகள் மிகப் புராதன நிலையிலேயே இருந்தன. 9ஆம் நூற்றுண்டில் காணப்பட்ட கருவிகள்தான் 19ஆம் நூற் ருண்டிலும் காணப்பட்டன. இரும்புக் கொழுவைக் கொண்ட மரக்கலப்பை, மரத்தாலான பரம்படிக்கும் கருவி, கதிர் அறுக்கும் அரிவாள், முதலான கருவிகளைக் கொண்டே அக் காலப் பயிர்த் தொழில் நடைபெற்று வந்தது. விவசாய உற்பத்தியின் தொழில் நுட்ப வளர்ச்சி மட்டமாக இருந்தது. பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், ஒரு ஹெக்டேர் அளவு நிலத்தில் 600 கிலோகிராம் தானியமே ருஷ்யாவில் இக் காலத்தில் அறுவடை

செய்யப்பெற்றது. இதே காலத்தில் பிரான்சு நாட்டில் 1105 கிலோகிராமும், பிரஷ்யாவிலும் ஆஸ்திரியாவிலும் ஏறத்தாழ 900 கிலோ தானியமும் அறுவடை செய்யப்பட்டது.

நூற்றுக்கணக்கான பிரபுத்துவப் பண்ணைகளாக ரூஸ் அமைந்திருந்த காலத்தில், நிலச்சுவான்தாரர்களுக்கும் குடியான வர்களுக்கும் இடையிலான உறவுகளை ஒழுங்குபடுத்தவல்ல அரசாங்கச் சட்டமோ அமைப்போ ஏதும் இருக்கவில்லை. அந்தந்தப் பகுதியின் ஆட்சியாளர்களும், பிரபுக்களும் குடியான வர்மீது தங்கள் அதிகாரத்தைச் செலுத்தி வந்தனர்.

ருஷ்ய அரசு மத்தியில் வலுப்பெற்றதைத் தொடர்ந்து, குடியானவர்கள் தமக்குக் கீழ்ப்பட்டவர்களாக இருப்பதற்குச் சட்டரீதியான அங்கீகாரம் அளிக்கப் பெற வேண்டுமெனப் பிரபுக்கள் கோரலாயினர். இக் கோரிக்கைக்கு இணங்கிய மூன்றும் இவான் என்ற ஜார் மன்னன், இலையுதிர் காலத்தில் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே குடியானவர் தமது எஜமானர் களை விட்டுப் பிரிந்து செல்லலாம் என்ற சட்டத்தை 1497–ல் இயற்றினர். இச் சட்டமானது 1581-ல் மேலும் கடுமை பெற திருத்தப்பட்டது. 1597–ல் ஓடிச்சென்று தலைமறைவாக இருந்த விவசாயிகளைத் தேடிப் பிடிப்பதற்கான சட்டம் ஒன்று வகுக்கப் பட்டது. 1607லும் 1649லும் இச் சட்டம் மேலும் கொடுமை பெற திருத்தப்பட்டது.

குடியானவர்கள் இவ்விதச் சட்டங்களுக்கு எதிராகப் போராடினர். பிரபுத்துவத்தின் இறுதி நாட்களில் குடியான வர்கள் இயக்கம் வலுத்தது. எனினும், அவர்கள் எழுச்சி சில சீர்திருத்தங்கள் வேண்டுமென்ற நோக்கோடு எழுந்ததே யல்லாமல், வேறு அடிப்படையான, புரட்சியான குறிக்கோளோ, அமைப்போ கொள்கையோ கொண்டதாய் இருக்கவில்லை.

பிரபுத்துவக் காலத்தில் கைத் தொழில்களும், பட்டறைத் தொழில்களும் பண்டு இருந்த நிலையிலேயே இருந்தன. உலோகங்களை உருக்குவது, பல வண்ண வடிவங்களாக அவற்றை வார்ப்பது, கண்கவர் சித்திர வேலைப்பாடுகள் செய்வது போன்ற பல தொழில்களில் ருஷ்ய நாட்டுத் தொழிலாளர்கள் அன்று கைதேர்ந்து விளங்கினர். கட்டடத் தொழிலிலும் சிறப்பான தேர்ச்சிப் பெற்றிருந்தனர். பீரங்கிகள் செய்வதிலும், கோவில் பணிகளிலும் அவர்களது வார்ப்படக் கலை சிறப்புப் பெற்றது.

இவ்வாறான பொருளாதாரப் போக்கு ருஷ்யாவை முதலாளித்துவப் பாதைக்கு அழைத்துச் சென்றது. பண்ணையடிமைப் பொருளாதாரம் புதிய சூழ்நிலைகளுக்கேற்றதாக இருக்கவில்லை. 1853—56-ல் நடந்த கிரிமியா யுத்தம் பண்ணை முறை ஒழிப்புக்கு உறுதுணையாக அமைந்தது. இந்த யுத்தம் பொருளாதாரத் துறையில் பிரபுத்துவ ருஷ்யா எவ்வாறு முற்றிலும் பிற்பட்ட நிலையில் இருந்தது என்பதை எடுத்துக்காட்டியது.

இரண்டாம் அலெக்சாந்தர் என்ற ஜார் மன்னன் குடியானவர்கள் தம்மைத் தாமே விடுவித்துக் கொள்ளும் வரையில் காத்திருப்பதை விட, அவர்களுக்குச் சட்டரீதியாக விடுதலை அளிப்பது நல்லது என்று கருதினார். எனவே 1861ஆம் ஆண்டில் குடியானவர்களுக்குச் சுதந்திரம் அளிக்கும் சட்டத்தைப் பிறப்பித்தார். நிலப் பிரபுக்கள் குடியானவர்களை வாங்கவோ, விற்கவோ, வழங்கவோ பண்டமாற்றம் செய்யவோ கூடாதென்று இச் சட்டம் விதித்தது. தங்கள் சொத்துகளுக்குத் தாமே உரிமையாளர் ஆவது, வெளியிடங்களில் வேறு வேலை தேடிக் கொள்வது போன்ற உரிமைகள் குடியானவர்களுக்கு இச் சட்டத்தினால் வழங்கப் பெற்றன. குடியானவர்களுக்கு நிலங்கள் ஒதுக்கப்பெற்றன. இவற்றை உடைமையாக்கிக் கொள்ளத் தேவைப்பட்ட பணமும் சர்க்காரால் ஐம்பது ஆண்டுக் கடனாக வழங்கப் பெற்றது. நிலங்கள் தனிப்பட்ட உழவர்களுக்கு ஒதுக்கப்படாமல் கம்யூன்கள் என்ற ஊராண்மைக்கு ஒதுக்கப் பட்டன. இதனால் அரசுக்கும் உழவர்களுக்குமிடையில் நேரடித் தொடர்பில்லாமல் போனது; என்றாலும், அரசு வழங்கிய நில மீட்புக் கடன் தொகையை வசூல் செய்யும் பிரச்சினை இம் முறையின் மூலம் எளிதாக்கப்பட்டது. நிலச்சுவான்தாரர்கள் அரசாங்கத்திடம் கொண்டிருந்த கடன்களைத் தீர்ப்பதற்குக் குடியானவர்களின் மீட்புத் தொகை பெரிதும் உதவியாக அமைந்தது. ஆனால் இது குடியானவர்களைப் பெரிதும் பாதித்தது. குடியானவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய நியாயமான விலை 54 கோடியே 40 லட்சம் ரூபிளாகும். ஆனால் 1861ஆம் ஆண்டுச் சட்டம் இதை 86 கோடியே 70 லட்சம் ரூபிள் என்று கணித்தது. பின்னர் நிலச்சுவான்தாரர்களின் சூழ்ச்சியால் இது 200 கோடி ரூபிளுக்கும் அதிகமானதொரு தொகையாகப் பெருக்கப்பட்டது.

1861ஆம் ஆண்டையப் பண்ணைச் சீர்திருத்தச் சட்டம் குடியானவர்களுக்கு ஒரு வகையில் பாதகமாக இருந்தாலும், ருஷ்யாவின் பொருளாதார வரலாற்றில் இச் சட்டத்திற்கு

முக்கியமானதோர் இடமுண்டு. தொழில் முதலாளித்துவம் ருஷ்யாவில் தோன்றுவதற்கும், விரைவான வளர்ச்சி பெறுவதற்கும் இச் சட்டம் துணை புரிந்தது. ருஷ்யப் பொருளாதார வளர்ச்சி வேகம் பெறுவதற்குரிய சூழ்நிலைகளை இது உண்டாக்கியது. பின்னே வந்த, 1864-ல் கொண்டுவரப்பெற்ற கிராம ஊராட்சி மன்றச் சீர்திருத்தச் சட்டம் 1870-ல் கொண்டுவரப் பெற்ற நகராட்சி மன்றச் சீரமைப்புச் சட்டம், 1874-ல் நிறைவேற்றப்பட்ட கட்டாய இராணுவச் சேவைச் சட்டம் ஆகியவைகள் எல்லாம், 1861ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பண்ணைச் சீரமைப்புச் சட்டத்தின் விளைவுகளே எனக் கூறுவது மிகையாகாது.

**தொழில் முதலாளித்துவப் பொருளாதாரக் காலம்**

பிரபுத்துவப் பண்ணையடிமை முறை 18ஆம் நூற்றுண்டிலேயே சீர்குலையத் துவங்கியது. பொருளாதார வளர்ச்சியின் காரணமாகச் சமுதாயத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள் பண்ணையடிமை முறை ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்ற நிலைமையை உண்டாக்கிவிட்டன. எனினும் புரட்சிகரமான முறையில் இது தீர்க்கப்படாமல் சீர்திருத்தச் சட்டத்தின் மூலம் தீர்க்கப் பட்டதால், பண்ணையடிமை முறை மொத்தமாக மாற்றப்படவில்லை. இம் முறையின் சில அம்சங்கள் நெடுங்காலம் தொற்றிக் கொண்டே இருந்தன. இருப்பினும் 1861ஆம் ஆண்டின் விவசாயச் சீரமைப்புச் சட்டம் தொழில் முதலாளித்துவம் தோன்றுவதற்கும் வளர்வதற்கும் இடையூருக இருந்த பல தடைகளை நீக்கிற்று. முதலாளித்துவத்தின் வெற்றிக்கு வித்திட்ட இந்தச் சட்டத்தை இன்னெரு கண்ணேட்டத்தில் பார்ப்போமாளுல், பின்னே சோஷலிசம் ஏற்படவும், வெற்றி பெறவும் தக்கதான சூழ்நிலை தோற்றுவிக்கவும் அது காரணமாயிருந்தது எனலாம்.

1861ஆம் ஆண்டு முதல் 19ஆம் நூற்றுண்டின் கடைசிவரை ருஷ்யாவின் தொழில் துறை வளர்ச்சியைச் சில புள்ளி விவரங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். 16-க்கும் அதிகமான தொழிலாளர்களைக் கொண்ட தொழில் நிலையங்களின் எண்ணிக்கை 1861-ல் ஏறக்குறைய 3000 ஆக இருந்தது; 1879-ல் 4500 ஆகவும், 1890-ல் 6000 ஆகவும் அதிகரித்தன. 1894-ல் இது 6400 ஆக அதிகரித்தது.

முதலாளித்துவம் உருவாவதற்கு மூலதனச் சேமிப்பு அவசியமானது. ருஷ்யாவில் மூலதனச் சேமிப்புப் பெருகிய

தென்றாலும், பிற தொழில் முதலாளித்துவ நாடுகளைப் போல் அவ்வளவு விரைவாகப் பெருகவில்லை. பண்ணையடிமை முறை முற்றுமாய் ஒழிக்கப்படாததால், உழவர்களிடமிருந்து உற்பத்தி மூலப் பொருள்களை நேரடியாக முதலாளிகள் வாங்கமுடிய வில்லை. ஆயினும் 1861-க்குப் பிறகு கூட்டுப் பங்குக் கம்பெனிகள் ருஷ்யாவில் வேகமாகப் பரவின. இரயில் பாதைகள் போடும் கம்பெனிகள், கப்பல் வியாபாரக் கம்பெனிகள், காப்பீட்டுக் கழகங்கள் போன்ற பல தொழில் துறைகள் தோன்றி வளர்ச்சி பெற்றன.

1861-ல் 78 கூட்டுப் பங்குக் கம்பெனிகளே இருந்தன. இவற்றின் மொத்த மூலதனம் ஏழு கோடியே இருபது இலட்சம் ரூபிளாக இருந்தது. 1881ஆம் ஆண்டிற்குள்ளாக 92 கோடியே 16 இலட்சம் ரூபிள் மூலதனம் கொண்ட 645 கம்பெனிகள் அமைக்கப்பட்டு விட்டன. மூலதனம் இவ்வாறு திரண்டதன் விளைவாக முதலாளித்துவத்தின் இருவேறு வர்க்கங்களாகிய முதலாளிகளும், பாட்டாளிகளும் ருஷ்ய சமுதாயத்தில் தோன்றலாயினர். இவர்கள் பிரபுத்துவ ஆட்சி யாளர்களோடோ அல்லது குடியானவர்களோடோ தொடர்பு ஏதுமில்லாத புதிய சமுதாய அமைப்புகளாகத் தோன்றினர். ஆரம்பத்தில் நிலச் சொந்தக்காரர்களாய் ஆரம்பித்தாலும் போகப் போக விவசாயத்தோடு தங்களுக்கிருந்த தொடர்பை அறுத்துக்கொண்டு விட்டனர். 19ஆம் நூற்றாண்டின் இறுதிக் குள்ளாகத் தொழில்துறை முதலாளிகளின் எண்ணிக்கை 15 இலட்சமாக உயர்ந்தது. ருஷ்யாவின் முதலாளிகள் அரசிய லிலும் சமுதாயத்திலும் ஏனைய நாடுகளுக்கு ஒப்பான உயர்ந்த நிலைகளைப் பிடிக்கவில்லையானாலும் ஆளும் வர்க்கத்தார் இவர் களுக்கு வேண்டிய சலுகைகளையும் சூழ்நிலைகளையும் பற்பலவாக உண்டாக்கித் தந்தனர்.

மறுபுறம், தொழிலாளி வர்க்கமும் எண்ணிக்கையிலும் பலத்திலும் பெருகின. 1861ஆம் ஆண்டுச் சீர்திருத்தத்தால் 40 இலட்சம் குடியானவர்கள் நிலமிழக்கவே அவர்கள் தொழில் துறையை நோக்கி விரைந்தனர். உழவுத் துறையைத் துறந்த வர்கள் அனைவரும் தொழில்துறைக்கு வந்துவிடவில்லை. ஒரு பகுதியினர் நிலமில்லாத உழவுத் தொழிலாளிகளாக மாறினர். பெரும் பகுதியினர் முதலாளித்துவத் துறையின் தொழிலாளி வர்க்கமாக மாறினர்.

19ஆம் நூற்றாண்டில் சுமார் 1 கோடித் தொழிலாளிகள் இருந்தனர். இவர்களில் 15 இலட்சம் பேர் இரயில்வே போன்ற

பெரிய தொழில் நிலையங்களில் பணிபுரிந்தனர். 10 இலட்சம் பேர் கட்டடத் தொழிலாளர்களாக இருந்தனர். 35 இலட்சம் பேர் உழவுத் தொழிலாளர்களாகப் பணிபுரிந்தனர். இவ்வாறு பாட்டாளிகளின் எண்ணிக்கை பெருகிற்று. அவர்கள் கூட்டம் கூட்டமாகப் பணிபுரிந்ததால், அவர்களின் ஒருமைப்பாடும் அதிகரித்தது. அவர்களை நிறுவன அமைப்பில் ஒன்று சேரத் துணை செய்தது.

தொழிலாளர்களின் வாழ்க்கை இழிந்த நிலையில் இருந்தது. அமெரிக்கத் தொழிலாளிக்கு ருஷ்யத் தொழிலாளியைப் போல் ஐந்து மடங்கு வருமானம் அன்று கிடைத்தது. இங்கிலாந்தின் தொழிலாளிக்கு நான்கு மடங்கு வருமானம் கிடைத்தது. 19ஆம் நூற்றுண்டின் இறுதிவரை ருஷ்யத் தொழிலாளி ஒரு நாளில் 12 மணி முதல் 14 மணி நேரம் வரை வேலை செய்ய வேண்டியிருந்தது. 19ஆம் நூற்றுண்டின் இறுதியில் இந்த வேலை நேரம் 10 மணி முதல் 11½ மணி ஆகக் குறைக்கப்பட்டது. தொழிலாளிகள் வருந்தி உழைத்துச் சம்பாதித்த கூலிப் பணத்தை, வீட்டு வாடகை யென்றும், அபராதங்கள் என்றும், தொழிற்சாலைக் கடைகளில் உணவுப் பண்டங்கள் வாங்கிய வகைக் கடன்களுக் கென்றும், பலவிதமாக முதலாளிகள் பிடுங்கிக்கொண்டார்கள்.

விவசாயத்தில் முதலாளித்துவ அம்சங்கள் தோன்றி முழு வளர்ச்சி யடைவதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன என்று லெனின் ஆராய்ந்து கூறினார்.[1] அவற்றை அமெரிக்கப் பாதை என்றும் பிரஷியப் பாதை என்றும் அவர் சுட்டினார். அமெரிக்கப் பாதையில் பண்ணையடிமைகளின் உழைப்பை அடிப்படையாகக் கொண்ட விவசாயம் சிறுகச் சிறுக முதலாளித்துவ விவசாயமாக மாறுகிறது. பிரஷியப் பாதையில் விவசாயிகளின் நிலங்கள் பறிக்கப்பெற்று அவர்களை ஏதுமற்றவர்களாக்கும் அடிப்படை முதலாளித்துவம் வளர்ச்சி பெறுகிறது.

ருஷ்யாவில் இவ்விரு பாதைகளுமே பின்பற்றப்பட்டன. ஆயினும் பிரஷியப் பாதையே பிரதானமாக இருந்தது. எங்கெல்லாம் பண்ணைகள் சந்தைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனவோ, அங்கெல்லாம் பிரஷியப் பாதை மிகவும் தீவிரமாகப் பின்பற்றப்பட்டது. 1861ஆம் ஆண்டிற்குப் பின்னர் ருஷ்ய விவசாயத்தில் வர்த்தக இயல்பு அதிகமாய்த் தோன்றத் தொடங்கியது. குலாக்குகள்[2], அல்லது பெரும் நிலச்சுவான்

[1] வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி, 13 பக்கம்—239

[2] குலாக்குகள்—Kulaks பணம்படைத்த பெரிய விவசாயிகள்.

தாரர்கள் தங்கள் பண்ணைகளில் அடிமை முறையைக் கைவிட்டு அவர்களுக்குப் பதிலாகக் கூலி உழைப்பாளர்களை நியமித்துக் கொண்டனர். புராதன உழவுக் கருவிகளுக்குப் பதிலாக, திறன் மிக்கதும் சிக்கல் நிறைந்ததுமான இயந்திரக் கருவிகள் வந்தன. விவசாய முறைகளும் மாற்றமடைந்தன. இதனுல் முதலாளித் துவப் பண்ணைகளில் மகசூல் அதிகரித்தது. விளைச்சலும் பெரும் பாகம் விற்பனைக்கு அனுப்பப் பெற்றது. கிடைத்த வருமானத்தின் பெரும்பகுதி திரும்பவும் விவசாயத்தின் வளர்ச்சிக்குச் செலவிடப் பெற்றது. 19ஆம் நூற்றுண்டின் இறுதியில் சந்தைக்குக் கொண்டுவரப் பெற்ற மொத்த தானியத்தில் 72 சதவிகிதம் குலாக்குகளின் பண்ணைகளில் இருந்து வந்தது.

தொழில் துறையில் உடைமை மையமாகிக் குவிந்துகொண்டே வந்ததைப்போல, விவசாயத் துறையிலும் குவிதல் ஏற்பட்டது. தொழில் துணிவு கொண்ட குடியானவர்களாலும், பணம் படைத்த குடியானவர்களாலும் பல சிறு குடியானவர்களிட மிருந்து நிலம் திரட்டப்பட்டு, பெரும் பண்ணைகள் தோன்ற லாயின. செழிப்பான நிலத்தில் 60 சதவிகிதத்திற்கு மேற்பட்ட நிலங்கள் பெரிய குடியான்வர்களிடமே இருந்தது.

பெரும் பகுதியான இயந்திரக் கருவிகளும், கால்நடைகளும் குலாக்குகளிடமும், நிலப் பிரபுக்களிடமும் இருந்தன. எனினும் சில நிலப் பிரபுக்களால் புதிய விவசாய முறைக்குத் தேவைப்பட்ட செலவுகளைச் சமாளிக்க இயலவில்லை. பல விவசாயக் கருவி களின் விலைகள் இவர்களால் வாங்கமுடியாத அளவுக்கு உயர்ந்து இருந்தன. பண்ணைகளை ஈடுகாட்டிக் கடன் வாங்குவதிலும் பல இடர்ப்பாடுகள் இருந்தன. எனவே தங்களது பண்ணைகளின் சில பகுதிகளைக் குலாக்குகளுக்கு விற்கலாயினர். இப்படியாக நிலப் பிரபுக்கள் தங்களது புராதீன பண்ணைகளைக் குலாக்கு களுக்கு விற்றுவிட வேண்டி நேரிட்டது.

கால அளவில், நிலப் பிரபுக்களுக்கென்றும் குடியானவர்களுக் கென்றும் தனித்தனியாக நில அடமான வங்கிகள் நிறுவப் பெற்றன. 1912ஆம் ஆண்டிற்குள்ளாக 114 கோடியே 60 லட்சம் ரூபிள் நிலப்பிரபுக்கள் அடமான வங்கியில் கடனை வாங்கி இருந் தனர். குடியானவர்களும் தங்கள் வங்கியில் ஏராளமாகக் கடன் வாங்கி, தங்களது நிலங்களின் பெரும்பகுதியை நாளடைவில் குலாக்குகளுக்கு உரிமையாக்கினர். நிலத்தின் விலையும் ஏறிக் கொண்டே வந்ததால், விற்பது இலாபமாகக் கருதப்பட்டது.

கிராமப் புறங்களில் சமுதாயத்தில் வர்க்கப் பாகுபாடு தெள்ளத் தெளிய ஏற்படலாயிற்று. குலாக்குகள், நிலமற்ற விவசாயத் தொழிலாளிகள், ஏழை விவசாயிகள் போன்ற பாகுபாடுகள் தெளிவாகத் தோன்றின.

நிலங்களும், உழவுக் கருவிகளும், கால்நடைகளும் எல்லோரிடத்தும் சீரான முறையில் பாடுபட உடைமையாக இருக்கவில்லை. நிலங்களில் 50 சதவிகிதத்திற்குமேல் பணக்கார விவசாயிகளான 20 லட்சம் பேருக்கு உடைமையாக இருந்தது. குத்தகை நிலங்களிலும் 83 சதவிகிதம் வரை குலாக்குகளிடமே இருந்தன.

கால்நடைகளும் இம் மாதிரியாகவே குடியானவர்களிடத்தில் குறைவாகவும், குலாக்குகளிடத்தில் மிகுதியாகவும் இருந்தன. 20 சதவிகித குலாக்குகளிடம் 53 சதவிகித குதிரைகள் இருந்தன. ருஷ்யக் கிராமப்புறத்தில் 32இலட்சம் சிறு குடியானவர்களிடத்தில் குதிரைகளே இருக்கவில்லை. விவசாய இயந்திரங்கள் அனைத்தும் குலாக்குகளுக்குச் சொந்தமாயிருந்தன. ஏழை விவசாயிகளுக்கு இந்தக் கருவிகளை வாங்கும் சக்தியும் இருக்கவில்லை. நவீன விவசாய முறைகளைப் பின்பற்றவும் முடியவில்லை.

சிறு குடியானவர்கள் நாளுக்குநாள் நலிந்துகொண்டே வந்தனர். இவர்கள் வேறு வேலை தேடி நகரங்களுக்கும், நாட்டின் பிற பகுதிகளுக்கும் சென்று குடியேறலாயினர். இவ்வாறு வெளியூர்களுக்குச் செல்லுமுன் விவசாயிகள் அனுமதிச் சீட்டு (பாஸ்போர்ட்) பெற்றுத்தான் போகவேண்டியிருந்தது. 1000 மக்கள் தொகைக்கு 14 பாஸ்போர்ட் ஆக 1861லிருந்தது, ஆயிரத்துக்கு 63ஆக 1900-ல் உயர்ந்தது. வேலையில்லாது பலர் வெளியேற வகையில்லாது கிராமப்புறங்களிலேயே இருந்தனர். 1900-ல் ஐரோப்பிய ருஷ்யப் பகுதியில் மட்டும் வேலையில்லாதோரின் எண்ணிக்கை 2 கோடியே 30 லட்சம் என்று மதிப்பிடப்பட்டது.

இது ஒருபுறமிருக்க, 19ஆம் நூற்றூண்டின் இறுதிக்குள்ளாக நாட்டின் மக்கள் தொகை பெருகியது. தானியம், உருளைக்கிழங்கு ஆகிய உணவுப் பண்டங்களின் உற்பத்தியும் அதிகரித்தது. விவசாயத்தில் இயந்திரக் கருவிகள் மேலும் மேலும் பயன்படுத்தப்பட்டன. இக் கருவிகளை இறக்குமதி செய்வதற்காகவும், உற்பத்திச் செய்வதற்காகவும் ஏராளமான தொகை செலவிடப்பட்டது. செயற்கை உரங்கள் உற்பத்திச் செய்யப்பட்டன. இறக்குமதியும் செய்யப்பட்டன. வியாபாரப்

பண்டங்களும், உருளைக்கிழங்கு சாகுபடியும் பெருமளவுக்கு அதிகரித்தது. இதன் விளைவாகக் குடியானவர்கள் மேலும் மேலும் ஏழைகளாகிக் கொண்டு வந்தனர். குலாக்குகள் மேலும் மேலும் செல்வந்தர்களாகி வந்தனர்.

தொழில் துறையிலும் முதலாளித்துவ அடிப்படைகள் தோன்றி வளரலாயின. பத்தொன்பதாம் நூற்றூண்டின் கடைசி இருபது ஆண்டுகளில் தொழில் துறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. அவை முதலாளித்துவ அமைப்பு உறுதியாக உறுதுணையாக அமைந்தன. இதே பணி நிறைவேற வேறு நாடுகளில் எண்பது அல்லது நூறு ஆண்டுகள் பிடித்தன. தொழில் துறையில் நீராவி இயந்திரங்கள் அதிகமாகப் பயன் படுத்தப்பட்டன. 1890ஆம் ஆண்டுக்குள்ளாகத் தொழிற்சாலை களிலும் சுரங்கங்களிலும், உலோக ஆலைகளிலும் நீராவி இயந் திரங்கள் முற்றிலும் பயன்படுத்தப்பட்டன. 1875ஆம் ஆண்டில் உபயோகிக்கப்பட்டதைவிட $2\frac{1}{2}$ மடங்கு அதிக நீராவி இயந்திரங்கள் 20 ஆண்டுகளுக்குப்பின் பயன்படுத்தப்படலாயின. உலோக உற்பத்தியிலும் பழைய முறைகளைக் கைவிட்டுப் புதிய முறைகளை மேற்கொண்டதால், உற்பத்திப் பெருகிற்று. பருத்தித் துணி உற்பத்தியும் அதிகரித்தது. கம்பளித் துணியைப் பதன் படுத்தும் ஆலைகளிலும், உணவுப் பொருட்கள் தயார் செய்யும் ஆலைகளிலும், இன்னும் பல்வேறு தொழில் நிலையங்களிலும் தொழிலாளருக்குப் பதிலாக இயந்திரங்களைப் புகுத்துவது விரைவுபடுத்தப்பட்டது. இத்தோடு இயந்திர உற்பத்தியும் விரிவடைந்தது.

**1. முக்கியப் பொருட்களின் உற்பத்திப் பெருக்கம்**

(பத்து இலட்சம் என்ற கணக்கில்)

| | 1860 | 1890 | 1900 |
|---|---|---|---|
| தேனிரும்பு ... | 20·5 | 56·6 | 179·1 |
| நிலக்கரி ... | 18·3 | 367·2 | 986·3 |
| எண்ணெய் ... | — | 241 | 632 |
| பருத்தி ... | 2·8 | 8·3 | 16·0 |
| சர்க்கரை ... | 1·9 | 24·6 | 48·5 |

இவ்வாறாக முக்கியப் பொருட்களின் உற்பத்தி உயர்ந்தது என்பதை மேலே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை காட்டுகிறது. தொழில்துறைப் பண்டங்கள் எட்டு மடங்கு அதிகரித்திருக்க வேண்டும் என்பதாகக் கணிக்கப்படுகின்றது. இவ் வளர்ச்சி 40 ஆண்டுகளில் ஏற்பட்டதாகும். இதே கால அளவில் ஜெர்மனியில் ஐந்து மடங்கும், பிரான்சில் இரண்டரை மடங்கும் பிரிட்டனில் இரண்டு மடங்கும் அதிகரித்தது என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ருஷ்யாவின் உற்பத்தி வளர்ச்சி உச்சகட்டத்தை அன்று அடைந்தது என்று சொல்லலாகும். இவற்றோடு இரயில் பாதை வளர்ச்சியும் விரைவாக வளர்ந்தது.

உற்பத்தி உயர உயர, தொழில்துறை, போக்குவரத்துத் துறை, பாங்குத் துறை ஆகிய துறைகளைச் சார்ந்த கம்பெனிகள் ஏகபோகக் கூட்டுகளை அமைத்துக் கொள்ள ஆரம்பித்தன. சர்க்கரை, எண்ணெய் போன்ற பொருட்களின் உற்பத்தி ஏகபோகக் கூட்டுகளிடம் சிக்கியது. கேந்திரத் தொழில்களும் இவ்வாறே ஏகபோகக் கூட்டுகளின் முழுக் கட்டுப்பாட்டிற்குள் வந்தன. இத்தோடு அன்னிய மூலதனமும் பெருமளவில் ருஷ்யாவிற்குள் முதலீடு செய்யப்பட்டது. பெல்ஜியம், பிரான்சு, ஜெர்மனி, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் இவ்வித முதலீடுகளை ருஷ்யாவில் மேற்கொண்டன. 1860-ல் 1 கோடி ரூபிளுக்குள் குறைவாக இருந்த அன்னிய மூலதனம் 1900ஆம் ஆண்டில் 91 கோடியே 10 லட்சம் ரூபிளாக உயர்ந்து நின்றது. ஆனாலும் அன்னிய முதலீடுகள் தேசிய முதலீடுகளைவிட மிகவும் குறைவாகவே இருந்தன. சுருங்கச் சொன்னால், 1860-க்குப் பிறகு சிறப்பான பொருளாதார மாற்றங்கள் எல்லாத் துறைகளிலும் தோன்றி வளர்ச்சி பெற்றன. இவையே முதலாளித்துவ பொருளாதாரத்தை ருஷ்ய நாட்டில் தழைக்கச் செய்தன. முதலாளித்துவ அமைப்பில் காணப்படும் நெருக்கடிகளும் அடிக்கடி தோன்றலாயின. உலகப் பொருளாதார அரங்கில் தோன்றிய நெருக்கடிகள் எல்லாம் ருஷ்ய நாட்டிலும் எதிரொலித்தன. ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளோடு ஒப்பிடும் அளவுக்கு ருஷ்யாவின் கேந்திரத் தொழில் வளர்ச்சி பெற்றது. 1885-க்கும் 1889–க்குமிடையிலும், 1907-க்கும் 1913ஆம் ஆண்டிற்கும் இடையிலும் ருஷ்யாவின் பொருளுற்பத்தி வேகம் அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி ஆகிய நாடுகளையும் மிஞ்சியது. 1890-க்கும் 1899-க்கும் இடையில் ருஷ்யப் பொருளுற்பத்தி ஆண்டிற்குச் சராசரி 8% ஆக வளர்ச்சி அடைந்தது. 1868-க்கும் 1917-க்குமிடையே வருடம் ஒன்றிற்கு 300 கிலோ மீட்டர் இரயில் பாதை போடப்பட்டது. 1908ஆம்

ஆண்டில் மட்டும் 8,390 கிலோ மீட்டர் இரயில் பாதை போடப்பட்டிருந்தது. முதலாம் உலகப் போர் துவங்கியபோது ருஷ்ய நாடு முழுவதும் இரயில் பாதைகள் போடப்பட்டு, கேந்திர முக்கியம் பெற்ற தலங்களும் இதர முக்கியப் பகுதிகளும் இணைக்கப்பட்டு இருந்தன. மாஸ்கோவையும் விளாடிவாஸ்டாக்கையும் இணைக்கும் அகண்ட சைபீரிய இரயில் பாதை போட்டு முடிவடைந்துவிட்டது. 1860-க்கும் 1913-க்கும் இடையிலான முதலாளித்துவ வளர்ச்சிக் காலத்தில் சில குறிப்பிட்ட பண்டங்களின் உற்பத்தி எவ்வளவாகப் பெருகியது என்பதைக் கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம்.

## 2. உற்பத்திப் பெருக்கம் 1860—1913

| பொருள் | அளவு | 1860 | 1870 | 1880 | 1890 | 1900 | 1913 |
|---|---|---|---|---|---|---|---|
| நிலக்கரி | 10 இலட்சம் பூடு | 18 3 | 42·4 | 200 9 | 367·2 | 995 2 | 2,214 |
| பெட்ரோலியம் | ,, | — | 1·8 | 34·0 | 241·0 | 632·0 | 561 |
| தேனிரும்பு | ,, | 19·6 | 20·7 | 26·1 | 55 2 | 176 8 | 283 |
| எஃகு | ,, | 12·4 | 14·5 | 35·3 | 48·4 | 134·4 | 247 |

இவ்வாறான துரித பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவனவாக அமைந்தவை பின் வருவனவாகும். ருஷ்யப் பண்டங்களுக்கு உள்நாட்டுச் சந்தையிலும், வெளிநாட்டுச் சந்தையிலும் ஏற்பட்ட கிராக்கியும் வளர்ச்சியும் இந்த நிலையை ஊக்குவிக்கும் வழியில் ருஷ்ய அரசாங்கமும் செயல்பட்டது. மறைந்து மூடிக்கிடந்த பல்வேறு சக்திகளின் வெளிப்பாடே சந்தை விரிவாகும். ருஷ்ய மக்கள் தொகை பெருக்கத்தாலும் இரயில்பாதை இணைப்புகளாலும் நாடு ஒருமுகப்படுத்தப்பட்டது; நிலப்பிரபுத்துவ பண்ணை முறையின் கீழ்க் காணப்பட்ட சமூக பொருளாதாரக் கருத்துகள் கிராமங்களில் பலவீனமடைந்தது—இவை முக்கிய காரணங்களாகும். இரயில்பாதை விரிப்பின் காரணமாக நாட்டைப் பிரித்து நின்ற பல தடைகள் நீங்கி, ஒரு தேசியச் சந்தை உருவாவதற்கு அடிகோலப்பட்டது. கிராமப்புறங்களில் பணப் புழக்கம் ஏற்பட்டுப் பழைய பண்டமாற்றுப் பொருளாதாரம் கைவிடப்பட்டது. அவர்கள் வாழ்க்கை முறைமையிலும், தரத்திலும் பெருத்த மாறுதல்கள் தோன்றின. கிராமப்புறங்களின் மக்கள் தொகை பெருக்கத்தைவிட நகர்ப்புற

மக்கள் தொகை பெருக்கம் அதிகமாக இருந்தது. தேவை விரிவடைந்ததினால் முதலீடுகளும் விரிவடைந்தன. மத்திய ஐரோப்பாவும், மேற்கத்திய ஐரோப்பாவும் இயந்திரத் தொழில் மயமாக்கப்பட்டன. அதனால் அந் நாடுகளுக்குத் தானிய இறக்குமதி அவசியமானது. ருஷ்யா அவைகளுக்குத் தானியம் ஏற்றுமதி செய்து, தனது வெளிநாட்டு வாணிபத்தைப் பெருக்கிக் கொண்டது.

இவ்வாறான வளர்ச்சிக்கு அரசாங்கக் கொள்கை மிக முக்கிய மானதாகும். 1861ஆம் ஆண்டைய நிலப்பிரபுத்துவ ஒழிப்பின் பங்கைப்பற்றி மேலே குறிப்பிட்டோம். இரயில் பாதை போடு வதற்கான செலவை எல்லாம் அரசாங்கமே ஏற்றுக்கொண்டது. அவ்வாறே, ஆலைகள் நிறுவப்படுவதற்கான செலவுகளையும் அரசாங்கக் கருவூலமே ஏற்றுக்கொண்டது. அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்படாத தொழில் முயற்சிகளுக்கான செலவை அரசின் பாங்கு முன்னின்று வழங்கியது. வெளி நாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட தொழில் நுணுக்கம் இயந்திர நுணுக்கம் தெரிந்தவர்களாலும், வெளிநாட்டு முதலீடுகளாலும் தொழில் வளர்ச்சி விரைவுபட்டது.

இரயில் பாதை, தொழிற்சாலைகள் போன்றவற்றின் முதலீடுகளை அரசாங்கமே மேற்கொண்டதால், அரசாங்கத்தின் நிதிநிலைமை பாதிக்கப்பட்டது. இதைச் சரிசெய்ய வரிகளை மேலும் உயர்த்த நேரிட்டது. விவசாயிகள் வரிப்பளு உயர்ந்தது. அதிக வரிகளைச் செலுத்த விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பண்டங்களைச் சந்தையில் விற்க வேண்டி வந்தது. இதன் மூலமாகவே வெளிநாடுகளுக்குத் தானியம் ஏற்றுமதி செய்வது சாத்தியமாக்கப்பட்டது. இதனால்தான் வெளிநாட்டு வாணி பத்தில் ருஷ்யாவுக்குச் சாதகமான சூழ்நிலை ஏற்பட்டது. வெளிநாட்டு மூலப்பொருட்கள், இயந்திரங்கள் மூலதனம் ஆகியவை ருஷ்யாவுக்குள் இறக்குமதி செய்யப்படுவதும் இதனால் சாத்தியமாகியது.

வெளிநாட்டுப் பொருள்களை அளவுக்கு மீறி இறக்குமதி செய்துவிடாதபடி அரசாங்கம் பல காப்பு வரிகளை விதித்தது. இதன் மூலமாய் உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் முடிந்தது. ஆனால், இரயில் பாதை போடுவதற்கான மூலப் பொருட்கள், தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திரக் கருவிகள் ஆகியவற்றின் இறக்குமதி தங்கு தடை யின்றி அனுமதிக்கப்பட்டது.

நகர்ப்புறங்களில் தொழில் வளர்ச்சிப் பெருக பெருக, ருஷ்யப் புரட்சிக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பே, தொழிற்சாலை களிலும் ஆலைகளிலும் பணியாற்றிவந்த தொழிலாளர்கள் தங்கள் கிராமப்புற உறவுகளையும் தொடர்புகளையும் துண் டித்துக் கொண்டுவிட்டனர். உலகப் போருக்கு முன்னுல் ருஷ்யா முழுதிலும் 45 இலட்சம் பேர் விவசாயமல்லாத தொழில் துறைகளில் பணியாற்றினர். இவர்களில் 20 சதவிகிதம் பேர் சிறு சிறு நிலங்களைத் தங்களது உடைமைகளாகக் கிராமப்புறங் களில் வைத்திருந்தார்கள். அந்த நிலங்களைத் தங்களது உறவினர்கள் அல்லது குடும்பத்தினர் மூலமாகப் பயிரிட்டு வந்தனர்.

தொழிலாளரின் நிலை இக்காலத்தில் மிகவும் மோசமாகிக் கொண்டே வந்தது. அவர்கள் வேலை செய்யவேண்டிய நேரம் நீண்டிருந்தது. ஆண்களும், பெண்களும், குழந்தைகளுங்கூட 12 மணி நேரத்துக்கும்மேல் உழைக்கவேண்டி இருந்தது. 1897-க்குப் பின்னர் இது 10 மணியாக மாறியது. கொடுக்கப் பட்ட கூலி மிகவும் குறைவாக இருந்தது. உயிரோடு வாழ்வதற்கு மட்டுமே போதுமானதாக ஊதியம் இருந்தது. வீட்டு வசதி சிறிதளவும் இருக்கவில்லை. மருத்துவ வசதிகள் கொடுக்கப்பெறவே இல்லை. 19ஆம் நூற்ருண்டின் முற்பகுதியில் இங்கிலாந்தின் தொழிலாளர்கள் அனுபவித்த இன்னல்கள் பலவற்றை 19ஆம் நூற்ருண்டின் இறுதியில் ருஷ்யப் பாட்டாளி மக்களும் அனுபவித்தார்கள்.

தொழிலாளர்களது ஊதிய நிலை, உழைப்பு நேரம், பாதுகாப்பு போன்றவற்றிற்காக அரசாங்கம் சில சட்டங்களை அவ்வப்போது நிறைவேற்றியது என்ருலும், இச் சட்டங்கள் சரிவர அமுல் நடத்தப்படவில்லை. 1897-ல் முதலாளிகளின் செல்வாக்கின் காரணமாகப் பெரும்பான்மையானச் சட்டங்கள் ஒத்திப்போடப்பட்டன.

தொழிலாளர்க்குள்ள கஷ்ட நஷ்டங்களை எடுத்துரைக்கச் சங்கங்கள் அமைப்பது சட்டபூர்வமாகத் தடை செய்யப் பட்டிருந்தது. இருப்பினும் 1900-க்கு முன்னரே பல வேலை நிறுத்தங்கள் நடைபெறத்தான் செய்தன. அவைகளைக் கடுமை யான அடக்கு முறையின் மூலமாக முதலாளிகள் உடைத்தனர். 1903-ல் தொடங்கி 1905 வரை நடைபெற்ற பொது வேலை நிறுத் தங்கள் ஆட்சியை நடுங்கவைக்கும் வலிமை பெற்று இருந்தன. 1905லிருந்து 1914 வரை தொழிலாளர் இயக்கம் வேகமாய்

வளரலாயிற்று. 1912, 1913, 1914 ஆகிய ஆண்டுகளில் மட்டும் 2000-த்துக்கும் மேற்பட்ட வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. 10 இலட்சம் தொழிலாளர்கள் வருடா வருடம் இவ்வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டனர். 1914-க்குப் பிறகு இவ்வித வேலை நிறுத்தங்களில் மூன்றில் இரண்டு பங்கு அரசியல் நோக்கங்களுக்காகவும் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறாக, ருஷ்ய நாட்டின் சமூகப் பொருளாதார அரசியல் நிலைகள் எல்லாம் பெரும் புரட்சியொன்று தோன்றுவதற்குச் சாதகமாக அன்று அமைந்தன.

# 2. சோவியத் யூனியனின் பொருளாதார வரலாறு

## (புரட்சியிலிருந்து, திட்டம் வரை)

### மாபெரும் அக்டோபர் புரட்சி

புரட்சிக்கு முற்பட்ட காலத்தில் ருஷ்யாவின் சமூகப் பொருளாதார வளர்ச்சிபற்றி மேலே கூறினோம். அந்த வளர்ச்சியில் நாம் குறிப்பிட்டுள்ள முரண்பாடான நிலைமைகள் முதலாம் உலகப் போரின்போது உச்ச கட்டத்தை அடைந்தன. 1917 அக்டோபரில் புரட்சிக்கு வேண்டிய எல்லாச் சூழ்நிலைகளும் நிறைவாய் அமைந்தன. எனவே, சற்றுச் சுலபமாகவும், குறைந்த அளவு உயிர்ச் சேதத்துடனும் முதலாளிகள் நிலச் சொந்தக்காரர் களின் இடைக்காலச் சர்க்காரை அதிகாரத்திலிருந்து அகற்றி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவது சாத்திய மாகியது.

தொழில் போராட்டத்தில் புடமிடப் பெற்றுச் சிறந்த முறையில் ஒருங்கிணைக்கப்பெற்ற தொழிலாளி வர்க்கம் இப் புரட்சியைத் தலைமை தாங்கி நடத்தியது. இவர்களோடு விவசாயிகளும் கூட்டணி அமைத்துக் கொண்டிருந்தனர். நிறுவன அமைப்புகளாகிய சோவியத்துகளை அமைத்துக் கொண்டதால், அமைப்பு பலம் நன்றாக இருந்தது. ருஷ்யாவின் முதலாளித்துவ சக்தியும் மிகவும் பலவீனமானதாக இருந்த காலம் உலக யுத்தம் நடந்து கொண்டிருந்ததால், மேலை நாடுகளின் ஆயுத பலம் முதலாளிகளுக்குக் கிடைக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையில்தான் 1917 அக்டோபர் 25-ல் பெட்ரோ கிராடில் கூடிய சோவியத் காங்கிரஸ் அதிகாரத்தைத் தானே ஏற்றுக்கொண்டுவிட்டதாக அறிவித்தது. இதைத் தொடர்ந்து மற்ற இடங்களிலும் புரட்சி வெற்றி பெற்றது. புரட்சி

அரசாங்கம் நிலங்களை நாட்டுடைமையாக்கியது. ஆலைகளையும், இதர சொத்துகளையும் சோவியத்துகள் கைப்பற்றினர்.

இதற்கு எதிராக எதிர்ப்புரட்சி சக்திகள் 1918-ல் கூட்டணி அமைத்துக்கொண்டு இளம் சோவியத் யூனியனை எதிர்க்க முற்பட்டன. பதினன்கு ஏகாதிபத்திய நாடுகளின் சேனைகளையும், எண்ணற்ற உள்நாட்டுப் புரட்சியாளரையும் எதிர்த்துச் சோவியத் யூனியன் மூன்று ஆண்டுகளுக்குப் போர் புரியவேண்டி நேரிட்டது. 1920ஆம் ஆண்டின் இறுதியில் தலையீட்டுக்காரர்களின் படைகள் யாவும் அறவே தோற்கடிக்கப்பட்டன.

இதற்குப் பின்னர் சோவியத் யூனியனின் பொருளாதாரத்தை மேம்பாடடையச் செய்ய லெனின் வகுத்த வழியில் செல்லலாயினர்.

ஆரம்ப நாட்களில் தொழிலாளர்களது கட்டுப்பாட்டுக் குழுக்கள் ஆலைகளையும், தொழிற்சாலைகளையும் மேற்பார்வையிட்டன. இதன் விளைவாக, இவைகள் நாட்டுடைமையாக்கப்படுவது இலகுவில் சாத்தியமாயிற்று. நாட்டுடைமையாக்க வேண்டியது அவசியமாகிவிடவே, பொருளாதாரத்தின் பல கூறுகளும் நாட்டுடைமையாக்கப்பட்டன. உள்நாட்டு யுத்தமும்,

### 3. 1917 – 1920-ல் பொருளாதார நிலைமை

| | 1913 | 1917 | 1918 | 1919 | 1920 |
|---|---|---|---|---|---|
| மொத்த உற்பத்தி (10 லட்சம் ரூபிள் கணக்கில்) | 5,621 | 3,849 | 1,845 | 955 | 818 |
| தொழிலாளர் எண்ணிக்கை 1000 கணக்கில் | 2,203 | 2,596 | 2,011 | 1,334 | 1,223 |
| ஒரு ஆண்டில் ஒரு தொழிலாளருக்கான உற்பத்தி விகிதம் (ரூபிளில்) | 2,251 | 1,482 | 917 | 715 | 669 |

அந்நியத் தலையீடும் நடைபெற்ற ஆண்டுகளில் தொழில்துறை நாட்டுடைமையாக்கப்படுவது தொடர்ந்து நடந்தேறியது. 1920-க்குள் 10 இலட்சம் தொழிலாளர்களையுடைய 4,500-க்கும் மேற்பட்ட தொழில் நிலையங்களை அரசு எடுத்துக்கொண்டு விட்டது.

தொழில்துறைச் செல்வாதாரங்கள் சிதைந்து நாசமாயிருந்த அக்காலத்தில், நிலைமை மிகக் கடினமாயிருந்தது. யுத்தத்தால் ஏற்பட்ட பொருளாதாரச் சீரழிவும், இயந்திர சாதனங்களின் தேய்மானமும், மூலப் பொருள்கள், எரி பொருள்கள், உணவுப் பொருள்கள் ஆகியவற்றின் பற்றாக்குறையும் பொருளாதார நிலைமை படுமோசமாவதற்குக் காரணமாய் அமைந்தன.

இவ்வாறு 1920-ல் தொழில் துறையின் மொத்த உற்பத்தி 1913-ல் இருந்ததைவிட 86 சதவீதம் குறைந்துவிட்டது. தொழிலாளர்களின் எண்ணிக்கை 45 சதவீதமும், உற்பத்தி ஆற்றல் 75 சதவீதமாகவும் குறைந்து பட்டன.

சிக்கலான இக்காலத்தில் நிதி வசதிகளும், பணப் புழக்கமும் இருந்த நிலையைச் சற்று ஆராய்வோம். உள்நாட்டு யுத்தமும், அந்நியத் தலையீடும் இருந்தபோது நாட்டின் நாணய முறை முற்றிலும் சீர்குலைந்துவிட்டது. புரட்சிக்குப் பிறகு பணப் பற்றாக்குறை கடுமையாகியது. மேலும் அதிகரித்து வந்த பணத் தேவையைச் சமாளிக்கும் பொருட்டுச் சோவியத் அரசு நோட்டுகளை அச்சிட வேண்டியதாகியது. 1918 ஜனவரியில் புழக்கத்திலிருந்த பணத்தின் அளவு 2,700 கோடி ரூபிள். 1921-க்குள் இது 43 மடங்காய் பெருகி, 1,16,900 கோடி ரூபிளாக உயர்ந்தது. கள்ள நோட்டுகளும் பெருத்துவிட்டன. இதனால் விலை வீக்கம் ஏற்பட்டது.

இந்தச் சூழ்நிலைமைகளின் காரணமாக 'யுத்தகால கம்யூனி' சத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாயிற்று. ''யுத்தமும் நாசமும்தான் நம்மை 'யுத்த கால கம்யூனிசக்' கொள்கையை ஆதரிக்குமாறு நிர்ப்பந்தம் செய்தன'' என்று லெனின் எழுதினர். இதனால்தான் அன்றையக் கட்டத்தில் எதிரியை முறியடிக்க முடிந்தது. பொருளாதாரப் புனரமைப்புக்கும் இது அடி கோலியது. இங்கிருந்துதான் புதுப் பொருளாதாரக் கொள்கையை நோக்கிச் சோவியத் நாடு முன்னேறியது.

## புதிய பொருளாதாரக் கொள்கை

**நோக்கங்களும், காரணங்களும் (1921–25)**

1921ஆம் ஆண்டில் நாட்டைப் பாழ்படுத்திய உள்நாட்டுப் போர் சோவியத் யூனியனுக்கு வெற்றியாய் முடிந்தது. அந்நியப் படையினர் முறியடிக்கப்பட்டனர். போரில்லாத சமாதான காலம் மலர்ந்தது. அத்தோடு 'புதியதோர் உலகு' நிர்மாணிக்கும் பெரும் பொறுப்பு தொழிலாளர் அரசின்மீது வீழ்ந்தது. சோஷலிச சமுதாயத்தைக் கட்டும் பணியை மேற்கொள்ள வேண்டிய அவசியம் நேரிட்டது. போரினால் மிகவும் பாதிக்கப் பட்டிருந்த பொருளாதாரத்தைப் புனரமைப்பதும் தேவைப் பட்டது. உலக முதலாளித்துவத்தின் ஆயுதத் தலையீடு தோல்வியுற்ற போதிலும், இன்னும் ஏதாவது செய்து சோஷலிச அமைப்பு ஏற்படாதபடி தடைசெய்ய முடியும் என்று நம்பிக் கொண்டிருந்த காலம் அது. ஆகவே முதலாளித்துவ நாடு களுடன் சமாதான சகவாழ்வு வாழுதற்குரிய வழிவகைகள் ஆய்ந்து அதன் வழி நிற்க வேண்டும் என்பதை லெனின் உணர்ந்தார். ஏற்கெனவே எஸ்தோனியா, லாத்வியா, லித்து வேனியா ஆகிய நாடுகளுடன் சமாதான உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டிருந்தது. பின்லாந்தோடும், போலந் தோடும் இவ்வாறான ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. பிரிட்டனுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டதையொட்டி ஐரோப்பிய நாடுகளும், கீழ்த்திசை நாடுகளில் சிலவும் சோவியத் நாட்டோடு வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டன. இவ்வாறு சர்வதேச விவகாரங்களில் சோவியத் நாட்டிற்கு ஓர் இடம் கிடைத்து வந்தது.

போரால் நிலைகுலைந்து கிடந்த உள் நாட்டின் பொருளாதாரத் தையும் சீரமைக்க வேண்டியிருந்தது. தொழில் துறையின் மூலதனச் சொத்துகள் எல்லாம் புதுபிக்கப்படாமலே கிடந்தன. பண்ட உற்பத்தி வெகுவாகக் குறைந்துவிட்டது. ஆக்கத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளரின் எண்ணிக்கை 24 இலட்சத்திலிருந்து, 12 இலட்சத்து 70 ஆயிரமாகக் குறைந்தது. விவசாய உற்பத்திப் பெருமளவில் பாதிக்கப்பட்டிருந்தது.

இத்தோடு தொழிலாளருக்கும் விவசாயிகளுக்குமிடையே பொருளாதார—அரசியல் வேறுபாடுகள் தோன்றி வளரலாயின. நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையே வேற்றுமை தோன்றி அவை நாட்டின் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிக்கச் செய்தது. தொழிலாளி—விவசாயி மன வேறுபாட்டிற்குக்

காரணம் இல்லாமல் இல்லை. 'போர்க் கால கம்யூனிசத்தை'[1]யும் அப்பொழுது பின்பற்றப்பட்ட உபரி விளைபொருள் கொள் முதலையும் தங்களுக்கிருந்த கடுமையான தொழில்துறைப் பண்டங் களின் பற்றுக் குறையையும் விவசாயிகளும், கிராமங்களும் சகித்துக் கொண்டன. வெளியார் தலையீட்டை நொறுக்கும்வரை அவர்கள் இவற்றைப் பொறுத்திருந்தனர். அது நீக்கப்பட்ட பிறகு, விவசாய வளர்ச்சிக்கு ஏதுவல்லாத முறைகளைக் கைவிட வேண்டும் என்றும், கிராமத்துக்கும் நகரத்துக்கும் இடையே வர்த்தகப் பெருக்கம் ஏற்படவேண்டும் என்றும் விவசாயிகள் கோரினார்கள். அதே சமயத்தில் நகரங்களில் வேலையின்மையும் பெருகி நின்றது. தொழிலாளர்கள் கிராமப்புறங்களை நாடிச் சென்றனர். இந்த நிலையைத் திருத்துவதும் அவசியமாக இருந்தது.

ஆகவே தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்குமிடையே பொருளாதார ஒத்துழைப்புக்கான புதிய சூழ்நிலையை உருவாக்கும் வகையில் 1921 மார்ச்சில் பத்தாவது கம்யூனிஸ்ட் கட்சிக் காங்கிரஸ் 'புதிய பொருளாதாரக் கொள்கை'[2]யை ஏற்றுக்கொண்டது. ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் சில முக்கிய அம்சங்களாவன: விவசாயிகள் தங்களது நிலங்களின் மூலதனங்களைப் பயன்படுத்துவதில் சுதந்திரம் அளித்தல். (இதன் பயனாக விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குவார்கள் என்று நம்பப்பட்டது). பழைய உபரி விளைபொருள் கொள்முதல் முறை கைவிடப்பட்டது. இதற்குப் பதிலாகப் பண்டங்கள் வாயிலாக வரி வசூலிப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

இவ் வரி பற்றி லெனின் கட்டுரை ஒன்று எழுதினார். அக் கட்டுரையில் புதிய பொருளாதாரக் கொள்கையின் தன்மை களையும், பண்புகளையும் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். இக் கொள்கையின் தலையாய நோக்கம் தொழிலாளி வர்க்கத் துக்கும் விவசாயிகளுக்கும் இடையேயுள்ள பொருளாதார— அரசியல் உறவுகளையும், இணைப்புகளையும் உறுதிபெறச் செய்து, இவ்விரு திறத்தாரையும் சோஷலிசத்தைக் கட்டி வளர்ப்பதில் ஈடுபடுத்துவதுதான் என்று விளக்கினார்.

புதிய பொருளாதாரக் கொள்கை மூலமாகப் பொருளா தாரத்தில் முதலாளித்துவக் கூறுகள் அனுமதிக்கப்பட்டது.

[1]War Communism

[2]New Economic Policy

இது ஒருவகையில் பின்வாங்குதல் என்றாலும், திட்டமிடப்பட்டுக் கட்டுப்பாடாக நடந்தேறிய பின்வாங்குதல் என்று லெனின் இதைப் பற்றிக் குறிப்பிட்டார். 1922ஆம் ஆண்டில் நடந்த பதினோராவது கம்யூனிஸ்ட் கட்சிக் காங்கிரசில் இதுபற்றி லெனின் கூறியதாவது:

"ஓராண்டாக நாம் பின்வாங்கிச் சென்றுள்ளோம். கட்சியின் சார்பில் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். பின் வாங்கிச் சென்றதன் நோக்கம் நிறைவேறி விட்டது."[1]

மத்தியத் திட்டமிட்டு, கட்டுப்பாடு கணக்கீடு ஆகிய முறைகளைக் கையாண்டு சோஷலிசப் பண்புகள் வளரவும், முதலாளித்துவக் கூறுகள் மறையவும் சோவியத் அரசு ஏற்பாடுகள் செய்து, வெற்றி பெற்றது.

புதிய பொருளாதாரக் கொள்கை முதலாளித்துவத்தின் வெற்றி என்று கூறினார்கள் பலர். இடதுசாரி பொது உடைமை வாதிகளும் இக் கொள்கையை வன்மையாகத் தாக்கி வந்தனர். முதலாளித்துவத்துக்குத் தலைபணிந்து விட்டது என்று கூறினார்கள். ஆனால் உண்மை நிலையை லெனின் நன்றாகத் தெரிந்து கொண்டவராக நடந்து கொண்டார். புதிய பொருளாதாரக் கொள்கையின் குறிக்கோள்களை நிறைவேற்ற அரசாங்கம் பல துறைகளில் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இவற்றை நாம் பார்த்தால் குறிக்கோள்கள் வெற்றி பெற்றனவா இல்லையா என்பது புலனாகும்.

**விவசாயத் துறையில் புதிய பொருளாதாரக் கொள்கை**

நாட்டிலே புரட்சி ஏற்பட்டபோது நிலப் பிரபுக்களின் நிலங்களைப் புரட்சிக்காரர் எடுத்துக்கொண்டார்கள். ஆனாலும், நிலங்கள் உழுது பயிரிட்டு வந்த குடியானவரிடமே இருந்தன. போர்க் கால கம்யூனிசத்தின் போது சோவியத் யூனியனின் பற்பல பாகங்களில் அவரவர் இஷ்டத்திற்கேற்ப நிலப் பறிமுதலும், பங்கீடும் நடைபெற்றன. மத்திய கட்சியின் தலைமைப்பீடம் இதை ஒழுங்குப்படுத்த முயற்சியெடுத்தும் வெற்றி பெறவில்லை. நடுத்தர விவசாயிகள் நிலப் பிரபுக்களின் நிலங்களைத் தமதாக்கிக் கொண்டனர். பல இடங்களில் நிலமில்லா விவசாயக் கூலிகளும் நிலங்களைக் கைப்பற்றிக்

[1] V.I. Lenin, Collected works, 5 Vol, p. 101.

தமதாக்கிக் கொண்டார்கள். இன்னும் ஏராளமானவர் நிலமில்லாத கூலிகளாகவே இருந்தனர். விவசாயக் கருவிகள், விவசாயத்திற்கு வேண்டிய கால்நடைகள், விதைகள், உரங்கள் முதலிய உற்பத்திச் சாதனங்கள் பணம் படைத்த நடுத்தர விவசாயிகளிடமே இருந்தது. அத்தோடு வியாபார ரீதியில் விவசாயம் செய்வதற்குத் தேவையான பரந்த நிலமும் அவர்களிடம் இருந்தது. இவற்றிக்கெல்லாம் மாறாக, சிறு விவசாயிகளிடம் முதலீடு செய்வதற்குப் பணமும் இல்லை; பல்வேறு உற்பத்திச் சாதனங்களும் இல்லை. போர்க் கால கம்யூனிசத்தின் போது நிலங்களில் உள்ள கிணறுகள், கால்வாய்கள், மாடு, குதிரைகள் இயந்திரங்கள் போன்ற உற்பத்திச் சாதனங்களைப் பெரும் நிலப் பிரபுக்கள் அழிவு செய்து விட்டு ஓடினர். தங்கள் நிலங்களைப் பறிமுதல் செய்யப் புரட்சிக்காரர் வருகிறார்கள் என்று தெரிந்தவுடனே தங்கள் உடைமைகளைக் கொளுத்திவிட்டுச் சென்றனர். எனவே விவசாயத்தைத் திறம்பட நடத்திச் செல்வதற்குத் தேவையான நிலங்களோ, சாதனங்களோ இல்லாமையால் விவசாயத் தொழில் மிகவும் படுத்துவிட்டது. உற்பத்தி முறையிலும் பெருத்த மாற்றம் ஏதும் கொண்டுவர இவ் விவசாயிகளால் முடியவில்லை. பழைய முறைகளே பின்பற்றப்பட்டுவந்தன. நிலத்தை நம்பி வாழ்ந்தவர்களில் எண்ணிக்கையும் அதிகரித்து வந்ததால் நிலத்திலிருந்து பெறப்படும் வருமானம் மிகவும் குறைவாக இருந்தது. முதலைப் பெருக்குவதோ அல்லது தொழிலாளர் நிறைந்த நகர்ப்புறங்களுக்கு உணவுப் பொருள்களை விற்பனை செய்வதோ சாத்தியமாகவில்லை.

இக்காலத்தில் புரட்சிக்கு முன்பு சாகுபடியிலிருந்த நிலப் பரப்பில் 20 சதவிகிதம் குறைந்து விட்டது. கால்நடைகளின் எண்ணிக்கை 60 சதவிகிதம் குறைந்தது தானிய உற்பத்தி 50 சதவிகிதம் குறைந்தது. நாட்டில் பஞ்சம் தலைதூக்கியது. இங்கிலையிலிருந்து விடுபட, குலாக்குகள்[1] என்று அழைக்கப் பெற்ற பணக்கார விவசாயிகளிடமும், நடுத்தர விவசாயி களிடமும் மாத்திரமே வசதிகளும் வாய்ப்புகளும் இருந்தன. ஆனால் குலாக்குகளை ஊக்குவித்து வளரவிடுவது நாட்டின் சமதர்மக் கொள்கைக்கு முரணானதும் என்பது அரசிற்கு நன்றாகத் தெரிந்து இருந்தது. இருப்பினும் விவசாய உற்பத்தி மிகவும் வீழ்ந்து விட்டதால், அதை உடனடியாக எப்படியும் சீராக்க வேண்டியது அவசியமாயிற்று.

[1] Kulaks.

குலாக்குகளிடமும், நடுத்தர விவசாயிகளிடமும் ஏராளமான நிலம் இருந்தது. அவர்களிடம் முதலீட்டிற்குப் போதுமான பணவசதியும் இருந்தது. உற்பத்தி சாதனங்களும், உபகரணங்களும் இருந்தன. செய்யவேண்டியது எல்லாம், விவசாயக் கூலிகளை அவர்கள் அமர்த்திக்கொள்ளும் உரிமையும், உற்பத்தி செய்த பண்டங்களைத் தங்களது விருப்பம்போல் விற்றுக் கொள்ளும் உரிமையும் அளிக்கப்படவேண்டியதே. அதோடு, அவர்களுடைய உற்பத்திப் பொருட்களுக்கு இலாபகரமான விலை கிடைக்கும்படிச் செய்தால், அதிக ஊக்கத்தோடு அவர்கள் உற்பத்தியில் ஈடுபடுவார்கள். இதற்காக அவர்களுக்குச் சாதகமாக விவசாயப் பொருள்களுக்கு நல்ல விலையை நிர்ணயித்து வழங்குவதுதான் வழி. மேலும் சிலருக்குக் கடன் வசதிகள், வரிச் சலுகைகள் முதலியன அளிக்கப்பெற்றால், அவர்களது உற்பத்தி பெருகக்கூடும். ஆனாலும், விலைவாசி உயர்வு எல்லா மட்டத்திலுள்ள விவசாயிகளுக்கும் சமமான பலனை அளிக்காது. எந்த விவசாயி அதிகமான உபரியை வைத்துள்ளானோ அவனுக்கே இந்த இலாபம் போய்ச் சேரும். உற்பத்தி செய்யும் தானியத்தையெல்லாம் தனது குடும்பத்தின் நுகர்வுக்கென்றே செலவிடவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகும். சிறு விவசாயிகளுக்கு விலை ஏற்றம் இலாபம் தராது. எனவே, இக் கொள்கையினைப் பின்பற்றுவதால் ஏழை விவசாயிகள் மேலும் தரித்திர நிலையை அடையவும், பணக்கார விவசாயிகள் மேலும் பணக்காரர் ஆகவும் நேரிடக்கூடும் என்பது, சோவியத் அரசிற்கு மிகவும் சோதனையாக அமைந்தது.

இவ்வாறான ஏற்றத்தாழ்வுகளை விவசாயப் பெருங்குடி மக்கள் மத்தியில் கொண்டுவரக்கூடும் என்றதோடு, இன்னொரு ஆபத்தும் இந்த முறையைப் பின்பற்றுவதில் இருந்தது. விவசாயப் பண்டங்களின் விலைகளைக் குலாக்குகளுக்குச் சாதகமாக உயர்த்தும்போது, ஆலைகளில் உழைக்கும் உழைப்பாளருக்குப் பாதகமாகிவிடுகிறது. அதனால் நாட்டின் ஆலைத் தொழில் வளர்ச்சிக்கும், அதனோடு தொடர்புடைய ஒட்டு மொத்தமான பொருளாதார மேம்பாட்டுக்கும் இடையூறாக அமையக்கூடும் என்பதும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில், குலாக்குகளின்றி விவசாயம் வளர வகை இல்லாது இருந்தது. அப்படியே அரசாங்கப் பண்ணைகள்,[1] கூட்டுப் பண்ணைகள்[2] முதலியனவற்றைத் துவக்கி அதன் மூலம்

[1]State Farms.

[2]Collective Farms

விவசாயப் பொருள் உற்பத்தியைப் பெருக்க நினைத்தாலும், அதற்குக் காலம் ஆகும்; அதற்குள் பல்லாயிரக்கணக்கான மக்கள் பசியிலும் பஞ்சத்திலும் வாடவேண்டி நேரிடும். அத்தோடு தொழில் வளர்ச்சியும் உணவுப் பொருள், கச்சாப் பொருள் ஆகியவற்றின் பற்றுக் குறையால் பெரிதும் பாதிக்கப் பெறும்.

எனவே, விவசாயத் துறையில் புதிய பொருளாதாரக் கொள்கையை அமல் நடத்தும்போது, எச்சரிக்கையாக, முதலாளிகள், நிலப்பிரபுக்கள் முதலானோரின் செல்வாக்கும் ஆதிக்கமும் வளராதபடி தடை செய்யவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. குலாக்குகள் எல்லைமீறிச் செல்வாக்குப் பெற்றுவிடாவண்ணம் அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டது.

புதிய பொருளாதாரக் கொள்கை விவசாயத் துறையில் எவ்வாறு உருப்பெற்றது எனப் பார்ப்போம். நிலங்களை வாங்குவது, விற்பது, குத்தகைக்கு விடுவது போன்ற முதலாளித்துவ நாட்டின் உரிமைகள் புரட்சி ஏற்பட்டவுடனே ரத்துச் செய்யப்பட்டன. அதற்குப் பதில் 12 ஆண்டுகளுக்கு நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துக் கொள்ளும் உரிமை வழங்கப் பட்டது. இதே போன்று இயந்திரச் சாதனங்கள், விவசாயக் கருவிகள், கால் நடைகள் முதலியனவற்றை வாடகைக்கு விடவும், வாங்கவும் உரிமை அளிக்கப்பெற்றது. மேலும், சில நிபந்தனைக்குட்பட்டு விவசாயக் கூலிகளை வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாம் என்ற சட்டமும் பிறப்பிக்கப்பட்டது. உற்பத்தி செய்த பண்டங்களை விருப்பம் போல் எங்கும் விற்றுக் கொள்ளும் உரிமையும் வழங்கப்பட்டது. விவசாய வளர்வீத வரி[1] கொடுத்தது போக,எஞ்சிய பொருட்களை விற்றுக்கொள்ளும் உரிமை அளிக்கப்பட்டது. இவ்வகையான உரிமைகள் சிற்சில மாற்றங்களுடன் 1931ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டன.

குலாக்குகளின் செல்வாக்கு அதிகப்படாவண்ணம் விவசாய வளர்வீத வரி விதிக்கப்பட்டது. இவ் வரிகள் வருடா வருடம் உயர்த்தப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துச் சிறு விவசாயிகளுக்குக் கடன் வசதிகள், உற்பத்தி சாதனங்கள் ஆகியன இலகுவில் கிடைக்கும்படி அரசு செய்தது. சங்கங் களுக்குப் பல வரிச் சலுகைகளையும் வழங்கினர். இதில் இக் கூட்டுறவுச் சங்கங்களில், குலாக்குகளுக்கு இடம் பெறமுடியாது.

[1] **Progressive Agricultural Tax.**

ஏழை விவசாயிகள் பலர், இச் சலுகைகளின் பயனாக நடுத்தர விவசாயிகளாக மாறினர். ஆனால் கூலி வேலை செய்து பிழைத்த உழவுத் தொழிலாளி நிலை மாறவில்லை.

புதிய பொருளாதாரக் கொள்கையின் பயனாய், 1925–26-ல் விவசாய உற்பத்தி போருக்கு முன் இருந்த அளவை எட்டியது. ஆண்டுக்கு 2 சதவிகிதம் ஆனாலும், அதற்குப் பின்னர் உற்பத்தி வளர்ச்சி குறையலாயிற்று. இதனால் நாட்டின் ஆலை நகரங்களில் வசிக்கும் தொழிலாளரின் உணவுத் தேவையைத் திருப்திச் செய்ய முடியாது போனது. புரட்சிக்குப்பின் பல புதிய ஆலை நகரங்கள் ஏற்படவே, இந்த நெருக்கடி மேலும் வலுப்பெற்றது. போருக்கு முன்னர் மொத்த விவசாய உற்பத்தியில் 26 சதவிகிதம் விற்பனைக்குரிய உபரிப் பொருளாக[1] இருந்தது. இது 1926–27-ல் 13 சதவிகிதமாகக் குறைந்தது. குறிப்பாக உணவுப் பொருள்கள் கிடைப்பதில் அருமைப்பாடு தோன்றியது. கச்சாப் பொருள்கள் வழக்கம்போல கிடைத்து வந்தன. ஆனால் உணவுப் பொருள்கள் கிடைப்பருமையாகி விட்டன.

விவசாயத்தில் பெரும் மாறுதல்கள் ஏதும் ஏற்படவில்லை. மூன்று வயல் சாகுபடி முறையைச் சிறிது மாற்றி மூன்றில் ஒரு பங்கு நிலத்தைத் தரிசாகப் போடும் முறை நிறுத்தப்பட்டது. இயந்திரங்கள், உரங்கள் முதலியன உள்நாட்டில் செய்யப் படாமல் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படவேண்டி இருந்தது. உணவுத் தானியங்களை ஏற்றுமதி செய்து இறக்கு மதிக்குரிய விலையை ஈடுசெய்ய வேண்டியிருந்தது. நாட்டி லுள்ள தொழிலாளருக்கே உணவில்லை என்ற நிலைமையில், உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்வது பொருத்தமாகப் படவில்லை. ஏற்றுமதி செய்யாவிடில் விவசாயத்திற்குத் தேவையான இரசாயன உரங்கள், டிராக்டர்கள் போன்ற கருவி களும் கிடைக்க வழியில்லை.

உற்பத்தி பெருகியும் கூட, விற்பனைக்குரிய உபரிப் பொருள் வீதம் குறைந்ததற்குக் காரணம், பல சிறு விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பண்டங்களைத் தாங்களே நுகர்வு செய்தனர். போருக்கு முன்னால் குலாக்குகளும், நிலப் பிரபுக்களும் 71 சதவிகிதம் தானிய உற்பத்தியைக் கிராமங்களுக்கு வெளியில் விற்பனை செய்தனர். ஏழை விவசாயிகள் 28 சதவிகிதம் வெளியில் விற்பனை செய்தனர். மொத்த உற்பத்தி 5000 மில்லியன்

[1] Marketable Surplus.

பூடாக[1] இருந்தது. இதில் நிலப் பிரபுக்களும் குலாக்குகளும் 2500 மில்லியன் பூடு உற்பத்திக்குக் காரணமாக இருந்தனர். எஞ்சிய 2500 மில்லியன் பூடு தானியமானது ஏழை விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்டது. இதில் குலாக்குகளும், பிரபுக்களும் கிராமத்திற்கு வெளியே விற்ற தானியம் 931 மில்லியன் பூடு ஆகும். ஏழை விவசாயிகள் விற்றது 369 மில்லியன் பூடு ஆகும். 1926–27-ல் மொத்த உற்பத்தி 4749 மில்லியன் பூடாகக் குறைந்தது. அதில் குலாக்குகளின் உற்பத்தி 617 மில்லியனாக இருந்தது, அதில் 126 மில்லியன் பூடு தானியத்தை அவர்கள் ஆலை நகரங்களில் விற்றார்கள். ஆனால் ஏழை விவசாயிகள் 4052 மில்லியன் பூடு தானியத்தையே உற்பத்தி செய்தார்கள். இவர்களது உற்பத்தி கணிசமாக உயர்ந்தும், உபரி விற்பனைப் பொருள் வீதம் சரிந்தது. இதில் 466 மில்லியன் பூடு தானியத்தையே சந்தையில் விற்றனர். தங்களது உணவு நுகர்ச்சியை மிகவும் அதிகமாக்கிக் கொண்டிருக்கவேண்டும் என்று தெரிகிறது. அதாவது தங்களது உற்பத்தியில் பெரும் பகுதியைத் தங்களது உணவாக்கிக் கொண்டனர் என்பது தெளிவு. அத்தோடு, குலாக்குகளும் தங்களது சக்திக்கேற்றவாறு விற்பனை செய்தனர் என்று கூறமுடியாது. மொத்தத்தில் 1928ஆம் ஆண்டில் 128 மில்லியன் பூடு தானியம் பற்றாக்குறையாக இருந்தது.

இந்த வகையான நெருக்கடிக்குக் குலாக்குகள்தான் காரணம் என்று கண்டு, அரசாங்கம் அவர்கள்மீது பல நடவடிக்கைகள் மேற்கொண்டது. குலாக்குகள் தங்களது உபரித் தானியத்தை அரசாங்கம் நிர்ணயிக்கும் விலையில்தான் விற்கவேண்டுமென்று ஆணை பிறப்பித்தது. குலாக்குகள் இதற்குக் கீழ்ப்படிய மறுத்து, கள்ளமார்க்கெட்டுகளில் விற்கவும், தானியங்களைப் பதுக்கவும் முற்பட்டனர். இதைத் தடுப்பதற்காக அரசு பல ஏழை விவசாயிகளை இரகசிய உளவுக்காரர்களாக நியமித்து, அவர்கள் மூலம் பதுக்கல்களையும், கள்ளமார்க்கெட் நடவடிக்கைகளையும் கண்டறிந்தது. பதுக்கப்பட்ட பண்டங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பறிமுதலில் 25 சதவிகிதம் தகவல் அளித்தவருக்குப் பரிசாகத் தரப்பட்டது. உற்பத்தியைப் பெருக்கவும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மொத்தத்தில் புதிய பொருளாதாரக் கொள்கை கைவிடப்பட்டு, திட்டமிடப் பட்ட பொருளாதாரம் துவங்கியது. இதனை அடுத்த அத்தியாயத்தில் காண்போம்.

[1]Pood.

விவசாயத் துறையில் புதிய பொருளாதாரக் கொள்கை எதிர்பார்த்த அளவுக்குப் பலனளிக்கவில்லை யெனினும், ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் அது போதுமானதாக அமைந்தது. பெருமளவில் மாறுதல்களையும் வளர்ச்சியையும் அது கொண்டு வராவிட்டாலும், வரப்போகும் மாற்றங்களுக்கு முன்னோடியாகவும், தேவையான ஆயத்தங்களைச் செய்ய பயனுள்ளதாகவும் இருந்தது. டிராக்டர்கள், அறுவடை இயந்திரங்கள் போன்ற பெருங் கருவிகளைப் பின் திட்ட காலத்தில் பயன்படுத்த வேண்டிய ஆய்வுகளையும், பரிசோதனைகளையும் நடத்த வசதியாகவும் புதிய பொருளாதாரக் கொள்கை அமைந்தது.

**தொழில் துறையில் புதிய பொருளாதாரக் கொள்கை**

முக்கியமான கேந்திரத் தொழில்களை மட்டும் அரசின் நேரடி மேலாண்மையில் வைத்துக்கொண்டு, முக்கியமல்லாத சிறுசிறு தொழில்களையெல்லாம் தனியார் துறைக்கு விட்டுவிட லெனின் முடிவு செய்தார். பொருளாதார அமைப்பின் உச்ச சிகரங்களை அரசு தனதாக்கி இருந்தால் அதுவே போதுமானதென்று அவர் கருதினார். "குன்றேறி யானைப் போர்" கண்டார் போல அரசும் உச்சமட்ட பொருளாதார நிலைகளைத் தனது கட்டுக்குள் அடக்கி வைத்திருந்தால், முழுப் பொருளாதார அமைப்பையும் தனக்குள் அடக்கிய நிலைக்கொப்பாகும் என்பதாக அவர் கருதினார். இதுவே புதிய பொருளாதாரக் கொள்கையின் பிரதான நோக்கமாகும்.

இதன்படி 1920ஆம் ஆண்டில் நாட்டுடைமையாக்கப்பட்ட பல தொழில்கள் தனியார் துறைக்கு மாற்றப்பட்டன. இன்னும் பல தொழில்களை நாட்டுடைமையாக்கி இருந்தும், அவற்றை அரசு மேற் கொள்ளாமல் இருந்தது. அவற்றையும் தனியாரிடமே விட்டுவிட முடிவு செய்யப்பட்டது. 20 தொழிலாளருக்கும் குறைவாக வைத்து நடக்கும் பணிமனைகள் தொழிலகங்கள் எல்லாம் தனியார் துறைக்கே குத்தகையாக விடப்பட்டன.

அரசாங்கத்தின் மேலாண்மையில் ஆயிரக்கணக்கான தொழில் நிறுவனங்கள் இருந்து வந்தன. இவற்றில் இலாபகரமாக இராத நிறுவனங்களையும் சுரங்கங்களையும் இதர தொழில் ஸ்தாபனங்களை மூடிவிடுவதென்று அரசு முடிவு செய்தது. இதன் பலனாக மொத்த தொழிற்சாலைகளில் 88·5 சதவிகிதம் தனியார் துறையிலிருப்பதாகக் கணிக்கப்பட்டது.[1] என்றாலும் இத்துணை எண்ணிக்கையுள்ள தொழிற்சாலைகள்

[1] Alexande Bay , Soviet Economic System, 107.

மொத்த உற்பத்தியில் 5 சதவிகிதம் பொருட்களையே உற்பத்தி செய்தன. பெரும்பகுதி உற்பத்தி கூட்டுறவு ஆலைகளிடமும், அரசாங்க ஆலைகளிடமுமே இருந்தது.

**தொழில் நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றம்**

புரட்சிக்குப் பிறகு தொழில் நிறுவனங்கள் அனைத்தும் தலைமைப் பொருளாதாரக் குழு அல்லது வெசங்கா[1] என்றழைக்கப்பட்ட அமைப்புக்குட்பட்டவையாக இருந்தன. இதற்குக் கீழாகப் பல உதவிக் குழுக்கள் கிளாவ்கி (Glavki) என்ற பெயரில் இயங்கி வந்தன. மூலப் பொருள்கள் வாங்குவது, உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களை விற்பது போன்ற பணிகளைக் கிளாவ்கி செய்து வந்தது. 56 கிளாவ்கிகள் பணியாற்றின. ஆனால் புதிய கொள்கையின்படி சில கேந்திரத் தொழில்களை மாத்திரம் தலைமைப் பொருளாதாரக் குழு வைத்துக் கொண்டு, ஏனைய தொழில்களைத் தொழிற் கூட்டுகளிடம் (Trusts) ஒப்படைத்தது. 3560 ஆலைகளை அங்கங்களாகக் கொண்ட 480 தொழிற் கூட்டுகள் 1923ஆம் ஆண்டிற்குள் அமைக்கப்பட்டன. இவைகளில் ஏறக்குறைய 10 லட்சம் தொழிலாளர் பணி புரிந்தனர். இக் கூட்டுகளால் சிக்கனமான நிர்வாகம் அமலாக்கப்பட்டது.

இக் கூட்டுகள் ஆரம்பத்தில் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டன: 1. ஒரு வட்டாரத்திலுள்ள ஒரே விதமான தொழில்களை இணைத்துச் செயல்படும் கூட்டு. 2. பலவகையான தொழில்களை இணைத்துச் செயல்படும் கூட்டு. 3. கேந்திரத் தொழில்களின் கூட்டு. பின்னர் சோவியத் நாடு ஒரு பெரிய கூட்டாட்சி நாடாக உருப்பெற்றபோது இக் கூட்டுகள் வேறொரு வகையாகப் பகுக்கப்பட்டன. தேசீய முக்கியம் பெற்றவை, மாநில முக்கியம் பெற்றவை, வட்டாரச் சிறப்புடையவை, மாவட்டச் சிறப்புடையன என்று பிரிக்கப்பட்டன. நாட்டின் மொத்தத் தொழில் உற்பத்தியில் 60 சதவிகிதம் தேசீய முக்கியத்துவம் பெற்ற கூட்டுகளால் உற்பத்தி செய்யப்பட்டன. நாட்டின் மொத்த தொழிலாளரில் 62 சதவிகிதம் பேர் 41 பேரளவான கூட்டுகளில் பணியாற்றினர்.

வர்த்தகக் கட்டமைப்பைப் புதிய சோஷலிச நிலைமைகளுக்கேற்ப திருத்தி அமைக்கும் வழிமுறைகளைப் புனரமைப்புக்

[1]**Vesenkha or the Supreme Economic Council.**

காலத்தில் அரசாங்கம் தேடி வந்தது. அக்காலத்தில் வர்த்தக நிறுவனங்களது அமைப்பு, அரசாங்கக் கூட்டுறவு தனியார் நிலையங்களைக் கொண்டதாய் இருந்தது. அரசாங்க ஏகபோகமாயிருந்த வெளிநாட்டு வர்த்தகம் இக் காலத்தில் தனது நிலைகளை வலுப்படுத்திக்கொண்டது. கொஞ்சங் கொஞ்சமாய் வர்த்தகத்திலிருந்து தனியார் மூலதனத்தை வெற்றிகரமாய் வெளியேற்றி வந்தது. விலைவாசிகளைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டது.

இவ்வாறு பொருளாதாரத்தைப் புனரமைப்புச் செய்தவுடன், அது விரைந்து வளரச் செய்ய என்ன செய்வது என்ற கேள்வி எழுந்தது. லெனின் வகுத்த செயல் திட்டத்தை நிறைவேற்றி, அதன் மூலம் பொருளாதார அடித் தளமாகிய கனரக இயந்திரத் தொழிலை நிறுவுவதில் நாடு முன்னேறுவது என்று முடிவு செய்யப்பட்டது. அதாவது, திட்டமிட்ட பொருளாதார அமைப்பாக மாற்றிக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 1928ஆம் ஆண்டு முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்பட்டு 1932-க்கு முன்பே அது நிறைவேற்றப்பட்டது.

# 3. சோவியத் பொருளாதாரத்தின் தத்துவப் பின்னணி

## (மார்க்சீய-லெனினிசக் கோட்பாடும், சோவியத் பொருளாதாரமும்)

ஏற்றத்தாழ்வுகள் மிகுந்த சமுதாய அமைப்பை மாற்றி, புதியதோர் சமதர்ம உலகைப் படைக்கும் முயற்சியாகத் தங்களது கோட்பாட்டைக் கணிக்கின்றது கம்யூனிச சித்தாந்தம். அதன் அடிப்படையில் எழுந்துள்ளது சோவியத் யூனியன். சோவியத் யூனியனின் சிற்பி லெனின் அந்த நாட்டின் பொருளாதாரத்துக்கு அடிப்படையாக மார்க்சின் சித்தாந்தத்தை வைத்துப் போனார். எனவே சோவியத் பொருளாதாரத்தைப் புரிந்து கொள்ளவும், தெளிவான முறையில் திறனாய்வு செய்யவும் அதன் அடிப்படைச் சித்தாந்தங்கள் தெளிவு செய்யப்படுவது பொருத்தமாகும். கம்யூனிசக் கொள்கையின் முதல் பலனாக வெளிவந்தது சோவியத் யூனியனாகும். அது ஓர் அரசியல் அமைப்பு என்றாலும், அதன் பல்வேறு ஊடுருவல்கள் சமுதாயத்தின் கட்டுக் கோப்பையும், வெளிப்பாடுகளையும் பாதிப்பதாக இருப்பதால் அதுபற்றியும் தெளிவாகத் தெரிந்து கொள்வது நலம்.

### கார்ல் மார்க்ஸ் (Karl Marx)

மார்க்சீயம் என்று அழைக்கபெறும் சித்தாந்தம் கார்ல் மார்க்ஸ் (1818-1883) என்ற பேரறிஞரால் உருவாக்கப்பட்டது. இவரது உயிர்த் தோழரான பிரடெரிக் எங்கெல்ஸ் (1820-1895) மார்க்சிற்கு எல்லாவகையாலும் துணைபுரிந்து அழியாப் புகழ் பெற்றவர் ஆகும். மார்க்ஸ் ஜெர்மனியில் உள்ள டிரயர் என்ற ஊரில் ஒரு யூத வழக்கறிஞரின் மகனாகப் பிறந்தார். அவர் ஜெர்மனி, பிரான்சு, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் மாணவராகவும்,

பத்திரிகை நிருபராகவும், புரட்சிக்காரராகவும் இருந்து, அந்த நாடுகளின் அரசாங்கத்தின் அடக்கு முறைக்கு ஆட்பட்டு நாடு கடத்தப்பட்டார். கடைசியாக லண்டன் நகரில் அவர் தங்கி பல வருடங்கள் ஆராய்ச்சி செய்தார். லண்டன் நகரில் இருக்கும் போது, அன்று தோன்றி வளர்ந்த சோஷலிச இயக்கங்களிலும், தொழிற் சங்கங்களிலும் பெரும் பங்கு வகித்தார். இக்காலத்தில் தான் அவருக்கு எங்கெல்ஸின் நட்பு கிட்டியது. எங்கெல்ஸ் இங்கிலாந்தில் ஒரு செல்வந்தர்; நூற்பு ஆலையின் சொந்தக்காரர். ஆனால் இலட்சியத்தால் ஒன்றுபட்ட மார்க்சும் எங்கெல்சும் மனித வரலாற்றில் நட்புக்கே இலக்கணமாக விளங்கினார்கள். வருமானம் ஏதுமற்ற ஆராய்ச்சி நடத்தி வந்த மார்க்சுக்கு உறுதுணையாக இருந்து ஆவன செய்தார் எங்கெல்ஸ். அதோடு மார்க்சீய சித்தாந்தம் உருப் பெறுவதிலும், வளர்ச்சியடைவதிலும் அவர் பெரும் துணைபுரிந்தார்.

கம்யூனிசப் பிரகடனம்[1] என்ற உலகப் பிரசித்திப் பெற்ற நூலை மார்க்சும் எங்கெல்சும் எழுதி வெளியிட்டனர். சோஷலிச தத்துவத்தை விஞ்ஞான ரீதியாக விளக்கும் முதல் நூலாக இது விளங்குகிறது. இது சிறியதோர் நூலாயினும், மார்க்சும் எங்கெல்சும் தங்கள் வாழ்நாள் முழுவதும் பிரச்சாரம் செய்து வந்ததும், கடைப்பிடித்து வந்ததுமான சோஷலிசக் கருத்துகளை விளக்குவதாக இருக்கிறது. இதையே விரிவாக்கிப் பல பெரிய நூல்கள் பின்னர் எழுதப்பட்டன. 1867ஆம் வருடத்தில் மார்க்ஸ் தன்னுடைய தலைசிறந்த படைப்பான **மூலதனம்**[2] என்ற நூலின் முதற் பாகத்தை வெளியிட்டார். 1893இல் இரண்டாம் பாகம் வெளியிடப் பெற்றது. 1894இல் மூன்றும் பாகம் வெளியிடப் பெற்றது. இரண்டாம் மூன்றும் பாகங்கள் மார்க்ஸ் இறந்த பிறகு எங்கெல்ஸால் வெளியிடப் பெற்றவையாகும். மார்க்சும் எங்கெல்சும் வேறுபல விரிவான நூல்களையும் எழுதினார்கள். எங்கெல்ஸ் ஆண்டிடூரிங்[3] என்ற நூலை எழுதினர். இவர்கள் இருவரும் பல கடிதங்களையும் ஒருவருக் கொருவர் எழுதிக் கொண்டனர். இவை யெல்லாம் தொகுக்கப் பெற்று நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன.[4]

**மார்க்சீயம்**

மார்க்சீயத் தத்துவத்தை விளக்கிக் கொள்ள அதைப் பகுத்துப் படிப்பது நலம். முரண்நிலை பொருள்முதல் வாதம்[5] அதன் அடிப்படை

[1] The Communist Manifesto, 1848
[2] Das Capital.
[3] Anti Duhring
[4] People's Publishing House Moscow
[5] Dialectical materialism

யானதாகும். மனிதகுல வரலாற்றைக் குறித்த தத்துவம் அதன் இரண்டாம் பிரிவாகும். மூன்றுவதாக, முதலாளித்துவம் பற்றிய கருத்து இடம் பெறுகிறது. நான்காவது, மனித இனத்தின் வருங்கால வளர்ச்சி பற்றியது. இவற்றில் நான்காவதாகக் கூறப்படும் வருங்கால வளர்ச்சியின் கீழே சோவியத் நாட்டில் ஏற்பட்ட புரட்சியும், அதன்பால் ஏற்பட்ட புதியதோர் அமைப்பும் இடம்பெறும். எனவே அதற்கு அதிக இடங் கொடுத்து ஏனையவற்றைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

## 1. முரண்நிலைப் பொருள் முதல் வாதம்

பொருளே முதல். பொருளின் பிரதிபலிப்பே கருத்து. ஐம்புலன்களினல் அறிந்து உணர்ந்து கொள்ளப்பட்டதாகிய பொருளின் இன்னெரு வடிவமே கருத்து. பொருள்களும் பொருளின் அமைப்பும் நிலையும் மாறினல் கருத்தும் மாறியாக வேண்டும். எனவே கருத்துக்கு (Idea) அடிப்படையாக அமைவது பொருளே. இதற்கு எதிரான கருத்தை ஹெகல் (Hegel) என்ற ஜெர்மானியப் பேரறிஞன் வெளியிட்டான். அவனுடைய தருக்க முறையை ஏற்றுக் கொண்ட கார்ல் மார்க்ஸ் அவனது கருத்து முதல் வாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அவனது தருக்க முறையையே பயன்படுத்தி நேர்மாறுன முடிவு ஒன்றைக் கண்டார். ஹெகலுக்கு முன்பாகக் கிரேக்க ஞானி களாகிய சாக்ரட்டீஸ், பிளேட்டோ போன்றவர்கள் இதே தருக்க முறையைப் பின்பற்றியுள்ளனர். உள்ளது (Thesis) என்றும், அதற்கு நேர் எதிரிடையான இல்லது (antithesis) என்றும், இவை இரண்டும் கலந்த கலவையான ஒருமை (Synthesis) என்றும் தருக்கவாத அமைப்பைக் கூறுவர். இயற்கையே உண்மையானது. தத்துவங்களையும் சித்தாந்தங் களையும் தாண்டி அது நிலைபெற்றிருக்கக் கூடியது. மனிதனுக்கும் இயற்கைக்கும் அப்பாற்பட்டது ஒன்றுமேயில்லை. இம் முறையாக மனித சமுதாயத்தின் வளர்ச்சியை மார்க்ஸ் விளக்கினர்.

## 2. வரலாற்று விளக்கம்

மனித சமுதாயத்தின் வளர்ச்சி விதிகள் என்று அழைக்கப் பெறும் மறைவான கருத்துகளை வெளிப்படுத்துவதற்கு முரண்நிலைப் பொருள் முதல் வாத முறையை மார்க்ஸ் பயன் படுத்தினர். மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத உற்பத்தி மூலங்களை உண்டு பண்ணுவதும், உற்பத்தி செய்யப்பட்ட

வற்றைப் பகிர்வு செய்து கொள்வதும் சமுதாய அமைப்பின் அடிப்படையாகும். வரலாற்றில் இதுவரை காணப்பட்ட சமுதாயங்கள் அனைத்திலும், செல்வம் பகிர்வு செய்யப் பட்டுள்ள முறையும், சமுதாயம் வர்க்கங்களாகவோ அல்லது வகுப்புகளாகவோ பிரிக்கப்பட்டுள்ள முறையும் அச் சமுதா யத்தில் என்ன உற்பத்தி செய்யப்பட்டது, அது எவ்வாறு உற்பத்தி செய்யப்பட்டது, உற்பத்தியான பொருள்கள் எவ்வாறு பரிவர்த்தனை செய்யப்படுகின்றன என்பனவற்றின் அடிப்படையில் சார்ந்துள்ளதைக் காணலாம். மனித அறிவின் வளர்ச்சியாலோ அல்லது அவனது மூளை வளர்ச்சியாலோ ஏற்படுவதல்ல சமுதாய மாற்றம். உற்பத்தி உறவுகளில் ஏற்படும் மாற்றங்களாலும், உற்பத்தி, பகிர்வு ஆகியவற்றில் உண்டாகும் மாற்றங்களாலும் ஏற்படுவதே சமுதாய மாற்றங்களும் அரசியல் புரட்சிகளும். அரசியலில் இதற்குரிய காரணங்களைத் தேடாது, பொருளாதாரத்தில் இவற்றிற்குரிய காரணங்களைத் தேடுவதே சரியாகும் என்று இத் தத்துவம் கூறுகிறது.

இதன் அடிப்படையில் பொருளாதாரம் ஒன்றே சமுதாயத் திலும் அரசியலும் அறுதியான நிலையை நிர்ணயிக்கும் செல்வாக்குப் பெற்று இருக்கிறது; மனித வாழ்வனைத் தையுமே பொருளாதார நோக்கங்களே இயக்குகின்றன; வரலாற்றை இந்த அடிப்படையில் விளக்க முற்படும்போது, உற்பத்தி மறு உற்பத்தி ஆகியவைதான் வரலாற்றின் நிர்ணய சக்திகளாக விளங்குகின்றன.

பொருளாதாரச் சூழ்நிலைகள் மனித சமுதாய அமைப்பில் முரணான நிலைகளைத் தோற்றுவிக்கின்றன. எல்லாவிதச் சமுதாய அமைப்பிலும் சுரண்டுகிறவர்கள் சுரண்டப்படுகிற வர்கள் என்ற பிரிவினை அல்லது முரண் ஏற்பட்டு அதிலே ஏற்படு கின்ற மோதலின் விளைவாகச் சமுதாயம் ஒன்றிய ஒரு புதுநிலையை அடைகிறது. இதுவே வளர்ச்சியாகும். ஆக வரலாறு முழுவதும் இவ்வாறான வர்க்கப் போராட்டங்களின் வரலாறே யாகும். வரலாறு முழுவதிலும் இவ்விதமான வர்க்கப் போராட்டம் நீக்கமற நடந்துகொண்டே வருகிறது. மன்னராட்சிக் காலத்தில் மன்னர் அவரைச் சார்ந்த குறுநில மன்னர்கள், இவர்களுக்கு எதிரான நிலப்பிரபுக்கள் ஆகியோருக்கிடையே நிகழ்ந்த போராட்டமாக இருந்தது. இப் போராட்டத்தின் விளைவு நிலப்பிரபுத்துவம் தோன்றியதாகும். இவ்வித அமைப்பில், நிலப்பிரபுக்களுக்கும் நிலமற்ற பண்ணையாட் களுக்கும் இடையே போராட்டம் நிகழ்ந்தது. இதன் விளைவாக

முதலாளித்துவம் தோன்றியது. முதலாளித்துவத்தில் தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் போராட்டம் நடைபெறும். அதில் தொழிலாளர் இறுதி வெற்றி பெறுவர். இதுவே வரலாற்றைப் பொருள் முதல் வாத அடிப்படையில் விளக்குவதாகும்.

### 3. முதலாளித்துவம்

கம்யூனிசத் தத்துவத்தின்படி, முதலாளித்துவமானது உலக வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் பயனுள்ள ஓரிடத்தை நிரப்புகிற ஒரு நிகழ்ச்சியாகும். சமுதாய உழைப்பிற்குள்ளே உறங்கிக் கிடந்த ஏராளமான உற்பத்தி சக்திகளைத் தட்டி எழுப்பிய பெருமை முதலாளித்துவத்தைச்சாரும். இதன் பயனாகப் பெரும் பெரும் ஆலைகளும் தொழிற்சாலைகளும் "ஞாலம் நடுங்க வரும் கப்பல்களும்" இராட்சத இயந்திரங்களும் உற்பத்தி செய்யப்பட்டன. ஆனால் முதலாளித்துவம் தன்னையே அழித்துக் கொள்ளக்கூடிய பாட்டாளி மக்களை உருவாக்கவும் உதவி செய்கிறது. பாட்டாளி மக்கள் பயன்படுத்தும் ஆயுதங்களையும் முதலாளித்துவம் தன்னை அறியாமலே ஆக்கித் தந்துவிடுகிறது. இறுதியில் முதலாளித்துவம் வீழ்வதும் பாட்டாளி வர்க்கம் வெற்றி பெறுவதும் தடைசெய்ய முடியாத நிச்சயமாகும் என்று மார்க்ஸ் எழுதினர்.

மார்க்சீயப் பொருளாதாரத் தத்துவத்தை மார்க்சின் **மூலதனம்** என்ற நூலில் விளக்கக் காணலாம். இந்த நூலை வெளியிடுவதற்கு முன்னரே, பாட்டாளி வர்க்கம் சுரண்டப் படுகிறதென்றும் முதலாளித்துவம் அதனால் ஒழிந்துபடுமென்றும் **கம்யூனிசப் பிரகடனம்** (Communist Manifesto) என்ற நூலில் மார்க்சும் எங்கெல்சும் எழுதி இருந்தனர். மூலதனம் என்ற பின்னே எழுதிய நூலில் இவ்வித முடிவுக்குரிய காரண காரியங்களை விரிவாக ஆராய்ந்துள்ளார். முதலாளித்துவப் பொருளாதார அமைப்பை அங்கி அகல ஆராய்ச்சி செய்து, அதன் வலிவு நொய்மைகளைத் தெளிவாக விளக்கியுள்ளார். இங்கிலாந்தில் அன்று நடைபெற்ற தொழிற் புரட்சியின் துவக்கக் காலங்களில் ஏற்பட்ட பாட்டாளி—முதலாளி மோதல்களை ஆராய்ந்து, அவற்றின் முடிவுகளையும் நூலில் வெளியிட்டார்.

இங்கிலாந்தின் பொருளாதார அறிஞர் பலர் நூல்களை ஆராய்ந்ததன் விளைவாக, மார்க்சின் கொள்கை விளக்கத்திற்குத் தேவையான பல ஆதாரங்கள் கிடைத்தன. டேவிட்

ரிக்கார்டோவின் (David Ricardo) உழைப்பே மதிப்பை நிர்ணயிக்கிறது என்ற கொள்கையை எடுத்துக்கொண்டு அதற்குப் புது மெருகேற்றிப் புதிய முடிவுகளை மார்க்ஸ் நிலை நாட்டினார்.

அதன்படி, ஒரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பானது, அதை உற்பத்தி செய்யத் தேவைப்படும் சமுதாய உழைப்பின் அளவைச் சார்ந்துள்ளது. பரிவர்த்தனை மதிப்பு[1] என்பது ஒரு பண்டத்தை மாற்றுக் கொடுத்து அதற்குப் பதிலாகப் பெறக் கூடிய இதர பண்டங்களின் அளவாகும். 'சமுதாய இன்றியமையாமை' (Socially necessary) என்ற அடைச் சொல் உழைப்புக்குமுன் சேர்க்கப்பட்டது. எல்லா மனித முயற்சிகளும் மனித வாழ்வை வளப்படுத்துவதாகக் கொள்ள முடியாது. எது இன்றியமையாததோ அதை மாத்திரமே நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். உழைப்பில் பல தரப்பட்ட உழைப்பாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்; அவர்களுடைய பல்வேறு தரமான உழைப்புக்குள்ள மதிப்பைக் கணக்கீடு செய்ய முடியும் என்று மார்க்ஸ் விளக்கிக் காட்டினார். ஒரு பொருளுக்குள்ள மதிப்பு அதற்குள் காணப்படும் கச்சாப் பொருள்களின் மதிப்பு, அதை உற்பத்தி செய்யப் பயன்படுத்திய இயந்திரங்களுக்கான தேய் மான வீதம், அதில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உழைப்பு ஆகியவை யாகும். இவைகளில் மிக முக்கியமானது உழைப்பாளரின் உழைப்புச் சக்தி. அது அப் பண்டத்திற்குள்ளாகக் காணப்படும்.

உழைப்புச் சக்தி என்பது உழைப்பாளரின் வேலை செய்யும் சக்தியாகும். இந்தச் சக்தியைத் தான் முதலாளி கூலி கொடுத்து வாங்குகிறார். உழைப்பாளர் தம்முடைய உழைப்பின் பலனைப் பண்டங்களாக விட்டுச் செல்லுகிறார். எனவே பண்டங் களுக்கு மதிப்பு ஏற்படுகிறது. உழைப்பாளரின் உழைப்புக்குக் கொடுத்த கூலி அவ்வுழைப்பாளரால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டத்தின் மதிப்பாக மாறுகிறது. இதே பண்டத்தை விற்கும் போதோ, பண்ட மாற்று செய்யும்போதோ, கொடுத்த கூலியை விட அதிகமாகப் பெற்றுவிடுகிறார். இதை உபரி மதிப்பு (Surplus Value) என்று மார்க்ஸ் அழைக்கிறார்.

உழைப்புச் சக்தி நிலைத்து நீடித்து இருப்பதற்கும், வளர்ச்சி பெறுவதற்கும் சில பண்டங்கள் தேவைப்படுகின்றன. இந்தப் பண்டங்களை உற்பத்திசெய்வதற்கு வேண்டும் உழைப்புச் சக்தி தான் உழைப்பின் மதிப்பாகும். ஒரு தொழிலாளி 10 மணிநேரம் உழைக்கிறதாகக் கொள்வோம். இவ்வுழைப்பில் முதல் ஐந்து

[1] Exchange Value

மணி நேரத்திற்குள்ளாக உழைப்புச் சக்தியின் மதிப்பை உண்டாக்கி விடுகிறார். இதற்கீடான ஊதியமாகக் கூலியும் பெற்றுக் கொள்கிறார். ஆனால் இன்னும் மிஞ்சியுள்ள 5 மணி நேரத்தில் மேற்கொண்டும் மதிப்புள்ள பண்டங்களை உற்பத்தி செய்ய உதவுகிறார். ஆனால் இவ்வுற்பத்தியை முதலாளி எடுத்துக்கொள்கிறார். இதுவே சுரண்டலின் அடிப்படை சூட்சுமமாகும்.

மார்க்ஸின் கொள்கைகளை இங்கே பகுத்துக் காண்போம்.

(1) உபரி மதிப்பை முதலாளி சுரண்டிக் கொள்வதால், மேலும் மேலும் சொத்து ஒரு சிலரிடமே சேர்கின்றது. ஒரு சிலரிடமே சொத்துக்கள் குவிவதால், உபரி மதிப்பை மேலும் அவர்களே எடுத்துக்கொள்ளும் வாய்ப்புகள் எழுகின்றன. இவ்வாறு மூலதனம் ஒரு சிலரின் கைகளில் குவியக்குவியத் தொழிலாளியின் வாழ்க்கை நலிகின்றது. ஒரு பக்கம் செல்வம் குவிகிறது. மற்றொரு பக்கம் வறுமை, துன்பம், பிணி அறியாமை வளர்கின்றன. இதைப் பாட்டாளி மக்களின் வளர்ந்து வரும் துயரக் கோட்பாடு என்று மார்க்ஸ் குறிப்பிட்டார்.

(2) இயந்திர சாதனங்களும், உபகரணங்களும் உபயோகிக்கப்படுவதால் மொத்த மூலதன அளவு அதிகரிக்கிறது. ஆனால் கூலி கொடுப்பதற்காக ஒதுக்கப்படும் பங்கு குறைந்து செல்கிறது. வேலை வாய்ப்புகளைவிட வேலை வேண்டுவோர் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. வேலை இல்லாதோர் தொழிற்சாலைகளின் வாசல்களில் காத்துக் கிடக்கின்றனர். இவர்கள் வெளியே காத்திருக்கும் வரை உள்ளே உழைக்கும் தொழிலாளியின் கூலியைக் குறைத்து வைப்பது சாத்தியமாகிறது. இதனைக் ''காத்து நிற்கும் தொழிலாளர் சேனைக் கோட்பாடு'' என்று மார்க்ஸ் அழைத்தார்.

(3) முதலாளித்துவத்தில் செல்வம் வளர்ச்சி அடையும் போது, இலாப விகிதம் குறைந்துகொண்டே செல்லும் என்பது மார்க்ஸ் கொள்கை. இவ்வாறு குறைந்து செல்லும் இலாப விகிதத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு முதலாளிகள் இன்னும் அதிகமாகச் சுரண்ட முற்படுவார்கள். அதற்காகக் காலனிகளிலிருந்து கச்சாப் பொருள்களை மிகக் குறைந்த விலையில் கொண்டுவர முயல்வார்கள். உழைப்பின் உண்மையான மதிப்பிற்குக் கீழாகத் தொழிலாளர் ஊதியத்தைக் குறைக்கவும் முயல்வார்கள்.

(4) முதலாளித்துவ பொருளாதார வளர்ச்சியில், பொருளாதார மந்தம் அல்லது நெருக்கடி நிச்சயமாக நேரக் கூடிய ஒரு நிகழ்ச்சி. இறுதியில் இவையே முதலாளித் துவத்தை வீழ்த்தும். இவ்வித நெருக்கடிகளுக்குப் பல காரணங் களைக் கண்டார் எனினும், இரண்டு முக்கியமானவை. குறைந்து செல்லும் இலாப விகிதம் ஒன்று; மற்றது சுரண்டப்பட்ட மக்களின் வாங்கும் சக்தி குறைந்து போய்விடுகிறது. அப்பொழுது பெருத்த முதலாளித்துவ உற்பத்தி வாங்குவோ ரின்றி மந்தம் ஏற்பட்டு நெருக்கடி தோன்றுகிறது. இந்த நெருக் கடிகள் மீண்டும் மீண்டும் தோன்றி இறுதியில் முதலாளித் துவமே முறிந்து விடுவதற்குக் காரணமாகி விடுகின்றன.

'கம்யூனிசப் பிரகடனம்' என்னும் நூலில் முதலாளித்துவச் சமுதாயத்திலிருந்து மாற்றமுற்று எழும் சமுதாயம் எந்த வழி முறைகளில் முன்னேறிச் செல்லும் என்பதை அவர் குறிப்பிட் டுள்ளார். பாட்டாளி வர்க்கம் தனக்குக் கிடைத்திருக்கும் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி, முதலாளிகளிடமிருந்து எல்லா மூலதனத்தையும் முதலில் கைப்பற்றும். பின்னர் உற்பத்தி மூலங்கள் அனைத்தையும் அரசாங்கத்தின் கைக்குக் கொண்டு வந்து மைய மயமாக்கும். மொத்த உற்பத்தி சக்திகளை எவ்வளவு விரைவாகப் பெருக்க முடியுமோ அவ்வளவு விரைவாகப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். முதலாளித்துவம் படர்ந்து வளர்ந்துள்ள ஒரு நாட்டில் முதலில் எல்லா நிலமும் அரசுக்குச் சொந்தமானதாக அறிவிக்கப்படும். பின்னர், சொத்து, வாரிசுரிமை நீக்கப்படும். பணம் நாட்டுடைமை ஆக்கப்படும். எல்லாப் போக்கு வரத்துச் சாதனங்களும், செய்தித் துறைகளும் அரசாங்கத்தின் கீழ்க் கொண்டுவரப்படும். தொழிற் சாலைகள், விவசாயப் பண்ணைகள் ஆகியவை திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டு, உற்பத்தி பெருக்கப்படும்.

### ருஷ்யாவில் மார்க்சீய லெனினிசம்

இவ்வாறு வரையப்பட்ட மார்க்ஸீயம் ஜார் மன்னன் அரசாண்ட ருஷ்ய நாட்டில் பரவலாயிற்று. ஆரம்பத்தில் மெதுவாகத் துவங்கிய இயக்கம் பின்னர் விரைவு பெற்றது. கம்யூனிசப் பிரகடனம் என்னும் நூலைப் பக்கூனின் ருஷ்ய மொழியில் 1860-ல் மொழிபெயர்த்தார். 1872-ல் மார்க்ஸின் மூலதனம் ருஷ்ய மொழியில் வெளியாகியது. மார்க்ஸின் சித்தாந்தங்களைப் பற்றிப் பல நூல்கள் வெளியாயின. அறிவாளிகள், தொழிலாளர்கள் ஆகியோர் சிறுசிறு குழுக்களாக

மார்க்ஸியத்தைப் பயின்று வந்தனர்; சிலர் மார்க்ஸீயக் கருத்து களைப் பரப்பலானார்கள். இப்படிப் பரப்பிய ஒரு கட்சி சோஷியல் டெமொகிராட்டிக் கட்சியாகும். இது 1903-ல் மென்சிவிக்குகள் என்றும் போல்ஷிவிக்குகள் என்றும் இரு கட்சி களாகப் பிரிந்தன. லெனின் போல்ஷிவிக்குகளின் தலைவராக விளங்கினார். புரட்சிக்கு முந்தைய ஆண்டுகளிலும், புரட்சியின் போதும், புரட்சிக்குப் பின்னும் லெனின் தலைவராக விளங்கிய தோடு, பலவிதக் கோட்பாடுகளையும், தத்துவங்களையும் வெளியிட்டிருக்கிறார். அதை லெனினிசம் என்று குறிப் பிடுகிறார்கள்.

லெனின் ஒரு பள்ளி ஆய்வாளரின் மகனாய்ப் பிறந்து, பெரிய புரட்சி வீரனாய் வளர்ந்து, சோவியத் நாட்டின் தந்தையாக மதிக்கப்படுகிறார். மார்க்ஸீயம்—லெனினிசம் என்ற சோவியத் யூனியனின் அதிகார பூர்வமான சித்தாந்தத்தின் தலைவர் அவரே ஆவார். அவர் ஏராளமான நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். மார்க்ஸீய சித்தாந்தங்களின் அடிப்படையில் தம்முடைய காலத்திற்கும் அரசியல் பொருளாதார சூழ்நிலை களுக்கும் ஏற்ப அவர் கொள்கைகளை வகுத்தார். பாட்டாளி வர்க்கத்தின் புரட்சி வழிமுறைத் தத்துவமே லெனினிசம் என்று ஸ்டாலின் குறிப்பிட்டார். ஏகாதிபத்திய காலத்தில் மார்க்சீயம் லெனினிசமாகவும், பாட்டாளி வர்க்கப் புரட்சியாகவும் உருவெடுப்பதாக அவர் கூறினார். லெனின் புரட்சியாளராக மாத்திரமல்லாமல், புதியதொரு பாட்டாளி அரசின் தலைவராகவும் விளங்கினார். அவர் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலம் குறைவானது என்றாலும், தீர்க்கத் தரிசனத் தோடு, சோவியத் நாட்டின் வருங்கால வாழ்க்கை வளத்திற்கு ஏற்ற அடித்தளங்களைக் கட்டிவைத்தார். அத்தோடு சோஷியலிச சமுதாயக் கட்டுக்கோப்பிற்கு அத்தியாவசியமான கருத்துப் படைப்பையும் விட்டுச் சென்றார். சோஷியலிச வளர்ச்சி சோவியத் நாட்டில் மட்டுமல்லாமல் ஏனைய பகுதி களிலும் வளர்ந்தோங்க அவர் பல கட்டுரைகளைப் பொதுப் படையாக எழுதியுள்ளார்.

ஏகாதிபத்தியம்[1] என்ற அவரது நூலில் லெனின் ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய கண்டங்களில் முதலாளித்துவம் புதிய கட்டத்தை அடைந்துள்ளதாகக் கூறினார். ஏகாதிபத்தியம் அல்லது ஏகபோக முதலாளித்துவம் ஏற்கனவே வழக்கிலிருந்த

[1] Imperialism

போட்டி முதலாளித்துவத்தை விழுங்கிவிட்டது என்று கூறினர். சில குறிப்பிட்ட முதலாளிகளின் கைகளில் உற்பத்தி மையமாக்கப்பட்டு விட்டதென்றும், அவர்கள் பாங்குகளில் தமக்குள்ள ஆதிக்கத்தையும், செல்வாக்கையும் கொண்டு, மூலதனப் பகிர்வை ஏகபோகமாக அனுபவித்து வருகிறார்கள் என்றும் எழுதினர். பண மூலதனம் வழங்கப்படும் இக் காலத்தைப்பற்றி அவர் கூறிய கூற்று இன்று மெய்யாக விளங்குகிறது. பண மூலதனம் அளிக்கும் 'குத்தகைதாரரும்[1]' தொழில் முயல்வோரும்[2] வெவ்வேறு வகையினராக இருக்கிறார்கள். முதலாளித்துவ நாடுகள் ஒரே சீராக வளர்ச்சி பெற்றில; எனவே வளர்ச்சி பெற்ற சில் நாடுகளில் இருந்து மூலதனம் பின்தங்கிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பின்தங்கிய நாடுகளில் இலாபம் சம்பாதிக்கும் வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன. உலக சந்தையைக் கூறு போட்டுக் கொண்டு பின் தங்கிய நாடுகள் மூலதனம் பெற்ற நாடுகளிலேயே வாணிபம் செய்ய வேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்தி, அதனால் கொள்ளை இலாபம் சம்பாதிக்கின்றனர். வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகள் இலாபம் சம்பாதிப்பதற்காகச் சந்தை வேட்டையில் இறங்குமென்றும், அதனால் உலகப் போர்கள் நடக்குமென்றும் 1900ஆம் ஆண்டில் லெனின் குறிப்பிட்டார்.

வன்முறைப் புரட்சி அவசியமானது என்றும், புரட்சிக்குப் பின் பாட்டாளி வர்க்க சர்வாதிகார ஆட்சி நிறுவப்பெற வேண்டும் என்றும் அவர் எழுதினர். இவ்வகையான பாட்டாளி வர்க்க சர்வாதிகார ஆட்சியானது, நாட்டில் உள்ள மீத மிச்ச முதலாளித்துவ அம்சங்களை ஒழிக்க அவசியமாகிறது; தங்களைச் சுரண்டிக் கொழுத்த முதலாளிகளைக் கட்டுப்பாட்டுக்குள் அடக்க அது தேவை என்று கருதினர். ஆனால் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் சில காலத்துக்கு மாத்திரமே அமுலில் இருக்கும் முதலாளித்துவ சாயல் மங்கி யொழிந்த பிறகு அதன் பணி முடிந்து அந்தச் சர்வாதிகார அரசு அவசியமற்றதாகி, வாடி உதிர்ந்துவிடும். ஆனால் அது மார்க்ஸ் கூறியுள்ள இறுதியான கம்யூனிச அமைப்பில்தான் நடைபெறும் என்று லெனின் விளக்கினர்.

வெற்றிகரமாக அமைக்கப்பட்ட சோஷியலிச அரசின் அமைப்பு, அதன் பொருளாதாரம் ஆகியவை பற்றி லெனின் எழுதியுள்ள கருத்துகள் காலத்தால் சோதிக்கப்பட்டு, ஏற்றுக்

[1] Rentiers [2] Entrepreneurs

கொள்ளப்பட்டனவாகும். முதலாளித்துவம் வளர்ச்சி பெற்று வருவதால் பல தொழிலாளர்கள் அரசின் ஆட்சிப் பொறுப்பில் பங்கேற்கும் தகுதி பெறுகின்றனர். ஏற்கனவே முதலாளித்துவ அமைப்பில் பொருளாதார முதலீடுகள் உயர் மட்டத்தை எய்தியிருக்குமாதலால் அவற்றைப் பாட்டாளிகள் எடுத்துக்கொண்டு அரசினை நடத்துவது இலகுவானது. ஆனல் தொழிலாளர் கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடக்க வேண்டுவது அவசியம். முழுச் சமுதாயமும் ஒரே அலுவலகமாகவும், ஒரே தொழிற்சாலையாகவும் விளங்கும். உற்பத்தி பெருகும். நாட்டின் செல்வாதாரங்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டு கையாளப்படும். இவ்வாறெல்லாம் லெனின் எழுதியது புரட்சிக்கு முன்பு; இதுவே பின்னே உண்மையாக நிகழ்ந்ததுவும். அவரது ஆழ்ந்த அறிவுக்கும், திறமைக்கும் இது எடுத்துக்காட்டாகும்.

### ஸ்டாலின்

ஜோசப் ஸ்டாலின் தத்துவவாதியல்லவென்றாலும், 33 ஆண்டுகள் முதலாவது சோஷியலிச நாட்டில் சர்வாதிகாரியாக ஆட்சி புரியும் பொறுப்பைப் பெற்றதால், சோஷியலிச அமைப்பில் தோன்றக்கூடிய பல நெருக்கடிகளைச் சந்தித்தவர். அவற்றிற்கு விடை காணும் பொறுப்பும் இவரிடமிருந்தது. எனவே சில அனுபவ ரீதியான உண்மைகளை அவர் வெளியிட்டுள்ளார். பல கட்டுரைகள் எழுதினர்; இறுதி நாட்களில் "சோஷியலிசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள்" என்ற நூலையும் எழுதினர். இந்த நூலில் சோஷியலிசப் பொருளாதார விதிகள் எவ்வளவு மெய்யானவை என்றும் பாரபட்சமற்றவை என்றும் விளக்கினர். தொழில் நுட்ப அறிவியலைப் பயன்படுத்தி, சோஷியலிச அமைப்பின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் அவசியத்தை எடுத்துக் கூறினர். உற்பத்தி உயர்ந்தால் மட்டுமே சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் என்பதை வலியுறுத்தினர்.

ஸ்டாலினுக்குப் பிறகு, சோவியத் ஆட்சி அமைப்பில், நெகிழ்ச்சி தோன்றியுள்ளது. கூட்டுப் பொறுப்பும், ஜனநாயக அம்சங்களும் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன. முதலாளித்துவ நாடுகளுக்கும், சோவியத் யூனியனுக்கும் இடையே நிலவிய 'கெடுபிடி' நிலைமை மாறி, சமாதான சகவாழ்வுக்குரிய அடித்தளங்கள் போடப்பட்டுள்ளன.

# 4. சோவியத் யூனியனில் திட்டப் பொருளாதாரம்

எவ்வகைப்பட்ட பொருளாதாரத்தையும் அதில் உற்பத்தி, நுகர்வு ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள மக்களின் அன்றாடக் கூட்டுறவின்மேல்தான் எழுப்பப்பட முடியும். முதலாளித்துவச் சமுதாயத்தில் அங்காடியில் நிலவும் விலையே கருவியாக அமைந்து பலதரப்பட்ட பொருளாதாரப் பணிகளை இயக்குவிக்கிறது. என்னென்ன பண்டங்கள் உற்பத்தி செய்யவேண்டும்? எவ்வளவு உற்பத்தி செய்யவேண்டும்? எவ்வாறு அவற்றைப் பகிர்வு செய்யவேண்டும்? சமுதாயத்தின் மொத்த உற்பத்தியில் எத்தனை விழுக்காடு நுகர்வுக்கும், சேமிப்புக்கும் பங்கீடு செய்ய வேண்டும்?—என்பன போன்ற எண்ணற்ற வினாக்கள் எழுகின்றன. இவையெல்லாவற்றிற்கும் முதலாளித்துவத் துறையில் விலை அடிப்படையில் எல்லாம் நிர்ணயிக்கப்பெறும் என்று கூறுவார்கள். ஆனால் திட்டப் பொருளாதார அமைப்பில் சந்தை விலை அடிப்படையில் மேலே குறிப்பிட்ட பிரச்சினை களுக்கு விடை காண்பதில்லை. மாறாக, திட்டமிடும் மத்தியக் குழு பொருளாதாரத்தின் பல்வேறு கிளைகளும் பிரிவுகளும் இன்னின்ன காரியங்களைச் செய்யவேண்டும் என்று ஆணைகள் பிறப்பிக்க, அதன் விளைவாகப் பொருளாதார அமைப்பின் பல்வேறு பணிகள் செய்யப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, 2 கோடி டன் பருத்தி உற்பத்தி செய்க என்று விவசாயத் துறைக்கும், 5 இலட்சம் மோட்டார் கார்கள் உற்பத்தி செய்க என்று தொழில் துறையின் ஒரு பிரிவுக்கும், 3 கோடி டன் நிலக்கரி அகழ்ந்து எடுக்க என்று கனிவளத் துறைக்கும் ஆணைகள் அனுப்பப்படுவதாகக் கொள்வோம். நாட்டின் தொழிலாளர், இயந்திர சாதனங்கள், கச்சாப்பொருட்கள், மூலாதாரங்கள் அனைத்தும் நாட்டுடைமையாதலால், அவற்றை யெல்லாம் இன்னின்ன அளவுகளில் இன்னின்ன துறைகளில் செலவிடுக என்று ஒதுக்கீடு செய்து ஆணைகள் பிறக்கும்

உற்பத்தியான பருத்தியை இந்தப் பிரதேசங்களுக்கு அனுப்புங்கள், நிலக்கரியை இன்ன தொழிலுக்கு அனுப்பி வையுங்கள் என்றும், அவற்றின் விலை இவ்வளவாக இருக்கும் என்றும் நிர்ணயித்து ஆணைகள் பிறக்கும். இதுதான் திட்ட அமைப்பாகும். இவ்வாறு பொருளாதாரக் கூறுகளைப் பல்வேறு பண்டங்கள் அளவுகளில் குறிப்பிட்டிருப்பதைப் பண அளவுகளில் குறிப்பிடும்போது அது பணத் திட்டமாகக் காட்சி அளிக்கிறது. இப்படிப் பார்க்கும்போது, சோவியத் நாட்டின் திட்டங்கள் துல்லியமான புள்ளி விவரங்கள்மீது தெளிவான பொருளாதார விவரங்கள் பொறித்த ஒரு ஆவணம் ஆகும். வருங்காலத்தில் பொருளாதார அமைப்பில் ஏற்படும் விளைவுகளையும் கவனத்தில் கொண்ட ஒரு அறிக்கையாய் அது அமைகிறது.

### சோவியத் நாட்டின் திட்டம் தோன்றி வளர்ந்த வரலாறு

1917ஆம் ஆண்டில் 'சமுதாயம் ஒரே அலுவலகமாகவும், ஒரே தொழிற்சாலையாகவும் மாறும்' என்று லெனின் எழுதினார். ஒன்றிய குறிக்கோள்களின் அடிப்படையில் மொத்த பொருளாதாரக் கட்டமைப்பும் எழுப்பப்பெறும் என்ற இன்றைய உண்மையையே இக்கூற்று அன்று வெளியிடுவதாக இருக்கிறது. ஆரம்ப நாட்களில் தலைமைப் பொருளாதாரக் குழு[1], விரிவானதும் எல்லாவற்றையும் உள்ளடக்கினதுமான பொருளாதார திட்டத்தைத் தயார் செய்யும் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் அந்தக் குழு, தொழில்துறையை நிர்வகிப்பதிலேயே தனது நேரத்தையும், திறனையும் செலவிட்டு விட்டது. தற்காப்புக் குழு[2] பல்வேறு துறைகளின் பொருளாதார நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து நடத்திச் சென்றது இக் குழுவும் ஆய்ந்தறிந்து ஒரு அறிக்கையையோ அல்லது திட்டத்தையோ உருவாக்கவில்லை. அவ்வப்பொழுது எழும் சிக்கல்களுக்கு, கிடைக்கும் தகவல்களையும், நிலவும் சூழ்நிலையையும் பொறுத்து முடிவுகளை வழங்கி வந்தது. அரசாங்கத்தின் பொருளாதாரக் குழுக்கள் பலவும் தங்கள் தங்கள் துறைப் பிரிவுகளுக்குரிய திட்டங்களை விரிவுபடுத்தும் வழிமுறைகளைத் தீட்டி வைத்திருந்தன என்றாலும், அவை ஒருங்கிணைந்த ஒரு திட்டமாக அமையப்பெறவில்லை.

[1] Supreme economic Council

[2] Council of defense

1920ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அரசு மின்சார ஆணைக் குழு[1] ஒன்றை நியமித்தது. ஐரோப்பிய ருஷ்யப் பகுதியின் மின்சாரத் தேவைகளை நிறைவேற்ற ஒரு திட்டம் வகுப்பதற்காக இந்தக் குழு நியமிக்கப்பட்டது. எட்டாவது கம்யூனிஸ்ட் காங்கிரசுக்கு இக்குழு சமர்ப்பித்த அறிக்கையில், 10 அல்லது 15 வருட காலத்திற்குள் சிற்சில பொருள்களின் உற்பத்தி அதிகரிப்பைக் குறியீடுகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. நாட்டின் வெவ்வேறு பிராந்தியங்களில் முப்பதுக்கும் மேற்பட்ட மின்சார நிலையங்கள் நிறுவவும் சிபாரிசு செய்தது. நிலக்கரி, தேனிரும்பு, உருக்கு முதலியவற்றின் உற்பத்தியில் எட்டவேண்டிய எல்லைகள் குறிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், இந்த அறிக்கை இன்று சமர்ப்பிக்கப்படும் திட்ட நகல்களோடு எவ்வித ஒற்றுமையும் கொண்டதாக இருக்கவில்லை.

1921ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்தில் அரசின் திட்டக் குழு[2] நியமிக்கப்பட்டது. நாடு முழுவதுக்குமான பொருளாதாரத் திட்டம் ஒன்றைத் தயார் செய்யும்படி இக்குழு பணிக்கப் பட்டது. இதன் அடிப்படையாக, மின்சார ஆணைக் குழுவின் அறிக்கை அமைந்தது. ஆரம்ப நாட்களில் திட்டக் குழு 40 பொருளாதார அறிஞர்கள், பொறியியல் வல்லுநர்கள், இதர பணியாளர்கள் ஆகியோரைக் கொண்டிருந்தது. 1923ஆம் ஆண்டில் 300-க்கும் அதிகமான பேர் இதில் பணியாற்றினர். 1925ஆம் ஆண்டில் சோவியத் ஒன்றியம் முழுவதிலும் இத்திட்டக் குழுவின் துணை அலுவலகங்கள் நிறுவப்பட்டன. இது தவிர பல்வேறு அமைச்சரகங்களிலும் திட்டக் குழுவின் பிரிவுகள் பணியாற்றி வந்தன. தனித்தனி தொழிற் பிரிவுகளிலும் இவ்வாறான திட்டமிடும் குழுக்கள் இயங்கி வந்தன. திட்டக் குழு ஆரம்ப நாட்களில் சிற்சில குறிப்பிட்ட பணிகளை மட்டுமே எடுத்துக்கொண்டு வேலை செய்தது. எடுத்துக்காட்டாக, டோன்பாஸ் நிலக்கரி பிராந்தியத்தின் வளர்ச்சித் திட்டத்தை வரைவதற்காகத் தேவையான புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தொகுத்து வந்தது. பல்வேறு துறைகளுக்கிடையே செல்வா தாரங்களின் அளிப்பு விஷயத்தில் ஏற்பட்ட போட்டா போட்டிகளை விலக்கி நடுவு நிலையான முடிவுகளைக் கூறும். வேலையிலும் திட்டக்குழு ஈடுபட்டிருந்தது.

1925–26ஆம் ஆண்டில் ரஷ்யப் பொருளாதாரம் பற்றிய ஆண்டு இறுதி புள்ளி விவரங்கள்[3] வெளியிடப்பெற்றன.

[1] GOELRO, State Commission for Electrification

[2] COSPLAN, State Planning Commission

[3] Annual Control figures

பொருளாதாரத்தின் பிரதான பிரிவுகளுக்கான குறிக்கோள்களும் வெளியிடப்பட்டன. அவற்றின் ஆதாரங்கள், வாய்ப்புகள் ஆகியவற்றைப் பற்றிய முடிவுகளும் காணப்பட்டன. 1926–27-லும், 1927–28லும் இவ்விதமான விவரங்கள் வெளியிடப்பெற்றன.

1927-ல் பதினைந்தாவது கம்யூனிஸ்ட் காங்கிரஸ், சோவியத் பொருளாதார வளர்ச்சிக்கென்று ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றைத் தீட்டும்படி பணித்தது. தலைமைப் பொருளாதாரக் குழு ஒரு திட்டத்தையும், திட்டக் குழு ஒரு திட்டத்தையும் வரைந்து மக்கள் முன் விவாதத்திற்காக வைத்தன. விரிவான விவாதத்திற்குப் பின்னர் திட்டக் குழுவின் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1928ஆம் ஆண்டின் பிற்பகுதியில் செயல்பட ஆரம்பித்தது. 1928 செப்டெம்பரில் ஆரம்பித்த முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் நாலேகால் ஆண்டுகளில் நிறைவெய்தியது. இவ்வாறாக குறிப்பிட்ட காலக் கெடுவிற்கு முன்னரே அது முடிக்கப்பெற்றது.

1933–1937ஆம் ஆண்டுகளில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டத்தில், இரயில்வே வளர்ச்சிக்கென்று குறிக்கப்பட்ட ஐந்து ஆண்டுக் குறிக்கோள்கள் நான்கு ஆண்டுகளிலேயே நிறைவேற்றப்பட்டன. தொழில் துறை வளர்ச்சிக் குறிக்கோள்கள் நாலேகால் ஆண்டுகளில் முடிந்தன.

மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டம் 1938-1943ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்படத் திட்டமிடப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியின் 18வது காங்கிரஸ் இத் தீர்மானத்தை 1939-ல் நிறைவேற்றியது. வரப்போகும் உலக யுத்தத்தின் சோகம் கப்பிய நீண்ட நிழல் இத் திட்டத்தின்மீதும் விழுந்தது. 1941ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பாசிசப் படைகள் சோவியத் நாட்டின்மீது படையெடுத்தன. யுத்தகாலத் திட்டமாக 1941ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டது.

இரண்டாவது உலகப் போரினால் எழுந்த சோவியத் நாட்டின் பொருளாதாரச் சீர்குலைவைச் சரிசெய்து, புதிய எல்லைகளை எட்டிப் பிடிக்க நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் 1946ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. 1946-க்கும் 1950-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் இத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

1951ஆம் ஆண்டில் வெளியான அரசாங்க அறிக்கை இத் திட்டத்தின் வெற்றியைப் பற்றிக் குறிப்பிட்டது.

1951–55ஆம் ஆண்டுக்கான ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் 1950ஆம் ஆண்டிலேயே தயாரிக்கப்பட்டது என்றாலும், அது உடனடியாக வெளியிடப்படவில்லை. அதன் பிரதான அம்சங்கள் 1952 ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப்பட்டன. அக்டோபர் மாதத்தில் கூடிய பத்தொன்பதாவது கம்யூனிஸ்ட் கட்சிக் காங்கிரஸ் அதை அங்கீகரித்து வெளியிட்டது. 1950-க்கும் 1953-க்கும் இடைப்பட்ட காலத்தில் கொரிய யுத்தம் நடைபெற்ற தால் இத் திட்டத்தின் நகலில் முழு விவரங்கள் கொடுக்கப் பெறவில்லை என்று அனுமானிக்கலாம்.

1953ஆம் ஆண்டில் ஸ்டாலின் மரணமடைந்த பிறகு மாலெங்காவும், குருஷ்சேவும் புதிய கொள்கை விளக்கங்களை வெளியிட்டனர். விவசாயப் பண்ணைகள் பின்பற்றவேண்டிய கொள்கைகள் விளக்கப்பட்டன. ஸ்டாலின் தன்னுடைய சில சொற்பொழிவுகளில் ஐந்தாண்டுக் காலத்துக்கும் மேற்பட்ட காலத்துக்குத் திட்டமிட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி வந்துள்ளார். எனினும், நீண்ட காலத் திட்டமிடுதல் என்ற கருத்து எளிதில் வலுப்பெறவில்லை.

1956 பெப்ருவரியில் ஆருவது ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப் பட்டது. இதன்படி 1956லிருந்து 1960-க்குள்ளாகப் பொருளா தாரத்தில் பெருத்த மாறுதல்களைக் கொண்டுவரத் திட்டமிடப் பட்டது. இத்திட்டத்தின் கீழ், தொழில் உற்பத்திச் சுமார் 65 சதவிகிதம் உயரவும் மூலதன முதலீடு அதற்கு முந்தைய ஆண்டைவிட 67 சதவீதம் அதிகமாகவும் தேசீய வருமானம் 60 சதவீதம் அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

ஏழாவது திட்டமாக ஏழாண்டுத் திட்டம் 1957ஆம் ஆண்டு செப்டெம்பரில் வரையப்பட்டது. 1959ஆம் ஆண்டில் தொடங்கி 1965-க்குள்ளாக இத் திட்டத்தை நிறைவேற்றக் கட்சிக் காங்கிரஸ் தீர்மானித்தது. இந்த ஏழாண்டுக் காலத்தில் கம்யூனிசச் சமுதாயத்தைக் கட்டுவதற்கான தொழில் நுட்ப பொருளாதார அடித்தளத்தை அமைப்பதென்று திட்டமிடப்பட்டது. நாட்டின் எல்லாப் பிரதேசங்களும் ஒரே சீரான வளர்ச்சி பெறவும், உற்பத்திச் சக்திகள் எல்லாப் பிராந்தியங்களுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கவும் இத் திட்டம் வகை செய்தது.

1961 அக்டோபரில் கூடிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22ஆவது காங்கிரஸ், 1980ஆம் ஆண்டோடு முடியும் இருபதாண்டுக் காலத்துக்கென்று ஒரு நீண்ட காலத் திட்டத்தைத் தீட்டியது. கம்யூனிச சமுதாயம் நிறுவப்பெறுவதே இதன் அடிப்படைக் கொள்கையாகும்.

எட்டாவது திட்டமாக (1966–70) 23வது கட்சிக் காங்கிரஸ் புதிய ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கியது. அநேக பொருளாதாரச் சிக்கல்களை அறுப்பதே எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பணியாகும். தொழில் நுட்ப வளர்ச்சியை விரைவு படுத்துவதும், சமூக உற்பத்தியைப் பரவலாக்கி விரைவான வளர்ச்சி வேகம் உடையதாக ஆக்குவதும் தலையாய பணியாகும் என்று தீர்மானிக்கப்பட்டது. இத்திட்டம் சோஷியலியத் திட்ட மிடுதலில் பெரும் சாதனையாகக் கருதப்படுகிறது.

## 4. எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1966—1970) சோவியத் பொருளாதார வளர்ச்சி

(1961–65-க்கான வளர்ச்சி 100 என்ற குறியீடு)

| | |
|---|---|
| நாட்டு வருமானம் — | 138—141 |
| மொத்தத் தொழில்துறை உற்பத்தி | 150 |
| மொத்த விவசாயத்துறை உற்பத்தி (சராசரி) | 125 |
| மூலதன முதலீடுகள் (சராசரி) | 147 |
| இரயில்வேக்கள் ஏற்றிச்செல்லும் சரக்குகள் | 123 |
| உண்மையான தலா வருமானம் | 130 |

சமுதாய உற்பத்தியின் அதிகரிப்புத் தொழிலாளர் உற்பத்தித் திறன் அதிகரிப்போடு இணையப் பெற்றுள்ளது. 1966-க்கும் 1970-க்கும் இடையில் தொழிலாளர் உற்பத்தித் திறன் 33–35 விழுக்காடாகத் தொழில் துறையிலும், 40–45ஆக விவசாயத் துறையிலும் 35–40ஆகக் கட்டுமானப் பிரிவிலும் வளரத் திட்ட மிடப்பட்டுள்ளது. இதற்கு அடிப்படையாகத் தொழில் நுட்ப வளர்ச்சியும், விஞ்ஞான விஸ்தரிப்பும் திட்டமிடப் பட்டுள்ளன. உற்பத்தி அமைப்பும், தொழிலமைப்பும் இன்னும் உயர்வாக மேம்படுத்தப்பெறத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. பொருளாதார மேலாண்மை (Economic Management) விஞ்ஞான ரீதியாக வகுக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின்கீழ் நுகர்வாளர் பண்ட உற்பத்தியும், மூலதனப் பண்டங்கள் உற்பத்தியும் சமமாகவும் ஒரே சீராகவும் வளர்ச்சி பெறத் திட்டம் வகுக்கப் பெற்றுள்ளது. இதைக் கீழ்க்காணும் பட்டியலில் காணலாம்.

**5. நுகர்வாளர் பண்டங்களின் உற்பத்தி உயர்வும், மூலதனப் பண்டங்களின் உற்பத்தி உயர்வும்—வருடாந்தர சராசரி வளர்ச்சி வீதம்**

| | வருடாந்தர சராசரி உயர்வு சதவீதத்தில் | | | |
|---|---|---|---|---|
| | 1959—60 | 1961—65 | 1966—1970 | |
| 1. மூலதனப் பண்டங்கள் | 11·3 | 9·6 | 8·7 | |
| 2. நுகர்வுப் பண்டங்கள் | 8·5 | 6·3 | 7·7 | |
| 3. 2வது முதலாவது வளர்ச்சி வீதத்தோடு ஒப்பிடப்பட்டது. | 75 | 66 | 89 | |

இவ்விருவகை உற்பத்தி வீதங்களும் நெருங்குவதால் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வது சாத்தியமாகிறது. பல்வேறு பண்டங்களின் உற்பத்தி உயர்வுபற்றிக் கீழே காட்டப் பட்டுள்ள பட்டியலில் காணலாம்.

**6. பண்டங்களின் உற்பத்தி உயர்வு**

| | 1970 |
|---|---|
| 1. பருத்தித் துணிகள் (10 கோடி மீட்டர் கணக்கில்) ... | 9·6 |
| 2. கம்பளி உடைகள் (10 இலட்சம் கணக்கில்) ... | 1750 |
| 3. தோலால் ஆன காலணிகள் (10 இலட்சம் ஜோடிகள் கணக்கில்) | 630 |
| 4. இறைச்சி அரசாங்கப் பண்ணைகளிலிருந்து (10 இலட்சம் டன்) | 6·2 |
| 5. மீன் (10 இலட்சம் டன் கணக்கில்) ... | 9·0 |
| 6. வெண்ணெய் (1000 டன் கணக்கில்) ... | 1160 |
| 7. வள்ளிக்கிழங்கிலிருந்து பெறப்படும் சர்க்கரை (10 லட்சம் டன்) | 10 |
| 8. கல்விச் சாதனங்கள், பொழுதுபோக்குக் கருவிகள், வீட்டுக்கு வேண்டிய உபகரணங்கள் (10 கோடி ரூபிள் கணக்கில்) ... | 16·5 |

தானியங்கள், கால்நடை ஆகியவற்றிலும் கணிசமான உற்பத்தி உயர்வு எதிர்நோக்கப்பட்டது.

7. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் விவசாயத் துறையின் இலக்குகள்

| | வருடாந்தர சாரசரி உற்பத்தி | |
|---|---|---|
| | 1961—65 | 1966 – 1970 |
| தானியம் (10 இலட்சம் டன் கணக்கில்) — | 130·2 | 167 |
| வள்ளிக் கிழங்குச் சர்க்கரை ,, ,, | 59·0 | 80 |
| பருத்தி ,, ,, | 5·0 | 5·6 – 60 |
| உருளைக்கிழங்கு ,, ,, | 81 | 100 |
| இறைச்சி ,, ,, | 9·3 | 11 |
| பால் ,, ,, | 65 | 78 |
| முட்டை (10 கோடிக் கணக்கில்) | 29 | 34 |

மேலே காணும் உயர்மட்டங்களை எய்துவதற்கு விவசாயத் துறையில் 41,000 கோடி ரூபிள்கள் முதலீடு செய்யப்படும். டிராக்டர்கள், அறுவடை இயந்திரங்கள், லாரிகள், செயற்கை உரங்கள், எரிபொருள் ஆகிய நவீனப் பண்டங்களாக விவசாயத் துறை முழுவதும் மின்சார—ரசாயன மயமாக்கப்படும்.

எல்லாத் துறைகளிலும் மொத்த முதலீடு 310,000 கோடி ரூபிள்களாக இருக்கும். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், தொழில் நுட்ப அடிப்படையை உறுதியாக அமைப்பதும் இத் திட்டத்தின் நோக்கங்களாகும். இத்தோடு ஏனைய சோஷியலிச நாடுகளுக்கு உறுதுணையாக உதவிகள் செய்வதும், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்குத் துணை புரிவதும் இத் திட்டத்தின் நோக்கங்களாகும்.

**திட்ட அமைப்பும், சில திட்ட அம்சங்களும்**

இனித் திட்டமிடும் அமைப்புப் பற்றியும், சோவியத் திட்டமிடும் அனுபவத்தில் பெற்ற சில அம்சங்கள் பற்றியும் சுருக்கமாகப் பார்ப்போம்.

சோவியத் திட்டங்களைத் திட்டக் குழு தயாரிக்கிறது. சோவியத் நாட்டின் சுப்ரீம் சோவியத் திட்ட வேலைகளை வழி நடத்துகிறது. அதனுடைய அமைச்சரவை இந்த வேலைகளை நேர்முகமாகக் கவனித்துக் கொள்கிறது திட்டக் குழு கீழ்க் கண்ட வேலைகளைச் செய்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி, மாநில அரசுகள், ஆகிய இரண்டும் வகுத்துத்தரும் கொள்கைகள், குறிக்கோள்கள் ஆகியவைகளுக்கேற்ப திட்டத்தைத் தீட்ட வேண்டும். அத்தோடு சோஷியலிசப் பொருளாதார விதிகளின் அடிப்படையிலும், கம்யூனிச சமுதாயம் கட்டும் அனுபவ ரீதியிலும் திட்டங்களை அமைத்துத் தரவேண்டும். திட்டக் குழு சோவியத் யூனியன் முழுமைக்கும் பொதுவான பிரிவாகும். ஒன்றியத்தின் அங்கங்கள் திட்டத்தைச் செயலாற்றுவதை மேற்பார்வை புரிகின்றது.

பொருட்கள், சாதனங்கள், எரிபொருட்கள் ஆகியவற்றின் அளிப்பை மேற்பார்வையிட தனியே ஒரு குழு இயங்குகிறது. தொழில் துறையின் பல்வேறு நிறுவனங்கள் அமைச்சரகங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மாநிலமும் தன்னுடைய திட்டக் குழுவின் மூலமாகத் திட்டங்களை வகுக்கிறது. ஒவ்வொரு தொழிற்சாலையிலும் திட்டப் பிரிவுகள் பணி புரிகின்றன. கட்டிடம் கட்டும் தொழில், அரசுப் பண்ணைகள், போக்குவரத்துத் துறை, வியாபாரத் துறை ஆகிய ஒவ்வொன்றும் தனித்தனி திட்டப் பிரிவைக் கொண்டுள்ளது. கூட்டுப் பண்ணைகளும் தொழிற்சங்கங்களும், திட்டம் தீட்டுவதில் இணைந்து செயல்படுகின்றன. திட்டக் குழுவிற்கு ஆதாரமாக இருப்பது புள்ளிவிவர மத்தியக் கழகம். பொருளாதாரக் கணக்கீடு முறைகள், புள்ளிவிவர சேர்க்கைகள் ஆகியவற்றில் முன்னேற்றம் ஏற்பட திட்ட வரைவு பூரணத்துவம் பெறுகிறது. தொழிலாளர்கள் திட்டத்தை நிறைவேற்றுவதில் நேரடியாகக் கலந்து கொள்கின்றனர்.

சோவியத் பொருளாதாரத் திட்டம் தீட்டுவதில் நான்கு கட்டங்களைக் காணமுடிகிறது. முதலாவதாக, திட்டத்தின் குறிக்கோள்கள், எட்டவேண்டிய எல்லைகள் ஆகியவற்றைக் குறிப்பது. இரண்டாவதாக, கொடுக்கப்பட்டுள்ள எல்லைக்

கோடுகளுக்குள்ளாகத் திட்டத்தை வரைவதும், பொருளாதாரப் பிரிவுகளின் சமநிறையான வளர்ச்சியை வகுப்பதும், மூன்ருவதாக, அரசாங்கத்திஞல் திட்டம் அங்கீகரிக்கப்படுவதும், நான்காவதாக, திட்டம் நிறைவேற்றப்பெறுவதை மேற்பார்ப்பதும், கட்டுப்படுத்துவதும். பணத்திட்டம் இந்த அடிப்படையில் தயாராகிறது. செலாவணிப் புழக்கம், வரவு—செலவுக் கணக்கு எழுதல் போன்ற நாணய அடிப்படையில் திட்டத்தைத் தீட்டுவதும் ஒரு முக்கிய பணியாகும். தேசிய அடிப்படையில் தீட்டப்பட்டுள்ள திட்டத்தைப் பிரதேச வாரியாகப் பகுத்து எழுதுவதும், அதன் அடிப்படையில் நிறைவேற்றுவதும் திட்டக் குழுவின் பணியாகும்.

# 5. தொழில் அமைப்பும் நிருவாகமும்

மூன்றுவிதமான தொழில் அமைப்புகள் சோவியத் யூனியனின் தொழில் உற்பத்தியைச் செய்கின்றன. அரசாங்கத் தொழில் நிறுவனங்கள், தொழில் துறைக் கூட்டுறவுகள், தனியாக இயங்கும் கைவினைஞர்கள் ஆகிய இம் மூன்று அமைப்புகளும் சோவியத் யூனியனில் காணப்படுகின்றன. இவற்றில் அரசாங்கத்தால் நிர்வகிக்கப்பெறும் தொழிற்சாலைகளும், சுரங்கங்களுமே மிக அதிகமாகும். நுகர்வாளர் பண்டங்கள் உற்பத்தியில் கூட்டுறவுத் துறை பெரிதும் ஈடுபட்டுள்ளது. சோவியத் பண்ட உற்பத்தியின் மிகச் சிறிய பாகத்தைக் கைவினைஞர்கள் செய்கிறார்கள். கைவினைஞர்கள் தொழிலாளிகளைத் தங்கள் கீழ் நியமித்துக் கொள்ளக்கூடாது என்ற தடைச் சட்டத்திற்குள்ளாகப் பணியாற்றவேண்டும்.

உலகிலேயே மிகப்பெரிய தொழில் பிரிவை—ஆலைத் தொழிலைச் சோவியத் யூனியனில் காண முடியும். அமெரிக்காவில் தான் ராட்சதத் தொழிற்சாலைகள் இருப்பதாக நினைத்துவிடக் கூடாது. அதைவிடப் பன்மடங்கு பேரளவிலான தொழிற் கேந்திரங்கள் சோவியத் அரசாங்கத்தால் நடத்தப்பெறுகின்றன. நாலரை கோடிப் பேருக்கு மேல் அரசாங்கத் தொழிற்சாலைகளிலும், சுரங்கங்களிலும் பணியாற்றி வருகின்றனர்.

இப் பெரிய தொழில் பிரிவை மேற்பார்வையிடுவதும், பொருளாதார வசதிகளைப் பெற்றுக்கொள்வதும், இயந்திரங்கள் முதலியனவற்றைப் பழுதுபார்த்து ஓடும் நிலையில் வைத்துக் கொள்வதும் மிகக் கடினமான பிரச்சினையாகும். புரட்சிக்குப் பிந்திய ஆண்டுகளில் சோவியத் அரசாங்கம் தொழில் அமைப்பையும், நிருவாகத்தையும் விஞ்ஞான ரீதியாகவும், தொழில் நுட்ப அடிப்படையிலும் அமைக்க எத்தனையோ சீர்திருத்தங்களையும், அமைப்பு முறைகளையும் மாற்றி மாற்றி மேற்கொண்டு

வந்துள்ளது. இவைகள் எல்லாம் மிகவும் பயனுள்ள தகவல்கள் தான். எனினும் அவற்றைப்பற்றி இங்கே ஆழமாக ஆராயப் புகாமல், இன்றுள்ள நிலைமையை விளக்குவதே இப் பகுதியின் பிரதான நோக்கமாக இருக்கும். அவசியமான இடங்களில் நிருவாக அமைப்பும், நடைமுறையும் முற்காலத்தில் எப்படி இருந்தது, எவ்வாறு வளர்ச்சியடைந்தது என்பதைக் கோடிட்டுக் காட்ட முயற்சி செய்யப்பட்டுள்ளது.

## அரசாங்கத் தொழில் துறையின் அமைப்பு

சோவியத் தொழில் துறையின் தலைமைப் பீடத்தில் சோவியத் அமைச்சரகங்கள் இடம் பெற்றுள்ளன. பல்வேறு பிரிவுகளின் தலைவர்கள் அல்லது அமைச்சர்கள் தங்கள் தங்கள் பிரிவுகளை மேலாண்மை செய்கிறார்கள். சோவியத் அமைச் சரவையில் மிகச் சிலரே பொருளாதாரப் பணிகளில் நேரடியாக ஈடுபடாதவர்களாக இருக்கிறார்கள். அமைச்சரவையில் ஒரு சிலர் கொள்கைகளை வகுக்கும் உட்சபையில் இடம் பெறு கின்றனர். இதுவே தலையாய குழுவாகும். இவர்களில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் மிக முக்கியமானவர். தலைமை அமைச்சரும் இன்னும் அனுபவமும் செல்வாக்கும் கொண்ட சிறந்தோர் ஓரிருவர் இக் குழுவில் இடம் பெறுவர்.

அமைச்சரவைக்கு உறுதுணையாகப் பல்வேறு குழுக்கள் பணிபுரிகின்றன. திட்டக் குழு, நாட்டின் பாதுகாப்புக் குழு, மத்திய புள்ளிவிவரக் கழகம், கட்டுமானப் பிரிவு ஆகியவை அமைச்சரவைக்குத் துணைபுரிகின்றன. ஆரம்ப நாட்களில், தலைமைப் பொருளாதாரக் குழு[1] ஒன்று அமைக்கப்பட்டு, அதன் கீழ் எல்லா உற்பத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. 1930 வாக்கில் இது பிரிக்கப்பட்டு, பல தனித்தனி அமைச்ச கங்களாகப் பணிபுரிய ஆரம்பித்தன. இரண்டாம் உலகப்போரின் போதும், ஸ்டாலினுக்குப் பிறகு சில ஆண்டுகளின் போதும், அமைச்சகங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டது. இதனால் மொத்தப் பொருளாதார நடவடிக்கைகளின் பொறுப்பும் ஒருசில அமைச்சர்களின் கைகளில் இருந்தது. இந்த நிலையை மாற்றி 1954-க்குப் பிறகு, ஒவ்வொரு உற்பத்திப் பிரிவிற்கும் தனித்தனி அமைச்சகங்கள் உருவாக்கப்பட்டன. இவைகள் மத்திய அமைச்சகங்கள், மாநில அமைச்சகங்கள் என இருவகைப்படும்.

[1] Vesenkha Supreme Economic Council.

ஒருசில அமைச்சகங்கள் நாடு முழுவதும் தழுவிய அமைப் பாகத் திகழ்கின்றன. உதாரணமாக, உருக்குத் துறை, எண்ணெய், எரிபொருள் துறை, கனரகத் தொழில் துறை ஆகியவையெல்லாம் மாநிலங்களின் எல்லைகளைத் தாண்டி மொத்த சோவியத் ஒன்றியத்துக்கும் பொதுவானதாக விளங்குகின்றன.

ஒவ்வொரு பொருளாதார அமைச்சகத்தின் கீழும் பல்லாயிரக் கணக்கானோர் பணிபுரிகின்றனர். பலவிடங்களில் தொழிற் சாலைகள், கிடங்குகள், ஆலைகள், பணிமனைகள், கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் மேலாண்மை செய்வது அந்தந்த அமைச்சரின் பொறுப்பும், கடமையும் ஆகும். இவைகளில் பணிபுரிவோரை நியமிக்கவும், நீக்கவும் இவருக்கு அதிகாரம் உண்டு. இவருக்கு ஆலோசனை கூற, அத் தொழில் பிரிவைச் சேர்ந்த நிறுவனத் தலைவர்கள் ஒரு கூட்டு ஆலோசனை மன்றத்தை வைத்துள்ளார்கள். ஒவ்வொரு அமைச்சகமும், பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இயங்குகின்றன. தொழில் நுட்பப் பிரிவு, திட்டமிடும் பிரிவு, நிதிப் பிரிவு, பண்டம் வழங்கும் பிரிவு, விற்பனைப் பிரிவு, கட்டுமானப் பிரிவு, தொழிலாளர் நலப் பிரிவு, தணிக்கைப் பிரிவு என்றெல்லாம் இப் பிரிவுகள் அழைக்கப் படுகின்றன.

ஒவ்வொரு அமைச்சரகத்திலும் அமைச்சராலும், அவரது ஆலோசனைக் குழுவாலும் ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. பிறப்பிக்கப்படும் ஆணைகள் முறையாகச் செயலாற்றப் பெறு கின்றனவா அல்லது விட்டுவிடப் பெறுகின்றனவா என்பதை மேற்பார்க்கும் பொறுப்பும் அவர்களுடையதே. ஒரு பொருளாதார அமைச்சரகத்தின் அமைப்பு மிகவும் சிக்கல் நிறைந்ததாகும். பொதுவாக, மூன்று அல்லது நான்கு அடுக்குகள் கொண்டது. ஆட்சிமுறை தலைமையில், அமைச்சகமும் ஆலோசனைக் குழுவும் இருக்கிறன. இரண்டாம் நிலையில் பிரதம ஆட்சி அலகு[1] இருக்கின்றது. இது துணை அமைச்சகம் போன்றது. இது ஒரு பிரதேசத்தில் ஒரு குறிப்பிட்ட பண்டத்தையோ அல்லது பண்டங்களையோ உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்களை யெல்லாம் மேற்பார்க்கும் ஓர் அமைப்பாகும். மூன்றும் நிலையில், ஓரிடத்தில் அமைந்துள்ள ஒரே வகையான தொழில் நிறுவனங் களை யெல்லாம் ஒருங்கமைத்த ஒரு கூட்டு[2] அல்லது சமஷ்டி அமைப்பு இயங்குகின்றது. இறுதியில், தொழில் முயற்சி

[1] Glavk, Chief Administration Unit.

[2] Combine.

அல்லது நிறுவனம் இருக்கிறது. சில அமைச்சகங்களில், தனி நிறுவனங்கள் தலைமை அமைச்சகத்துடன் நேரடியான தொடர்புடையதாகவும் இருக்கின்றன. இப்பொழுது, தொழில் நிறுவனங்கள், ஆலைகள் ஆகியவற்றிற்கும் அமைச்சகத்துக்கும் இடைப்பட்ட நிலையில் வேறு ஆட்சிப் பிரிவுகள் இல்லாது நேரடி ஆட்சி நிலவ முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

தொழில் முயற்சி அல்லது நிறுவனம் ஒரு தொழிற் கூட்டாகவும் இருக்கலாம், அல்லது தனித் தொழிற்சாலையாகவும், இருக்கலாம். இதன் தலைமையில் இயக்குநர்[1] இருக்கிறார். மேலாண்மையின் கட்டுப்பாட்டிற்குள்ளாகவும், சட்டங்களுக்குட்பட்டும் தொழில் முயற்சியின் முழுப் பொறுப்பும் இயக்குநரைச் சாரும். இது அரசாங்கத்தோடு பதிவு செய்யப்பட்டு உரிமை பெற்றதாகும். இதன் மீது வழக்குத் தொடரவும் இது ஏனையோர் மீது வழக்குத் தொடரவும் உரிமை படைத்தது. இவ்வாறு பதிவு செய்யப்பெற்றுள்ள ஒவ்வொரு தொழில் முயற்சியும் தனக்கென்று கணக்கு அரசாங்க வங்கியில் வைத்துள்ளது. அரசாங்கம் அளிக்கும் நிலையான மூலதனம், நடப்பு மூலதனம் ஆகியவைகளை இது கொண்டதாக விளங்குகிறது. ஒவ்வொரு தொழில் முயற்சியும் அதனதன் உற்பத்தித் திட்டத்தை வகுத்துக் கொள்கிறது. ஆண்டுதோறும் வரவு, செலவுகளைத் தணிக்கை செய்து, இலாப நட்டக் கணக்குத் தயார் செய்வதும் இதன் தனிப்பட்ட பொறுப்பாகும். இப்படிப்பட்ட தொழில் முயற்சிகள் எல்லாம் அரசாங்க உடைமைகள் தான். என்றாலும், அதன் இலாப, நஷ்டங்கள் அரசாங்கத்தை நேரடியாகப் பாதிப்பன அல்ல. அவை தொழில் முயற்சியையே சார்ந்துள்ளதாகும்.

தொழில்துறையில் சோவியத் நாட்டில் ஒரு நபர் ஆட்சி முறையே பெரிதும் வழக்கிலிருக்கிறது. இந்த நபர் ஓர் ஆலோசனைக் குழுவிடம் கலந்தாலோசிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தனிநபர் ஆட்சிப் பொறுப்பைவிட கூட்டாட்சி பொறுப்பையே பொதுமக்கள் இப்பொழுது விரும்புவதாகத் தெரிகிறது.

## ஒழுங்குறுத்தும் பல்வேறு அமைப்பு முறைகள்

தொழில்துறையின் பல்வேறு நிறுவனங்களும், பிரிவுகளும் இவ்வாறாக அமைச்சகத்தின் நேரடி நிருவாகத்தின் கீழ் இருந்

[1] Director

தாலும், வேறுபல அமைப்பு முறைகளும் நிலவி வருகின்றன. எடுத்துக்காட்டாகச் சிலவற்றைப் பார்ப்போம். நாட்டின் திட்டக் குழு தனது பல்வேறு குழுக்கள் மூலமாக, போடப்பட்ட திட்டப்படி தொழில் உற்பத்தி நடைபெறுகிறதா, நடைபெற வில்லையா என்பதைக் கண்காணிக்கின்றது. அதைப் போலவே, நிதி அமைச்சகமும் தொழில் உற்பத்தி சரிவர நடைபெறு கிறதா இல்லையா என்பதை அரசாங்க வங்கிகள் மூலமாகக் கண்காணிக்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக, கம்யூனிஸ்ட் கட்சி தலைமைப் பீடத்திலிருந்து சிறு கிளை வரையில் உள்ள கட்சிக்காரர்கள் சதா தொழில்துறை உற்பத்தி பற்றிக் கண் காணிக்கிறார்கள். எங்காவது திட்டம் ஒழுங்காகச் செயல்படா விட்டால் அதற்குரிய காரணங்களை ஆராய்ந்து, சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க அவர்கள் சிபாரிசு செய்கிறார் கள். பொருளாதாரக் கண்காணிப்பைக் கட்சியின் உற்பத்தித் துறைப் பிரிவுகள் செய்கின்றன. இவை ஒவ்வொரு தொழிற் சாலையிலும், கூடத்திலும், தொழில் முயற்சியிலும் அங்கம் வகிப்பதால் நேரடியான கண்காணிப்புச் சாத்தியமாகிறது.

எல்லாவற்றையும் விடச் சிறந்தது அவர்கள் பின்பற்றும் திறனாய்வு முறையாகும்; சோவியத் யூனியனில் கடமையில் தவறுபவர்களையும், வேலை சரிவரச் செய்யாது சோம்பி இருப் பவர்களையும், அரசாங்க ஆணைகளுக்குக் கீழ்ப்படியாது நடப்பவர் களையும், ஊழல்காரர்களையும் பற்றிக் குறை கூறுவது வரவேற்கப்படுகிறது. இவர்களைப்பற்றி செய்தித் தாள்களுக்குக் கடிதம் எழுதலாம். தொழிற்சாலையில் தொழிலாளர் கூட்டங் களில் இக் குறைகளை எடுத்துரைக்கலாம். பத்திரிக்கை நிருபர்கள் இதுபற்றிக் கட்டுரை வரையலாம். இவ்வாறு குறை கூறப்பட்டவர்கள் சமாதானம் கூறக் கடமைப்பட்டுள்ளார்கள். கூறப்பட்ட குற்றங் குறைகள் உண்மையாயிருப்பின் அவற்றை ஏற்றுக்கொண்டு, அவற்றை எவ்வாறு திருத்தப்போகிறார்கள் என்பதை விளக்கியாகவேண்டும். திறனாய்வு வெளியாரிடத்தி லிருந்து மாத்திரம் வரவேண்டும் என்பதில்லை. சுயதிறனாய்வும்[1] வரவேற்கப்படுகிறது. அரசாங்க ஆணைகள் செயல்படுத்தப் படுவது குறித்து இவ்வகைத் திறனாய்வுகள் நல்ல பலன்களைத் தருகின்றன.

**தொழில் முயற்சிப் பணிபுரியும் விதம்**

எனவே, திட்டங்கள் நிறைவேற்றப்படுவது சாத்திய மாகிறது. ஒரு தொழில் அமைப்பு அல்லது தொழிற்சாலை

[1] Self Criticism.

எவ்வாறு இயங்குகிறது என்பதைப் பார்த்தால் இது விளங்கும். தொழில் முயற்சியின் தலைவராக இயக்குநர் இருக்கிறார். தொழில் முயற்சியின் பல்வேறு பிரிவுகளின் தலைவர்கள் இவருக்கு அடுத்தபடியில் இருக்கிறார்கள். அதற்கு அடுத்த நிலையில் முன்னணி தொழில்நுட்ப பொறியாளர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு அடுத்தபடியாக, தொழிலாளர் அணித் தலைவர்கள் இருக்கிறார்கள். இயக்குநருக்கு அடுத்தபடியாகப் பொறியாளர் விளங்குகிறார். இவரே உற்பத்திப் பொறுப்பாளர் ஆவார். இவருக்குக்கீழே மின்பொறியாளர், வரைவாளர், பொறியாளர் என்று பலவகைத் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணியாற்று கிறார்கள். ஒவ்வொரு தொழில் முயற்சியும் பற்பல பணிமனை களாகப் பகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பணிமனையும் கிட்டத் தட்ட தனித்தியங்கக் கூடியதாய் விளங்குகிறது.

1930-க்கு முன்பு ஒவ்வொரு தொழில் முயற்சியும் மூவகைப் பட்ட மேலாளரால் நிர்வகிக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதி, தொழிற்சங்கப் பிரதிநிதி, இயக்குநர் ஆகிய மூவரும் ஒரு தொழிற்சாலையின் தலைமைக்குப் போட்டி போட்டனர். நாளடைவில் தொழிற்சங்கங்களும் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதியும் இணைந்து ஒருவரானார்கள். பின்னர் இயக்குநர் களும் பெரும்பாலும் கட்சி உறுப்பினர்களாக அமைந்து விட்டதால் இவர்களுக்கிடையே எழுந்த போட்டிகள் தவிர்க்கப் பட்டன.

மேலிடத்திலிருந்து வரும் ஆணைகளுக்கு ஏற்ப, ஒவ்வொரு தொழில் முயற்சியும் தன்னுடைய உற்பத்தித் திட்டத்தை வகுத்துக்கொண்டது. எத்தனைத் தொழிலாளர் நியமிக்கப்பட வேண்டும், எவ்வளவு மூலதனம் போடப்படவேண்டும் என்ன வகையான நுட்ப திட்டங்கள் பயன்படுத்தப் பெறவேண்டும், என்பன போன்ற வினாக்களுக்குப் பதில் தருகிற வகையில் தங்களது உற்பத்தி—தொழில்நுட்ப நிதித்திட்டத்தை வரைந்து, அதை மேலிடத்துக்கு அனுப்பி அங்கீகாரம் பெற்றுக் கொள்கின்றன. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட திட்டமே இவர் களது அடிப்படை சாசனமாக விளங்குகிறது.

அன்றாட நடவடிக்கைகளில் தொழில் முயற்சியின் இயக்குநர் பலவித கட்டுப்பாடுகளுக்குட்பட்டுப் பணிபுரியவேண்டும். விலைகள் நிர்ணயம் அவர் கையில் இல்லை. அதைப்போல, சம்பள நிர்ணயமும் அவருடைய அதிகாரத்தில் இல்லை. எரிபொருள்

பயன்பாடு, மின்சக்தி பயன்பாடு ஆகியவற்றிலும் இவர் மேலிருந்து கொடுக்கப்படுவதைக் கொண்டு பணிபுரிய வேண்டியுள்ளது. மேலும், இயந்திர சாதனங்கள், கச்சாப் பொருட்கள் முதலியவற்றை வாங்குவதிலும் இவருக்கு சுதந்திரம் இல்லை. அமைச்சகமோ அல்லது தலைமை ஆட்சிப்பீடமோ அளிப்பதை ஏற்று நடத்தவேண்டும். 1940-க்குப் பிறகு இந்த நிர்ப்பந்தங்கள் எல்லாம் கொஞ்சங் கொஞ்சமாக நெகிழ்த்தப்பட்டு வருகின்றன. பல இயக்குநர்கள் அடிக்கடி மாற்றப்பட்டு வந்தார்கள். இதுவும் பத்திரிக்கைகளிலும், கட்சிக் கூட்டங்களிலும் கண்டிக்கப் பட்டது. கட்டுப்பாடுகளிலெல்லாம் மிகக் கடுமையானது அரசாங்க வங்கி செலுத்தும் கட்டுப்பாடாகும். தொழில் முயற்சியின் நிதிகளை அரசாங்க வங்கி நெகிழ்ச்சியற்ற முறையில் பயன்படுத்தியதாகப் பல இயக்குநர்கள் குறைப்பட்டுக் கொண்டார்கள்.

இதைப்போலவே, இயக்குநர்களைக் குறைகூறுவதையும் விரிந்த அளவில் காணமுடிந்தது. பல இயக்குநர்கள் "முதலாளிகளை"ப்போல நடந்து கொள்வதாகக் குறை சொல்லப்பட்டது. சில இயக்குநர்கள் எப்படியாவது உற்பத்தி அளவை எட்டிப் பிடிக்கவேண்டும் என்று பணிபுரிகிறார்களே தவிர, அவர்களுக்கு மனித உள்ளமே இல்லை என்பதாகக் குறை கூறப்பட்டது. இவையெல்லாம் இப்பொழுது குறைந்து வருகின்றன.

**தொழில் துறையில் கொள்முதலும், விற்பனையும்**

ஆண்டுதோறும் தொழில்துறைக்குத் தேவைப்படும் பண்டங்களைப் பகிர்வு செய்யும் திட்டம் ஒன்றைத் திட்டக் குழு தயாரித்து, அதை அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கு அனுப்புகிறது. அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பேரில் இத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. ஒவ்வொரு அமைச்சகத்துக்கும் கீழே கொள்முதல்துறை[1] ஒன்று இயங்குகிறது. அதற்குப் பல கிளை நிலையங்கள் உண்டு. தனித் தொழில் நிறுவனங்களிலும் இத் துறையின் கிளைப்பிரிவு இயங்குகிறது. இதைப்போலவே, ஒவ்வொரு அமைச்சகத்திலும், விற்பனைப் பிரிவு[2] ஒன்று இயங்குகிறது. இதற்குரிய கிளைகளும், உப நிலையங்களும் எல்லா இடங்களிலும் இருக்கின்றன. தனித் தொழில் நிறுவனத்திலும் இதன் கிளை பணியாற்றுகிறது.

[1] Glavsrab.

[2] Glavsbyt.

பண்டங்கள் 1950-க்கு முன்பெல்லாம் மூன்று வகைப்பட்டன. கட்டுப்பாட்டுக்குட்பட்ட[1] பண்டங்கள் என்றும், பகிர்வுக்குரிய[2] பண்டங்கள் என்றும், பரவலாக வாங்கப்படும் பண்டங்கள் என்றும் அவை அழைக்கப்பட்டன. கட்டுப்பாட்டுக்குட்பட்ட பண்டங்களை அதன் உற்பத்தியாளர் விற்க அனுமதிப்பதில்லை. மத்திய அரசின் நேரடியான ஆணைகளின் பேரிலேயே அவை குறிப்பிட்ட துறைகளுக்கு விற்கப்பட்டன. கிடைப்பருமை மிக்க பொருள்களே இவ் வகைக்குட்படுத்தப்பட்டன. பகிர்வுக்குரிய பண்டங்களை, அவற்றை உற்பத்தி செய்யும் அமைச்சகங்களே விற்பனை செய்து கொள்ளலாம். இப் பண்டங்களை உபயோகிப்போர் இவ்வளவுதான் பயன்படுத்தலாம் என்ற அளவு குறிப்பிட்டிருப்பார்கள். இந்தக் குறியளவை எட்டும் வரை அந்தப் பிரிவுகளுக்கு இப் பண்டங்களை வழங்கலாம். மூன்றாவதாக உள்ள பரவலாகக் கொள்முதல் செய்யப்படும் பொருட்கள் பெரும்பாலும் விவசாயப் பண்டங்களாகும். உள்ளூர் தொழிற்சாலைகளில் வாங்கப்பெறும் பொருட்களும் இவ் வகைப்படும். வழங்கு துறையின் பிரிவுகள் நாடெங்கிலும் உள்ளன. இவை மூலமாக இவை பெறப்படுகின்றன.

விற்பனைப் பிரிவுகளும் இவ்வாறே பணிபுரிகின்றன. இவைகள் பணிபுரியும் விதம்பற்றிப் பல குறைபாடுகள் தெரிவிக்கப்பட்டு நிவர்த்தி செய்யப்படுகின்றன. இருப்பினும் பெரும் நாடாகையால் இன்னும் பல குறைகள் வழங்கு துறையில் காணப்பட்டு வருகிறது.

**விலை நிர்ணயம்:** முதலாளித்துவ பொருளாதார அமைப்பில், தேவை - அளிப்பு, ஆகியவற்றின் அடிப்படையில் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. உற்பத்தியாளர்களும், நுகர்வாளர்களும் ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் பேரங்களின் விளைவாகவும், மொத்தப் பணப் புழக்கத்தின் அடிப்படையிலும் விலைகள் நிர்ணயமாகின்றன. ஆனால் சோவியத் யூனியனில் விலைகள் வேறுவிதமாக நிர்ணயிக்கப்படுகின்றன. அரசாங்கமே இந்த விலைகளைக் கீழ்க்கண்ட முறையில் நிர்ணயிக்கின்றார்கள். மொத்த உற்பத்திச் செலவை முதலில் கணக்கிட்டுக் கொள்கிறார்கள். அதாவது கச்சாப் பொருள்களுக்கு ஆகும் செலவு, கூலிகள், இன்னும் இதர உற்பத்திச் செலவுகள் ஆகியவற்றோடு அந்த உற்பத்தித் துறைக்கு ஒதுக்கீடு செய்யவேண்டிய இலாபமும்

[1]Funded.

[2]Quota.

சேர்த்துக் கொள்ளப்படுகிறது. இதனுடன் கொள்முதல் வரியும் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. உற்பத்திச் செலவுகள் ஈடுபடுத்தப்பட்ட பொருள்களின் சந்தை மதிப்பாக அல்லாமல், உத்தேச திட்டச் செலவுகளாக இருக்கின்றன. ஒரு தொழிற்சாலையின் இயக்குநர் இந்தத் திட்டச் செலவுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தம்முடைய தொழிற்சாலைக்கு உச்சகட்ட இலாபத்தைப் பெறமுடியும். ஆனால் இந்த உற்பத்திச் செலவுகள் ஆலைக்கு ஆலை இடத்திற்கு இடம் வேறுபடக்கூடும் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். பண்டங்களின் மீதான இலாபமும் இவ்வாறு வேறுபடக் கூடியனவாக உள்ளன.

யுத்த காலத்தில் கனரகத் தொழிலின் பல பிரிவுகள் மிகுந்த நட்டத்திற்குள்ளாயின. இந்த நட்டங்களை ஈடு செய்ய, அரசாங்கம் மானியங்கள் தரவேண்டிய அவசியம் வந்தது. இதன் விளைவாக 1949ஆம் ஆண்டில் கனரகத் தொழிலில் ஒரு புதிய விலை நிர்ணய முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. யுத்த காலத்தில் அரசாங்க மானியங்கள் தருவது அவசியமாகக் கருதப்பட்டாலும், யுத்த பிற்காலத்தில் மானியங்கள் தருவது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிப்பதாக இருந்தது. இதன் விளைவாகப் பொருளாதாரக் கணக்கிடுதல் முடியாது போனது என்பதால் இந்த மானியம் வழங்கும் முறை நிறுத்தப்பட்டு, புதிய விலைகள் நிர்ணயிக்கப்பட்டன. 1950-ல் இன்னும் பல பொருள்களின் விலைகள் நிர்ணயிக்கப்பட்டன. சோவியத் யூனியனில் விலைகள் மாற்றப்படுவது சிறிது நெகிழ்ச்சியற்றதாகவே இருக்கிறது. சோவியத் திட்ட வல்லுநர்கள் விலைகளின் அடிப்படையில் தங்களது பொருளாதாரத் திட்டத்தையும் உற்பத்தி அளவுகளையும் வைத்துக் கொள்ளவில்லை; விலைகள் இரண்டாம்பட்ச உபகரணங்களாக இருக்கின்றன. 1950ஆம் ஆண்டு சீர்திருத்தங்களைப்பற்றி கீழ்க்கண்ட விளக்கங்கள் தரப்பட்டன.

முதலாவதாக, நிர்ணயிக்கப்பட்ட மொத்த விலைகள் தொழிற்சாலைகள் நட்டப்படாமல் இயங்குவதற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். அதாவது மானியங்கள் உதவியின்றி, திட்டப்படி இலாபங்கள் ஈட்டுகின்றனவாக விளங்கவேண்டும்.

இரண்டாவதாக, கிடைப்பருமை உள்ள ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் விலைகள் பயன்படவேண்டும். அத்தோடு அப்படிப்பட்ட கிடைப்பருமை உள்ள பொருள்களின் நுகர்வும் கட்டுப்படுத்தப்படவேண்டும்.

மூன்றாவதாக, போக்குவரத்துக்கு நெருக்கடி உண்டாகாத வகையில் விலைகள் அமையவேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் விலைகள் நிர்ணயிக்கப்பட்டு வருகின்றன.

**தொழிலில் இலாபப் பகிர்வு**

உற்பத்தித் திட்டங்களைத் தொழிற்சாலைகளும், தொழில் நிறுவனங்களும் நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் பல்வேறு வழி முறைகளைக் கையாளுகிறது. அவற்றில் இலாபத்தில் ஒரு பங்கு என்ற ஏற்பாடும் முக்கியமானதாகும். இதை இயக்குநர் நிதி[1] என்று அழைக்கின்றனர்.

1939–40-ல் தொழில்துறை சம்பாதித்த மொத்த இலாபத்தில் 60 சதவீதம் நாட்டின் பட்ஜெட்டுக்குக் கொடுக்கப்பட்டது. எஞ்சிய 40 சதவீதம் பல்வேறு தலைப்புகளின்கீழ் செலவிடப் பட்டது. தொழில் துறையின் மூலதன முதலீட்டிற்கும், விரிவாக்குதலுக்கும் செலவிட்டது போக, கணிசமான ஒரு பங்கை இயக்குநர் நிதியில் சேர்த்தனர்.

1936ஆம் ஆண்டு இந் நிதி ஆரம்பிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரின்போது இது நிறுத்தப்பட்டிருந்தது. மறுபடியும் 1945-லிருந்து வழக்கிற்கு வந்துள்ளது. தொழில் துறையின் நிறுவனங்களும், முயற்சிகளும் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வகைப் பிரிவிற்கும் வெவ்வேறு சதவீத இலாபப் பங்கீடுஅனுமதிக்கப்பட்டது. நுகர்வுப் பண்ட உற்பத்தித் தொழி லில் திட்டமிடப்பட்ட இலாபத்தில் 2 சதவீதம் இயக்குநர் நிதிக்குச் செலுத்தப்படும். திட்டமிட்ட இலாபத்திற்குமேல் கிடைக்கும் வருவாயில் 75 சதவீதம் இயக்குநர் நிதியில் செலுத்தப்பட்டது. நிலக்கரி, உலோகத் தொழில், பெட்ரோலியம், போன்ற தொழில் பிரிவுகளில் திட்டமிடப்பட்ட இலாபத்தில் 5 சதவீதமும், திட்ட மிடப்பட்ட இலாபத்திற்குமேல் கிடைக்கும் வருவாயில் 45 சத வீதமும் இயக்குநர் நிதியில் சேர்க்கப்பட்டன. இயந்திரத் தளவாடங்கள், துணிகள் ஆகியவை உற்பத்தி செய்யும் பிரிவுகள் திட்டமிட்ட இலாபத்தில் 2 சதவீதமும், திட்டமிட்ட இலாபத் திற்கு மேல் கிடைக்கும் வருவாயில் 30 சதவீதமும் இயக்குநர் நிதியில் சேர்த்தனர்.

[1] Director's Fund

இயக்குநர் நிதியின் 50 சதவீதம் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும், கட்டட நிர்மாணத்திற்காகவும், தொழிலாளர் வீடுகளைப் பழுதுபார்த்துப் பராமரிக்கவும் செலவிடப்படுகின்றன. எஞ்சிய பகுதி, தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகச் செலவிடப்படுகிறது. நல்ல திறமை மிக்க தொழிலாளருக்குப் பரிசுகள் தருவதற்கும் இந் நிதியிலிருந்து செலவிடப்படுகிறது. இயக்குநர் நிதி அமைப்பு ஒரு இலாபப் பகிர்வு முறையாக விளங்குகிறது. எவரால் இவ்வகை இலாபம் ஏற்படுகிறதோ அவருக்கு அதைப் பங்கிடும் முறையாக இதைப் பின்பற்றுகின்றனர். இதன் மூலம் தொழிலாளர், மேலாளர் ஆகியோரின் உற்சாகமும், ஊக்கமும் அதிகரிக்க வழி செய்யப்படுகிறது.

## கூட்டுறவுத் துறையில் தொழில்

ஐந்து வகையான தொழில் கூட்டுறவுகள் சோவியத் யூனியனில் காணப்படுகின்றன.

1. கைவினைஞர்கள், கைத்தொழில் புரிவோர் ஆகியோரால் நடத்தப்பெறும் தொழில் கூட்டுறவு.

2. யுத்தத்தில் ஊனமடைந்த போர் வீரர், இன்னும் வேறு பல அங்கமிழந்தவர்கள் ஆகியோரால் நடத்தப்பெறும் தொழில் கூட்டுறவு.

3. சில நுகர்வாளர் கூட்டுறவுகளால் நடத்தப்பெறும் உப தொழில் கூட்டுறவுகள்.

4. வேட்டையாடுதல், மீன் பிடித்தல் ஆகிய துறைகளுக்குக் கருவிகள், பண்டங்கள் முதலியன செய்து தரும் தொழில் கூட்டுறவுகள்.

5. சில கூட்டுப் பண்ணை உறுப்பினர்கள் சேர்ந்து நடத்தும் தொழில் கூட்டுறவுகள்.

மேலே குறிப்பிட்டுள்ள தொழில் கூட்டுறவுகள் பல்வகைப் பண்டங்களைச் செய்கின்றன. நாற்காலி, மேஜைகள், சமையலறைக் கருவிகள், காலணிகள், கூடைகள், பீப்பாய்கள், பான்கள் கைத்தொழில் பண்டங்கள் ஆகியவற்றை இவைகள் உற்பத்தி செய்கின்றன.

இத் தொழில் கூட்டுறவுகள் அரசாங்கத் துறைத் தொழில்களைப் போன்றே செயலாற்றுகின்றன. தொழிலாளர் அனைவரும் உறுப்பினர் கட்டணம் செலுத்தி இக் கூட்டுறவில் சேருகிறார்கள். ஜனநாயக முறைப்படி பொதுச் சபை இயக்குநர் குழுவைத் தேர்ந்தெடுக்கிறது. இதில் பணிபுரியும் தொழிலாளருக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இலாபத்தில் 20 சதவீதம் இவர்களுக்குப் பங்கீடு செய்யப்படுகிறது. சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கோடு இவ்வகை கூட்டுறவுகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

# 6. சோவியத் யூனியனில் தொழில் துறை வளர்ச்சி

சோவியத் நாட்டு வருமானத்தில் பாதிக்குமேல் அதன் தொழில் துறையினுல் பெறப்படுகிறது. அதன் சமூக உற்பத்தி ஆக்கத்தில் மூன்றில் இரண்டு பாகம் தொழில் துறையிலிருந்து கிடைக்கிறது. மொத்தத் தொழில் துறை ஆக்கத்தின் மதிப்பு 1965-ல் 234 ஆயிரத்து 300 மில்லியன் ரூபிள் மதிப்பாகும். இது ஜார் மன்னன் காலத்திய ருஷ்யாவில் இருந்ததைவிட 61 மடங்கு அதிகமாகும்.

முதலாளித்துவத் தொழில் முறையிலிருந்து சோஷியலிஸ்ட் தொழில் முறை முற்றும் வேறுபட்டதாகும். இதன் கோட்பாடுகளும், கொள்கைகளும் முதலாளித்துவத்திற்கு முரணுனதாகும். எல்லா உற்பத்தி மூலங்களும் பொது உடைமையாகச் சோஷியலிசத் தொழில் முறையில் இருக்கிறது. "விவசாயத்தை மாற்றி அமைக்கும் வல்லமை படைத்த பேரளவு இயந்திரத் தொழில்தான் சோஷியலிச அமைப்பின் பொருளாதார அடிப்படையைஅமைக்க முடியும்" என்று லெனின் கூறினுர்.[1]

### தொழில் துறையை நாட்டுடைமையாக்குதல்

சோவியத் நாட்டின் புரட்சி அரசு ஏற்பட்ட ஆரம்ப காலத்தில், எல்லா உற்பத்தி மூலங்களையும் நாட்டுடைமையாக்க முற்படவில்லை. பொருளாதார அமைப்பு பற்றியும், தொழில்களை நடத்தும் வழி முறை பற்றியும் அனுபவம் பெற்ருக வேண்டி இருந்தது. உற்பத்தியையும், பகிர்வையும் கட்டுப்பாட்டுக்குள்ளாகக் கொண்டுவருவதே ஆரம்ப காலக் குறிக்கோளாக இருந்தது. எனவே 1917ஆம் ஆண்டு நவம்பர் 27-ல்

[1] Lenin, Collected Works. Vol, 32 p. 459, Moscow 1965

எல்லாத் தொழிற்சாலைகளிலும் தொழிலாளர் குழுக்கள் அமைக்கப்பட்டுத் தொழிற்சாலைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பெற்றன. இவை தொழிற்சாலைகளின் உற்பத்தி, விற்பனை, கச்சாப் பொருள் கொள்முதல் ஆகியவற்றை மேற்பார்த்துக் கொண்டன. அரசு மேற்கொள்ளவிருந்த பொருளாதார மேலாண்மை அமைப்புக்கு இதுவே அடிப்படையாகவும், ஆதார மாகவும் அமைந்தது. இந் நிலையில் வெளிநாட்டார் தலையீடு அதிகரித்தது. புரட்சிக்கு எதிராகச் சதிவேலைகள் நடை பெற்றதால், தொழிலாளர் குழுக்களின் கட்டுப்பாட்டிலிருந்து, ஒட்டு மொத்தமாகத் தொழில் துறை நாட்டுடைமையாக்கப்பட வேண்டியதாயிற்று.

1918ஆம் ஆண்டில் சோவியத் அரசு ஆயிரத்துக்கும் மேற் பட்ட கூட்டுக் கம்பெனிகளையும், தொழிற்சாலைகளையும் நாட்டுடைமையாக்க ஆணையிட்டது. மூன்று லட்சம் ரூபிள் களுக்கு மேற்பட்டு மூலதனம் கொண்டுள்ள தொழிற் சாலைகள் எல்லாம் நாட்டுடைமையாக்கப்பட்டன. தொழிற் சாலைகள் நாட்டுடைமை யாக்கப்பட்டாலும், அவற்றை மேலாண்மை செய்யும் பணியை முந்தைய முதலாளி களிடமே விட்டுவைத்தார்கள். அவர்கள் செய்யவேண்டுவ தெல்லாம், சோவியத் அரசின் திட்டப்படி பொருள்களை உற்பத்தி செய்து பகிர்வு செய்யவேண்டியதே. தொழில் அதிபர்களின் அறிவைப் பயன்படுத்தி, அதன் வழியாகச் சோஷியலிச உற்பத்தியை உருவாக்கும் இம் முயற்சி தோல்வியடைந்தது. தொழில் அதிபர்களில் பெரும்பாலானோர் அரசோடும் தொழி லாளரோடும் ஒத்துழைக்க மறுத்துவிட்டதுமன்றி, புரட்சிக்கு எதிரான சதித்திட்டங்களிலும் தீவிரமாக ஈடுபட முற்பட்டனர். இவ்விதமான சூழ்நிலையில், இவர்களை விலக்கி விட்டுத் திறமை மிக்கவர்களையும், அனுபவமிக்க தொழிலாளர்களையும் இப் பணியில் நியமிப்பது அவசியமாயிற்று, பெருந் தொழிற்சாலைகள் முதலில் நாட்டுடைமையாக்கப்பட்டன. பின்னர் சிறு தொழில் களும், மத்தியதரத் தொழில்களும் நாட்டுமையாக்கப்பட்டன. போக்குவரத்து, பாங்குகள் ஆகியவையும் நாட்டுடைமையாக்கப் பட்டபின், எல்லா உற்பத்தி மூலங்களும் மக்களுக்குச் சொந்தம் என்ற நிலையில் சோஷியலிச அமைப்புத் தோன்றிற்று.

வெளியார் தலையீடு, உள்நாட்டுப்போர், பொருளாதாரச் சீர் குலைவு, உணவுப் பொருள் பற்றுக்குறை, கச்சாப் பொருள் தட்டுப்பாடு ஆகிய காரணங்களால் மையமயமாக்குவது அவசிய மாயிற்று. தொழில் பிரிவுகளின் தன்னிச்சையான வளர்ச்சி

யையும், சுதந்திரத்தையும் தடைசெய்ய வேண்டியதாயிற்று. அன்றிருந்த நிலையில் சிற்சில தொழில்களிலேயே இது சாத்திய மாயிற்று.

சோவியத் ஆட்சியின் ஆரம்ப காலத்தில், நாட்டின் பொருளாதார அமைப்புப் பல அணிகளைக் கொண்டதாக இருந்தது. சோஷியலிச அமைப்பிற்குள்ளான அணி, பண்ட உற்பத்தி செய்துவந்த சிறு அளவுத் தொழில்கள், சிறுசிறு பண்ணைகள், சிறு கைத்தொழில்கள், நகரங்களில் இருந்த முதலாளித்துவ அணி, கிராமப்புறங்களில் இருந்த குலாக்கு களின் பண்ணைகள், சிறு விவசாயிகளின் பண்ணைகள், வெளிநாட்டார் அனுபவித்த சலுகைகள் கொண்ட அணி — ஆகிய பல்வேறு தரவாரியான அமைப்புகள் இருந்தன.

உள்நாட்டுப் போர் முடிவுற்று, வெளியார் தலையீடு முறியடிக்கப்பட்ட பிறகு புதிய பொருளாதாரக் கொள்கை பின் பற்றப்பட்டது. இப் புதிய கொள்கையின் மூலமாகத் தொழில் துறையை விரைவாகச் சீரமைக்க முயற்சி மேற்கொள்ளப் பட்டது. நுகர்வுப் பண்டங்களின் உற்பத்தியை அதிகரிக்கவும் முயற்சிகள் செய்யப்பட்டன. நகரத்திற்கும் நாட்டிற்கும் இடையே வாணிகம் சீரான முறையில் நடைபெறவும் வழி வகுக்கப்பட்டது. ஒரு பக்கத்தில் பார்க்கப்போனால், இப் புதிய முறை தனியார் வியாபாரத்தைத் தடையின்றி நடத்த வழி செய்தது மல்லாமல் தனியார் முதலீடுகள் வளரவும் உதவி புரிந்தது. ஆனால் அரசின் மேற்பார்வையின்கீழ் இவை நடந் தேறின. அதே சமயத்தில், அரசுடைமைக்குள்ளான தொழில் களிலும் இலாப நட்டக் கணக்குப் பார்த்து அதன் அடிப்படையில் அவைகளை நடத்த முற்பட்டனர். அவை இலாபம் பெறும் நோக்கோடு நடத்தப் பெறவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

இவ்வாறாக, சோஷியலிசத் துறையும். தனியார் முதலாளித் துவத் துறையும் ஒன்றோடொன்று போட்டிப் போட்டு முன்னேறி வந்தன. இவையிரண்டில் எது வெற்றி பெறும் என்பதே தலையாய கேள்வியாக இருந்தது. 1924ஆம் ஆண்டில் 23·7சத விகிதமாக இருந்த தனியார் துறை 1928ஆம் ஆண்டில் 17·6 சத விகிதமாக வீழ்ச்சி அடைந்தது சோஷியலிசத் துறையின் வெற்றி யைப் பறைசாற்றுவதாக அமைந்தது. 1937ஆம் ஆண்டில் முதலாளித்துவத் தனியார் துறை மொத்தமாக மறைந்தது. 0·2 சதவிகிதமே தனியார் துறையின் பங்காக இருந்தது.

**தொழில் துறை வளர்ச்சி**

ஆரம்பக் கட்டத்தில் கனரகத் தொழில் விரைந்து வளர்ச்சி பெறத் திட்டமிடப்பட்டது. மொத்தத் தொழில் துறை உற்பத்தியில் கனரகத் தொழிலின் பாகம் மிக அதிகமாக இருந்தது. 1928-ல் 39·5 சதவிகிதமாக இருந்தது 1940-ல் 61·2 சதவிகிதமாக அதிகரித்தது. யுத்த பிற்காலத்திலும் கனரகத் தொழில்துறையின் வளர்ச்சி அதிகரித்தே வந்தது. 1965-ல் இதன் பங்கு 74·9 சதவிகிதமாக இருந்தது. மொத்த உற்பத்தி மூலங்களின் உற்பத்தியில் கனரகத் துறை 26 சதவிகிதமாக 1950ஆம் ஆண்டில் இருந்தது. 45 சதவிகிதமாக 1965-ல் பெருகியது.

இதன் விளைவாக வலிமை மிக்க கனரகத் தொழில் துறை அமைக்கப்பட்டது. 1928-க்கும் 1965-க்கும் இடைப்பட்ட காலத்தில் கனரகத் தொழில் துறையின் உற்பத்தி 105·6 மடங்கு அதிகரித்தது. கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் இதைக் காணலாம்.

**8. கனரகத் தொழில் உற்பத்தி அதிகரிப்பு**

| துறைப் பிரிவுகள் | 1928 | 1940 | 1950 | 1960 | 1965 | 1970 |
|---|---|---|---|---|---|---|
| 1 மின்சக்தி (10 கோடி கிலோவாட் மணியில்) | 5·0 | 48·3 | 91·2 | 292·3 | 506·7 | 740 |
| 2. உருக்கு (10 லட்சம் டன்னில்) | 4·3 | 18·3 | 27·3 | 65·3 | 91 0 | 116 |
| 3. எண்ணெய் (10 லட்சம் டன்னில்) | 11 6 | 31·1 | 37·9 | 147·9 | 242·9 | 353 |
| 4. எரிவாயு (10 கோடி கன மீட்டர்) | 0·3 | 3·4 | 6·2 | 47·2 | 129·4 | 200 |
| 5. நிலக்கரி (10 லட்சம் டன்) | 35·5 | 165·9 | 261·1 | 513·2 | 577·7 | 624 |
| 6. உலோகம் வெட்டும் கடைசல் இயந்திரம் (ஆயிரக்கணக்கில்) | 2·0 | 58·4 | 70·6 | 155·9 | 185·8 | 230 |
| 7. மோட்டார், கார், லாரிகள் (ஆயிரக்கணக்கில்) | 0·8 | 145·4 | 362·9 | 523·6 | 616·3 | 1510 |
| 8. டிராக்டர்கள் (ஆயிரக்கணக்கில்) | 1·3 | 31·6 | 116·7 | 235·5 | 354·5 | 1790 |
| 9. செயற்கை உரங்கள் (10 லட்சம் டன்) | 0·14 | 3·2 | 5·5 | 13·9 | 31·3 | 62 |

இத்தோடு உணவுப் பொருள் உற்பத்தியையும், உபயோகப் பொருள் உற்பத்தியும் அதிகரித்தன. 1928-க்கும் 1965-க்கும் இடைப்பட்ட காலத்தில் பண்டங்களின் உற்பத்தி 1740 சதவிகிதமாக அதிகரித்தது. அத்தியாவசியமான சில பண்டங்கள் உற்பத்தி அதிகரிப்புப் பற்றிய தகவலைக் கீழ்க்காணும் பட்டியல் விளக்கும்.

9. மென் ரகத் தொழில் துறை, உணவுப் பொருள் துறை ஆகியவற்றின் வளர்ச்சி

| துறைப் பிரிவுகள் | 1928 | 1940 | 1950 | 1960 | 1965 | 1970 |
|---|---|---|---|---|---|---|
| 1. பருத்தித் துணி (10 கோடி மீட்டர்) | 3·0 | 4·5 | 4·5 | 8·1 | 9·1 | 13·4 |
| 2 கம்பளி நெய்தது (10 லட்சம் ஜதைகள்) | 8·3 | 183·0 | 197·5 | 583·9 | 906·0 | 149·2 |
| 3. தோல் காலணிகள் (10 லட்சம் ஜதைகள்) | 58·0 | 211·0 | 203·0 | 419·3 | 486·0 | 735·0 |
| 4 சர்க்கரை (கிழங்கிலிருந்து) (10 லட்சம் டன்) | 1·3 | 2·2 | 2·5 | 5·3 | 8·9 | 16·7 |
| 5. வானொலிப் பெட்டிகள் (1000 கணக்கில்) | — | 160·0 | 1072·0 | 4165·0 | 5160·0 | 9450·0 |
| 6. டெலிவிஷன் பெட்டிகள் (1000 கணக்கில்) | — | 0·3 | 11·9 | 1726·0 | 3655·0 | 4955·0* |
| 7. குளிர்சாதனப் பெட்டிகள் (1000 கணக்கில்) | — | 3·5 | 1·2 | 529·5 | 1675·0 | 2697·0* |

* 1967-ம் ஆண்டுக்குரிய விவரங்கள்

கனரகத் தொழில் மூலமாக நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் மூலங்களை அதிகமாக உற்பத்தி செய்வதே சோவியத் அரசின் குறிக்கோளாக இருந்து வருகிறது. ஆரம்பக் கட்டத்தில், உற்பத்தி மூலங்களையும், இயந்திரக் கருவிகளையும் படைப்பதற்காகப் பெருமளவில் முதலீடு செய்யவேண்டி இருந்தது. அண்மைக் காலத்தில் இந்த நிலைமை மாறி, நுகர்வாளர் பண்டங்களை உற்பத்தி செய்யும் இயந்திரக் கருவிகள், உபகரணங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்யப்பட்டு வருகிறது.

1960–65-க்கும் இடைப்பட்ட காலத்தில் கனரகத் தொழில் துறைப் பிரிவுக்கும், மென் ரகத் தொழில் துறைக்கும் இடையே

உற்பத்தி அதிகரிப்பு விகிதம் 58 : 36 என்றிருந்தது. 1966–1970-ல் இந்த விகிதம் மாறுதல் அடைந்தது. 52 : 46 என்ற விகிதத்தில் இவ்விரு பிரிவுகளின் உற்பத்திப் பெருக்கம் இருக்கிறது. கருவிகள், உபகரணங்கள், பட்டறைகள், இயந்திர எண்ணெய்கள் ஆகியவற்றின் உற்பத்தி இறுதியில் மக்களின் தேவையைத் திருப்தி செய்வதாக இருக்கவேண்டும் என்ற அடிப்படைக் கொள்கைக்கேற்ப, மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், அவர்களது அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றவும் தொழில் துறை வளர்ச்சி முடுக்கிவிடப்பட்டுள்ளது.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் சோவியத் தொழில்துறையில் உற்பத்தி சக்திகள் பேரளவில் உயர்த்தப்பட்டுள்ளன. தொழில் நுட்ப நிலையும் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. தொழிலமைப்புகளையும் உயர்த்த முடிந்துள்ளது. 1958ஆம் ஆண்டிற்குள்ளாக, 12,000-க்கும் மேற்பட்ட பிரதான தொழில்கள் கட்டப்பட்டுள்ளன. 1946லிருந்து 1958-க்குள்ளாக 8,200 கோடி ரூபிள் மூலதனம் அரசால் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 1965-ல் இதைவிட 80 சதவிகிதம் அதிகமாக முதலீடு செய்யப்பட்டது. 1961லிருந்து 1965-க்குள்ளாக 21,180 கோடி ரூபிள் மூலதனம் முதலீடு செய்யப்பட்டது. பெருகிய உற்பத்திக்கு இது உறுதியான அடித்தளம் அமைத்துக் கொடுத்துள்ளது.

### தொழிலாளர் நிலை

1928-ல் உலக உருக்கு உற்பத்தியில் சோவியத் நாடு 3·9 சதவிகிதமே உற்பத்தி செய்தது. 1970-ல் இது 20 சதவிகிதமாகியது. 1965-ல் சோவியத் நாட்டில் தொழில் துறையில் பணியாற்றிய தொழிலாளர்கள், பயிற்சியாளர்கள் ஆகியோரின் எண்ணிக்கை 2 கோடியே 70 இலட்சம். வளர்ச்சியடைந்து வரும் தொழில்துறை அமைப்புக்கேற்ப, பல்வேறு தொழில் பிரிவுகளில் தொழிலாளர் புதிது புதிதாக ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். பொறியியல் துறையிலும், கட்டுமானப் பிரிவிலும் அதிகமானத் தொழிலாளர்கள் பணிபுரிந்து வந்தனர். இவ்வாறுள்ள நிலையைக் கீழ்க்காணும் பட்டியல் காட்டுகிறது.

தொழிலாளரது திறனும், பயிற்சியுங்கூட வளர்ச்சிபெற்று வருவதைக் காணலாம். தொழில் வளர்ச்சிக் காலத்தில் நூற்றுக்கணக்கான புதிய பணிப் பிரிவுகள் தோன்றலாயின. 1959ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கின்படி : தொழில் துறையில் பணிப்புரியும் 1000 தொழிலாளர்களில் 20 பேர் உயர் கல்விபெற்ற

**10. தொழிலாளர் பணிப் பிரிவுகள் சதவிகிதக் கணக்கில்**

| | 1913 | 1940 | 1955 | 1960 | 1963 | 1965 |
|---|---|---|---|---|---|---|
| தொழில் துறையில் மொத்தத் தொழிலாளர் எண் ... | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| இரசாயனத் தொழில்கள், ரப்பர், கல்நார் தகடுகள் பிரிவு | — | 3·2 | 3·3 | 3.1 | 3·2 | 4·2 |
| தேனிரும்பு, உருக்குத் தொழில் | 8·7 | 4·9 | 5·2 | 4·8 | 4·7 | 4·7 |
| நிலக்கரிச் சுரங்கங்கள் | 5·5 | 5·3 | 6·3 | 5·5 | 4·8 | 4·6 |
| எண்ணெய் சுத்திகரிப்பு, எண்ணெய் எடுப்புத் தொழில்கள் | 1·4 | 0·5 | 0·9 | 0·8 | 0·75 | — |
| பொறி இயல், உலோகத் தொழில் | 14·4 | 28·9 | 29·8 | 3·05 | 33·4 | 34·1 |
| கட்டுமானப் பிரிவு | — | 3·0 | 5·8 | 7·1 | 6·7 | 6·3 |
| மென்ரகத் தொழில் பிரிவு | 32·0 | 18·0 | 15·1 | 18·1 | 17·3 | 16·8 |
| உணவுப் பொருள் தொழில் | 20·8 | 12·7 | 10·3 | 9·4 | 9·2 | 9·5 |

வர்கள்; 63 பேர் உயர்நிலைப் பள்ளியில் சிறப்புப் பயிற்சி பெற்ற வர்கள்; 426 பேர் வெறும் உயர்நிலைக் கல்வி பெற்றவர்கள்; 364 பேர் ஆரம்பக் கல்வி அல்லது ஏழாண்டுக் கல்விபெற்றவர்கள். இதன்படி பார்க்கப்போனால், 50 சதவிகித தொழிலாளர்கள் உயர் நிலைக் கல்விப் பயிற்சி பெற்றவர்கள். 1970ஆம் ஆண்டில் நகர்ப் புறங்களில் உள்ளவர்களில் 75 சதவிகிதமும் கிராமப்புறங்களில் உள்ளவர்களில் 50 சதவிகிதம் பேரும் உயர்நிலைக் கல்விபெற்று இருந்தார்கள். வருங்காலத்தைப் பற்றி லெனின் கூறியது இவ்விடத்தில் நோக்கத்தக்கதாகும். "இலட்சிய நோக்குடைய ஒரு சமுதாயத்தைக் கல்வியின்றிப் படைத்துவிட முடியாது. இளஞ்சந்ததியினரின் ஆக்கப்பூர்வ உழைப்புக்கு இதுவே அடிப் படையாகும். பயிற்சியும், கல்வியுமின்றி ஆக்கப்பூர்வ உழைப்புக் கிட்டாது. அதைப்போலவே ஆக்கப்பூர்வ உழைப்பில்லாமல் பயிற்சியும், கல்வியும், இற்றைய காலத் தேவைக்கேற்ப தொழில் நுட்ப நுணுக்க அறிவையும், விஞ்ஞானத் தேர்ச்சியையும் பெற முடியாது."[1]

[1] Lenin, Collected works. vol 2, p. 472.

தொழிலாளர் உற்பத்தித் திறன் 1913ஆம் ஆண்டிலிருந்து 1965-க்குள்ளாக 1340 சதவிகிதம் உயர்ந்துள்ளது.

**உலக அரங்கில் சோவியத் தொழில் துறை**

உலகத் தொழில்துறை உற்பத்தியில் சோவியத் பங்கானது அதிகரித்துக்கொண்டே வந்துள்ளதைக் கீழே கொடுக்கப் பட்டுள்ள பட்டியல் விவரிக்கிறது.

**11. உலகத் தொழில் துறை உற்பத்தியில் சோவியத் நாட்டின் பங்கு**

| | 1929 | 1937 | 1950 | 1955 | 1960 | 1965 |
|---|---|---|---|---|---|---|
| எண்ணெய் | 6·7 | 10·2 | 7·3 | 9·2 | 14·0 | 16·1 |
| நிலக்கரி | 2·7 | 8·6 | 14·1 | 18·5 | 19·6 | 21·1 |
| மின்சக்தி | 2·1 | 7·8 | 9·2 | 10·7 | 12·4 | 14·8 |
| தேனிரும்பு | 4·1 | 14·0 | 14·5 | 17·5 | 18·3 | 20·3 |
| உருக்கு | 4·0 | 12·9 | 14·2 | 16·7 | 18·8 | 19·7 |
| சிமெண்ட் | 3·1 | 6·9 | 7·6 | 10·4 | 14·4 | 16·8 |
| பருத்தித் துணி | — | 8·5 | 9·9 | 12·1 | 12·2 | 13·8 |
| கம்பளி ஆடைகள் | — | — | 8·7 | 13·4 | 16·2 | 18·7 |
| சர்க்கரை | 3·2 | 8·6 | 7·7 | 8·4 | 10·7 | 13·7 |

உலகச் சந்தையில் இலாபகரமாகப் பெறக்கூடிய பொருட்களைச் சோவியத் நாடு இறக்குமதி செய்தும், பல பண்டங்கள், முழுவதாகச் செய்யப் பெறாத பண்டங்கள், இயந்திரங்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்தும் வருகிறது. சோஷியலிச நாடுகளோடு நெருங்கிய வர்த்தக உறவுகளை உண்டாக்கிக் கொண்டுள்ளது. வளர்ச்சி பெற்று வரும் நாடுகளுக்கும் சோவியத் நாடு வர்த்தக உறவுகள் மூலமாகத் துணை புரிகிறது. முதலாளித்துவ நாடுகளோடும் பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட்டுள்ளது.

# 7. சோவியத் விவசாயத் துறையின் அமைப்பு

சோவியத் பொருளாதாரத்தின் இதர துறைகள் போலவே, விவசாயத் துறையும் தேசீய பொருளாதாரத் திட்டத்தின்படி இயங்குகிறது. திட்டத்தில் ஐந்தாண்டுக் காலத்தில் இத்தனை ஹெக்டேர்கள் அதிகமாகச் சாகுபடிக்குக் கொண்டுவரவேண்டும் என்றும், இவ்வளவு உற்பத்தி பெருகவேண்டும் என்றும் குறிக்கோள்கள் இலக்காக நிர்ணயிக்கப் பெறுகின்றன. ஒவ்வொரு ஆண்டுத் திட்டத்திலும், எய்த வேண்டிய எல்லைகள் துல்லிய மாகக் குறிப்பிடப்படுகின்றன. ஒவ்வொரு பிரதேசத்திற்கும் தனித் தனியாக இந்த எல்லைகள் குறிக்கப்படுகின்றன.

விளைச்சலையும், கால்நடைகளையும் நடைமுறையில் சாத்திய மாக்கும் சோவியத் விவசாயிகள் மூன்று வகையான பண்ணை அமைப்புகளில் பணியாற்றி, கொடுக்கப்படும் இலக்குகளை அடைகின்றனர். மொத்த விவசாய உற்பத்தியில் மிகப் பெரும் அளவு விளைவிப்பது சோவியத் கூட்டுப் பண்ணைகளே.[1] இரண்டாவது இடம் அரசாங்கப் பண்ணை[2] களுக்குக் கொடுக்கப் படுகிறது. மொத்த உற்பத்தியில் குறைந்த பங்கே இவைகள் உற்பத்தி செய்கின்றன வென்றாலும், சில பயிர் வகைகளில் இவை முக்கியத்துவம் பெறுகின்றன. மூன்றாவதாக, விவசாயிகளின் சொந்தப் பண்ணைகள் ஆகும். உற்பத்தியில் மிகக் குறைந்த வீதமே இவர்களால் உற்பத்தி செய்யப்படுகிறது.

கூட்டுப் பண்ணைகளுக்கு உறுதுணையாக இயந்திர டிராக்டர் நிலையங்கள் விளங்குகின்றன. கூட்டுப் பண்ணைகள் எல்லாம் மத்திய விவசாய அமைச்சகத்தின் கீழ் இயங்குகின்றன. அமைச்சகம் ஏராளமான அதிகாரிகளைக் கொண்டு, நாட்டின் மூலை முடுக்கில் எல்லாம் மேற்பார்வை செய்கிறது. அரசாங்கப்

[1]Kolkhozy collective Farms.

[2]Sovkhozy, State Farms.

பண்ணைகள் எல்லாம் அரசாங்கப் பண்ணை அமைச்சகத்தின்கீழ் இயங்குகின்றன.

### கூட்டுப் பண்ணை

இது ஒரு ஜனநாயகக் கூட்டுறவு அமைப்பாகும். விவசாயிகள் தங்களது, நிலங்களையும் மூலதனங்களையும் ஒன்று சேர்த்து, அவைகளைக் கூட்டாக விவசாயம் செய்வதால் வரும் மொத்த மகசூலைப் பங்கிட்டுக் கொள்கின்றனர். தாம் ஒவ்வொருவரும் ஈடுபடுத்தும் உழைப்புக்கு ஏற்பத் தங்களது பங்கும் இருக்கும். இவ்வாறு பெரிய பண்ணைகள் அமைப்பதால் உற்பத்தி அதிகரிக்கிறது. சிறு பண்ணைகளில் காணப்படும் பலவீனங்கள் மறைந்து விடுகின்றன. டிராக்டர்கள், இயந்திர சாதனங்கள் ஆகியவற்றை முற்றப் பயன்படுத்துவது கூட்டுப் பண்ணைகளில் சாத்தியமாகின்றது.

கூட்டுப் பண்ணைகளில், பெரும்பகுதி உற்பத்தியும் கூட்டாகச் செய்யப்படுகின்றது. உற்பத்தி மூலங்களில் பெரும்பகுதியும் கூட்டுப் பண்ணைகளுக்கே சொந்தம் இருந்தது. சிறிதளவு உற்பத்தித்தான் தனி நபர்களால் செய்யப்படுகின்றது. ஒவ்வொரு விவசாயியும் சிறிதுசிறிது மூலதனத்தையுடையவராக இருக்கிறார். அதாவது, கால்நடை போன்ற மூலதனத்துக்குச் சொந்தக்காரராக இருக்கிறார். ஆனால் கூட்டுப் பண்ணையின் ஆக்க வேலைகளில் பங்கு பெறுகிறார்; ஆகவே கூட்டுப்பண்ணையின் விளைச்சலிலும் பங்கு பெறுகிறார்.

ஒவ்வொரு கூட்டுப் பண்ணைக்கும் ஒரு சட்ட அமைப்பு அல்லது பட்டயமுண்டு. இது கூட்டுப் பண்ணை விவசாயிகளின் பொறுப்புகள், அதன் அமைப்பு ஆகியவற்றை வரையறுக்கின்றன. இந்தப் பட்டயம் 1935-ல் வரையப்பட்டது. சிற்சில மாறுதல்களுடன் அது இன்றும் வழக்கில் இருக்கிறது.

கூட்டுப் பண்ணையின் நிலம் அரசாங்கத்தின் உடைமையென்றாலும், அதை எக்காலத்திலும் நிரந்தரமாகப் பயன்படுத்திக் கொள்ளும் முற்றுரிமை கூட்டுப் பண்ணைக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிலத்தை விற்கவோ, வாங்கவோ, குத்தகைக்கு விடவோ கூடாது. ஒவ்வொரு கூட்டுப் பண்ணை விவசாயியின் குடும்பத்திற்கும் ஒரு வீட்டுக் கொல்லை கொடுக்கப்பட்டுள்ளது. இது கால் ஹெக்டேரிலிருந்து ஒரு ஹெக்டேர் வரை பரப்புடையது. அதில் கூட்டுப் பண்ணை விவசாயிகளின்

குடும்பங்கள் தங்களுக்கு வேண்டியதைப் பயிரிட்டுக் கொள்ளலாம்.

உற்பத்தி மூலங்களையெல்லாம் கூட்டுப் பண்ணைப் பொதுவாக வைத்துக்கொள்கிறது. பெரிய இயந்திரங்களைக் கூட்டுப் பண்ணை வைத்துக்கொள்வதில்லை. கால்நடைகள், சிறு கருவிகள், பண்ணைக் கட்டடங்கள், மாவு அரைக்கும் ஆலைகள், போன்ற மூலங்கள் பண்ணைகளின் பொதுச் சொத்தாகும். கூட்டுப் பண்ணை விவசாயிகள் தங்களது வீடுகள், சிறு கொல்லைத் தோட்டக் கருவிகள், சில கால்நடைகள் இவற்றைச் சொந்தமாக வைத்துக்கொள்ளலாம். கால்நடைகள் குறிப்பிட்ட எண்ணிக்கைதான் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு பண்ணையும் ஓர் ஆண்டுத் திட்டத்தை வரைந்து வைத்துக்கொள்கிறது. இத் திட்டம் தேசப் பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படையில் வரையப்படுகிறது. பண்ணையின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் இத் திட்டம் வரையப் படுகிறது. பண்ணையின் உழைப்பாளரது உற்பத்தித் திறனை அதிகரிப்பதாகவும் இது இருக்கிறது. பண்ணையில் வேலை பார்ப்போருக்கு அளிக்கவேண்டிய பலவித வசதிகளையும் நல்குமளவு பண்ணையின் உற்பத்தி இருக்கவேண்டும்.

பண்ணைச் சட்ட அமைப்பின்படி, பண்ணை உறுப்பினர்கள் பொதுச் சபையில் கூடுகின்றனர். பொதுச் சபைதான் தலைமை அதிகாரபீடமாகும். இது அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கிறது. புதிய உறுப்பினர்கள் சேர்ப்பது, வெளியேற விரும்புவர்களை அனுப்பி வைப்பது போன்ற பணியையும் இது புரிகிறது. பண்ணையின் பட்ஜெட் இந்தப் பொதுச் சபையால் அங்கீகரிக்கப் படுகிறது. ஒரு குழு தேர்ந்தெடுக்கப்படுகிறது. இக் குழுவில் ஐந்திலிருந்து ஒன்பது அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். கூட்டுப் பண்ணைக்கு ஒரு தலைவரைப் பொதுச் சபை தேர்ந்தெடுக்கிறது. கூட்டுப் பண்ணையின் எல்லா வேலைகளும் அதன் உறுப்பினர்களால் செய்யப்படவேண்டும். சில சமயங்களில், அதாவது அறுவடை அல்லது நடவு காலங்களில் உதவிக்கு ஆட்கள் அமர்த்திக்கொள்ளலாம்,

கூட்டுப் பண்ணையின் தொழிலாளர் அணி அணியாகப் பிரிக்கப்பட்டு 50 அல்லது 100 பேர் கொண்ட அணிகளாகப் பணிபுரிகின்றனர். ஒவ்வொரு அணிக்கும் ஒரு அணித் தலைவர் உண்டு. ஒரு பயிர் மகசூலாகி மாற்றம் ஏற்படும் காலம்வரை

அதே வேலையை ஒரு அணி செய்யவேண்டும். 2 அல்லது 3 ஆண்டுக்கு ஒருமுறை அவர்கள் வேலை மாற்றம் செய்து கொள்ளலாம். அவர்கள் உழைப்பை வேலை நாள் திட்டத்தின் மூலமாகக் கணிக்கிறார்கள். ஒன்பது வகை வேலைகள் இருப்பதாகக் கணித்துள்ளார்கள். அரை நாள் வேலை மிகக் குறைவானது. அதாவது, ஒரு விவசாயி வெங்காயத் தோட்டத்தில் ஒரு நாள் முழுவதும் வேலை செய்வாரானால் அதற்கு அரை நாள் வேலை என்று கணக்கிடுவார்கள். அதே ஆள் பருத்திப் பண்ணையில் 1 நாள் முழுவதும் பருத்தி எடுப்பாரானால் அதற்கு 2½ நாள் வேலை என்று கணக்கிடுகிறார்கள். திட்டமிடப்பட்ட இலாபத்திற்குமேல் சம்பாதிப்பதில் 1 சதவீதம் அவ்வாறு சம்பாதிக்கும் அணிக்குக் கொடுக்கிறார்கள். இலாபத்திற்குப் பதில் நட்டம் ஏற்படுமானால் இதைப் போன்றே 1 சதவீதத்திலிருந்து 25 சதவீதம் வரை அவர்களது ஊதியம் வெட்டப்பெறும்.

கூட்டுப் பண்ணையின் மொத்த உற்பத்தியில் ஒரு கணிசமான பகுதியை வரி விதிப்பின் மூலம் அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது. இதற்கு விலையை அரசாங்கம் கொடுக்கிறதென்றாலும், அது குறைவாக நிர்ணயிக்கப்பட்ட விலைதான். இயந்திர டிராக்டர் நிலையங்களின் சேவைக்காக ஒரு பங்கு உற்பத்தியில் கொடுக்கப்படுகிறது. விதைக் கடன்கள், போன்ற கடன்கள் வாங்கப்பட்டிருக்குமானால், அவற்றைத் திரும்பக் கொடுக்கும் வகையில் உற்பத்தியான தானியம் அல்லது காய்கறிகள் அல்லது இறைச்சி கொடுக்கப்படுகின்றது.

கூட்டுப் பண்ணைகளோடு அரசாங்கம் ஒருவகை ஒப்பந்தப் பேரம் செய்து கொள்கிறது. அரசாங்கத் தொழில் நிறுவனத்திற்குத் தேவையான பொருளைப் பண்ணை உற்பத்தி செய்து தர வேண்டும். இதற்கு அரசாங்கம் பண்ணைக்கு வேண்டிய எல்லா ஒத்தாசைகளையும் செய்து தரும். நிலத்தை உழுது விதை போடுகிற நாளிலிருந்து அறுவடை செய்யும் நாள்வரை அரசாங்கமே தனது ஆட்கள் மூலமாக நேரடியாகப் பண்ணையின் பல தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. பண்ணைகளில் வேலை செய்வோரை ஊக்குவித்து, அதிக உற்பத்தியைப் பெறுவதும் இதன் நோக்கமாகும். பண்ணையிலுள்ளவர்களுக்குத் தேவைப்படும் பண்டங்களைக் குறைந்த விலையில் அளிப்பதும் இவ்வித ஒப்பந்தங்களில் காணப்படுகின்றது.

இவ்விதமாக அரசாங்கம் எடுத்துக்கொண்டது போக, எஞ்சியுள்ள பாகத்தில் ஒரு பகுதியை விதைக்கென்று ஒதுக்கி

வைக்கின்றனர். ஆபத்துக்குப் பயன்படுத்தவென்று ஒரு பகுதியைச் சேமித்து வைக்கின்றனர். வேலை செய்யும் ஆற்றல் இழந்தோருக்கென்று ஒரு பகுதியை ஒதுக்குகின்றனர்.

இந்த ஒதுக்கீடுகளுக்குப்பின், எஞ்சியுள்ளதை இரு பாகங்களாகப் பிரிக்கின்றனர். இது பொதுச் சபையின் தீர்மானத்தின் படி பிரிக்கப்படுகிறது. இரண்டில் ஒரு பகுதியை அரசாங்கத்திற்கோ, கூட்டுறவுக்கோ அல்லது அங்காடியிலோ விற்று விடுகிருர்கள். இதிலிருந்துதான் பண்ணைக்குப் பண வருமானம் கிடைக்கிறது. இன்னொரு பகுதி பண்ணை உழைப்பாளருக்கு ஊதியமாகக் கொடுக்கப்படுகிறது. பண்ணைத் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு முழுவதும் செய்துள்ள வேலை நேர அளவுகளுக்கு ஏற்ப ஊதியம் அளிக்கப்படுகிறது.

அண்மைக் காலத்தில் சிறுசிறு கூட்டுப் பண்ணைகள் பெருங் கூட்டுப் பண்ணைகளாக இணைக்கப் பெற்றன. பேரளவு உற்பத்தி செய்ய இதுவே தகுதியாக இருக்கும் என்று, இவ்வாறு இணைக்கப் பெற்றன.

**12. கூட்டுப் பண்ணை, அரசாங்கப் பண்ணை, விவசாயிகளின் பண்ணை ஆகியவற்றின் எண்ணிக்கை**

| | 1927 | 1940 | 1950 | 1966 | 1970 |
|---|---|---|---|---|---|
| கூட்டுப் பண்ணைகள் 1000 கணக்கில் | 14·8 | 236·9 | 123·7 | 37·1 | 33 |
| அரசாங்கப் பண்ணைகள் 1000 கணக்கில் | 1·4 | 4·2 | 5·0 | 12·2 | 15·0 |
| தனிப்பட்ட விவசாயிகளின் பண்ணைகள் (10 லட்சம்) | 23·7 | 3·6 | 0·7 | 0·04 | 0.03 |

**அரசாங்கப் பண்ணைகள்**

சோவியத் அரசாங்கத்தால் இவை நடத்தப் பெறுகிறது. இவைக்கு வேண்டிய பண்ணைத் தொழிலாளரை அரசாங்கம் நியமிக்கிறது. அவர்களை மேற்பார்வை செய்ய அதிகாரிகளையும் அதுவே நியமித்துக் கொள்கிறது. இந்தப் பண்ணைகள் கிட்டத்தட்ட தொழிற்சாலைகள் மாதிரியே இயங்குகின்றன. ஓர் அரசாங்கப் பண்ணை சுமார் 5000 ஏக்கர் பரப்புள்ளதாக இருக்கிறது.

அரசாங்கப் பண்ணைகளில் சில வெளிநாட்டு வாணிப அமைச்சகத்தின் கீழும், சில உணவுப் பொருள் அமைச்சகத்தின் கீழும் இன்னும் சில அரசாங்கப் பண்ணை அமைச்சகத்தின் கீழும் இருக்கின்றன. அரசாங்கப் பண்ணைகளில் தொழிலாளர் அமைப்புக் கிட்டத்தட்ட கூட்டுப் பண்ணையிற் போலவே இருக்கிறது.

**விவசாயிகளின் பண்ணைகள்**

மிகச் சிறிய கொல்லைகளே ஆகும். தனிப்பட்ட விவசாயிகள் இயந்திர சாதனங்களோ அல்லது தொழில் நுட்ப உதவியோ பெற முடியாத காரணத்தால் இவ்வகைப் பண்ணைகள் மிகக் குறைந்துகொண்டே போகின்றன. மொத்தப் பரப்பில் 99·6 சதவீதம் அரசாங்கப் பண்ணைகளாகவும் கூட்டுப் பண்ணைகளாகவும் 1966ஆம் ஆண்டிற்குள்ளாக மாற்றப்பட்டு விட்டன.

# 8. சோவியத் விவசாய வளர்ச்சி

**சோவியத் பொருளாதாரத்தில் விவசாயத்தின் பங்கு**

சோவியத் நாட்டின் வரலாற்றில், விவசாயப் பிரச்சினைகளும், அவற்றிற்குத் தீர்வு காண்பதும் மிக முக்கிய இடம் பெற்றுள்ளன. பல்லாண்டு காலமாக மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த விவசாயத் துறையையும், கிராமப்புறத்தையும் புனரமைப்பது கம்யூனிஸ்ட் நிர்மாணத்தின் மிகச் சிரமமான பணியாகவும் தலையாய பணியாகவும் இருந்துள்ளது.

இன்றுள்ள நிலையில் மக்களின் மொத்த நுகர்வுப் பொருள் செலவீட்டில், 75 சதவிகிதம் விவசாயப் பண்டங்களுக்காகச் செலவிடப்படுகிறது என்றால், இதன் முக்கியத்துவம் ஓரளவு விளங்கும். இன்னும், தேசீய வருமானத்தின் அடிப்படையில் பார்ப்போமானால், 21·4 சதவிகித தேசீய வருமானம், விவசாயத்திலிருந்து பெறப்படுவதாகும். பயனுள்ள வேலைகளில் ஈடுபட்டுள்ளோரில் மூன்றில் ஒரு பங்குப் பேர் விவசாயத் துறை வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள். விவசாயத் துறையைச் சார்ந்தே நெசவுத்தொழில், சர்க்கரைத்தொழில், பால், வெண்ணெய்த் தொழில் ஆகிய தொழில்கள் உள்ளன. விவசாயத்தின் விரைவான வளர்ச்சியைப் பொறுத்துத்தான் இந்தத் தொழில்கள் முன்னேற முடியும். இந்தத் தொழில்கள் முன்னேறுவது அடிப்படை வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு அவசியமாகிறது. விவசாயத் துறை வளர்ச்சி வேறு பல காரணங்களாலும் முக்கியம் பெறுகிறது. பயனுள்ள வேலை வாய்ப்புகளை விவசாயத் துறையில் போல, வேறெந்தத் துறையிலும் விரைவாக ஆக்குவது கடினம். வளர்ந்து வரும் மக்கட் தொகைக்கு வேண்டிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதோடு, தொழில் துறைக்கு வேண்டிய கச்சாப் பொருள்களையும் உற்பத்தி செய்வது விவசாயத் துறை நாட்டில் உள்ள பண்டங்கள் ஒழுங்காகவும்,

கிரமமாகவும் கிடைக்கச் செய்வது உறுதியான விவசாயத் துறையே மக்களின் வாங்கும் சக்திக்கேற்ற தேவையை நிறை வேற்றுவதற்கும் விவசாயமே உறுதுணை. எனவே, சோவியத் பொருளாதாரக் கொள்கையின் தலையாய பணி விவசாயத்தை விரைவாக வளர்ப்பதாகும்.

### புரட்சிக்கு முன்பு

புரட்சிக்கு முன்பு ருஷ்ய நாட்டில் விவசாயம் எவ்வாறு இருந்தது என்பதை இங்கு சுருக்கமாகக் குறிப்பிடுவோம். விரிவான விளக்கம் பொருளாதார வரலாறு என்ற அதிகாரத்தில் காணலாம்.

மிகப் பின்தங்கிய விவசாயமே ஜார் மன்னன் காலத்திய கிராமப் பொருளாதாரமாகும். பண்ணை அடிமை முறை 1861ஆம் ஆண்டு ஒழிக்கப்பட்டுவிட்ட போதிலும், நிலப் பிரபுத்துவ முறை முற்றிலும் ஒழிந்துவிடவில்லை. 'அன்றைய' விவசாயச் சீரமைப்பின் கடுமையான சில அம்சங்கள் இதற்குக் காரணமாய் இருந்தது. மேலும் ஜார் மன்னன் ஆட்சிக் காலத்தில் இருந்த அதிகார வர்க்கம் பண்ணை அடிமை முறையை முற்றும் ஒழித்துவிட அனுமதிக்கவில்லை. நிலங்களை வாங்கு வதற்கு விவசாயிகள் நிலப்பிரபுக்களையே நம்பி இருக்க நேரிட்டது. 1863ஆம் ஆண்டிலிருந்து 1907ஆம் ஆண்டிற்குள்ளாக, தங்கள் சொந்த சாகுபடிக்குட்பட்ட நிலங்களுக்கு ஈடாக 340 கோடி தங்க ரூபிள் விவசாயிகள் கட்டவேண்டி விலை இருந்தது. அதோடே குத்தகைப் பணமும் கட்டவேண்டி இருந்தது.

பலவிதமான வரிகள் விவசாயிகளின்மீது சுமத்தப் பட்டிருந்தன. பல்வகையான பண்ணைப் பொறுப்புகள் விவசாயிகளை அழுத்தின. வரி செலுத்தாமைக்குரிய தண்டனை மரணத் தண்டனையாக இருந்தது என்றால், நிலைமையை நாம் யூகித்துக் கொள்ளலாம். எல்லாமாய் விவசாயத் துறையின் உற்பத்தியைக் குறைத்தது; உழைப்புத் திறனை மிகமிகக் குறைந்தது. சாகுபடி முறைகளை விஞ்ஞான ரீதியில் அமைய விடவில்லை; பழைய பத்தாம் பசலி முறைகளையே நீடிக்கச் செய்தன. நிலங்களும் சிதறிக் கிடந்தன. விளைச்சல் சாவியாகப் போவதும் அடிக்கடி கண்ட நிகழ்ச்சி. 1874, 1891, 1892, 1905, 1906 ஆகிய ஆண்டுகளில் கொடிய பஞ்சம் தலைவிரித்தாடியது. இப் பஞ்சங்களின் காரணமாக, பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் மாண்டுபோயினர்.

புரட்சி நடக்கும் தருவாயில், சாகுபடிக்குத் தகுதியான நிலத்தில் கிட்டத்தட்ட பாதி 30,000 நிலப் பிரபுக்களிடம் இருந்தது. இவர்கள் ஜார் மன்னன் குடும்பத்தைச் சேர்ந்த வர்களாக இருந்தார்கள். இவர்களிடம் போக, மடாலயங் களிடமும் ஏராளமான நிலம் இருந்தது. மொத்த சாகுபடி நிலத்தில் 20 சதவிகிதம் நிலங்கள் கிராமப்புறத்து முதலாளி களான குலாக்குகளிடம் இருந்தன. எஞ்சிய நிலங்களே ஏழைக் குடியானவரின் உடைமையாக இருந்தன. மொத்த நில அளவில் 30 சதவிகிதம் 1 கோடியே 70 இலட்சம் ஏழை விவசாயிகளின் உடைமையாக இருந்தது. நாட்டின் மக்கட்தொகையில் ஆறில் ஐந்து பங்குப் பேர் விவசாயத் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். அவர்களது உழு படைகளும், உபகரணங்களும் மிகப் பழங்காலத்தியவை. அவற்றிற்கு உற்பத்தித் திறனேதும் இருக்கவில்லை. 1910ஆம் ஆண்டு மக்கட்தொகை கணிப்பின்படி இவர்கள் பயன்படுத்திய உபகரணங்கள், கருவிகள் ஆகிய வற்றைப்பற்றிய குறிப்பு கீழே தரப்படுகிறது.

மரக் கலப்பைகள் — 78 இலட்சம்

சிறிது மேம்படுத்தப்பட்ட மரக்கலப்பைகள்—22 இலட்சம்

இரும்புக் கலப்பைகள்—42 இலட்சம்

பரம்புகள்—177 இலட்சம்

இந்தக் குடியானவர்களின் விவசாயப் பண்ணைகளில் 30 சத விகிதத்தினரிடம் குதிரைகள் இருக்கவில்லை. 24 சதவிகிதத் தினரிடம் பசுமாடுகள் இருக்கவில்லை. 34 சதவிகிதத்தினரிடம் எவ்வித உழுபடைகளும் கருவிகளும் இருக்கவில்லை.

சாகுபடி நிலத்தில் 90 சதவிகிதப் பரப்பளவில் ரை, பார்லி, ஓட்ஸ் என்னும் தானியங்களே பயிரிடப்பட்டன. வியாபாரத் திற்கான பயிர் வகைகள், கிழங்கு, காய்கறி வகைகள் மிகக் குறைவான பரப்பிலேதான் பயிரிடப்பட்டன. கால்நடை வளர்ப்புக்கு முக்கிய இடம் தரப்படவில்லை. கால்நடைத் தீவனத்திற்கு என்று சிறப்பான ஏற்பாடு ஏதும் செய்யப்பட வில்லை. 1864ஆம் ஆண்டைவிட 1914-ல் கால்நடை எண்ணிக்கை குறைந்து போனது. கால்நடைகளின் மூலமாக ஏற்படும் உற்பத்தியும் மிகவும் குறைந்து சென்றது. இறைச்சி, முட்டை, பால் போன்ற உணவுப் பொருட்கள் விவசாயக் குடிமக்களுக்குக் கிடைப்பதாயில்லை.

புரட்சிக்குமுன் இருந்த ருஷ்ய விவசாய நிலைமையை லெனின் பின்வருமாறு வருணித்தார்: "நாகரிகத்தின் எல்லாத் தந்திரங்களாலும், சாதனைகளாலும், முன்னேற்றத்தாலும் குடியானவர் கொள்ளையடிக்கப்பட்டனர். பட்டினி கிடந்தும், கோரைப் புல்லைத் தின்று வயிறு வளர்த்தும், ரொட்டிக்குப் பதிலாக மண் கட்டியைத் தின்றும் சோகை நோயால் அவதிப்படும் நிலைக்கு கொள்ளையடிக்கப்பட்டனர். அதே சமயத்தில், இரண்டாம் நிகோலாஸ் மன்னனின் தலைமையிலான நிலப்பிரபுக்களும், முதலாளிகளும் பெருஞ் செல்வத்தை குவித்துக் கொண்டனர்[1]".

### சோஷலிச விவசாய சீரமைப்பு

சோஷலிச அடிப்படையில் விவசாயத்தைப் புனரமைக்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டன. அதில், நீண்ட காலத் திட்டத்தின் நோக்கம், சிறு சிறு விவசாயிகளை எல்லாம் விவசாயக் கூட்டுறவு நிறுவனங்களில் ஒன்றுபடுத்துவதுதான். இவ்வாறு ஒன்று படுத்தப்பட்ட கூட்டுறவு நிறுவனங்கள் உழைப்புத் திறன்பெற்று விளங்கலாயின.

இந்த நோக்கம் நிறைவேற பல்லாண்டுகள் பிடித்தன. முதலில் குலாக்குகளுக்குப் பல தடைகள் விதிக்கப்பட்டன. இதனால் இவர்கள் படிப்படியாக விலக்கப்பட்டனர். மூன்று வகைப்பட்ட விவசாயிகள் இருந்தனர். ஏழை விவசாயிகள், மத்தியதர விவசாயிகள், குலாக்குகள் ஆகிய மூன்று தரப்பட்டவர்களில், கொஞ்சங்கொஞ்சமாக ஏழை விவசாயிகள் மத்தியதர விவசாயிகளாக மாற்றப்பட்டனர். குலக்குகள் விலக்கப்

**13. விவசாயிகளில் பலதரப்பட்டவர்**

| பண்ணையின் இனம் | புரட்சிக்கு முன்பு | 1928-29 |
|---|---|---|
| ஏழை விவசாயி | 65 | 35 |
| மத்தியதர விவசாயி | 20 | 60 |
| குலாக்குகள் | 15 | 5 |

பட்டனர். புரட்சிக்குப் பிந்திய முதல் பத்து ஆண்டுகளில், மத்தியதர விவசாயப் பண்ணைகளின் எண்ணிக்கை மூன்று

[1]லெனின் நூல் தொகுப்பு, 17ஆம் தொகுப்பு, பக்கம் 527.

மடங்காகியது. ஏழை விவசாயிகளின் பண்ணைகள் பாதியாயின. குலாக்குகளின் பண்ணை மூன்று மடங்காகக் குறைந்தது. மொத்த விவசாய உற்பத்தியும் முதல் உலகப் போருக்கு முன்பிருந்த நிலையை எய்தியது.

ஆயினும் நாட்டின் தேவைகளை முற்றும் நிறைவேற்றுவதாக விவசாயம் இருக்கவில்லை. தொழில் மயமானதின் விளைவாக நகர்ப்புற மக்கட்தொகை விரைவாகப் பெருகியது. உணவுப் பொருள் தேவையும் அதிகரித்தது. பொருள்களைப் பக்குவம் செய்யும் தொழில்களும் பெருகின. முன்னிலும் அதிக விவசாயப் பொருட்கள் தேவைப்பட்டன. கிராமப்புறத்திலும் விவசாயப் பண்டங்களின் தேவை அதிகரித்தது.

மத்தியதர விவசாயப் பண்ணைகளில் விற்பனைக்குரிய உபரி மிகவும் குறைவாயிருந்தது. தனி நபர் பண்ணைகள் நாட்டின் தேவையைச் சமாளிக்க முடியவில்லை. சோஷலிச முறையில் பெரிய விவசாயப் பண்ணைகளை நிறுவுவது அவசியமாயிற்று. இந்தப் பண்ணைகளை அமைக்க விவசாயிகளின் கூட்டுறவு அடிப்படையாக அமைந்தது. விவசாயிகள் தன்னிச்சையாகவே கூட்டுறவுப் பண்ணைகளில் படிப்படியாகச் சேருவார்கள் என்று லெனின் கருதினர். மிக எளிமையான கூட்டுறவு அமைப்பிலிருந்து, பெரிய கூட்டுப் பண்ணை இறுதியில் அமையும் என்று கருதினர். கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவுகள் என்றெல்லாம் துவங்கிய கூட்டுறவு இயக்கம் இறுதியில் உற்பத்தியாளர் கூட்டுறவாக மலரும் என்று லெனின் எதிர்பார்த்தார். தாமாகவே ஏற்படும் இவ் வளர்ச்சி சமுதாய மாற்றத்தைக் கொண்டு வரும் என்றும் நம்பினர்.

புரட்சிக்குப் பிந்திய பத்து ஆண்டுகளிலேயே விவசாயிகள் மத்தியில் கூட்டுறவு இயக்கம் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இந்தக் கூட்டுறவு நிறுவனங்கள் விவசாயிகளுக்குக் கூட்டுப் பொருளாதார நிர்வாகத்தின் கோட்பாடுகளைப் பழக்கப்படுத்தி வைத்தன. சணல், சர்க்கரை, பருத்தி, பால், வெண்ணெய் ஆகிய பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்ட விவசாயிகள் சணல் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம், சர்க்கரை உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம், பருத்தி உற்பத்தியாளர் கூட்டுறவு, பால், வெண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவு என்று பலவகையான உற்பத்தியாளர் நிறுவனங்கள் துவங்கப் பெற்றன. விவசாய இயந்திரங்களையும், பொறிகளையும் கூட்டாகப் பயன்படுத்திக் கொள்ள விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன் அளிக்கும் சங்கங்கள் உதவியது.

எனினும், அக் காலத்தில் உற்பத்தித் துறையில் கூட்டுறவு குறைவாகத்தான் இருந்தது. விவசாயிகளின் உற்பத்திக் கூட்டுறவின் சாதாரண அமைப்பாகிய நிலத்தைக் கூட்டாகச் சாகுபடி செய்ய அமைந்த சங்கங்கள்தான் அக் காலத்தில் காணப் பட்டன. இச் சங்கங்களில் கிடைக்கும் வருவாய் உழைப்புக்குத் தக்கபடியும், நிலத்தின் அளவுக்குத் தக்கபடியும், உபகரணங்கள் அளவுக்குத் தக்கபடியும் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

சில இடங்களில் விவசாயக் கம்யூன்கள் நிறுவப்பெற்றன. இதன் கீழ், நிலம், கால்நடை, கருவிகள் வீடுகள் ஆகிய அனைத்தும் ஊரின் பொது உடைமையாக இருந்தன. வருகிற வருவாயும் சமமாகப் பங்கிடப்பட்டது.

வேறொரு வகை கூட்டுறவு நிறுவனம் பல இடங்களில் விருப்பத்தோடு பின்பற்றப்பட்டது. இது கூட்டுப்பண்ணை முறையாகும். இதன் கீழ் நிலம், கருவி, கட்டடங்கள், கால் நடைகள், பொறி நுட்ப சாதனங்கள் ஆகிய அனைத்தும் சமுதாய உடைமையாகக் கருதப்பட்டன. அதே சமயத்தில், விவசாயி தனக்கென்று ஒரு துண்டு நிலம் வைத்துக்கொள்ள அனுமதிக்கப் பட்டான். வீடு, சில கால்நடைகள், அவைகள் அடைக்கும் கொட்டில்கள், சிறு விவசாயக் கருவிகள் எல்லாம் அவனுக்குச் சொந்தமாக வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டான். இதைக் கோல்கோஸ் (Kolkhoz) என்று அழைத்தனர். இவற்றில் விவசாயிகள் தங்கள் சுய இச்சையின்படி சேர்ந்தார்கள். இக் கூட்டுப்பண்ணையில் விளையும் விளைச்சலைப் பங்கிடுவதற்கு இதன் உறுப்பினர்கள் பொறுப்புதாரர்களாக இருந்தார்கள். பொறுப்பு அவர்களுடையது எனினும் நிலம் பொது உடைமையாக இருந்தது. ஆனால் கூட்டுப்பண்ணை நிரந்தரமாகப் பயன்படுத்திக் கொள்ளும்படி இலவசமாகக் கொடுக்கப்பட்டது. இதன் மூலம் பண்ணையின் சமூக நலன்களும், தனிப்பட்ட விவசாயிகளின் நலன்களும் இணைந்து செயல்பட வகைப்படுத்தப்பட்டது. அரசின் நலனையும் இது கருத்தில் கொண்டதாயிருந்து மக்கள் திரள் திரளாகக் கூட்டுப்பண்ணையில் சேர்ந்தனர். கிராமப்புற மெங்கும் கூட்டுப் பண்ணைகள் பல்கி எழுந்தன. கூட்டுப்பண்ணை களில் கலந்த குடியானவர்கள் தொகை வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| 1928 | — | 4 | இலட்சம் விவசாயிகள் |
| 1929 | — | 10 | ,, ,, |
| 1930 | — | 60 | ,, ,, |

1927ஆம் ஆண்டில் 14 ஆயிரத்து எண்ணூறு கூட்டுப் பண்ணைகள் இருந்தன. 1932-ல் 2 இலட்சத்து 11 ஆயிரத்து எழுநூருக உயர்ந்தது. 1932-ல் இது உச்சக் கட்டத்தை எய்தியது. ஏராளமான விவசாயிகள் அதற்குள்ளாக, ஒரு புதிய வாழ்க்கை முறைக்கு மாறிப்போய் விட்டார்கள். குலாக்குகள் அடியோடு அகற்றப்பட்டார்கள். சுரண்டல் முறை முற்றிலும் நீக்கப்பட்டது.

கூட்டுப்பண்ணை முறை விரைவாகப் பரவுவதற்குச் சோவியத் யூனியனில் நேர்ந்த தொழில் வளர்ச்சியும் ஒரு முக்கிய காரண மாகும். கூட்டுப்பண்ணைக்குத் தேவையான அடிப்படையாகிய டிராக்டர்கள், அறுவடை இயந்திரங்கள், மருந்து தெளிக்கும் கருவிகள், விதை விதைக்கும் இயந்திரங்கள் ஆகியவை யெல்லாம் கனரக இயந்திரத் தொழில் வளர்ச்சியினுல் கிடைக்கும்படி செய்யப்பட்டது. இவைகள் இல்லாமல் விவ சாயத்தை அவ்வளவு விரைவில் சீரமைத்திருக்க முடியாது. இது போக, அரசுப் பண்ணைகள் அமைக்கப்பட்டது கூட்டுப் பண்ணை பரவுவதற்கு அடிகோலியது எனலாம்.

அரசுப் பண்ணைகள் சோஷலிச விவசாய நிறுவனங்களாகும். இவை அரசின் நிலங்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பெற்றவை யாகும். அரசின் இயந்திரக் கருவிகள் இதில் பயன்படுத்தப் பட்டன. அவை வளர்ந்த வகை பின்வரும் புள்ளிகளால் காணப்பெறும்.

| | | | |
|---|---|---|---|
| 1928 | — | 1407 | அரசுப் பண்ணைகள் |
| 1932 | — | 4337 | ,, ,, |

கூட்டுப்பண்ணை முறையினுல் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம், கலாச்சாரம் ஆகியவை மேம்பாடுற்றன. கிராமப்புறத்து விவசாயிகளுக்கும், நகர்ப்புறத்துத் தொழிலாளர்களுக்குமிடையே இருந்த விரோதம் மறைந்து நேசபாவம் தோன்ற இது காரணமாய் அமைந்தது. உழவும் தொழிலும் சோஷலிச அடிப்படையில் ஒன்றுக்கொன்று துணைபுரிவதாகவும், ஒன்றை மற்றொன்று தாங்கி நிற்பதாகவும் அமைந்தபின் அவை தம் உறவை இன்னும் நெருக்கமுள்ளதாக ஆக்கிக்கொண்டன.

1932ஆம் ஆண்டிற்குமேல் கூட்டுப்பண்ணைகளும், அரசுப் பண்ணைகளும் உறுதிப்பாடும் பயனும் பெற்று இன்று அவை சோஷலிச நிர்மாணத்தின் இரு தூண்களாக நிற்கின்றன.

| | 1932 | 1965 |
|---|---|---|
| 1. கூட்டுப் பண்ணைகளின் எண்ணிக்கை (ஆயிரக்கணக்கில்) | 210•6 | 36•3 |
| 2. நிலையான சொத்துக்கள் (100 கோடி ரூபிள் கணக்கில்) | 0.47 | 35•00 |
| 3. சாகுபடி செய்யும் மொத்தப் பரப்பளவு—10 லட்சம் ஹெக்டேர் என்ற அளவில் | 91·5 | 105·1 |
| 4. கால் நடைகளின் எண்ணிக்கை 10 லட்சம் என்ற கணக்கில் | 8•8 | 38•3 |

1965ஆம் ஆண்டில் கூட்டுப்பண்ணைகளின் எண்ணிக்கைக் குறைந்துள்ளதாகக் காட்டப்பெற்றுள்ளது. அதற்குக் காரணம், சிறிய சிறிய கூட்டுப்பண்ணைகள் எல்லாம் பெரிய பண்ணையாக ஒன்று சேர்ந்தது ஒரு காரணம். சிறு பண்ணைகளால் இயந்திர வகைகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. சிறு உற்பத்தி அளவுள்ள நிலங்களும், கால்நடைகளும், கருவிகளும் விவசாயிகளின் உற்பத்தித் திறனையும், மொத்த உற்பத்தியையும் குறைக்கின்றன என்பதை விவசாயிகள் நன்குணர்ந்து, சிறு பண்ணைகளை இணைத்துப் பெரும் பண்ணைகளாக மாற்றினார்கள். 1958 வரை பெரும்பாலும், கூட்டுப்பண்ணைகளிடம் சொந்தமாக டிராக்டர்கள் இருக்கவில்லை. இயந்திர டிராக்டர் நிலையங்களே இவர்களுக்கு உதவி புரிந்தன. அதற்குப் பிறகு கூட்டுப்பண்ணைகளே தங்களுக்குச் சொந்தமாக இயந்திரக் கருவிகளை வைத்துக் கொள்ள முடிந்தது.

விவசாயப் பொருட்கள் உற்பத்தியிலும் சரி, அரசுக் கொள்முதலிலும் சரி கூட்டுப் பண்ணைகள் மிகப் பெரும்பங்கு வகித்தன.

### 14. 1970-ல் அரசுக் கொள்முதலில் கூட்டுப் பண்ணை, அரசுப் பண்ணைகளின் பங்கு

ஆண்டுச் சராசரி (10 லட்சம் டன்களில்)

| | 1961-65 | 1966-1970 |
|---|---|---|
| தானிய வகைகள் | 51•6 | 66•0 |
| பருத்தி | 5•0 | 6·1 |
| சர்க்கரை வள்ளிக்கிழங்கு | 55•4 | 74•4 |
| சூரியகாந்தி விதை | 3•4 | 4·7 |
| உருளைக்கிழங்கு | 8•4 | 11•0 |
| காய்கறிகள் | 6•7 | 9•4 |
| இறைச்சி | 5·2 | 7·3 |
| பால் | 31•1 | 43•2 |
| முட்டை (10 கோடியில்) | 8·7 | 14•4 |

இனி அரசுப் பண்ணைகளைப் பற்றிப் பார்ப்போம். இவைகளும் தீவிர வளர்ச்சி பெற்று, மிகச் சிறந்த அமைப்பாக இன்று விளங்குகின்றன. அக்டோபர் புரட்சியோடு துவங்கிய அரசுப் பண்ணை இன்று எண்ணிக்கையிலும், பயன்பாட்டிலும் பெரிதும் முக்கியமான வளர்ச்சிபெற்று விளங்குகிறது. 1928-ல் 1407 அரசுப் பண்ணைகள் இருந்தன. 1965-ல் 11,641 அரசுப் பண்ணைகளாக உயர்ந்தன. இன்னும் அரசுப் பண்ணைகள் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன. முதலில் நிலப் பிரபுக் களின் நிலங்களில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்குப் பிறகு அரசின் தரிசு நிலங்களிலே அரசுப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டன.

சந்தைக்கு வரக்கூடிய உபரிப் பொருட்களை உற்பத்தி செய்வதில் அரசுப் பண்ணைகள் கவனம் செலுத்துகின்றன. அதிலும் பிற பண்ணைகளிலிருந்து, வராது பண்டங்களின் உற்பத்தியை அதிகரிப்பதில் அரசுப் பண்ணைகள் கவனம் செலுத்துகின்றன. சில அரசுப் பண்ணைகள் சிறப்பு விதைகள் தயாரிப்பதில் கவனம் செலுத்துகின்றன. கால்நடைகளை அபிவிருத்தி செய்வதில் சில அரசுப் பண்ணைகள் அக்கறை காட்டு கின்றன. ஏற்றுமதிக்கான பொருள்களை உற்பத்தி செய்வதில் சில அரசுப் பண்ணைகள் கவனம் செலுத்துகின்றன.

### 15. அரசுப் பண்ணைகளின் சராசரி அளவு

| | 1940 | 1965 |
|---|---|---|
| 1. வேலைபார்க்கும் தொழிலாளர் எண்ணிக்கை (லட்சக் கணக்கில்) | 330 — | 657 |
| 2. விளைச்சல் நிலத்தின் பரப்பளவு (1000 ஹெக்டேர் கணக்கில்) | 2·8 — | 7 7 |
| 3. கால்நடைகள் : மாடுகள் (ஆயிரக் கணக்கில்) | 592 — | 2098 |
| பன்றிகள் | 459 — | 1073 |
| ஆடுகள் | 1420 | 3977 |
| 4. டிராக்டர்கள் (15 குதிரைச் சக்திகளில்) | 24 — | 125 |

ஆக, அரசுப் பண்ணைகள் சில அம்சங்களில் 100 சதவிகிதமும், வேறு சில அம்சங்களில் 200 சதவிகிதத்திலும் வளர்ச்சி பெற்றுள்ளதைக் காணலாம். 1965-க்குப் பிறகு, அரசுப் பண்ணை களில் 77 இலட்சத்து, 46 ஆயிரம் தொழிலாளர் ஈடுபட்டிருந் தனர். அரசுப் பண்ணைகளைச் சேர்ந்த விளைச்சல் நிலம்

8 கோடியே 91 இலட்சம் ஹெர்டேர்களாக உயர்ந்தது. இதில் 5 கோடியே 97 இலட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் தானியம் சாகுபடி செய்யப்பட்டது. மொத்த உற்பத்தியிலும், அரசின் கொள்முதலிலும் அரசுப் பண்ணைகள் கணிசமானதொரு பாகம் வகித்தன.

**16. 1965-ல் அரசுப் பண்ணைகள் மொத்த உற்பத்தியிலும், கொள் முதலிலும் வகித்த பங்கு (சதவிகிதத்தில்)**

| பொருள் | மொத்த உற்பத்தியில் பங்கு | கொள்முதலில்பங்கு |
|---|---|---|
| தானியம் | 37 | 37 |
| பருத்தி | 20 | 20 |
| சர்க்கரை வள்ளிக்கிழங்கு | 9 | 9 |
| உருளைக்கிழங்கு | 15 | 33 |
| காய்கறி | 34 | 57 |
| இறைச்சி | 30 | 45 |
| பால் | 26 | 41 |
| முட்டை | 20 | 45 |
| கம்பளி | 39 | 42 |

இவ்வாறுகப் பார்க்கும்போது, அரசுப் பண்ணைகளும், கூட்டுப் பண்ணைகளும் நாட்டின் மொத்த விவசாய உற்பத்தியில் மிகப் பெரும் பாகத்தைத் தாங்களே உற்பத்தி செய்கின்றன. சந்தைக்கு வரும் உபரிப் பொருட்களிலும் மிக உயர்ந்த பங்கு இவற்றிட மிருந்தே வருகின்றன. விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு வேண்டிய கச்சாப் பொருட்களும், தொழிலாளிகளுக்கு வேண்டிய நுகர்வுப் பண்டங்களும் இப் பண்ணைகளாலே பெருமளவு உற்பத்தி செய்யப்படுகின்றன.

### இயந்திர மயமாக்கப்பட்ட விவசாயம்

மொத்த நிலத்தின் பரப்பளவைக் கூட்ட முடியாது என்பது விவசாயத் துறையின் பொது விதியாகக் கருதப்படக்கூடியது. எல்லா நாடுகளுக்கும் பொருந்தக்கூடியது அது. எனவே இருக்கிற பரப்பில் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும். அவ்வாறு

உற்பத்தி அதிகரிக்க வேண்டுமானால், தீவிரச் சாகுபடி முறையைக் கையாளவேண்டும். இதற்கு, இரசாயன அல்லது செயற்கை உரங்கள், மேம்படுத்தப்பட்ட வீரிய வித்துகள், உயர்தர கருவிகள், கிருமி நாசினிகள், களைக் கொல்லிகள், நிலத்தைப் பண்படுத்தும் இயந்திர வகைகள் முதலியன பயன்படுத்தப்பட வேண்டும். அப்படியானால் நிலத்தின் பரப்பளவில் மாற்றம் ஏதுமின்றி, உற்பத்தியில் உயர்வைக் காணமுடியும்.

இரண்டாவதாக, விவசாயத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளரின் உற்பத்தித் திறன் உயர்ந்துகொண்டே போக வேண்டும். அதற்கு நாளுக்கு நாள் விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளரின் எண்ணிக்கைக் குறைந்துகொண்டே போகவேண்டும். ஆனாலும், உற்பத்தி உயர்ந்துகொண்டே இருக்க வேண்டும். அப்படியானால் எஞ்சியுள்ள தொழிலாளர் களின் உற்பத்தித் திறன் அதிகரித்துக்கொண்டே போகும்.

இவையிரண்டையும் நடைமுறை சாத்தியமாக்க, விவசாயத்தின் தொழில் நுணுக்க அடிப்படையை மேம்படுத்த வேண்டும். இயந்திரங்களை விவசாயத்துக்குப் பயன்படுத்துவது அவசிய மாகும்.

சோவியத் நாட்டில் புரட்சிக்கு முந்திய காலத்தில் மிகப் பழங்காலக் கருவிகளே விவசாயத் துறையில் பயன்பட்டு வந்தன. பெரும்பாலும், நிலத்தை உழுவதற்கு மாத்திரமே மரத்தாலான கருவிகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. அவர்கள் பயன்படுத்திய சக்தி அல்லது ஆற்றல் கால்நடைகளில் இருந்து பெறப்பட்டது. எத்தனையோ பண்ணைகளில் இவைகளும் இல்லாமல் இருந்தன. ருஷ்யாவின் மத்தியப் பகுதியிலுள்ள விவசாயப் பிரதேசத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த கருவிகளில் 3·4 சதவிகிதம் தான் உலோகத்தால் செய்யப்பட்டனவாக இருந்தன.

விவசாயக் கருவிகள் உற்பத்தியும் மிகவும் குன்றி இருந்தது. சிறுசிறு கைத்தொழில் நிறுவனங்களும், கிராமக் கைவினைஞருமே இக் கருவிகளைப் படைப்பவர்களாகவும் செம்மைப் படுத்துகிறவர் களாகவும் இருந்தனர். மிக எளிய மரக்கலப்பையைக்கூட அதிக அளவில் உற்பத்தி செய்ய இயலவில்லை. குதிரைகளால் இழுக்கப் பட்ட வேறு சில கருவிகளும் இங்கொன்றும் அங்கொன்றுமாக வழக்கில் இருந்தன. குலாக்குகளின் பண்ணைகளில்தான்

இவற்றைக் காண முடிந்தது. இவையெல்லாம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கருவிகளாக இருந்தன.

முதலாம் உலகப் போரின்போதும், உள்நாட்டுப் போரின் போதும் இந்தக் கருவிகளின் இறக்குமதி முற்றும் நிறுத்தப் பட்டது. சிறு சிறு கைத்தொழில்களும் மூடப்பட்டுவிட்டன. விவசாயத் துறையின் இழுப்பு ஆற்றலாகப் பயன்படுத்தப்பட்ட குதிரைகளின் எண்ணிக்கை பெரிதும் குறைந்துபோனது. இவையெல்லாமாக, இளம் சோவியத் நாட்டின் ஆரம்ப நாட்களைக் கடினமாக்கின. விவசாயத் தொழிலின் நுணுக்க அடிப்படையும், பொருள் வசதியின் அடிப்படையும் இதனால் பெரிதும் பலவீனமுற்றன.

1919ஆம் ஆண்டு நடைபெற்ற எட்டாவது கட்சி மாநாட்டில் லெனின் இது பற்றிப் பேசினார். ஒரு புதிய தொழில் நுணுக்க அடிப்படையை விவசாயத் துறைக்கு உண்டாக்கித் தருவதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். "ஒரு வேளை நாம் நாளைய தினமே 1 இலட்சம் முதல்தரமான டிராக்டர்களைக் கொடுக்க முடிந்து, அதற்கு வேண்டிய ஓட்டிகளையும், எண்ணெ யையும் தர முடிந்தால், கம்யூனிஸத்தை ஆதரிக்கிறேன் என்று நடுத்தர விவசாயி இன்றே கூறிவிடுவான்."[1] 1921ஆம் ஆண்டில், விவசாயக் கருவிகள் உற்பத்தி செய்யும் தொழிலை வளர்ப்பதற்குரிய சிறப்பாணையை லெனின் வெளியிட்டார். இதன்படி டிராக்டர்கள், மற்றைய தொழில் நுணுக்க மிக்க விவசாயக் கருவிகள், எளிய விவசாயக் கருவிகள் ஆகியவற்றைப் பெருமளவில் உற்பத்தி செய்வதைப் பற்றியதுதான் இவ்வாணை யாகும். அரசுப் பண்ணைகளும், கூட்டுப் பண்ணைகளும் தோன்றி வளர்ச்சி பெற்றன. இயந்திரக் கருவிகள் உற்பத்திக்கு ஊக்கமளிப்பதாக அமைந்தன. குதிரைச் சக்திக்குப் பதிலாக மண் எண்ணெய் அல்லது டீசலைப் பயன்படுத்தி ஓட்டக்கூடிய டிராக்டர்கள் பெருமளவில் தயார் செய்யப்பட்டன.

1928-க்கும் 1932-க்கும் இடைப்பட்ட காலத்தில் கூட்டுப் பண்ணைகள் அரசுப் பண்ணைகள் ஆகியவை பெருகுவதற்கு டிராக்டர்களும், விவசாயக் கருவிகளும் பெருமளவில் புழக்கத் திற்கு வந்தது ஒரு முக்கிய காரணமாகும். லெனின் கிராட், ஸ்டாலின்கிராட், கார்க்கோவ், ரோஸ்டோவ், ஸாரடோவ், தாஷ்கண்ட் ஆகிய இடங்களில் டிராக்டரும் ஏனைய விவசாயக்

[1] லெனின் நூல் திரட்டு, 2-ம் தொகுப்பு, பக்கம் 222.

கருவிகளும் ஆக்கும் ஆலைகள் தோற்றுவிக்கப்பட்டன. போரடிக்கும் இயந்திரங்கள், நிலத்தைக் கொத்தி விடும் கருவிகள், சணல் அறுவடை இயந்திரம், தானிய அறுவடை இயந்திரம், டிராக்டர் பூட்டிய ஏர்கள், உருளைக் கிழங்கு தோண்டியெடுக்கும் இயந்திரம், விதை பிரித்தெடுக்கும் இயந்திரம் என்று வகை வகையான இயந்திரங்களை இத்தொழிற் சாலைகள் உற்பத்தி செய்தன. நல்ல உழுபடைகளும், ஞாலம் நடுங்கவரும் இராட்சத அறுவடைக் கருவிகளும் இந்தத் தொழிற் சாலைகளில் ஆக்கப்பட்டன. பெரும்பாலும் இவை கூட்டுப் பண்ணைகளுக்கும் அரசுப் பண்ணைகளுக்கும் அனுப்பப்பட்டன. இப் பண்ணைகளில் நவீன இயந்திரங்கள் அதிகமாகப் பயன் படுத்தப்பட்டதைப் பின்வரும் அட்டவணை விளக்குகிறது.

**17. சோவியத் விவசாயத்தில் பயன்படுத்தப் பெற்ற இயந்திரங்களின் எண்ணிக்கை**

| இயந்திர வகை | 1932 | 1940 | 1965 | 1970 |
|---|---|---|---|---|
| டிராக்டர்கள் (ஆயிரக்கணக்கில்) | 148 | 531 | 1650 | 1790 |
| 15 குதிரைச் சக்தி கணக்கில் | 148 | 684 | 3050 | — |
| அறுவடை இயந்திரங்கள் | 14 | 182 | 520 | 550 |
| லாரிகள் | 14 | 227 | 982 | 1100 |

1940ஆம் ஆண்டு நாஜி ஜெர்மனி சோவியத் யூனியன்மீது படையெடுத்ததால் டிராக்டர், விவசாயக் கருவித் தொழிற் சாலைகள் எல்லாம் இராணுவத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலே திருப்பிவிடப்பட்டன. இவ்வாறு 4 ஆண்டுகள் நடந்தன. இதனால் விவசாய இயந்திர உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப் பட்டது. இது தவிர, பாசிஸ்டுகள் ஆக்கிரமித்துக்கொண்ட பகுதிகளில், இருந்த விவசாய இயந்திரப் பொறிகள் சில அழிக்கப்பட்டன; சில ஜெர்மனிக்கு எடுத்துக்கொண்டு போகப் பட்டன. ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கப்புறம்தான் முந்தையத் தொழில் நுணுக்க அடிப்படையைத் திரும்ப அமைக்க முடிந்தது.

1950ஆம் ஆண்டிற்குப் பிறகு விவசாய இயந்திரத் தொழில் மீண்டும் முன்னேறியது. 1965-ல் டிராக்டர்களின் எண்ணிக்கை 1950ஐ விட 200 சதவிகிதம் உயர்ந்தது. அறுவடை இயந்திரங்

களின் எண்ணிக்கை 150 சதவிகிதமாக உயர்ந்தது. ஏனைய பொறிகளின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்தது.

1958ஆம் ஆண்டிலேயே விவசாயம் கிட்டத்தட்ட இயந்திர மயமாக்கப்பட்டது. இதனைக் கீழ்க்கண்ட அட்டவணை விளக்கு கிறது.

### 18. சோவியத் விவசாயம் இயந்திரமயமாக்கப்படல் (சதவிகிதத்தில்)

| வேலை | தானியப் பயிரில் பயன்படுத்தப் பட்ட கருவிகள் | 1928 | 1940 | 1958 |
|---|---|---|---|---|
| I. உழவு | மரத்தாலான ஏர் | 10 | — | — |
| | குதிரைப்பூட்டிய ஏர் | 89 | 98 | 2 |
| | டிராக்டர் பூட்டிய ஏர் | 1 | 62 | 98 |
| II. விதைப்பு | கையால் வேலை செய்தது | 75 | 8 | — |
| | குதிரைப் பூட்டிய மண்கொத்தும் கருவி | 25 | 36 | 3 |
| | டிராக்டர் பூட்டிய ... | — | 56 | 97 |
| III. அறுவடை | அரிவாள் வகை | 44 | 20 | 5 |
| | குதிரைப் பூட்டிய இயந்திரம் | 56 | 34 | 5 |
| | அறுவடை இயந்திரம் | — | 42 | 90 |

இவ்வாறு விவசாயம் இயந்திரமயமாக்கப்பட்டதால் மனித உழைப்பு மிச்சப்படுத்தப்பட்டது. 1925-ல் தனித்தனி விவசாயப் பண்ணைகளில் ஒவ்வொரு சென்ட்னர் தானியத்திற்கும் 3·2 மனித வேலை நாட்களைச் செலவழித்தனர். 1960-ல் அதே அளவு தானியம் உற்பத்தி செய்ய 0·86 மனித வேலை நாட்கள் கூட்டுப் பண்ணைகளிலும், 0·26 மனித வேலை நாட்கள் அரசுப் பண்ணை களிலும் செலவு செய்யப்பட்டன. இவை இரண்டிலும் சேர்ந்து சராசரி 0·52 மனித வேலை நாட்கள் செலவழிந்தன. இவ்வாறான கணக்கீட்டின்படி பார்க்கப் போனால் தானிய உற்பத்தியில் உழைப்புத் திறன் 660 சதவிகிதம் உயர்ந்தது.

தானியச் சாகுபடித் துறை சோவியத் ஒன்றியத்தில் மிக அதிகமாக இயந்திரமயமாக்கப்பட்டதாக விளங்குகிறது. மற்றப் பண்டங்கள் உற்பத்தியில் இன்னும் இயந்திரமயமாக்கப்படாத

அம்சங்கள் இருந்து வருகின்றன. 1965 வரை கால்நடை வளர்ப்புத்தான் மிகக் குறைவாக இயந்திரமயமாக்கப்பட்ட கிளையாக இருந்தது. 1970-ல் உழைப்புத் தேவையுள்ள வேலைகள் அனைத்தும் இயந்திரமயமாக்கபட்டன. உழைப்புத் திறனும் அதிகரிக்கப்பட்டது. மின்சக்திப் பெருக்கம் இதற்குத் துணை நின்றது.

### விவசாயமும் மின்சாரமும்

அக்டோபர் புரட்சிக்குப் பிறகு நாட்டுப்புறத்தை மின்சார மயமாக்குவதற்குப் பூர்வாங்க திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. இதன் விளைவாக 1920ஆம் ஆண்டில் கஷிநோ எனும் கிராமத்தில் முதல் சோவியத் கிராம மின்சார நிலையம் அமைக்கப்பட்டது. இதன் துவக்க விழாவில் லெனின் கலந்துகொண்டார்.

1916ஆம் ஆண்டிற்கு முன்பு 80 கிராம மின்சார நிலையங்கள் இருந்தன. இவை நிலப்பிரபுக்களின் பண்ணைகளுக்கு மட்டும் மின்சக்தி வழங்கி வந்தன. இதனால் பெருவாரியான விவசாயி களுக்கு நேரடியான பலன் ஏதும் விளையவில்லை. ஆனால் சோவியத் மின்சார நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டபின், விவசாயிகளின் வாழ்க்கையிலும், விவசாயத் துறையிலும் பல்வேறு மாற்றங்கள் தோன்றின. 1916ஆம் ஆண்டைவிட 1928ஆம் ஆண்டில் 30 மடங்கு அதிகமாக மின்சக்தியைக் கிராமப் புறங்களுக்கு வழங்க முடிந்தது. ஆரம்பத்தில் வீடுகளுக்கு மட்டுமே மின்சக்தி வழங்கப்பட்டது. தொழில் துறை வளர்ச்சி ஏற்படவே, மின்சக்தி கிராமப்புறத்துக்கு மேலும் வழங்கப்

**19. சோவியத் விவசாயம் மின்மயமாதல் (ஆண்டுகள்)**

| அம்சம் | 1928 | 1940 | 1950 | 1965 |
|---|---|---|---|---|
| 1. கிராம மின் நிலையங்களின் மொத்த உற்பத்தித் திறன் (1000 கிலோவாட் கணக்கில்) | 30 | 265 | 945 | 5285 |
| 2. கிராம மின் நிலையங்களின் மொத்த மின்சார உற்பத்தி (10 லட்சம் கிலோவாட் மணி நேரக் கணக்கில்) | 34 | 303 | 1080 | 6034 |
| 3. விவசாயத்தில் மின்சாரம் மொத்தமாகப் பயன்படுத்தப்பட்டது. (10 லட்சம் கிலோ வாட் மணி நேரக் கணக்கில்) | 34 | 538 | 1500 | 21000 |

பட்டது. விவசாயத் துறையில் மின்சக்தி அதிகரிப்பதை 91ஆம் பக்க அட்டவணைப் பட்டியல் விளக்குகிறது.

அண்மைக் காலத்தில் கிராமப்புறத்துக்கு வழங்கும் மின் சக்தியின் அளவு தீவிரமாக உயர்ந்துள்ளது. அரசுப் பண்ணைகளுக்கும் கூட்டுப்பண்ணைகளுக்கும் இதர பண்ணைகளுக்கும் அரசின் மின் இணைப்பு நிலையங்கள் மின் சக்தி வழங்குகின்றன. சிறு சிறு மின் நிலையங்களைவிட பெரிய அரசுமின் நிலையங்கள் மிகக் குறைந்த செலவில் மின்சக்தி உற்பத்தி செய்கின்றன. மேலும், இடையீடாது மின்சக்தி வழங்குவதில் பெரிய நிலையங்களே நம்பகமானவையாகும். அத்தோடு அரசுப் பண்ணைகளுக்கும், கூட்டுப் பண்ணைகளுக்கும் ஏராளமாக மின்சார மோட்டார்கள் கொடுக்கப்பட்டன. நீர்ப்பாசனத் துறையிலும், கால்நடை வளர்ப்புத் துறையிலும் உழைப்புத் தேவையுள்ள மற்றத் துறைகளிலும் இவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எத்தனையோ உழைப்புத் தேவைப்படும் வேலைகள் எல்லாம் இவ்வாறு மின்மயமாக்கப்பட்டன. விவசாய உற்பத்தித் திறனை உயர்த்தியதில் மின்சக்திக்கு ஒரு முக்கிய பங்கு உண்டு.

**விவசாயமும்—இரசாயனப் பொருள்களும்**

விவசாயத் துறையின் உற்பத்தி சக்திகளை வளர்ப்பதில் இரசாயனப் பொருட்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. புரட்சிக்கு முந்திய ருஷ்யாவில் இந்த உண்மை தெரிந்திருந்த போதிலும், அதற்கான முயற்சிகள் ஒன்றும் மேற்கொள்ளப்பட வில்லை. பல ஆராய்ச்சியாளர்கள் தாது உரங்களின் முக்கியத் துவம் பற்றி ஆராய்ந்தும் எழுதியும் வந்தனர். ஆனால் செயலிலே அவை காட்டப்பெறவில்லை. 1913-ல் 188 ஆயிரம் டன் அளவுக்குத்தான் மொத்தமாக நைட்ரேட், பொட்டாசியம், பாஸ்பேட் உரங்கள் பயன்படுத்தப்பட்டன. பயன்படுத்தப் பட்ட மொத்தத் தாது உரங்களில் பாதிக்குமேல் இறக்குமதி செய்யப்பட்டவையாகும். 1913-ல் 89 ஆயிரம் டன் தாது உரங்கள் மாத்திரமே உள்நாட்டில் உற்பத்தி ஆயின. அக் காலத்தில் நிலப்பிரபுக்களின் பெரும் பண்ணைகளில் மட்டுமே செயற்கை உரங்கள் பயன்படுத்தப்பட்டன. சோவியத் திட்ட மிட்ட பொருளாதார அமைப்பு ஏற்பட்டதால் தாது உரங்கள் உற்பத்தி செய்வதும், பயன்படுத்துவதும் மிக அளவில் அதிகரித்தன. இதைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் காணலாம்,

**20. விவசாயத்தில் செயற்கை உரங்கள் பயன்படுத்தப்பட்டது**

| | (ஆயிரம் டன் கணக்கில்) | | |
|---|---|---|---|
| உரவகை — | 1928 | 1940 | 1966 |
| நைட்ரஜன் வகை | 11 | 789 | 11,132 |
| பொட்டாசியம் | 4 | 526 | 4547 |
| பாஸ்பேட் | 207 | 1371 | 3044 |
| கலவை | 12 | 473 | 3246 |
| மொத்தம் | 234 | 3159 | 21,969 |

ஆரம்பத்தில் பணப் பயிர்களுக்கு மட்டுமே செயற்கை உரங்கள் பயன்படுத்தப்பட்டன. ஆனால் அரசுப் பண்ணைகளிலும் கூட்டுப் பண்ணைகளிலும் பல முன்னேற்றங்கள் ஏற்பட்ட பிறகு ஏனைய பயிர்களுக்கும் அவை பயன்படுத்தப் பெறுவது சாத்திய மாயிற்று. பருத்தி, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, சணல், தேயிலை போன்ற பணப் பயிர்களுக்குவிஞ்ஞான அடிப்படையில் செயற்கை உரங்கள் பயன்படுத்துவது பரவலடைந்தது. உருளைக் கிழங்கு, காய்கறி, பழவகைகள், முதலியவற்றிற்குப் பல கூட்டுப் பண்ணை களிலும், அரசுப் பண்ணைகளிலும் விஞ்ஞான முறையில் உரமிடுவது விரிவடைந்துள்ளது.

இருப்பினும், தாது உரங்களின் உற்பத்தி தேவையைவிடக் குறைவாகவே இருக்கிறது. மொத்த விவசாய உற்பத்தியைத் தீவிரமாக அதிகரிக்கச் செய்வதில் கால தாமதம் ஏற்படுவதற்கு இதுவே முக்கியமான காரணமாகும்.

### விவசாயமும் இரண்டாம் உலகப்போரும் அதன் பின்னரும்

விவசாயத்தின் திட்டமிட்ட வளர்ச்சியை யுத்தம் தடை செய்து விட்டது. யுத்தத்தால் எழுபதாயிரம் கிராமங்கள் எரிந்து சாம்பலாயின. 98 ஆயிரம் கூட்டுப் பண்ணைகள் நாசமாயின. சுமார் இரண்டாயிரம் அரசுப் பண்ணைகளும், மூவாயிரம் இயந்திர டிராக்டர்களும் அழிந்தன. 1 கோடியே 70 இலட்சம் கால்நடைகளையும், 2 கோடி பன்றிகளையும், 2 கோடியே 70 இலட்சம் ஆடுகளையும், 70 இலட்சம் குதிரை

களையும் விவசாயிகள் இழந்தனர். கோடானுகோடி ரூபிள் கணக்கில் விவசாயத்துக்கு இழப்பு நேரிட்டது.

இது தவிர விவசாயத்தில் ஈடுபட்டிருந்த மனித சக்தியையும் பொருள் சக்தியையும் யுத்தம் தன்னிடமாகப் பெருமளவில் திருப்பிக்கொண்டது. வயது வந்த ஆண்கள் இராணுவத்தில் சேர்ந்தனர். ஏராளமான டிராக்டர்களும், உழவுக் குதிரைகளும், லாரிகளும் சோவியத் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டன. நாட்டின் கிழக்கத்திய பிரதேசங்களில் விவசாயம் வளர்ந்து பெருகுவதற்கு இது தடையாகிவிட்டது.

யுத்தம் முடியும் தருவாயில் விவசாயம் மிகவும் பாதிக்கப் பட்டிருந்தது. 1945-ல் மொத்த விவசாய உற்பத்தி 1940-ன் உற்பத்தியில் 60 விழுக்காடாக இருந்தது. இந்த நிலையை சீராக்க நிலத்தின் பரப்பளவு விரிவாக்கப்பட்டது. கீழே கொடுக்கப்பெற்றுள்ள பட்டியலில் சாகுபடியாகும் நிலப்பரப்பின் அளவு விரிந்துள்ளதைக் காணலாம்.

**21. சாகுபடியாகும் நிலப்பரப்பளவுகள்**

| | (10 லட்சம் ஹெக்டேர் கணக்கில்) | | |
|---|---|---|---|
| பயிர் — | 1940 | 1950 | 1965 |
| மொத்த சாகுபடியின் நிலப்பரப்பின் அளவு | 150·6 | 146·3 | 209·1 |
| தானியங்கள் — | 110·7 | 102·9 | 128·0 |
| தொழில் வகைப் பயிர்கள், உருளைக்கிழங்கு, காய்கறிகள், சுரைக்காய் வகைகள் | 10·0 | 10·5 | 10·6 |
| தீவனப் பயிர்கள் | 18·1 | 20·7 | 55·2 |
| தரிசு நிலங்கள் | 28·9 | 32·0 | 14·6 |

நாட்டின் கிழக்கத்தியப் பிராந்தியங்களில் கன்னி நிலங்களையும், தரிசு நிலங்களையும் சாகுபடிக்குக் கொண்டுவருவதன் மூலமாக விவசாய உற்பத்திப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது. 1954–58ஆம் ஆண்டுக்குள்ளாக 4 கோடியே 10 இலட்சம் ஹெக்டேர் பரப்புள்ள நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டன. சிற்சில இடங்களில் எவ்வித ஆய்வும் செய்யாமலேயே நிலங்கள் புதிதாக விளைவு செய்யுப்

பட்டன. உழவு முறையிலும், பயிர் செய்யும் வழி முறைகளிலும் பல தவருன முறைகள் பின்பற்றப்பட்டன. இதனுல் மண் அரிப்பு ஏற்பட்டது. இப்பொழுது இதைத் தடுப்பதற்குத் தொழில்—நுட்ப முறைகளை விஞ்ஞான ரீதியாகப் புகுத்தி வருகின்றனர்.

விளைச்சல் நிலப்பரப்பை அதிகரிப்பதோடு, வேறுபல வழி முறைகளையும் கையாண்டனர். அரசுப் பண்ணைகள், கூட்டுப் பண்ணைகள் எல்லாம், பயிர் வகைகளைச் சாகுபடி செய்வதை மேம்படுத்தப் பணிபுரிந்தன. தாது உரங்களையும், இயற்கை உரங்களையும் விரிவாகப் பயன்படுத்துவதன் மூலமும் இதைச் சாதிக்க முற்பட்டனர். கால்நடைகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

**22. சோவியத் யூனியனில்**
**பயிர் வகைகள் உற்பத்தியும், கால்நடைகளின் எண்ணிக்கையும்**

| வகை | அலகு | 1940 | 1950 | 1965 |
|---|---|---|---|---|
| தானிய வகை | 10 லட்சம் டன் | 95·6 | 81·2 | 148·0 |
| விதைப் பருத்தி | ,, ,, | 2·2 | 3·5 | 5·6 |
| சர்க்கரை வள்ளிக்கிழங்கு (தொழில் வகை) | ,, ,, | 18·0 | 20·8 | 71·5 |
| சூரியகாந்தி | ,, ,, | 2·6 | 1·8 | 5·4 |
| சணல் நார் | 1000 டன் | 34·9 | 25·5 | 44·4 |
| உருளைக்கிழங்கு | 10 லட்சம் டன் | 76·1 | 88·6 | 88·0 |
| காய்கறிகள் | ,, ,, | 13·7 | 9·3 | 17·0 |
| மாடுகள் | 10 லட்சம் கணக்கில் | 54·8 | 57 1 | 93·4 |
| பன்றிகள் | ,, ,, | 27·6 | 24·4 | 59·5 |
| வெள்ளாடுகளும், செம்மறியாடுகளும் | ,, | 91·7 | 99·0 | 135·3 |

தானிய வகைகளும் இதர பயிர் வகைகளும் உற்பத்தியில் உயர்ந்துள்ள நிலையை இப் பட்டியல் காட்டுகிறது. கால்நடைகளிலும் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதையும் காணலாம். கால்நடைத் தீவனங்களிலும் அதிகரிப்பு ஏற்பட்டது. உயர் ஜாதிக் கால்நடைகளும் வளர்க்கப்பட்டன. கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ வசதிகளும் அதிகரிக்கப்பட்டன.

உலகப் போருக்குப் பின் சோவியத் விவசாயம் சந்தைக்கு வரக்கூடிய விவசாயப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதில் வெற்றி கண்டது. இதன் மூலம் பண்டங்கள் தயாரிக்கும் தொழில்களுக்குத் தேவையான கச்சாப் பொருள் கிடைக்க வழி செய்யப்பட்டது. அரசுப் பண்ணைகள், கூட்டுப் பண்ணைகள் ஆகியவற்றிலிருந்து மக்களுக்குத் தேவைப்படும் உணவுப் பொருள்கள் பெறப்பட்டன. நாட்டின் எல்லாப் பிரதேசங்களுக்கும் உணவுப் பொருட்கள் விநியோகிப்பது முறையாக அமைக்கப் பெற்றது. போதிய கையிருப்புகள் வைத்துக் கொள்ளப்பட்டது.

நடப்பிலுள்ள திட்டக் காலத்தில் விவசாய உற்பத்தியில் இன்னும் அதிக வளர்ச்சியைப் பெறுவதே நோக்கமாக இருக்கிறது. சோவியத் நாட்டின் விவசாயத்தை வளர்ப்பதன் மூலமே மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் என்பது கண்டு, அதற்கான திட்டமிடப்பட்டுள்ளது. தானிய உற்பத்தி பெருகுவதற்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. விவசாயப் பொருள்களின் உற்பத்தி பின்வரும் அளவுகளைப் பிடிக்கவேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

**23. நடப்புத் திட்ட காலத்தில் சராசரி உற்பத்தி உயர்வு**

| விவசாயப் பொருட்கள் (10 லட்சம் டன் கணக்கில்) | 1961-65 | 1966-70 | 61-62ஐவிட 66-67ன் சதவிகித உயர்வு |
|---|---|---|---|
| தானியங்கள் — | 130·2 | 167 | 128 |
| சர்க்கரை வள்ளிக்கிழங்கு | 59 | 80 | 136 |
| விதைப் பருத்தி | 5 | 6 | 120 |
| உருளைக்கிழங்கு | 81 | 100 | 120 |
| இறைச்சி | 9·3 | 11 | 118 |
| பால் | 65 | 78 | 120 |
| முட்டை (100 கோடி கணக்கில்) | 29 | 34 | 117 |

மேலும் இறைச்சி, பால், முட்டை, கம்பளி ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிப்பதும், தீவனங்களின் உற்பத்தியைப் பெருக்குவதும் இத் திட்ட காலத்தில் சாதிக்க வேண்டிய இலக்குகளாக உள்ளன, கால்நடைகள், கோழிகள் ஆகியவற்றின்

உற்பத்தித் திறனை உயர்த்துவதன் மூலம் இது சாத்தியமாகும். பசுமாடுகளின் சராசரி கறவை அளவை உயர்த்தி, பால் பண்ணைகளைத் தொழில் கேந்திரங்களுக்குப் பக்கத்தில் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளனர். இவற்றைச் சாதிக்க முழுமையாக இயந்திரமயமாக்கும் வழி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுத் துறை கால்நடைப் பண்ணைகளையும், பயிர் உற்பத்தியையும் இரசாயனமயமாக்குவதென்று திட்டமிட்டுள்ளனர். கிராமப் புறத்தை மின்சாரமயமாக்குவதென்றும் திட்டமிட்டுள்ளனர். விவசாய இயந்திர சாதனங்களை அதிகரிப்பதும் இத் திட்டத்தின் ஓர் அம்சமாகும்.

இத் திட்டக்காலத்தில், தொழில் துறையின் உற்பத்தித் தரத்துக்குச் சமமாக விவசாய உற்பத்தித் தரம் உயரத் திட்டம் வகுத்துள்ளனர். இதற்காக முந்தைய ஐந்தாண்டுக் காலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டதைவிட விவசாயத்துக்கு இரு மடங்கு அதிகமாக முதலீடு செய்ய முடிவு செய்துள்ளனர். அரசு ஒதுக்கீடுகள் தவிர, கூட்டுப் பண்ணைகளே சுமார் 3000 கோடி ரூபிள் முதலீடு செய்யத் திட்டம் தீட்டியுள்ளன. அரசு 4100 கோடி ரூபிள் ஒதுக்கீடு செய்துள்ளது. புதிய இயந்திர சாதனங்களை உற்பத்தி செய்வதில் இந்த முதலீடுகளில் கணிசமான தொகை செலவிடப்படுகிறது. புதிய விவசாய இயந்திர உற்பத்தியின் அதிகரிப்பைக் கீழ்க்காணும் பட்டியலில் இருந்து அறியலாம்.

### 24. விவசாய இயந்திரங்களின் அதிகரிப்பு
(ஆயிரக் கணக்கில்)

| இயந்திரங்கள் | 1961-65 | 66-70 |
|---|---|---|
| டிராக்டர்கள் | 1093·1 | 1790 |
| தானிய அறுவடை இயந்திரங்கள் | 384·4 | 550 |
| லாரிகள் | 361·4 | 1100 |
| டிராக்டர் பூட்டிய கருவிகள் | 475 | 900 |
| டிரெயிலர்கள் | 21 | 275 |
| மணல்வாரி இயந்திரங்கள் | 45 4 | 80 |
| புல்டோஸர்கள் | 38·1 | 55 |
| இதரவகை விவசாயக் கருவிகள் | 6·4 | 10·7 |

1970ஆம் ஆண்டில் விவசாயக் கருவிகள் மூலம் தொழில் நுட்பத்தை மேம்படுத்த பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மிக வேகமான டிராக்டர்கள் புகுத்தப்பட்டுள்ளன. விவசாய இயந்திரங்களின் வேலைக்கால வேகத்தை 5-9 கிலோ மீட்டர் என்று இருந்ததை, மணிக்கு 9-15 கிலோ மீட்டர் அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசுப் பண்ணைகள், கூட்டுப் பண்ணைகள் ஆகியவற்றிற்குத் தேவைப் படும் டிராக்டர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டு விட்டது.

கூட்டுப் பண்ணைகளையும், அரசுப் பண்ணைகளையும் இந்தத் திட்ட காலத்தில் முழுமையாக மின்சார மயமாக்குவது ஒரு முக்கியமான இலக்காகும். விவசாயத்தில் பயன்படும் மின்சார மோட்டார்களின் எண்ணிக்கை இந்த ஐந்தாண்டு காலத்தில் நான்கு மடங்காக உயர்ந்துள்ளது. 1975ஆம் ஆண்டிற்குள்ளாக 80 இலட்சம் ஹெக்டேர் நிலம் நீர்ப்பாசன வசதி பெறுவதற்குத் திட்டம் வகுத்துள்ளனர். நீர்வடிகால் செய்யப்பட்ட நிலத்தின் பரப்பு 1 கோடியே 60 இலட்சம் ஹெக்டேராக் இருக்கும். மொத்தத்தில் சீர்ப்படுத்தப்பெற்ற நிலத்தின் அளவு 3 கோடியே 80 இலட்சம் ஹெக்டேராக இருக்கும்.

# 9. சோவியத் பொருளாதாரத்தில் போக்குவரத்துத் துறை

சோவியத் போக்குவரத்துத் துறை சமூகப் பொருளுற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது. தொழில் துறையின் எல்லாப் பிரிவுகளுக்கிடையிலும், பொருளாதார பிராந்தியங்களுக்கிடையிலும் தொடர்ச்சியான உறவுக்கு அது ஏற்பாடு செய்கிறது. பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் துணைபுரிகிறது. மேலும், தொழில் துறையில் உற்பத்தியாகும் பொருள்களின் தலையாய நுகர்வாளர் போக்குவரத்துத் துறையேயாகும். எனவே பொருள் உற்பத்தியின் அளவையும், அமைப்பையும் போக்குவரத்துத் துறை நிர்ணயிக்கிறது. பண்டப் பரிவர்த்தனைப் பொருள் விநியோகத்தை ஒழுங்குபடுத்தி உற்பத்திக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கிறது. சோவியத் நாடு மிகப் பெரும் பரப்புள்ள நாடாகும். அதன் மூலை முடுக்குகளில் கண்டு பிடிக்கப்படும் கனி வளங்களையும், இதர செல்வாதாரங்களையும் நாட்டின் தொழில் துறைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதில் போக்குவரத்துத் துறை பெரும் பங்கு வகிக்கிறது.

### இரயில் போக்குவரத்து

சோவியத் போக்குவரத்து அமைப்பின் அடிப்படையாகத் திகழ்வது இரயில்வேக்கள்தான். சரக்குகளில் 70 சதவிகிதத்தை இரயில்வேக்கள் ஏற்றிச் செல்கின்றன. பிரயாணிகளில் 55 சதவிகிதம் பேர் இரயிலில்தான் பிரயாணம் செய்கின்றனர். உலக இரயில்வே சரக்குப் போக்குவரத்தில் சோவியத் இரயில்களின் பங்கு 46 சதவிகிதமாகும்.

சோவியத் இரயில்களின் மொத்த நீளம் சுமார் 2 லட்சம் கிலோ மீட்டர்களாகும். 1965 ஆம் ஆண்டில் பிரதி கிலோமீட்டர்

பாதைக்கு 1 கோடியே 58 லட்சம் டன் சரக்குகள் ஏற்றிச் செல்லப்பட்டன.

சோவியத் யூனியனில் தொழிலும் விவசாயமும் வளர்ச்சியடைந்து வரும் பகுதிகளில் இரயில்வேக்கள் அமைக்கப்படுகின்றன. நீராவி எஞ்ஜின்களை நீக்கிவிட்டு, மின்சார இயந்திரங்களையும், டீசல் எஞ்ஜின்களையும் பொறுத்துவது அவசியமாயிற்று. 1950-க்குப் பிறகு இவ்வேலை துரிதமாக நடந்தேறியது. டீசல் எஞ்ஜினுக்குச் சோவியத் யூனியன் தான் பிறப்பிடமாகும். 1924–26-ல் உலகிலேயே முதன் முறையாகப் பலரக டீசல் எஞ்ஜின்கள் அங்கே கட்டப்பட்டன. 1000 குதிரை விசை ஆற்றலுள்ள எஞ்ஜின்கள் வரை கட்டியது அங்கேதான். 1965ஆம் ஆண்டில் 6000 குதிரை விசை ஆற்றலுள்ள மின்சார எஞ்ஜின்களும் டீசல் எஞ்ஜின்களும் பெருமளவில் உற்பத்தி செய்கின்றனர்.

1950ஆம் ஆண்டில் இரயில்வேக்களை மின்சார மயமாக்குவது தொடங்கப்பெற்றது. 5,400 கிலோமீட்டர் இரயில் பாதைகள் இதுவரை மின்சார மயமாக்கப்பட்டுள்ளது. நவீனத் தந்தி முறைகளையும், சிக்னல் முறைகளையும் கண்டுபிடித்துப் புகுத்தினர். இரயிலை நவீனப்படுத்தியதன் விளைவாக ஏற்பட்ட சாதனைகளைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. 1965-க்குள் 25,000 கிலோமீட்டர் இரயில் பாதை மின்சார மயமாக்கப்பட்டது. சரக்குப் போக்குவரத்தில் இவை 39·5 சதவிகிதத்தை ஏற்றிச் சென்றன. 5,400 கிலோமீட்டர் பாதைகளில் டீசல் எஞ்ஜின் செயல்பட்டன. இவை சரக்குப் போக்குவரத்தில் 45 சதவிகிதத்தை ஏற்றிச் சென்றன.

புதிய மாதிரியான மின்சார இரயில்களும், டீசல் எஞ்ஜின்களும் பயன்படுத்தப்பட்டதன் விளைவாகப் பிரயாண போக்குவரத்தின் வேகம் அதிகரித்துள்ளது. மாஸ்கோவிற்கும் லெனின்கிராடிற்குமிடையிலுள்ள 650 கிலோமீட்டர் தூரத்தை 5 மணி 20 நிமிடத்தில் ஒரு தினசரி இரயில் வண்டி கடக்கிறது சரக்கு ஏற்றிச் செல்லும் இரயில்களின் சராசரி வேகம் 1940-ல் மணிக்கு 20·3 கிலோமீட்டர்களாக இருந்தது. இது 1965-ல் மணிக்கு 33·6 கிலோமீட்டர்களாக உயர்ந்துள்ளது. சரக்குப் போக்குவரத்துக் கட்டணங்கள் பெருமளவு குறைந்துள்ளன. பிரயாணி வண்டிகளில் வசதிகள் பெருகியுள்ளன. இரயில் கட்டணமும், விமானக் கட்டணமும் கிட்டத்தட்ட ஒன்றேதான் என்றாலும், பெரும்பாலோர் இரயில் பயணத்தையே விரும்புகின்றனர். 1970-ல்

சரக்குப் போக்குவரத்து 45,000 கோடி டன்னுகை உயர்ந்தது. கிட்டத்தட்ட இரயில்வேக்கள் முழுவதும் 1970ஆம் ஆண்டிற்குள்ளாக மின்சார மயமாகவும், டீசல் மயமாகவும் ஆக்கப்பட்டன.

### கடல் போக்குவரத்து

சோவியத் கடற்கரை எல்லை சுமார் 57,000 கிலோமீட்டர்கள் நீளமுள்ளது. 1959–1965 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில், வர்த்தகக் கப்பல்களின் சாதனை 10,630 கோடியிலிருந்து 38,710 கோடி டன்–கிலோ மீட்டர்களாக உயர்ந்தது. கப்பலில் ஏற்றிச் செல்லப்பட்ட சரக்குகளின் எடை 7–கோடியே 8 இலட்சத்திலிருந்து 19 கோடியே 11 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. 1965-ல் நாட்டின் மொத்த சரக்குப் போக்குவரத்தில் கடல்போக்குவரத்தின் பங்கு 14 சதவிகிதமாக இருந்தது. இன்று சோவியத் வர்த்தகக் கப்பல் துறையில் 1300 கப்பல்கள் இருக்கின்றன. அவைகளின் எடை சுமார் 1 கோடி. டன்களாகும்.

பன்னாட்டு வாணிபம் பெருகுவதற்கு வர்த்தகக் கப்பல் போக்குவரத்து மேம்படுவது அவசியமாகும். புதிதாக விடுதலை பெற்று வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுடனும், ஏனைய சோஷியலிச நாடுகளுடனும் உழைப்பையும், உற்பத்தியையும் பகிர்ந்து கொள்வதற்குக் கப்பல் போக்குவரத்துத் துணை புரிகிறது. பல முதலாளித்துவ நாடுகளோடு வாணிப உறவு இதன் மூலம் நடைபெறுகிறது. 80 நாடுகளில் உள்ள 800 துறைமுகங்களுக்கு சோவியத் கப்பல்கள் போய் வருகின்றன. பல ஆண்டுகளாக, இந்தியாவும், சோவியத் யூனியனும் கூட்டாக முறையான கப்பல் போக்குவரத்தை நடத்தி வருகின்றன.

சோவியத் யூனியனுக்கும் முதலாளித்துவ நாடுகளுக்குமிடையே 1953-ல் கப்பல் வழியாக ஏற்றிச் செல்லப்பட்ட சரக்குகள் 37 லட்சம் டன்களாக இருந்தன. 1970-ல் இது 6 கோடி டன்னுகை உயர்ந்துள்ளது, இச் சரக்குகளின் தன்மையும் மாறியுள்ளது. சரக்குகளில் பெரும்பான்மையானவை தொழிற்சாலைகளுக்குத் தேவையான முழு இயந்திரங்களும், பலவகைக் கருவிகளும், உலேகங்களுமாகும்.

இன்றையக் கப்பல்களில் 87 சதவிகிதம் கப்பல்கள் நவீன டீசல் என்ஜின்கள் பொருத்தப்பட்டு இயங்குகின்றன. கப்பல்களின் சரக்கு ஏற்றிச் செல்லும் ஆற்றலும், தரமும் உயர்ந்துள்ளன. நீண்ட தூரம் செல்லும் பிரயாணிக் கப்பல்கள்

90 இருக்கின்றன. சில சமயங்களில் அயல் நாட்டுக் கப்பல்களையும் அமர்த்திக் கொள்வதுண்டு.

கடலோரக் கப்பல் போக்குவரத்து அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளது. உள்நாட்டுக் கடல்களிலும், ஆர்க்டிக் மகா சமுத்திரம், பசிபிக் மகாசமுத்திரம் ஆகியவற்றின் கடலோரங் களிலும், பக்கத்திலுள்ள துறைமுகங்களுக்கிடையிலும் போக்கு வரத்து வெகுவாக வளர்ந்துள்ளது. படகுப் போக்குவரத்து வளர்ச்சியும் இதன் விளைவேயாகும்.

சோவியத் யூனியனில் மிகப் பரந்த அளவில் பல துறை முகங்கள் இல்லை. ஆனால் இருக்கிற துறைமுகங்கள் எல்லாம் பலவித உபகரணங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. சரக்குகளை ஏற்றி இறக்கும் வேலை பெரும்பாலும் இயந்திர உதவி கொண்டே செய்யப்படுகிறது. பல புதிய கப்பல்களைக் கட்டவும், நங்கூரம் போட்டு நிறுத்தவும் துறைமுகங்களில் இன்னும் அதிக வசதிகள் உண்டாக்கத் திட்டம் வகுத்துள்ளனர்.

**நதிப் போக்குவரத்து**

யுத்தத்திற்குப் பின்னர் தொழில் வளர்ச்சி மிக விரைவாக முன்னேறிய போதிலும் நதிப்போக்குவரத்து முன்னேற முடியாத ஓர் இக்கட்டான நிலையிலிருந்தது பல புதிய தொழில்கள் எல்லாம் கிழக்குப் பிரதேசத்திலும், யூரல் மலைப் பிராந்தி யத்திலும் அமைக்கப்படுவதற்கு ஏதுவாக அங்கே ஏராளமான கனிவளங்கள் தோண்டி எடுக்கப்பட்டன. இதனால் நதிப்போக்கு வரத்து வளர்ச்சியடைய முடியவில்லை. ஏனெனில் நதிகளில் சரக்குப் போக்குவரத்து தெற்கு வடக்காக இருந்தது. ஆனால் கனிப் பொருள்கள் கிழக்கிலிருந்து மேற்கே போய்க் கொண் டிருந்தன. உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களும், எரிபொருள் களும் எதிர்திசையில் அனுப்பப்பட்டன. கப்பல்கள் ஓடக்கூடிய நதிகளாகிய வால்கா, நீப்பர், ஒப், இர்டிஷ், எனசீ, லேனு முதலியன தெற்கு வடக்காக ஓடிக்கொண்டிருப்பதால் நதிப் போக்குவரத்து வளர்ச்சி பெறுவது சாத்தியப்படவில்லை. மேலும் இந் நதிகளில் மாரிக்கால முழுவதும் பனிஉறைந்து போக்குவரத்து தடைப்பட்டு விடுகிறது. சுமார் ஆறுமாத காலமே நதிப்போக்கு வரத்துச் சாத்தியமாகும். நதிகளுக்கு அருகிலுள்ள தொழிற் சாலைகள் எல்லாம் மாரிக் காலத்தில் இரயில்வேக்களின் உதவியை நாடவேண்டியுள்ளது. ஆகவே பருவ காலப் பொருள்களாகிய தானியம், வெட்டுமரம் கட்டிடப் பொருள்கள், எண்ணெய்

போன்றவைகளைக் கொண்டு செல்லத்தான் நதிப்போக்குவரத்துப் பயன்படுகிறது. 1913-ல் நாட்டின் மொத்தச் சரக்குப் போக்கு வரத்தில் 23 சதவிகிதம் நதிகள் வழியே எடுத்துச் செல்லப் பட்டன. இன்று இது 5 சதவிகித அளவிற்குக் குறைந்து விட்டது.

கோடையிலும், இலையுதிர் காலத்திலும் இரயில் போக்கு வரத்துத் துறையின் பளுவை இது தாங்கிக் கொள்கிறது. 1913ஆம் ஆண்டில் நதிகள் சுமந்து சென்ற சரக்கு 2890 கோடி டன் கிலோமீட்டர்களாகும். 1965-ல் இது 13,390 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. ஆழமான பல கால்வாய்கள் ஐரோப்பிய பகுதியில் அமைக்கப்பட்டு நதிப் போக்குவரத்து அபிவிருத்தி அடைந்து வருகிறது. வால்கா—டான்கால்வாய் 1952-ல் கட்டி முடிக்கப்பட்டது. அஸாவ் கடலையும், கருங்கடலையும் எட்டு வதற்கு இக் கால்வாய் வழி அமைத்தது. இத்தோடு வால்கா நதியிலிருந்து, அதன் கிளை நதிகளிலிருந்தும் கருங்கடல் வழியாக நீப்பர் நதிக்கும், டான்யூப் நதிக்கும், நேரடியாகக் கப்பல்கள் செல்ல கால்வாய்கள் தோண்டப்பட்டன.

நாட்டின் ஆசியப் பகுதியில் நதிப்போக்குவரத்து மிக்க வளர்ச்சி பெற்றுள்ளது. ஓப் நதியிலும், லேனு நதியிலும் இர்டிஷ் நதியிலும் எனிசி நதியிலும் அண்மைக் காலத்தில் சுறுசுறுப்பான போக்குவரத்துத் தோன்றியுள்ளது. 1913-ல் 1700 கிலோ மீட்டர்களாக இருந்த கால்வாய்கள் இப்பொழுது 16,500 கிலோ மீட்டர் நீளத்திற்கு உயர்ந்துள்ளன. 1965-ல் சுமார் 13 கோடியே 40 இலட்சம் பிரயாணிகள் படகுகளில் பயணம் செய்தனர். இவர்களில் 2 கோடியே 50 இலட்சம் பேர் நீண்ட தூரப் பயணிகள் ஆவர். மூன்று மாடிப் படகுகள், விரைவாகச் செல்லும் ராக்கெட், மீடியார் போன்ற படகுகளை விட்டதின் விளைவாகப் பிரயாணிகளும், சுற்றுலா வருபவர்களும் நதிப் போக்குவரத்தையும், கால்வாய் போக்குவரத்தையும் பெரிதும் விரும்புகின்றனர். இதனால் நதிப் போக்குவரத்து உயர்வது சாத்தியமாகலாம்.

**மோட்டார் போக்குவரத்து**

அண்மைக்காலத்தில் சோவியத் யூனியன் ஆற்றல்மிக்க மோட்டார் வசதிகளை வளர்த்துள்ளது. 1958ஆம் ஆண்டில் மோட்டார் சரக்குப் போக்குவரத்து 7,680 கோடி டன் கிலோ மீட்டர்களாக இருந்தது. 1965-ல் இது 14,270 கோடி டன் கிலோ

மீட்டர்களாக உயர்ந்தது. சரக்குகளின் எடை 647 கோடியே 40 இலட்சம் டன்களிலிருந்து, 1,106 கோடியே 20 இலட்சம் டன்களாக உயர்ந்தது. பஸ் பிரயாணிகளின் எண்ணிக்கை 84 இலட்சத்திலிருந்து, 1 கோடியே 88 இலட்சமாக உயர்ந்தது. 1965-ல் பொதுத்துறை லாரிகள் 328 கோடி டன் சரக்குகளை ஏற்றிச் சென்றன. தொழில் நிறுவனங்கள், அரசாங்கப் பண்ணைகள், கூட்டுப் பண்ணைகள் ஆகியவை நிர்வகித்து வந்ததைவிட பொதுத்துறை லாரிப் போக்குவரத்து மிகச் சிறந்ததாகவும், சிக்கனமானதாகவும், இலாபகரமானதாகவும் இருந்தது. மையப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பே இதற்குக் காரணமாகும். திறமையாக இது நிர்வகிக்கப்பட்டதால், ஏராளமான ஊழியர்களை இத் துறையிலிருந்து வேறு துறைக்கு விடுவிக்க முடிந்தது.

நல்ல சாலைகள் அமைக்கப்பட்டதும், லாரிப் போக்குவரத்தின் வெற்றிக்குக் காரணமாகும். புதுவகையான லாரிகளையும், கார்களையும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. கோர்க்கி, மாஸ்கோ, மின்ஸ்க், கிரமென்ஸ்க் ஆகிய நகரங்களிலுள்ள தொழிற்சாலைகள் புதிய ரக வண்டிகளை உற்பத்தி செய்து தருகின்றன. கார்களும் பஸ்களும் கோம்மூனரிலும், ரீகா, பாவ்லோஸ்க், குர்கான் மாஸ்கோ ஆகிய இடங்களிலுள்ள தொழிற்சாலைகளிலும் கட்டப்படுகின்றன. கார்கள் கடந்த பத்தாண்டுகளில் மூன்று தடவை நவீனப் படுத்தப்பட்டன. லிகினோவில் ஒரு புதிய மோட்டார் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நகர பஸ்கள் இங்கே கட்டப்படுகின்றன. 1965-ல் சோவியத் மோட்டார் தொழிற்சாலைகள் 6 இலட்சத்து 75 ஆயிரம் மோட்டார் வாகனங்களைக் கட்டின. இதில் 2 இலட்சத்து 30 ஆயிரம் வாகனங்கள் பிரயாணிகளுக்கான பஸ்களாகும்.

மஸ்கோவிச் கார்களும், வால்கா ரகக் கார்களும், ஜபரோஷட்ஸ் ரகக் கார்களும், UAZ, GAZ-53, ZIL-130 என்ற லாரிகளும் இன்று உலகெங்கிலும் விரும்பப்படும் வாகனங்களாகும். மின்ஸ்க் லாரிகளும் உலகச் சந்தையில் இடம் பெற்றுள்ளது. 1938-ல் 7000 வண்டிகள் வெளிநாட்டாருக்கு விற்கப்பட்டன. 1964-ல் 66,000 வாகனங்கள் விற்கப்பட்டன.

சாலைகளில் மூன்றில் ஒரு பாகம் தளம் போடப்பட்ட சாலைகளாகும். மூன்று இலட்சத்து 80 ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ளது இது. நாட்டின் மத்தியப் பகுதியிலும், பால்டிக்

குடியரசுகளிலும், டிரான்ஸ்காகேஷியாவிலும் சாலைகள் பின்னிப் பிணைந்து வளர்ச்சி பெற்றுள்ளன. இதற்கு அடுத்தபடியாக, உக்ரைனிலும், மொல்தாவியாவிலும் சாலைகள் சிறப்பாக அமைந்துள்ளன. 1960-க்குப் பிறகு தளம் போட்ட சாலைகள் 35 சதவிகிதம் அதிகரித்துள்ளன. சைபீரியாவிலும், மத்திய ஆசியாவிலும், ஐரோப்பிய பகுதியின் வடக்குப் பிரதேசங்களிலும் தளம் போடப்பட்ட சாலைகள் அதிகமில்லை. 1970ஆம் ஆண்டில் லாரி சரக்குப் போக்குவரத்து 50 சதவிகிதம் அதிகரித்தது. 15 இலட்சம் மோட்டார் வண்டிகள், கட்டப்பட்டன. சோவியத் யூனியனில் சொந்தக் கார் வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை வருகிற ஐந்தாண்டுகளில் (1970–75) பெருகுவதற்குரிய திட்டம் தீட்டியுள்ளனர்.

### விமானப் போக்குவரத்து

சோவியத் தேசியப் பொருளாதாரத்தில் விமானப் போக்குவரத்து ஒரு இலாபகரமான பிரிவாகத் திகழ்கிறது. 5000-க்கும் அதிகமான மக்கட் தொகையுள்ள நகரங்கள் எல்லாம் விமான மார்க்கங்களால் இணைக்கப்பட்டுள்ளன. 1960-க்கும் 1967-க்கும் இடைப்பட்ட காலத்தில் விமானப் பயணிகளின் எண்ணிக்கை 17 மடங்காக உயர்ந்தது. இரயில்களில் 28 சதவிகிதம் உயர்வானால், விமானப் போக்குவரத்தில் 500 சதவிகிதம் அதிகரித்தது. இவ்வாறு விமானப் போக்குவரத்துத் துறைதான் வளர்ச்சியின் வேகத்தில் மற்றவைகளைவிட விரைவு பெற்றுள்ளது. உலகின் தலைசிறந்த விமான சர்வீஸ்களில் ஒன்றாக ஏரோப்ளோட் விளங்குகிறது. சென்ற பத்தாண்டுகளில் (1960-70) கட்டணங்கள் அடுத்தடுத்து பலமுறை குறைக்கப்பட்டு, இப்பொழுது பழைய கட்டணங்களில் பாதியாகி யிருக்கிறது, பல பாதைகளில் விமான கட்டணங்களும் ரயில்வே கட்டணங்களும் ஒன்றாகவே யுள்ளன. 1965-ல் சுமார் 4 கோடியே 20 இலட்சம் பயணிகளை ஏற்றிச் சென்றது. 9 கோடியே 50 இலட்சம் டன் சரக்குகளை ஏற்றிச் சென்றது. 2 கோடியே 70 இலட்சம் டன் எடையுள்ள தபால்களை எடுத்துச் சென்றது.

இன்றுள்ள விமானக் கம்பெனிகள் டர்போ ஜெட் விமானங்களைப் பயன்படுத்துகின்றன. TU 104 என்ற சோவியத் ஜெட் விமானங்கள் 1956-ல் செயல்படத் தொடங்கின. இவை பழைய விமானங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியாத வேறுபாடுகளும், முன்னேற்றமும் கொண்டவை. TU 104ன் ஜெட் இயந்திரங்கள் மிக சக்தி வாய்ந்தவை. அதனுடைய ஜெட் இயந்திரங்களில்

ஒன்றே ஒன்று மட்டும் இயங்கினாலும், உயரம் குறையாது பறக்க முடியும். இதன் வேகம் மணிக்கு 850-900 கிலோ மீட்டர், பறக்கக் கூடிய உயரம் 10,000 மீட்டர். இது ஒரே மூச்சில் 4000 கிலோ மீட்டர் தூரம் பறக்கமுடியும். 70லிருந்து 90 பேர் வரை பிரயா ணம் செய்யலாம். இப்படிப்பட்ட விமானத்தைப் பறக்கவிட்டதால் சோவியத் யூனியன் விமானப் போக்குவரத்துத் துறையில் பெரிய புரட்சியையே உண்டுபண்ணியது. இதைத் தொடர்ந்து IL 18 (இல்லூாயிஷின்) AN-10, TU-114 ஆகிய விமானங்கள் விடப் பட்டன. IL-18 உலக நாடுகளில் மிகவும் வரவேற்கப்பட்ட சிக்கனமான விமானமாகும்.

விமான சர்வீசை மேலும் கூடுதலாக்க முயற்சிகள் நடை பெறுகின்றன. தானே இயங்கும் கட்டுப்பாட்டுக் கருவி அமைப்பு களுடன் விமானங்கள் தளங்களில் இறங்க முயற்சிகள் செய்யப் படுகின்றன.

முடிவுரை

ஏனைய நாடுகளில் எப்படியோ அப்படியே சோவியத் யூனியனிலும் போக்குவரத்துத் துறையின் வரலாறும், வளர்ச்சி யும் அதன் சமூகப்பொருளாதார அமைப்புகளைத் தொடர்ந்து, பொருளுற்பத்தியின் மாறுதல்களைப் பிரதிபலிக்கக் காண்கிறோம். போட்டா போட்டிக்கு இடமில்லாத சோவியத் சமுதாயத்தில் போக்குவரத்துத் துறை அரசாங்கத் திட்டங்களுக்கு ஏற்பவும், மற்ற பொருளாதார மாற்றங்களுக்கு இணையாகவும் வளர்ந்து வந்துள்ளது. சோவியத் நாட்டில் பல்வேறு போக்குவரத்துச் சாதனங்களுக்கிடையே முரண்பாடு தோன்றாது ஒத்துழைப்பும், கூட்டுறவும் நிலவுகின்றன.

# 10. சோவியத் யூனியனில் தொழிற்சங்கம்

ருஷ்யாவில் 1905ஆம் ஆண்டில் முதன் முதலாகத் தொழிற் சங்கங்கள் தோன்றி பாட்டாளி வர்க்கத்தின் பொருளாதார அரசியல் உரிமைகளுக்காக, முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடின. ஏனைய ஐரோப்பிய நாடுகளில் தோன்றி பல வருடங்கள் ஆன பின்பே ருஷ்யாவில் தொழிற் சங்கங்கள் தோற்றமளித்தன. ருஷ்ய நாடு முதலாளித்துவ உற்பத்தி நிலையை அடையாமல், நிலப்பிரபுத்துவ விவசாய நாடாக இருந்ததால் இந்தக் காலதாமதம் ஏற்பட்டது. 1905-ல் மாஸ்கோ, கீவ் போன்ற நகரங்களில் இருந்த தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தம் செய்யப்பட்டது. இந்த வேலை நிறுத்தத்தைச் செயல்படுத்துவதற்குத் தொழிலாளர் குழுக்கள் அமைக்கப் பட்டன. அவைகள் 'சோவியத்துகள்' என்று அழைக்கப் பட்டன. இவ்வாறாக வளர்ச்சியடைந்த தொழிற் சங்கம், முதலாம் உலகப் போரின்போது ஜார் மன்னனின் அரசாங் கத்தால் அடக்கி ஒடுக்கப்பட்டது.

1917ஆம் ஆண்டு, புரட்சியின் வெற்றி, தொழிற் சங்கங்கள் வளர்வதை ஊக்குவித்தது. அக்டோபர் புரட்சிக்குப் பின் பாட்டாளி மக்களின் அதிகாரம் நிறுவப்பட்டது. ஆளும் வர்க்க மாக இருப்பதால் அரசாங்கத்தைப் போலவே இதற்கும் சில குறிக்கோள்கள் உண்டு. லெனின் இதைப்பற்றிக் கூறும்போது கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

"அரசாங்க அதிகாரத்தின் மையநிலை, கம்யூனிஸ பள்ளிக் கூடம், வேளாண்மைப் பயிற்சி தரும் கல்வி நிலையம், ஒரு தொழிற் சங்கம்" என்று குறிப்பிட்டார்.

சோவியத் தொழிற்சங்கங்கள் ஜனநாயக ரீதியில் இயங்கு கின்றன. அவைகளுடைய அமைப்பு, மையப்படுத்தப்பட்டதாக

இருக்கிறது. எல்லாத் தொழிற்சங்கங்களின் நிர்வாகிகளும் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகும். தொழிற் சங்க விதிகளுக்குக் கட்டுப்பட்டு, இவைகள் இயங்குகின்றன. தொழிற்சங்கங்கள் பெரும்பான்மையோரின் வாக்குக்கு இணங்க, தங்கள் நடவடிக்கைகளை அமைத்துக்கொள்கின்றன.

''ஒரு தொழிற் முயற்சிக்கு ஒரு தொழிற்சங்கம்'' என்ற கொள்கை அடிப்படையில் தொழிற்சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஓர் உருக்காலையில் பணி யாற்றும் மின்சாரப் பொறியாளர், உருக்குத் தொழிலாளர் தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவரே தவிர, மின்சாரத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர் அல்ல. இதன்படி பார்க்கப் போனால், உருக்குத் தொழிற்சாலையில் பணி புரியும் தொழிலாளர் எல்லாம் ஒரே தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவரே. ஒரு தொழிற் சங்கக் குழுவே செயலாற்றுகிறது. இதனால் ஒரு தொழிற் சாலையில் உள்ள ஊழியர் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வழி பிறக்கிறது. அத்தோடு, அத் தொழில் முயற்சியின் வெற்றி தோல்வியும், அந்தத் தொழிற் சங்கத்தின் பொறுப்பாகிறது. அந்தத் தொழில் முயற்சியின் உற்பத்தியை அமைப்பது, திட்ட மிடுவது போன்ற பல பணிகளில் தொழிற் சங்கத்திற்குப் பொறுப்பான பங்கு கிடைக்கிறது. சோவியத் யூனியனில் இப்பொழுது 24 தொழிற் சங்கங்கள் உள்ளன.

### தொழிற் சங்கங்களின் அமைப்பு

எல்லாத் தொழிற் சங்கங்களுக்கும் தலைமைப் பீடமாக விளங்குவது சோவியத் யூனியன் தொழிற் சங்கக் காங்கிரஸ் ஆகும். இது நான்கு வருடத்திற்கு ஒரு முறை கூடுகிறது. இந்தக் காங்கிரஸ் மத்திய தொழிற் சங்கக் குழுவைத் தேர்ந் தெடுக்கிறது.

ஒவ்வொரு தொழிற் சங்கப் பிரிவுக்கும் தலைமை அதனதன் காங்கிரஸில் இருக்கிறது. ஒவ்வொரு காங்கிரஸும் இரண் டாண்டுகளுக்கு ஒரு முறை கூடுகிறது. கீழிருந்து மேலே பார்க்கும் பொழுது உள்ளூர் குழுக்கள், மாவட்ட மத்திய குழுக்கள், அல்லது நகரக் குழுக்கள், வட்டாரப் பிரதேசக் குழுக்கள், மாநிலக் குழு, இறுதியில் மத்தியக் குழு ஆகியவை இடம் பெறுகின்றன. தொழிற் சங்கக் குழுக்கள் பிரதேசவாரி முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆனால் கிளைத் தொழிற்சங்கம் தொழில்வாரி முக்கியத்துவம் வாய்ந்தது.

ஒரு தொழிற் சங்கத்தின் அடிப்படை அலகு அதன் ஆரம்ப அமைப்பாகும். இதில் பதினைந்து உறுப்பினர்கள் இருப்பார்கள். ஓர் ஆண்டிற்கொருமுறை ஒரு தலக் குழுவையும், ஆய்வுக் குழுவையும் தேர்ந்தெடுக்கின்றனர். பதினைந்து பேருக்கும் குறைவாக இருக்குமானால் ஒரு தொழிற் சங்க அமைப்பாளர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். உள்ளூர் தொழிற்சங்கக் குழுக்கள் பல நிரந்தர குழுக்களாகப் பணியாற்றுகின்றன. எடுத்துக் காட்டாக உற்பத்தி பற்றிய விசாரணைக் குழு, கூலி, பாதுகாப்பு, காப்பீடு, ஓய்வூதியம், வீட்டு வசதி, கலாச்சார நடவடிக்கைகள் என்று பல பிரிவுகளைக் கவனிக்கக் குழுக்கள் நியமிக்கப் படுகின்றன.

சோவியத் தொழிற் சங்கங்களின் நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிடுவதில்லை. காப்பீட்டு முறை, தொழிலாளர் பாதுகாப்பு ஆகிய இரண்டும் அரசாங்கத்தின் பொறுப்பாக இருப்பதால், இவை விஷயத்தில் மட்டும் அரசாங்கமும் தலையிடுகிறது.

தொழிற் சங்கத்திற்குச் சோவியத் வாழ்க்கையில் மிக முக்கிய பாகம் அளிக்கப்பட்டிருக்கிறது. சோவியத் தேர்தல்களில் தொழிற் சங்கம் பங்கெடுத்துக்கொள்கிறது. சோவியத் அரசாங்க ஆணைகள், மசோதாக்கள் முதலியவற்றைப் பற்றித் தொழிலாளர்களுக்கு விளக்கிக் கூறுகிற பணியும் இவர்களைச் சார்ந்தது. ஓய்வூதியங்கள், குறைந்த வேலை நேரங்கள், கீழ் மட்டத்திலுள்ள தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு ஆகிய செயல்களில் தொழிற் சங்கம் இடையறாது பாடுபடுகிறது. இவை போக நாட்டின் பொருளாதார திட்டத்தில் தொழிற் சங்கம் ஒரு முக்கிய பாகம் வகிக்கிறது. ஒவ்வொரு தொழிற் சாலையிலும், அரசாங்கப் பண்ணையிலும் உற்பத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டு மேலே அனுப்பப்படுகின்றன. இவ்வாறு வகுக்கப் படும் திட்டத்தில் தொழிலாளர் நேரடியாகப் பங்கு பெறு கின்றனர். திட்டம் வரையப்படும் பல கட்டங்களிலும் தொழிற் சங்க அமைப்புகள் அவைகளை விமர்சனம் செய்கின்றன. இறுதி கட்டத்தில் மத்தியக் குழு விமர்சனம் செய்கிறது. 1966-ஆம் ஆண்டில் சமர்பிக்கப்பட்ட திட்டத்தில் இருபதிற்கும் மேற்பட்ட குறைபாடுகளைக் கோடிட்டுக் காட்டினர். தொழிற் சங்கங்கள் வெகுஜன இயக்கமாக இருப்பதால் திட்டம் நிறைவேறுவதற்கு எல்லா மக்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் கிடைக்கப் பண்ணுகிறது.

உற்பத்தியைப் பற்றித் தொழிற் சங்கம் அதிக கவனம் செலுத்துகிறது. தொழிற்சாலைகளிலும் அலுவலகங்களிலும் நடைபெறும் வேலை குறித்து அதிக அக்கறை காட்டப்படுகிறது. தொழிலாளர் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தும் முயற்சியில் தொழிற்சங்கங்கள் மிகுந்த அக்கறை காட்டுகின்றன. தொழிலாளர், மேலாளராக மாறி, ஒரு தொழிலை மேற்பார்வை செய்யத் தேவையான யோக்கியதாம்சங்கள் பெறுவதற்குத் தொழிற் சங்கங்கள் துணை புரிகின்றன.

தொழில் வளர்ச்சியை விரைவாக்குவதும், மேம்பாடடையச் செய்வதும், தொழிற் சங்கத்தின் முக்கிய பணியாகும். தொழிலாளரின் ஆக்க பூர்வ சக்தியை ஒன்று திரட்டி, உற்பத்தியைப் பெருக்குவது தொழிற் சங்கத்தின் கடமையாக இருக்கிறது. ஒரு தொழில் நிறுவனத்தில் பயன்படுத்தப்படும் கச்சாப் பொருள்கள், எரி பொருள்கள், மின் சக்தி ஆகியவை பற்றி விவரமான முறையில் தெரிந்து வைத்து, சரியான சமயத்தில் ஆலோசனைகள் கூறி, சிக்கனமாக இவைகளைப் பயன்படுத்தி, இலாபத்தைப் பெருக்குவது தொழிற் சங்கங்களின் சிறந்த பணியாக இருக்கிறது. தொழிற்சாலைகளில் புதிய உத்திகளையும், இயந்திரங்களையும் பயன்படுத்துவதும் தொழிற் சங்கத்தின் பணியாகும். தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதும், சட்டரீதியான அவர்களின் உரிமைகளைக் காப்பாற்றுவதும் தொழிற் சங்கத்தின் பணியாகும்.

சுரண்டலற்ற சமுதாய அமைப்பாகிய சோவியத் யூனியனில் தொழிற் சங்கங்கள், வர்க்கப் போராட்டம் நடத்தவேண்டிய அவசியம் இல்லை. இருப்பினும் தொழிலாளர்கள் வேலை செய்யும் இடங்களில், அவர்களைக் கண்காணிப்பவர்கள் சட்ட விரோதமாக நடந்து கொண்டாலோ, தொழிலாளர் உரிமைகள் பறிக்கப் பட்டாலோ, அவ்வாறு நிகழாது பாதுகாப்பது தொழிற் சங்கத்தின் பணியாக இருக்கிறது. அதற்குரிய சட்டரீதியான நடவடிக்கை எடுக்கும் அதிகாரமும் தொழிற் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

சம்பளங்களை நிர்ணயிப்பதில் தொழிற்சங்கங்கள் நேரடியாகப் பங்கு பெறுகின்றன. தொழிற் சங்கங்களும், தொழிலாளர் அமைச்சர்களும் சேர்ந்து சம்பள விகிதங்களை நிர்ணயிக்கின்றார்கள்.

சமூகக் காப்பீடு, சமூகப் பாதுகாப்பு ஆகிய பொறுப்புகள் தொழிற் சங்கங்களுக்கு விடப்பட்டுள்ளன. சமூகப் பயனீட்டு

நிதிகளிலிருந்து ஓய்வூதியங்கள் பிரசவ கால விடுமுறைச் சம்பளங்கள், வேலையாற்றல் இழந்தோருக்குரிய ஊதியங்கள், விடுமுறை காலச் சலுகைகள் ஆகியவை தொழிற் சங்கங்களால் நிருவகிக்கப்படுகின்றன. தொழிற் சங்கங்கள், சமூகப் பாதுகாப்பு வரவு செலவு கணக்குகளை மேற்பார்வை செய்கின்றன. ஓய்வு கால ஊதியம் சமூகப் பாதுகாப்பு ஆய்வாளர்களால் கொடுக்கப் படுகிறது.

தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்களும், தொழில் பாதுகாப்பு நடவடிக்கைகளும், பொதுச் சுகாதார பிரச்சனை களும் தொழிற் சங்கங்களால் கவனித்துக் கொள்ளப்படுகின்றன. தொழிற் சங்கங்கள் இதற்கென்று பல ஆய்வாளர்களைச் சம்பளம் கொடுத்து நியமித்துள்ளது. சம்பளம் இல்லாது உழைக்கும் ஆயிரக்கணக்கான ஆய்வாளர்களும் நாடெங்கிலும் பணி புரிகின்றனர்கள். பொதுச் சுகாதார ஆரோக்கிய நிலையங்களைத் தொழிற் சங்கங்கள் நடத்துகின்றன. தொழிலாளரின் பொருளாதார நன்மைகளை வளர்ப்பதிலும் தொழிற் சங்கங்கள் துணை புரிகின்றன. வீட்டு வசதி, காண்டீன் வசதிகள், தாய் சேய் நல விடுதிகள், குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் ஆகிய வற்றைத் தொழிற் சங்கங்கள் மேற்பார்த்துக் கொள்கின்றன. தொழிற் சங்கங்கள் பல கலாச்சாரக் கழகங்களின் மூலமாகத் தொழிலாளரின் கலாச்சாரத்தையும், உயர் கல்வியையும் மேம்படுத்துகின்றன.

ஒரு திட்டமிடப்பட்ட பொருளாதார அமைப்பில் தொழிலாளர் ஒத்துழைப்பும் ஆதரவும், திட்டத்தின் வெற்றிக்கு மிக அவசியம். தொழிற் சங்கங்கள் இப்படிப்பட்ட ஒத்துழைப்பைத் தருவதற்குத் துணை புரிகின்றன.

# 11. சோவியத் யூனியனில் சமூகப் பாதுகாப்பு

இன்றுள்ள சமூகப் பாதுகாப்பு முறையில் முதுவயதினரையும், வேலை செய்யும் ஆற்றல் இழந்தோரையும் பராமரிக்கும் பொறுப்புச் சோவியத் அரசினதாகும். ஒரு நாட்டின் வாழ்க்கைத் தரத்தைத் தலா வருமானம் கொண்டு மட்டும் கணிப்பது உண்மையான நிலையை எடுத்துக்காட்டாது. பல அடிப்படையான தேவைகள் சமுதாயத்தாலும், அரசாங்கத்தாலும் பூர்த்தி செய்யப்படும் இந் நாளில் இவை பற்றிய விவரமில்லாது வாழ்க்கைத்தரம் பற்றிப் பேச முடியாது.

சோவியத் நாட்டில் தேச வருவாயின் ஒரு குறிப்பிட்ட பகுதியைப் பயனீட்டு நிதிகள் என்று ஒதுக்கி வைக்கிறார்கள். இதிலிருந்து இலவசக் கல்விக்காகவும், இலவச மருத்துவ வசதிக்காகவும், ஓய்வுகால ஊதியங்கள், மான்யங்கள், உபகாரச் சம்பளங்கள் போன்றவற்றிற்காகவும் குழந்தைப் பள்ளிகள், பராமரிப்பு நிலையங்கள் ஆகியவற்றை நடத்துவதற்காகவும் செலவிடப்படுகின்றன.

சோவியத் நாட்டின் தேசிய வருமானம் அதிகரிப்பது போலவே பயனீட்டு நிதி ஒதுக்கீடும் அதிகரித்து வருவதைக் காணலாம். 1940ஆம் ஆண்டின் 460 கோடி ரூபிள் மதிப்புள்ள இலவச வசதிகளையும், வாய்ப்புகளையும் பயனீட்டு நிதியிலிருந்து கொடுத்தனர். 1964ஆம் ஆண்டில் இது 3660 கோடி ரூபிளாக உயர்ந்தது. 1965-ல் 4100 கோடி ரூபிளாக உயர்ந்தது. பயனீட்டு நிதியிலிருந்து சராசரி 30 ரூபிளிலிருந்து 60 ரூபிள் வரை ஒருவர் வசதிகளாகப் பெறுகிறார் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே தொழிலாளர் பெறும் உண்மை வருமானம் அவர் பெறும் உதவிகளையும், சகாயங்களையும் சேர்த்துப் பார்க்கும்போது அதிகமாகின்றது என்பது தெளிவு. வெவ்வேறு தொழிலாளர் பிரிவினர்களுக்கிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சரி நிகராக்கவும் இத் திட்டம் பயன்படுத்தப்படுகிறது.

சோவியத் யூனியனில் தனியார் நடத்தும் மருத்துவ நிலையங்களைக் காணமுடியாது. எல்லா மருத்துவ வசதியும் அரசாங்கத்தால் இலவசமாக அளிக்கப்படுகிறது. 1965ஆம் ஆண்டுத் துவக்கத்தில் சோவியத் யூனியனில் மொத்தம் 5 இலட்சத்து 23 ஆயிரம் டாக்டர்கள் இருந்தனர். மருத்துவ மனைகளில் மொத்தம் 20 இலட்சம் படுக்கைகள் இருந்தன. 1919ஆம் ஆண்டில் 10,000 நபர்களுக்கு ஒரு டாக்டர் இருந்த நிலை மாறி, இன்று 10,000 பேருக்கு 23 டாக்டர்கள் இருக்கின்றனர்.

உழைக்கும் பெண்களுக்கெல்லாம் வழக்கமான விடுமுறைகளைத் தவிர, 112 நாட்களுக்கு முழுச் சம்பளத்துடன் பிரசவகால விடுமுறை அளிக்கப்படுகிறது. தாய், சேய் நலனில் மிகுந்த அக்கறையும், கவனமும் காட்டப்படுகிறது. குழந்தைப் பள்ளிகளிலும், குழந்தைப் பராமரிப்பு நிலையங்களிலும் சுமார் 80 இலட்சம் குழந்தைகள் பேணி வளர்க்கப்படுகின்றனர். குழந்தைப் பள்ளியில் ஒரு குழந்தையை வளர்ப்பதற்கு 300 முதல் 400 ரூபிள் வரை செலவாகிறது. இதில் 45 முதல் 75 ரூபிள் தான் பிள்ளையின் பெற்றோர் செலுத்தவேண்டிய பங்காகும். இதற்கு மேல் ஆகும் செலவுகளைப் பொதுப் பயனீட்டு நிதியிலிருந்து எடுத்துக் கொள்கின்றனர். பெரிய குடும்பங்களையுடைய தாய்மார்களுக்கும், தனியாக வாழும் தாய்மார்களுக்கும் அரசு உதவி செய்கிறது.

ஆண்டிறுதி விடுமுறை எல்லாத் தொழிலாளருக்கும் கொடுக்கப்படுகிறது. இது சம்பளத்துடன் கொடுக்கப்படுகிறது. ஆயிரக்கணக்கான ஆரோக்கிய நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் சோவியத் யூனியனில் உள்ளன. வருடந்தோறும் 70 இலட்சம் பேர் இந்த நிலையங்களில் தங்கிச் செல்கின்றனர். இவர்களில் பாதிப் பேர், இலவசமாகவோ அல்லது சலுகைக் கட்டணத்திலோ தங்குபவர். சலுகைகள் பெறும் தொழிலாளர் 30 சதவீதம் கட்டணம் செலுத்தினால் போதும்.

ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்மட்டக் கல்லூரிப் படிப்பு வரை எல்லா வகையான கல்வி வசதியும் சோவியத் யூனியனில் இலவசமாகக் கிடைக்கிறது. 1965ஆம் ஆண்டில் 7 கோடி பேர் கல்வி பெற்று வந்தனர். 2,20,000 ஆரம்ப, உயர்நிலைப்பள்ளிகள் உள்ளன. 750-க்கும் மேற்பட்ட கல்லூரிகள் இருக்கின்றன.

சோவியத் நாட்டுச் சோஷியலிச அமைப்பின் மாபெரும் சாதனையாகப் பொதுப் பயனீட்டு நிதியைக் கருதுகிறார்கள். வருங்

காலத்தைப் பற்றிய கவலை மனிதனை உருக்கி விடுகிறது. முதிய வயதில் நாம் என்ன செய்வோம் என்ற கவலையினால்தான் எப்படியாவது சொத்து, செல்வம் தேட மக்கள் முயற்சிக்கிறார்கள். இதைப்போலவே மருத்துவ வசதி, பிள்ளைகள் படிப்பு ஆகியவற்றிற்கு என்ன செய்வது என்ற கவலை மனிதனை அரித்து விடுகிறது. இப்படிப்பட்ட மனக் கவலைகளிலிருந்தும், இவற்றிற்காகத் தனித்தனி மனிதன் சேமித்து வைக்கவேண்டிய அவசியத்திலிருந்தும் சோவியத் குடிமகன் இன்று விடுவிக்கப் பெற்றுள்ளான். சோவியத் சமுதாயமே இந்தப் பாரங்களை ஏற்றுக் கொள்கிறது.

1955–65-க்குமிடையிட்ட பத்து ஆண்டுகளில் சோவியத் மக்களில் ஏறக்குறைய பாதிப் பேர் புதிய வீடுகளில் குடிபுகுந்துள்ளனர். காலவரம்பற்ற குத்தகை அடிப்படையில் மக்களுக்குக் குடியிருக்கும் வீடுகள் கொடுக்கப்படுகின்றன. மின்சாரம், எரிவாயு, தண்ணீர் ஆகியவற்றிற்கான கட்டணங்கள் உட்பட வீட்டுவாடகை குடும்பச் செலவீட்டில் 4 அல்லது 5 சதவீதமாக இருக்கிறது. ஏனைய நாடுகளில் இது 10 முதல் 20 சதவீதமாக இருக்கிறது. வீடு பழுதுபார்ப்பது, வெள்ளையடிப்பது போன்ற செலவுகளில் ஒரு சிறு பகுதியே குடியிருப்பவர்களால் தரப்படுகிறது. எஞ்சிய பகுதி பொதுப்பயனீட்டு நிதியிலிருந்து பெறப்படுகிறது. கிராமப் புறங்களில் பணியாற்றும் மருத்துவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் வீட்டு வாடகையோ அல்லது இதர கட்டணங்களோ செலுத்தத் தேவையில்லை.

### முதிர் வயது ஓய்வுகால ஊதியங்கள்

சமூகப் பாதுகாப்பு அமைப்பில் ஓய்வுகால ஊதியம் முக்கியப் பங்கு வகிக்கிறது. சோவியத் மக்களில் எட்டில் ஒருவர் ஏதாவது ஓர் ஓய்வுகால ஊதியம் பெறுகிறார். பல்வகையான ஓய்வுகால ஊதியங்கள் உண்டு. முதுமை காரணமாக ஓய்வு பெற்றோர் பெறும் ஊதியம், வேலை செய்யும் ஆற்றல் இழந்தோர் பெறும் ஊதியம், சம்பாதிக்கும் குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்கள் பெறும் ஊதியம், எனப் பலவகைப்படும்.

ஒரு குறிப்பிட்ட காலம் சேவை புரிந்த பிறகு ஓய்வு பெறுகிறவர்கள் ஓய்வுகால ஊதியம் பெறுகிறார்கள். ஆண்கள் 25 ஆண்டுகள் சேவை புரிந்திருக்கவேண்டும். பெண்கள் 20 ஆண்டுகள் சேவை புரிந்திருக்கவேண்டும். ஐந்து குழந்தைகளுக்கு மேற்பட்ட குடும்பம் பெற்ற தாய்மார் 15 ஆண்டுச் சேவை செய்தால் போதுமானது. அவர்கள் ஓய்வூதியம் பெற்றுக்

கொள்ளலாம். கடுமையான உழைப்புள்ள சில துறைகளில் ஓய்வுபெறும் காலம் குறுகியதாகவுள்ளது. உதாரணமாக, சுரங்கம், இரசாயனம், உருக்குத் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களில் ஆண்கள் 50 வயதிலும், பெண்கள் 45 வயதிலும் ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளலாம்; அதோடு கொடுக்கப்பெறும் ஊதிய அளவும் அதிகமாகும். மரம் அறுத்தல் கட்டட வேலை, இரயில்வே போக்குவரத்துத் துறை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில் ஆண்கள் 55 வயதிலும் பெண்கள் 50 வயதிலும் ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுகின்றனர்.

குறிப்பிட்ட கால அளவு பணி செய்யாவிட்டாலும்கூட, முதுமை ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. பணி புரிந்த கால அளவைப் பொறுத்துச் சிறிது குறைந்த ஊதியத்தை இவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். முதுவயது ஓய்வூதியமாகச் சம்பளத்தில் 50 முதல் 100 சதவீதம் வரை கொடுக்கப்படுகிறது. சுரங்கங்களிலும், வெப்பமான தொழிற்கூடங்களிலும் பணியாற்றுவோர் 55 முதல் 100 சதவீதம் வரை ஓய்வூதியம் பெறுகின்றனர். மிகக் குறைந்த ஊதியம் 30 ரூபிள். மிக அதிக ஊதியம் 120 ரூபிள். சோவியத் குடிமகன் கூடுமானவரையில் அதிகமாகவே ஓய்வூதியம் பெறுவதற்குத் துணை செய்யும் வகையில் சராசரி சம்பளத்தைக் கணிக்கும் பல்வேறு முறைகள் பின்பற்றப் படுகின்றன, ஓய்வூதிய அளவிற்கு மேலும் சில சலுகைகள் சில சந்தர்ப்பங்களில் அளிக்கப்படுகின்றன. முதிர்வயது ஓய்வூதியம் பெறுபவர்கள் வேலை செய்யக் கூடாது என்று சட்டம் ஏதும் இல்லை. அநேகர் தொடர்ந்து வேலை செய்கின்றனர். ஓய்வூதியம் பெறுபவர் பொது வாழ்விலும், பொருளாதார நடவடிக்கைகளிலும் பங்கு கொள்வதற்கு ஏராளமான வாய்ப்புகளும், வசதிகளும் உள்ளன. 1956 ஜூலையில் இயற்றப்பட்ட சட்டத்தில் வேலை செய்யும் ஓய்வூதியம் பெறுபவர் 100 ரூபிளுக்கும் குறைவாக மாதச் சம்பளம் பெறுவாரானால் அவருக்கு ஓய்வூதியம் 15 ரூபிள் அளிக்கப்படும் என்றும், 100 ரூபிளுக்கு அதிகமாகச் சம்பளம் பெறுவாரானால் ஓய்வூதியம் கொடுக்கப் பெறுவதில்லையென்றும் விதிக்கப்பட்டுள்ளது.

இச் சட்டத்தில் அண்மையில் பல திருத்தங்கள் செய்யப் பட்டுள்ளன. வேலை செய்யும் ஓய்வூதியம் பெறுகிறவர்களில் சில துறைகளில் உள்ளவர்கள் 50 சதவீதம் ஓய்வூதியமும், சில பிரதேசங்களில் உள்ளவர்கள் 75 சதவீதமும் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**வேலை ஆற்றல் இழந்தோர் பெறும் ஊதியம்**

பணி புரியும்போது ஏற்படும் விபத்துகளாலும், நோயாலும் தொழிலாளர் தமது ஆற்றல் இழந்து விடுபடுவது உண்டு. ஒருவர் வேலையாற்றலை எந்த அளவிற்கு இழந்துள்ளார் என்பதை மருத்துவ நிபுணர் குழுக்கள் நிர்ணயிக்கின்றன. இக் குழுக்களில் தொழிற்சங்கங்கள், சமூகப் பாதுகாப்பு நிறுவனங்கள் ஆகிய வற்றின் பிரதிநிதிகளும், மருத்துவ நிபுணர்களும் இடம் பெறுகின்றனர்.

வேலை ஆற்றல் இழந்தோர் மூன்று வகையாகப் பகுக்கப்படுகின்றனர். ஒரு பிரிவினர், ஓர் ஆண்டுக் காலத் துக்கோ அல்லது ஆறு மாதத்திற்கோ மருத்துவர்களின் சிபாரிசுப்படி வேலைக்குச் செல்லாமல் ஓய்வு பெற்றுச் சிகிச்சை பெறுகின்றனர். சில சமயங்களில் இவர்களில் சிலர், சில வரை யறைகளுக்குட்பட்டு வேலை செய்கிறார்கள். இவ்வாறு பணி புரிபவர் முழுச் சம்பளமும் பெற முடியாதபடியால் அரசாங்கம் இவர்களுக்குச் சகாயத் தொகை அளித்துக் குறைவை நிரப்பு கிறது.

சில சமயங்களில் உடல் நலமிழந்தவர்கள் தாம் செய்து வரும் வேலையைவிட்டு மாறவேண்டுமென்று மருத்துவர்கள் அறிவுரை கூறுவதுண்டு. இவ்வாறு வேலைப் பளுவான பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாற்றிக் கொள்வதால் ஏற்படும் சம்பளக் குறைவை ஓய்வூதியம் அளிப்பதன் மூலம் சரி செய்து விடுகின்றனர்.

வயது பாகுபாடின்றி எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேலை யாற்றல் இழந்தால் கிடைக்கும் ஊதியம் கொடுக்கப்படுகிறது. இதற்குக் குறைந்தபட்ச பணிக் காலம் என்று ஒரு வரையறை இல்லை. கல்லூரி மாணவர்களும், தனிப் பயிற்சி உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் எங்கும் வேலை செய்திரா விட்டாலும் அவர்களும் இவ்வூதியம் பெறும் உரிமை பெற்றுள்ளார்கள்.

வேலையாற்றலை இழந்தோரில் குறிப்பிட்ட தொழிலாளி எந்தப் பிரிவைச் சேர்ந்தவர் என்பதையும் பொறுத்து ஊதியத் தொகை நிர்ணயிக்கப்படுகிறது. இதுபோக, அவர்கள் வேலை யாற்றலை இழப்பதற்குக் காரணமான நிறுவனங்கள் சட்டப்படி அவர்களுக்கு நஷ்டஈடு தருகின்றன.

இடைவிடாது தொடர்ந்து பணியாற்றிய தொழிலாளர் களுக்கும், குடும்பத்தில் வேலை செய்யும் வயது வராத உறுப்பினர்

களுக்கும் இந்த ஊதியத்தோடு கூட 10 அல்லது 15 சதவீதம் கூடுதல் தொகை அளிக்கப்படுகிறது.

சம்பாதிக்கும் குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கும் ஊதியங்கள் அளிக்கப்படுகின்றன. குடும்பம் என்பதில், குழந்தைகள், சகோதரர்கள், சகோதரிகள், பெற்றோர்கள், கணவன் அல்லது மனைவி, பாட்டிகள், பாட்டனார்கள் ஆகியோர் அடங்குவர். இவர்கள் வேலை செய்ய இயலாதவர்களாகவும், மறைந்துபோன சம்பாதித்தவரைச் சார்ந்து இருந்தவர்களாகவும் இருந்தால், இந்த ஊதியங்களைப் பெறலாம். தாய் தகப்பன் இருவருள் யார் இறந்துபோனாலும் அவர்களால் வளர்க்கப்பட்டு வந்த குழந்தைகள் இந்த ஊதியம் பெறுவர். குடும்பத்தைக் காப்பாற்றி வந்தவரது இறப்புக்கான காரணத்தையும், அவர் பெற்று வந்த ஊதியம், பணிக் காலம், பணிபுரியும் பிரிவு ஆகியவைகளைச் சார்ந்து இவ்வூதியம் முடிவு செய்யப் பெறுகிறது.

நீண்ட காலப் பணிபுரிந்தோருக்குத் தனிப்பட்ட சலுகையாக ஒருவகை ஊதியம் வழங்கப்படுகிறது. பொதுக்கல்வி, சுகாதாரத் துறை, விமானிகள் ஆகியோர் இவ்வூதியம் பெறுகின்றனர். பாலே நாட்டியக் கலைஞர்கள், சர்க்கஸ் கலைஞர்கள், பாடகர்கள், வாத்திய இசைக் கலைஞர்கள் ஆகியோரும் இந்த ஊதியம் பெறும் உரிமை பெற்றுள்ளனர். விஞ்ஞானிகள், புகழ்மிக்க சேவை புரியும் தொழிலாளிகள் ஆகியோருக்கும் சிறப்பு ஊதியம் அளிக்கப்படுகிறது.

### கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்குச் சமூகப் பாதுகாப்பு

1917-க்கு முன்னால் விவசாயிகளுக்கு எத்தகைய சமூகப் பாதுகாப்பு வசதியும் அளிக்கப்படவில்லை. பின்னர் கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்குப் பலவகையான ஓய்வூதியங்கள் அளிக்கப்பட்டன வென்றாலும், 1964ஆம் ஆண்டுவரை அவை பண்ணைக்குப் பண்ணை வேறுபட்டவையாக இருந்தன. 1964 ஆம் ஆண்டில் கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்கு ஓய்வூதியம் அளிக்கும் சட்டம் சுப்ரீம் சோவியத்தில் நிறைவேற்றப் பட்டது. இதற்கென்று மையமயமாக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு நிதி அமைக்கப்பட்டது. கூட்டுப் பண்ணை வருவாயிலிருந்தும், அரசாங்கப் பட்ஜெட்டிலிருந்தும் இந்த நிதிக்குப் பணம் ஒதுக்கப் படுகிறது. ஒவ்வொரு கூட்டுப் பண்ணையும் தனது வருமானத்தில் 2 முதல் 5 சதவீதம் இதற்கென ஒதுக்கீடு செய்கிறது. அரசும் தனது பட்ஜெட்டில் 40 கோடி ரூபிள் ஒதுக்கியிருக்கிறது.

கூட்டுப் பண்ணை, விவசாயிகள் இதற்கென்று தங்களது சம்பளத்தினின்று ஏதும் தரவேண்டியதில்லை.

1965ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இத் திட்டம் அமுலுக்கு வந்துள்ளது. முதல் ஆண்டில் 70 இலட்சம் பேருக்கு இவ்வகை ஊதியம் வழங்கப்பட்டது. ஊதியம் பெறும் வயது சிறிது அதிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதைப் போலவே பணிக் காலமும் சிறிது அதிகமாக வைக்கப்பட்டிருக்கிறது. கூட்டுப் பண்ணை விவசாயிகள் சொந்தத்தில் வீட்டுக் கொல்லை நிலம் வைத்திருப்பதால் அவர்களுக்கு அளிக்கப்படும் ஓய்வூதியமும் சிறிது குறைந்துள்ளது. வேலை ஆற்றல் இழந்த கூட்டுப் பண்ணை விவசாயி நகரத் தொழிலாளரைப் போலவே ஊதியம் பெறமுடியும். அதைப் போலவே சம்பாதிப்பவர் இறந்து பட்டாலும் அவரது குடும்பத்திற்குச் சகாய ஊதியம் பெறும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. மற்றெல்லா குடிமக்களுக்கும் கொடுக்கப் பெறும் இலவசக் கல்வி, மருத்துவ வசதி ஆகியவை இவர்களும் பெற உரிமையுண்டு.

### முதியோர் இல்லங்கள்

தனியாக வாழும் முதிர் வயதினர் தங்குவதற்குத் தனி இல்லங்கள் உள்ளன. இதன் செலவு முழுமையையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது. இப்போதைக்கு 1000 இல்லங்களே உள்ளன. இது தேவைக்குப் போதுமானவையல்ல. புதிய இல்லங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

### சமூகப் பாதுகாப்பின் நிர்வாகம்

சமூகப் பாதுகாப்பு யூனியன் குடியரசுகளது சமூகப் பாதுகாப்பு அமைச்சரகங்களின் பொறுப்பில் உள்ளது. குடியரசு அமைச்சரகங்களின் கீழ் இது பற்றிய ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. சுயாட்சிக் குடியரசுகளிலும், சுயாட்சிப் பிரதேசங்களிலும் பிராந்தியங்களிலும், சமூகப் பாதுகாப்பு ஆட்சிப் பிரிவுகள் இருக்கின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும், நகரத்திலும் சமூகப் பாதுகாப்பு ஆட்சிப் பிரிவு இயங்குகிறது. சமூகப் பாதுகாப்பு அமைப்புகளின் பிரதிநிதிகளும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், இந்த நிர்வாகப் பொறுப்பில் இடம் பெறுகின்றனர்.

பிரதிநிதித்துவம் பெற்ற தொழிற் சங்கங்கள் எல்லா தொழிற்சாலைகளிலும், நிறுவனங்களிலும், அரசாங்கப் பண்ணை

களிலும் உள்ளன. இவை ஓய்வு பெறும் தொழிலாளர்களது பத்திரங்களை ஒழுங்கு படுத்தி, வேலை வாய்ப்பு, சலுகை, ஊதியம் ஆகியவை கிடைக்க ஏற்பாடுகள் செய்கின்றன. கூட்டுப் பண்ணைகளில் சமூகப் பாதுகாப்புக் குழுக்கள் பணிபுரிகின்றன. இவை கூட்டுப் பண்ணை விவசாயிகளின் ஓய்வூதியம், இதர சலுகைகள் ஆகியவை பற்றி முடிவெடுக்கின்றன.

ஆயிரக்கணக்கான சமூக ஆய்வாளர்களும், கணக்குத் தணிக்கையாளர்களும் சமூகப் பாதுகாப்புத் துறைக்கு உதவி செய்கின்றனர்.

**வீட்டு வசதித் திட்டம்**

1970ஆம் ஆண்டு இறுதியில் இரண்டு கோடிக்கும் (2·3) அதிகமான மக்கள் புது மனைகளில் குடி புகுந்தார்கள். அல்லது தமது வீட்டு வசதிகளைக் கணிசமான அளவுக்கு மேம்படுத்திக் கொண்டார்கள்.

ஆனால் இன்னும் வீட்டு வசதிப் பற்றுக் குறை இருந்து வருகிறது.

1917ஆம் ஆண்டு தொட்டு இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயன்று வருகிறது சோவியத் அரசு. புரட்சி வெற்றி பெற்ற பிறகு, முதலாளித்துவ வீட்டுச் சொந்தக்காரர்களிடமிருந்து சோவியத் அரசாங்கம் வீடுகளை எடுத்துக்கொண்டது. அவற்றைத் தொழிலாளர்களுக்குக் குறைந்த வாடகைக்கு விட்டது. வீட்டு வசதி செய்ய எடுத்த முதல் முயற்சி யாகும் இது.

1923ஆம் ஆண்டிலிருந்து தொழிற் கேந்திரங்களில் வீட்டு வசதிப் பிரிவு வேலை செய்யத் துவங்கியது. 1940ஆம் ஆண்டுக்குள் நகரங்களிலிருந்து குடியிருப்பு வீடுகள் இரு மடங்காக உயர்ந்தன. ஆனால் நகரங்களின் மக்கள் தொகை பெருமளவில் அதிகரித்தது. அதே சமயத்தில் நாஜிப் படைகளின் தாக்குதலுக்குச் சோவியத் நாடு உள்ளானது. இந்தப் போரில் 1710 நகரங்களும், நகரம் போன்ற குடியேற்றங் களும் முழுமையாகவோ, அல்லது பகுதியாகவோ அழித்து நாசமாக்கப்பட்டன. பல்லாயிரக்கணக்கான கிராமங்களும் நாச மாக்கப்பட்டன. பாழாகாத வீடு மிகச் சிலவே. $2\frac{1}{2}$ கோடி மக்கள் வீடு வாசலின்றி தெருவில் நின்றனர்.

பகைவரிடமிருந்து மீட்கப்பட்ட நகரங்களில் புனரமைப்பு வேலை மேற்கொள்ளப்பட்டதும், அழிவு சிதைவுகளிலிருந்து நகரங்கள் மீண்டும் பரந்து எழுந்தன. முன்பு இருந்ததைவிட நவீன வசதிகள் நிரம்பியதாய், அதிக வனப்புடன் அமைக்கப் பட்டன. 1949-ஆம் ஆண்டுக்குள்ளாக நூற்றுக்குத் தொண்ணூறு வீடுகள் புனரமைக்கப்பட்டன. மத்தியப் பிராந்தியங்களிலும் கட்டட வேலைகள் துரிதமாக நடை பெற்றன.

கட்டடங்கள் எழுப்ப தொழிற்சங்கங்கள் பெரிதும் உதவு கின்றன. கட்டடப் பயிற்சி நிலையங்களை இச் சங்கங்கள் நடத்து கின்றன. சோவியத் யூனியனில் மிகப் பெரிய கட்டடங்கள் கட்டப்பெறுவதால், முன்னேறிய முறைகளும், நவீன இயந் திரங்களும் பயன்படுத்தப் பெறுகின்றன. ஏராளமான வீடுகள் முன்கூட்டியே தயாரான பாகங்களால் கோர்த்தமைக்கப் படுகின்றன. கட்டட நிர்மாணத்தில் கன்வேயர் பெல்ட்[1] முறையை முதன் முதலில் புகுத்திய நகரம் லெனின் கிராடு ஆகும். முன்பெல்லாம் நான்கு அல்லது ஐந்து மாடிக் கட்ட டங்கள்தான் கட்டப்பட்டு வந்தன. ஆனால் இப்பொழுது 16 முதல் 24 மாடிக் கட்டடங்கள் அமைக்கப்பெறுகின்றன. நவீன தொழிற்சாலைகள் கட்டடப் பகுதிகளை உற்பத்தி செய்ய நிறுவப்பட்டுள்ளன.

சிமெண்ட், பலகணி, கான்கிரீட் சாமான்கள், மரம் ஆகிய வற்றின் உற்பத்தி மிக உயர்ந்துள்ளது. 1940-ல் 60 இலட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி செய்யப்பட்டது. 1955-ல் 225 இலட்சம் டன்னுக உயர்ந்தது. 1970-ல் 1050 இலட்சம் டன்னுக உயர்ந்துள்ளது. கான்கிரீட் பகுதிகளின் உற்பத்தியும் இவ்வாறே உயர்ந்துள்ளது. 1950-ல் 15 இலட்சம் கன மீட்டர் உற்பத்தி யாகியது. 1965-ல் 560 இலட்சம் கன மீட்டரும், 1970-ல் 1000 இலட்சம் கன மீட்டராகவும் உயர்ந்துள்ளது.

புரட்சிக்கு முந்திய ருஷ்யாவில் வீட்டு வாடகை மிகவும் அதிகமாக இருந்தது. தொழிலாளர்கள் தமது சம்பளத்தில் 4 அல்லது 5-ல் ஒரு பாகத்தை வாடகையாகக் கொடுத்து வந்தனர். இப்பொழுதோ மிகக் குறைந்த வாடகைக்கு வீடுகள் கொடுக்கப் பெறுகின்றன. சோவியத் சட்டப்படி, வீடு கட்டும் செலவு, பேணுவதற்காகவும் செலவு ஆகியவற்றின் அடிப்

1 Conveyor Belt

படையில் வாடகை நிர்ணயிக்கப்பெறுவதில்லை. மாறாக, வசிப்பவர்களின் வருமான அடிப்படையில் இது நிர்ணயிக்கப்பெறுகிறது.

பலவிதமான குடியிருப்புக்காரர்களுக்கும் வெவ்வேறு விதமான வாடகை விகிதங்கள் உள்ளன. உபகாரச் சம்பளம் மாத்திரமே பெறும் மாணவர்களுக்கு மொத்த வாடகையில் 25 சதவீதம் கழிவு செய்யப்படுகிறது. போர் வீரர்கள், ஓய்வூதியம் பெறுவோர் ஆகியோர் சிறப்புச் சலுகை பெறுகின்றனர். வீட்டிலுள்ள மின்சார வசதிகளுக்காகக் குடியிருப்பவர் பணம் செலுத்த வேண்டுவதில்லை.

வீடுகளைப் பேணிப் பாதுகாப்பதில் தொழிற் சங்கங்கள் துணைபுரிகின்றன. தொழிற்சாலைகளிலும், ஆலைப் பிரிவுகளிலும் உள்ள தொழிற் சங்கக் குழுக்கள் வீட்டு வசதிகளைப் பேணும் குழுக்களை நியமிக்கின்றன. இக் குழுக்கள் வீடுகளின் நிலைமையையும், இதர வசதிகளின் நிலைமைகளையும் பரிசோதிக்கின்றன. பழுதுபார்க்கும் வேலைகளை மேற்கொள்ளுகின்றன. பொதுமக்கள் மனைக் குழுக்கள் தொழிற் சங்கங்களால் நியமிக்கப்படுகின்றன. இக் குழுக்களுக்குப் பல உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர்கள் தம்முடைய சேமிப்பையும், அரசாங்கக் கடன் உதவியையும் கொண்டு தமக்குச் சொந்தமாகவும் வீடுகள் கட்டிக் கொள்கிறார்கள். கூட்டுறவு அடிப்படையில் வீடுகளைக் கட்டும் கருத்தைத் தொழிற் சங்கங்களும், அரசாங்கமும் ஆதரித்தன. 1967ஆம் ஆண்டிற்குள் 12,000 வீட்டு வசதிக் கூட்டுறவுகள் அமைக்கப்பட்டன. 6 இலட்சத்திற்கும் அதிகமான பேர் வீட்டு வசதிக் கூட்டுறவு மாளிகைகளில் குடியேறினர். 1970-க்குள் இது 4 மடங்கு அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

**வீட்டு வசதிக் கூட்டுறவை அமைக்கும் விதம்**

கூட்டுறவை அமைக்க விரும்புவோர் முன்னணி ஊழியர் குழுவை முதலில் தேர்ந்தெடுக்கின்றனர். இது ஆரம்ப வேலைகளைச் செய்கிறது. உறுப்பினர்களின் பொதுக் குழுதான் ஆட்சிக் குழுவாகும். இது நிர்வாகக் குழுவையும், தணிக்கைக் குழுவையும் தேர்ந்தெடுக்கிறது. உழைக்கும் மக்கள் பிரதிநிதிகள் கொண்ட சோவியத்தின் நிர்வாகக் குழு இக் கூட்டுறவிற்கு வீடு கட்டுவதற்கான இடத்தை ஒதுக்கித் தருகிறது. இந்த நிலத்திற்காகக் கூட்டுறவு பணம் கொடுக்க வேண்டியதில்லை. வரிகளும் கிடையாது.

நிர்மாண பாங்குகள் கூட்டுறவுகளுக்குக் கடன் வசதிகள் அளிக்கின்றன. இந்தக் கடன்களை 10 அல்லது 15 ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கவேண்டும். 5 சதவீத வட்டி வசூலிக்கப் படுகிறது.

கூட்டுறவுச் சங்கத்திலிருந்து எப்போது வேண்டுமானுலும் உறுப்பினர் விலகிக்கொள்ளலாம். அவருடைய பங்கு திருப்பிக் கொடுக்கப்படும். தன்னுடன் வசிக்கும் வயதுவந்த குடும்ப உறுப்பினர் எவருக்கு வேண்டுமானுலும் இந்த உரிமையை மாற்றலாம். அவரது பங்கு அவரது வாரிசுகளைச் சாரும்.

### கூட்டுப் பண்ணைகளில் வீட்டு வசதி

பல கூட்டுப் பண்ணைகள் தமக்கென்று கட்டட நிர்மாண நிறுவனங்களை அமைத்துள்ளன. கிராமப் புறங்களில் வீடுகள் கட்ட இவை உதவி புரிகின்றன. 1966–70 ஆண்டுகளுக்குள் 20லிருந்து 25 இலட்சம் வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டு அது நிறைவேறியது. கிராமப் புறங்களில் வீடுகளைக் கட்டுவதற்குக் கடன் வசதி அளிக்கும் சட்டத்தை 1965 பெப்ருவரி மாதத்தில் சோவியத் அரசாங்கம் இயற்றியது. இதனுல் கிராமப் புறங்களில் வீடுகள் கட்டும் முயற்சிக்குப் புதிய ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

### முடிவுரை

சோவியத் யூனியனில் பல்வேறு சமூகப் பணிகளில் இன்றும் பற்றுக்குறை இருந்து வருகிறது. துணி வெளுக்கும் பணி, செருப்புப் பழுதுபார்க்கும் பணி, கார் பழுதுபார்க்கும் பணி, தையல் பணி, ஆகிய பல வசதிகள் போதுமான அளவில் கிடைக்கவில்லை. பல நகரங்களில் இந்த வசதிகள் இன்னும் தாராளமாகக் கிடைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டியுள்ளது. இந்த அன்றாடத் தேவைகள் கடந்த காலத்தில் நகரங்களில் மக்கட் தொகை அதிகரித்த காரணத்தால் மிக அதிகமாகிவிட்டன. இவற்றைப் பூர்த்திசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# 12. சோவியத் நாட்டின் நிதி அமைப்பு

பணமும், பணத்தோடு தொடர்புடைய நிதி நிறுவனங்களும் சோவியத் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சோவியத் நாட்டின் மிகச் சிக்கல் நிறைந்த பகிர்வு முறையையும், உற்பத்தி அமைப்பையும் பொருளாதார திட்டத்தின் கீழ் பணமும், நிதி நிறுவனங்களும் ஒருங்கிணைக்கப் பேருதவி செய்கின்றன. பணத்தின் அளிப்பு, பகிர்வு, வங்கி முறை, சோவியத் நிதி நிறுவனங்களின் இதர நடவடிக்கைகள் ஆகியவைகள் எல்லாம் திட்டத்தினால் ஆளப்படுகின்றன. சில சோவியத் அறிஞர்கள் சோஷலிசப் பொருளாதாரத்தில் பணம் மறைந்தொழியும் அல்லது தேவைப்படாது என்று கூறி வந்தார்கள். ஆனால் லெனினும் அவரைப் பின்பற்றினோரும், சோவியத் நாட்டின் சோஷியலிசப் பொருளாதார அமைப்பிற்குப் பணமும், நிதி நிறுவனங்களும் துணை புரியும் என்று கருதினார்கள்.

வேறு நாடுகளில், பணம் என்ன பணிகள் புரிகிறதோ அவற்றில் சில பணிகளை மட்டுமே சோவியத் நாட்டில் பணம் செய்கிறது. பண்டமாற்று மூலமாகப் பணம் விளங்குகிறது. வாங்கும் சக்தியாக மொத்தத்தில் அது பயன்படுகிறது. அதிகாரிகள், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரின் வருவாய்கள் எல்லாம் பணமாகத்தான் கொடுக்கப்படுகின்றன. எந்தப் பொருள் வாங்கவேண்டுமானாலும் பணத்தால் வாங்க முடியும். எனவே, பணம் ஒரு கணக்கு வைப்பு முறையாகவும் பயன்படுகிறது. பணம் மதிப்புகளின் சேமிப்பாகவும் பயன்படுகிறது. பணத்தைச் சேர்த்து வைக்கவேண்டுமானால் சேர்த்து வைக்கலாம். ஆனால், சோவியத் நாட்டுப் பணத்துக்கு இரு பணிகள் அனுமதிக்கப் பெறவில்லை. ஒன்று, இலாபம் பெறுவதற்காக, மற்றவர்களை வேலைக்கு அமர்த்தி நடத்தும் அமைப்பு எதையும் தொடங்குவதற்குப் பணத்தைப் பயன்படுத்தக்கூடாது. இரண்

டாவது, பண்டங்களை வாங்கி அதிக விலைக்கு விற்று இலாபம் சம்பாதிக்கவும் பணத்தைப் பயன்படுத்தக்கூடாது.

நிதித் திட்டத்தின் அடிப்படையில்தான் பணப் புழக்கம் நடைபெறுகிறது. நிதித் திட்டம் பொருளாதாரத் திட்டத்தின் பிரதிபலிப்பேயாகும். நிதித்திட்டத்தில் மூன்று முக்கிய பாகங்கள் காணப்படுகின்றன.

1. அரசாங்கப் பட்ஜெட் அல்லது வரவு செலவுத் திட்டம். சோவியத் நாட்டில் இது ஏனைய நாடுகளின் வரவுசெலவுத் திட்டத்தைவிட விரிவானதாகவும், எல்லாவற்றையும் உள்ளடக்கினதாகவும் இருக்கிறது.

2. கடன் திட்டம். தொழில் துறைக்கும், இதர பொருளாதார நிறுவனங்களுக்கும் சோவியத் வங்கிகள் அளிக்கும் குறுகிய கால, நீண்ட காலக் கடன்களை இது குறிக்கும்.

3. பணத் திட்டம். இதன்படி நாட்டின் பணப் புழக்கத்திற்கு வேண்டிய பணம் அளிப்பதையும், கட்டுப்படுத்துவதையும் குறிக்கும்.

சோவியத் நிதித் திட்டத்தின் மூலமாக, பணத்தினால் ஏனைய நாடுகளில் விளையும் சில விளைவுகள் நேரவிடாமல் அரசு பார்த்துக் கொள்கின்றது.

### வரலாறு

நாணயச் சீரமைப்பிற்கானதொரு திட்டத்தை 1918-ல் லெனின் வரைந்து வைத்திருந்தார். ஆனால் உள்நாட்டுப் போரும், வெளிநாட்டுப் பகைவரின் தலையீடும் இத் திட்டம் செயல்பட முடியாதபடி தடை செய்துவிட்டன. யுத்த காலக் கம்யூனிசத்தின்போது சந்தையில் எந்தப் பண்டமும் விற்பனையாகவில்லை. பட்ஜெட் வருமானம் மிகச் சொற்பமாயிருந்தது. செலவு ஏராளமாயிருந்தது. இவைகளைச் சரிக்கட்டுவதற்காகக் கூடுதலாகப் பணம் வெளியிடப்பட்டது. 1920ஆம் ஆண்டில் 1,05,500 கோடி ரூபிள் துண்டு விழுந்தது. 1918-ல் துண்டு விழுந்ததைப்போல் இது 44 மடங்காகும். பண்டப் புழக்கம் வெகுவாகக் குறைந்து, காகிதப் பணத்தின் அளவு ஏராளமாய்ப் பெருகியதன் விளைவாக, பணத்தின் மதிப்புப் பாதாளத்தில் விழுந்தது. பண்டமாற்று வர்த்தக முறை மறுபடியும் தோன்றும்படி ஆயிற்று.

பஞ்சம் ஒரு புறம்; பணப் புழக்கம் அதிகரித்து மற்ெருரு புறம்—இதன் விளைவாக விலைவாசிகள் கிடு கிடுவென்று ஏறிவிட்டன.

1922ஆம் ஆண்டில் செர்வோன்த்ஸி[1] நோட்டுகளை (10 ரூபிள் பாங்கி நோட்டுகளை) வெளியிடத் தொடங்கியது. இவை ஒவ்வொன்றும் சுமார் 7·74 கிராம் தங்கத்துக்குச் சமமான மதிப்புடையதாக இருந்தது. சோவ்ஸ்னுக்கி[2]யைப் (ஏனைய சோவியத் நோட்டுகள்) போலல்லாது, செர்வோன்த்ஸி நோட்டுகள் நிலையான மதிப்புடையவையாக இருக்கும்படி அரசாங்க வங்கி உத்தரவாதம் செய்து கொண்டது. இந் நோட்டின் மதிப்பில் 25 சதவீதம் விலை உயர்ந்த உலோகங் களாகவும், 75 சதவீதம் எளிதில் விற்கப்படக்கூடிய பண்டங் களாகவும், உண்டியல்களாகவும் அரசாங்க வங்கியில் ஆதாரமாகக் கையிருப்பு வைத்துக்கொள்ளப்பட்டது.

1923ஆம் ஆண்டு பெப்ருவரி முதல் தேதிக்குள்ளாக 20 இலட்சம் பெறுமானமுள்ள செர்வோன்த்ஸி வெளியிடப்பட்டது. அதே ஆண்டு ஆகஸ்டு முதல் தேதிக்குள் 1 கோடி 35 ரூபிளாக அதிகரித்துவிட்டது. 1924 ஜனவரிக்குள் 2 கோடி 80 இலட்சம் ரூபிளை அடைந்தது.

கொஞ்சங் கொஞ்சமாகப் பழைய சோவ்ஸ்னுகி நோட்டு களைப் புழக்கத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டது. 1923 பெப்ருவரியில் புழக்கத்தில் இருந்த மொத்த நாணயத்தில் 90 விழுக்காடு சோவ்ஸ்னுகி நோட்டுகளாக இருந்தது. ஆனால் அடுத்த ஆண்டு அதே மாதத்தில் இது 10 விழுக்காடு அளவுக்குக் குறைந்தது. 1924 ஏப்ரல் 30-க்குள் சோவ்ஸ்னுகி நோட்டுகள் அனைத்தும் புழக்கத்திலிருந்து நிறுத்தப்பட்டுத் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஒன்று, மூன்று, ஐந்து ரூபிள் களுக்கான கஜானு நோட்டுகள் புழக்கத்தில் விடப்பட்டன. கஜானு நோட்டுகளும், செர்வோன்த்ஸி நோட்டுகளுக்குமிடையே சமமான மதிப்பு நிலவியது.

இவ்வாருகச் செலாவணியானது உறுதிப்படுத்தப்பட்டது 1924ஆம் ஆண்டின் பிற்பகுதிக்குப் பிறகு சோவியத் பட்ஜெட் எதுவும் துண்டு விழுவதாக இருக்கவில்லை. நாட்டின் நிதித்துறை வலிமை பெறுவதற்கு நிலையான மதிப்புடைய ரூபிள் உதவி

[1] Chervontsy

[2] Sovznaki

செய்தது. பொருளாதார புனரமைப்புக்கும் வழி வகுத்தது. 1925-ல் 74 கோடி 26 இலட்சம் ரூபிள்கள் புழக்கத்திலிருந்தன. 1926-ல் இது 126 கோடியே 93 இலட்சமாக உயர்ந்தது.

1924லிருந்து 1947 வரை சோவியத் யூனியனில் சம மதிப்புடைய இருவகை நோட்டுகள் புழக்கத்திலிருந்து வந்தன. வெளிநாட்டுப் பரிவர்த்தனையில் ரூபிள் மதிப்புக் குறைந்து வரலாயிற்று. 1930-க்கும் 1940-க்கும் இடைப்பட்ட காலத்தில் சோவியத் அரசாங்கம் ரூபிளின் வெளிநாட்டு மதிப்பைத் தன்னிச்சையாக நிலைப்படுத்தி வைத்தது. ரூபிளின் வெளிநாட்டு மதிப்பு மிகைப்படுத்தப்பட்டதாக இருந்தது. இரண்டாம் உலகப் போரின்போது விலைவாசிகள் கிடு கிடுவென்று உயர்ந்தன. உலகப் போரில் ஈடுபட்டிருந்த சோவியத் நாடு தனது உற்பத்தி சக்தியை எல்லாம் போரில் வெற்றி பெறுவதில் ஈடுபடுத்தியது. இதனால் பண்டங்கள் கிடைப்பது அருமையாகியது.

1944-க்குப் பிறகு அரசாங்கம் பல பங்கீடு கடைகளைத் திறந்தது. இருவகையான விலைகளில் பொருள்கள் கிடைத்து வந்தன. பங்கீட்டு முறைக்குள்ளான பொருள்களுக்கு ஒரு விலையும், அதே பொருட்களை வெளிச் சந்தையில் மற்றொரு விலையிலும் வாங்குவது ஏற்படுத்தப்பட்டது. 1947-ல் நாணயச் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது. இரண்டாம் உலகப் போரின் போது பகைவர்கள் கள்ள நோட்டுகளைப் புழக்கத்தில் விட்டு விட்டனர். போருக்காக ஏராளமான காகிதப் பணம் வேறு அச்சடிக்கப்பட்டது. எனவே, விலைவாசிகள் பத்து அல்லது பதினைந்து மடங்கு அதிகரித்துவிட்டது. மேலும், சில நபர்கள் தங்களது இரகசிய வியாபார நடத்தைகளால் விலை ஏற்றத்தை இன்னும் கொடுமையுள்ளதாக்கினார்கள். இந் நிலையில் நாணயச் சீரமைப்பு ஆணையிடப்பட்டது. பங்கீடு முறையும், இரு விலை அமைப்பும் கைவிடப்பட்டன. அரசாங்கமே கடைகள் திறந்து எல்லோருக்கும் ஒரே விலையில் பொருட்களை விற்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. புதிய ரூபிள் வெளியிடப்பட்டது. 10 பழைய ரூபிள்களுக்குப் பதிலாக ஒரு புதிய ரூபிள் கொடுக்கப்பட்டது.

1947ஆம் ஆண்டின் நாணயச் சீரமைப்பிற்குப் பின்னர் சோவியத் செலாவணி, பாங்கி நோட்டுகளாகவும், அரசாங்கக் கஜானா நோட்டுகளாகவும் உலோக நாணயங்களாகவும் இருந்து வருகின்றன.

**ரூபிளும் பொன் திட்டமும்[1]**

1937–க்குப் பிறகு ரூபிள் நாணயத்தின் வெளிநாட்டு மதிப்பு, சோவியத் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு வந்தது. இதன்படி ஓர் அமெரிக்க டாலர் 5·3 ரூபிள் மதிப்புடையதாக அறிவிக்கப் பட்டது. வெளிநாட்டவர் தங்களது பணத்தை இந்த மதிப்பின் அடிப்படையில்தான் மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது.

1950ஆம் ஆண்டில் இந்த மதிப்பீடு மாற்றி அமைக்கப் பட்டது. அமெரிக்க டாலருக்கு ரூபிள் மதிப்பு இவ்வளவு என்று சொல்வதை விடுத்து, '222168 கிராம் தங்கத்துக்கு 1 ரூபிள் சமம் என்று மதிப்புக் கொடுக்கப்பட்டது. மேலும், இந்த மதிப்பின்படி 1 கிராம் தங்கத்திற்கு 4 ரூபிளும் 45 கோப்பெக்குகளும் அரசாங்கப் பாங்கி தரவேண்டும் என்று ஒழுங்கு செய்யப்பட்டது. இதன்படி அமெரிக்க டாலருக்கும் ரூபிளுக்கும் உள்ள பரிவர்த்தனை 4 ரூபிளுக்கு 1 டாலர் என்று மாறியது.

**சோவியத் பட்ஜெட் அல்லது வரவு செலவுத் திட்டம்**

ஒவ்வொரு ஆண்டிலும் அரசாங்கச் செலவுகளும், அதற்கு வருகிற வருவாய்களும் பட்ஜெட்டில் இடம் பெறுகின்றன. பாதுகாப்பு, கல்வி, போன்ற பல அரசாங்க நடவடிக்கைகளுக்குப் பணம் செலவிடப்படுகிறது. இவைகளையெல்லாம் வரிகள் மூலம் வருவாய் பெற்றுச் சமாளிக்கிறார்கள்.

ஏனைய முதலாளித்துவ அமைப்பு நாடுகளின் பட்ஜெட் டிற்கும் சோஷியலிச சோவியத் நாட்டின் பட்ஜெட்டிற்கும் வேறுபாடுகள் உண்டு.

சோவியத் நாட்டில் பட்ஜெட் கிட்டத்தட்ட நாட்டின் சகல பொருளாதார நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாக இருக் கிறதைக் காணலாம். கூட்டுப் பண்ணைகள் தங்களது பட்ஜெட்டுகளைத் தாங்களாகவே தயாரித்துக் கொள்கின்றன. இவை போக, எஞ்சிய எல்லா நடவடிக்கைகளும் சோவியத் பட்ஜெட்டில் அடங்கியுள்ளன. சோவியத் நாட்டில் தனியார் பள்ளிகள், கல்லூரிகள், சினிமா கொட்டகைகள், ஓட்டல்கள், மருத்துவ நிலையங்கள் என்றெல்லாம் இல்லை. எல்லாமே அரசுடமை. எனவே, இவைகளை நடத்துவதற்கும் பட்ஜெட் ஒதுக்கீடு செய்ய வேண்டும். அதைப் போலவே எல்லாப்

[1] Gold Standard.

பொருளாதார நிறுவனங்களும், உற்பத்திப் பிரிவுகளும் சோவியத் அரசால் நிர்வகிக்கப்படுகின்றன. இவைகளுக்கு வேண்டிய முதலீடுகளும் பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

மேலும், சோவியத் பட்ஜெட் என்பது அந்த ஆண்டின் பொருளாதார திட்டமாகும். நாட்டின் செல்வாதாரங்கள் பல உற்பத்திப் பிரிவுகளுக்கு முறையாகப் பங்கிடப்பட்டு அவைகள் தங்கள் தங்களது பணிகளை ஆற்ற வகை செய்வதாக அமைகிறது.

**25. சோவியத் பட்ஜெட் 10 கோடி ரூபிள் கணக்கில்**

| | 1940 | 1946 | 1960 | 1967 | 1970 |
|---|---|---|---|---|---|
| வருவாய் — மொத்தம் | 18·0 | 32 5 | 77·1 | 110·2 | 160·8 |
| மொத்த மகசூல்; உற்பத்தி வரி | 10·6 | 19·1 | 31 3 | 40·7 | 54·1 |
| இலாப வரி | 2·2 | 1·7 | 18·6 | 37·2 | 54·8 |
| கூட்டுப் பண்ணைகள் செலுத்தும் வருமான வரி | 0·1 | 0·1 | 1·2 | 0·7 | 13·8 |
| கூட்டுறவுப் பண்டகசாலைகள் போன்றவை செலுத்தும் வருமான வரி | 0·2 | 0·1 | 0·6 | 0·4 | |
| அரசாங்கக் கடன்கள் | 1·1 | 2·5 | 0·9 | 0·3 | |
| இதர வரிகள் - பொதுமக்கள் செலுத்துவது | 0·9 | 2 3 | 5·6 | 9 0 | |
| அரசாங்கக் காப்பீடு ,, ,, | 0·9 | 1·2 | 3 8 | 6·4 | |
| செலவினங்கள் மொத்தம் | 17·4 | 30·8 | 73·1 | 110·0 | 160·7 |
| பொருளாதாரப் பிரிவுகள் மீது | 5 8 | 10·6 | 34·1 | 49 6 | 77·0 |
| கல்வி | 2 3 | 3·8 | 10·3 | 19·7 | 29·5 |
| பொதுச் சுகாதாரம், தேசிய விளையாட்டு | 0·9 | 1·4 | 4 8 | 7·4 | 34·6 |
| சமூகக் காப்பீடு | 0·3 | 1·8 | 6·5 | 10 4 | 55·5 |
| பாதுகாப்பு | 5·7 | 7·4 | 9·3 | 14·5 | 17·8 |
| ஆட்சிச் செலவுகள் | 0·7 | 1·2 | 1·1 | 1·4 | 1·7 |
| அரசாங்கக் கடன்கள் மீது வட்டி முதலியன | 0·3 | 0·5 | 0·7 | 0·2 | 0 5 |

(1970 நிரலில் 13·8 என்ற எண் கூட்டுப் பண்ணைகள் செலுத்தும் வருமான வரி முதல் இதர வரிகள் வரையிலான வரிசைகளுக்கு ஒரு அடைப்புக்குறியால் கொடுக்கப்பட்டுள்ளது.)

மேலே கொடுக்கப்படுள்ள பட்ஜெட்டின் சில அம்சங்களை விளக்குவோம்.

மொத்த மகசூல் அல்லது உற்பத்தி வரி சோவியத் வரி வருவாய்களில் மிக முக்கியமானதாகும். இது மொத்த வருவாயில் 40 சதவீதத்திலிருந்து 60 சதவீதம் வரை இருந்து வந்துள்ளது. இதைக் கருவியாகப் பயன்படுத்தியே சோவியத் அரசு கணிசமான தொகையை நுகர்விலிருந்து முதலீட்டிற்குத் திருப்பிவிட முடிகிறது. நுகர்வுப் பண்டங்களின் விற்பனைமீதே இவ் வரி சுமத்தப்படுகிறது. உற்பத்தி நிலையிலேயே இவ் வரி தண்டப்படுகிறது. எனவே, பொருளின் அடக்க விலையில் இதுவும் சேர்த்துக் கொள்ளப்படுவதால், பண்டத்தை வாங்கும் நுகர்வாளரே இவ் வரியைச் செலுத்துகிறார்கள். இந்த அம்சத்தில் பார்த்தால் இதை விற்பனை வரி என்று சொல்லலாம். கீழ்க்காணும் பட்டியல் பல்வேறு தொழில் துறைகளின் மொத்த உற்பத்திகளின்மீது விதிக்கப்பட்ட வரி பற்றிய தகவலைத் தருகின்றது.

**26.** சில உற்பத்தித் துறைகளும் அவை தரும் மகசூல் வரியும் (சதவீதத்தில்) 1939ஆம் ஆண்டுக்கானது

| துறை | மொத்த உற்பத்தியில் சதவீதப் பங்கு | மகசூல் வரி சதவீதமாக |
|---|---|---|
| பெட்ரோலியம் தொழில்துறை | 3·1 | 8·0 |
| இறைச்சி, பால் தொழில் | 4·5 | 7·3 |
| உணவுப் பொருள் துறை | 11·7 | 29·7 |
| துணித் தொழில் | 10·2 | 13·0 |
| மென் ரகத் தொழில் | 7·9 | 2·6 |
| கனரகத் தொழில் | 60·1 | 5·0 |
| விவசாயத் தொழில் | 2·5 | 34·4 |

மேலே குறிப்பிட்டுள்ள பட்டியலில் விவசாயத் துறையும், உணவுப் பொருள் வழங்கு துறையுந்தான் அதிக வரி செலுத்துகின்றன. இலாப வரி 1930 ஆம் ஆண்டு வரிச் சீர்திருத்தத்தின் விளைவாகப் போடப்பட்டது. துறைக்குத் துறை இவ் வரி வீதம் வேறுபடுகிறது. ஆண்டுதோறும் கூட இவ் வீதம் மாறுபடுகிறது. ஒவ்வொரு தொழில் பிரிவின் முதலீட்டுத் தேவைகளையும் கணக்கி

லெடுத்து, அதன் இயந்திரத் தேய்மானம், பழுதுபார்ப்பது ஆகிய செலவுகளை ஒதுக்கி, இவ் வரி விதிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டு ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

## 27. 1940ஆம் ஆண்டுக்கான இலாப வரி

| துறை | மொத்த இலாபம் | இலாப வரி | வரிவீதம் |
|---|---|---|---|
| | (10 கோடி ரூபிள்) | | |
| பெட்ரோல் | 0·4 | 0·14 | 35·0 |
| இயந்திரங்கள் | 1·2 | 0·77 | 63·8 |
| இரும்பு, உருக்கு | 1·0 | 0·25 | 25·0 |
| இரசாயனப் பொருட்கள் | 0·59 | 0·28 | 48·1 |
| மென்ரக, துணித் தொழில்கள் | 2·7 | 2·4 | 90·0 |
| உணவுப் பொருள் | 4·2 | 3·6 | 84·1 |
| போக்குவரத்து, செய்தித்துறை | 6·4 | 3·3 | 51·9 |

வருமான வரி தனிநபர்களின் வருமானத்தின் மீது விதிக்கப் படுகிறது. எழுத்தாளர்கள், கைவினைஞர்கள், கூட்டுப் பண்ணை விவசாயிகள், முதலானோர் இவ் வரியைச் செலுத்துகிறார்கள். வரி வீதமும் துறைக்குத் துறையும், நபருக்கு நபரும், ஆண்டுக்கு ஆண்டும் வேறுபடுகிறது. ஸ்டாலின் காலத்துக்குப் பிறகு விவசாயிகள் மீது இந்த வரி சுமத்தப்படுவதில்லை. விவசாயத் துறையிலிருந்து கிடைக்கும் உபரிகளைத் தொழில் துறைக்கு வடித்துவிடும் முக்கிய பணியை இவ் வரி செய்து வந்தது. இப்பொழுது நேரடியான மகசூல் வரிகளால் இது செய்யப் படுகிறது. அரசாங்கச் செலவுகளில் தலையாய இடம் பொரு ளாதாரச் செலவுகளுக்கே. புதிய முதலீடுகள் முக்கிய இடம் பெறுகின்றன. இரயில் ரோடுகளாகவோ, இயந்திரங்களாகவோ அல்லது பெருங் கட்டிடங்களாகவோ செலவினங்கள் அமை கின்றன. பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்வதன் மூலமே முக்கிய முதலீடுகள் செய்யப்படுகின்றன. இவை பற்றிய நிர்ணயம் திட்டத்தினால் செய்யப்படுகின்றது. இரண்டாவது முக்கியச்

செலவு சமூக, கலாச்சாரச் செலவினங்களாகும். சோவியத் நாடு ஏராளமான சமூக சேவைகளைப் புரிகிறது என்பதை இந்தச் செலவினம் காட்டுகிறது. திட்டமே இதற்குரிய வழிமுறைகளையும், அளவுகளையும் நெறிப்படுத்துகிறது. பாதுகாப்புச் செலவும் ஒரு முக்கிய செலவினமாகும்.

**சோவியத் நாட்டில் பாங்கி முறை**

சோவியத் நாட்டில் தொழில் நிறுவனங்கள், பிரிவுகள், பண்ணைகள் ஆகியவைகள் எல்லாம் பாங்கிகள் மூலமாகவே தங்களது நிதி நடவடிக்கைகளைச் செய்துகொள்கின்றன. மைய பாங்கி 'அரசு பாங்கி'[1] என்று அழைக்கப்படுகிறது. இதற்கு 6000-க்கும் மேற்பட்ட கிளைகள் நாடெங்கிலும் உள்ளன.

இது தவிர, தொழில் துறை பாங்கி,[2] விவசாய பாங்கி[3] வணிக பாங்கி[4], ஸ்தலஸ்தாபன பாங்கி[5] ஆகிய பாங்கிகளும் உள்ளன. வெளிநாட்டு வாணிபத்தைக் கவனித்துக்கொள்ள ஒரு பாங்கி[6] பணிபுரிகிறது. அரசு பாங்கிதான் குறுகிய காலக் கடன்கள் வழங்கும் நிறுவனமாகும். அரசு பாங்கி அரசாங்கத்தின் நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்கிறது. காசோலைகள் புழக்கத்தில் உள்ளன என்றாலும், ஏனைய நாடுகளின் காசோலைகளில் இருந்து இவை வேறுபட்டன. ஒருவருக்கு இவ்வளவு தொகை கொடுக்க வேண்டும் என்ற ஆணையாகவே காசோலைகள் உள்ளன. அதை வேறு நபருக்கு மாறுதல் செய்ய முடியாது. தொழிலாளர் சம்பளங்களுக்கு நோட்டுத் தரப்படுகின்றது. இது பண்டங்கள், தேவைகள் ஆகியவற்றை வாங்குவதற்குப் பயன்படுத்தப் பெறுகின்றது. தொழிலாளர் சேமிப்புப் பாங்கிகள் நாடெங்கும் உள்ளன. இவை சேமிப்புப் பழக்கத்தை வலியுறுத்துகின்றன என்றாலும், தனிநபர் சேமித்து வைக்கவேண்டிய அவசியமும், அதற்குரிய காரணமும் இந் நாட்டில் இல்லை. இச் சேமிப்புகளுக்குக் குறைந்த வட்டி கொடுக்கப்படுகிறது.

**தொழில் துறை பாங்கி:** தொழில் துறையிலும் போக்குவரத்துத் துறையிலும் மூலதனங்களை வளர்ப்பதிலும் சாலைகள் அமைப்பதிலும் கவனம் செலுத்துகின்றது. நீண்டகாலக் கடன்கள் அளித்து, தொழில் நிறுவனங்கள் தோற்றுவிக்க வகை செய்கிறது. நுகர்வாளர் பண்டங்கள் உற்பத்தி, உணவுப்

[1]Gos Bank, [2]Prom Bank, [3]Selkhoz Bank, [4]Torg Bank, [5]Tsekum Bank, [6]Vneshtorg Bank,

பொருட்கள் உற்பத்தி, கட்டடப் பொருள்கள், எரி பொருள்கள் ஆகியவைகள் அதிகரிப்பதற்கு வேண்டிய முதலீடுகளை இந்தப் பாங்கி செய்கிறது.

**ஸ்தல ஸ்தாபன பாங்கி:** நகரங்களிலும், மாநகரங்களிலும் வீடுகள் கட்டுவதற்குக் கடன் வசதிகள் தருவதாகும். நகரங்களின் குடிநீர் வசதி, சாக்கடை, கழிவு நீர்க்கால் அமைத்தல் ஆகிய பணிகளுக்கும் கடன் வழங்குகின்றது.

**வணிக பாங்கி :** வியாபாரத்துக்கும் கூட்டுறவுத் துறைக்கும் நிதி வழங்குகின்றது.

**விவசாயப் பாங்கி :** கூட்டுப் பண்ணைகளுக்கு நீண்ட காலக் கடன் வழங்குகிறது. கால்நடை விஸ்தரிப்பு, கால்வாய் அமைப்பு, நிலச் சீரமைப்பு ஆகியவற்றிற்குக் கடன் வழங்குகின்றது.

**காப்பீடு:** இந்தியாவைப் போலவே சோவியத் யூனியனில் அரசாங்கத்தின் சர்வாதீனமாக இருக்கிறது.

# 13. சோவியத் யூனியனின் பன்னாட்டு வாணிபம்

சோவியத் நாடு பல்வேறு நாடுகளுடன் பொருளாதாரத் தொடர்புகள் கொண்டிருக்கிறது. இவை வாணிபத் தொடர்பாக இருக்கலாம். அல்லது நிதி நடவடிக்கைகள் அடிப்படை கொண்ட கடன் கொடுத்து வாங்குவதாக இருக்கலாம். அல்லது சுற்றுலாச் செல்பவர்களின் செலவு வரவுகளைப் பற்றிய தொடர்பாகவும் அமையலாம். அல்லது மூலதன முதலீடுகளாக வும் இருக்கக்கூடும். எதுவானாலும் சோவியத் நாட்டின் திட்டத் திற்குட்பட்டு இந்த நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப் படுகின்றன.

மற்ற நாடுகளின் பன்னாட்டு வாணிபத்திற்கும் சோவியத் நாட்டின் பன்னாட்டு வாணிபத்திற்கும் சில குறிப்பிட்ட வேறுபாடுகள் உண்டு. சோவியத் நாட்டின் பன்னாட்டு வாணிபம் அதன் அரசாங்கத்தால் நடத்தப் பெறுகின்றது. ஏற்றுமதி, இறக்குமதி ஆகும் பண்டங்கள் அனைத்தும் அரசாங்க ஆணைக்கு உட்பட்டது.

சோஷியலிசப் பொருளாதார விதிகளின்படி, பொருளா தாரத்தின் சகல அம்சங்களையும் சோஷியலிசத் துறைக் கைப்பற்றியாக வேண்டும். இதன்படி பன்னாட்டு வாணிபத்தைத் தனியார் வசம் விடமுடியாது. இதிலிருந்து பெறப்படும் வருவாய் நாட்டு மக்களின் வாழ்க்கைத்தர உயர்வுக்குச் செலவிடப் படுகிறது. எனவே, அதை அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஓர் அமைப்பினால் நடத்தவேண்டியிருந்தது. அது மாத்திரமல்லாமல் வெளிநாட்டில் ஏற்படும் விலைச் சரிவுகள், ஏற்றங்கள், தொழி லாளர் போராட்டங்கள், பேரங்கள் ஆகியவைகளின் விளைவுகள் சோவியத் நாட்டுப் பொருளாதாரத்தைப் பாதிக்கா வண்ணம் பாதுகாக்கவும் இம் முறை பின்பற்றப்படுகிறது.

மேலும், வெளிநாட்டாரோடு வியாபாரம் செய்வதில் இந்த வழிமுறை, சோவியத் நாட்டிற்கு அனுகூலமாக அமைகிறது.

பேரங்கள் பேசுவதிலும், வியாபார ஒப்பந்தங்களை முடிப்பதிலும் போட்டா போட்டியே இல்லாது தவிர்க்கப்படுகிறது. எனவே சோவியத் நாட்டுப் பொருள்களின் விலை வெளிநாட்டு விலைகளால் பாதிக்கப் பெருமல் பாதுகாக்கப் பெறுகின்றன.

சோஷியலிசப் பொருளாதார விதிகளின்படி, உலகப் பொருளாதார வசதிகளை நல்ல முறையில் பகிர்வு செய்து பயன் படுத்துவது அவசியமாகும். சோவியத் நாட்டில் இயற்கை வளம் மிக்க துறைகளில் உற்பத்தியைப் பெருக்கி, குறைந்த உற்பத்திச் செலவுகளில் பண்டங்களைப் படைத்து இதர நாடுகளோடு இவற்றைப் பங்கிட்டுக் கொள்வது ஓர் அம்சமாகும். அதைப் போல, சோவியத் யூனியனில் உற்பத்தி செய்ய முடியாத பண்டங்களை அல்லது அதிகச் செலவில் மாத்திரமே உற்பத்தி செய்யக்கூடிய பண்டங்களைக் குறைவான விலைகளில் இதர நாடுகளில் இருந்து பெற்றுக்கொள்வது இதன் இன்னெரு அம்ச மாகும். எப்படியாயினும் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வது தலையாய நோக்கமாகும்.

இரண்டாவதாக, இதர சோஷியலிச நாடுகளுடனும், புதிதாக விடுதலைப் பெற்று வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளுடனும் பரஸ்பர வியாபார ஒப்பந்தங்கள் செய்து கொள்வதன் மூலம் ஏனைய சோஷியலிச நாடுகளின் பொருளாதாரத்தை உறுதிப் படுத்தி, முதலாளித்துவ நாடுகளின் கையினின்று அவர்களை விடுவிப்பதும் ஒரு முக்கிய நோக்கமாகும். புதிதாக விடுதலைப் பெற்ற நாடுகள் தாங்கள் பெற்ற விடுதலையை இழந்துவிடாமல் காப்பதற்கும், அவற்றின் பின்தங்கிய பொருளாதார நிலையைச் சீர் செய்து அதன்மூலம் அவர்களை உறுதியுடையவர்களாக்கி மறுபடியும் ஏகாதிபத்திய நாடுகளிடம் சரணடைந்து விடாமல் காப்பாற்றுவதும் இதன் நோக்கமாகும்.

அண்மைக்காலத்தில் சோவியத் யூனியன், தன் சமாதான சகவாழ்வுக் கொள்கையின்படி எல்லா நாடுகளோடும் சுமுகமான உறவு கொண்டு விளங்குகிறது.

### பன்னுட்டு வாணிபம் வளர்ந்த வரலாறு

கடந்த ஐம்பதாண்டுக்காலத்தில் சோவியத் நாட்டுப் பன்னுட்டு வாணிபம் வளர்ந்த விதம்பற்றிச் சுருக்கமாக இங்கே பார்ப்போம்.

1917-ல் லெனின் தமது அறிக்கையில் வெளிநாட்டு வாணிபம் ஓர் அரசாங்கச் சர்வாதீனமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினுர். 1920-ல் வெளிநாட்டு வர்த்தக அமைச்சகம் தோன்றி, அதன் பொறுப்பில் மொத்த வெளிநாட்டு

வாணிபமும் விடப்பட்டது. இதில் இன்றுவரை எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை.

சோவியத் நாட்டின் ஆரம்பக் காலத்தில் வெளிப் பகைவரின் தலையீடு காரணமாகவும், உள்நாட்டுப் போரின் விளைவாகவும் பன்னாட்டு வாணிபம் பல ஆண்டுகள் வரை வளர்ச்சியடையாது தடை செய்யப்பட்டது. வெளிநாட்டவர் பலர் இக் காலங்களில் சோவியத் நாட்டுப் பொருள்களை வாங்கக் கூடாதென்று தடைகள் விதித்துக் கட்டுப்பாடு செய்து வைத்திருந்தனர். நாட்டுடைமை யாக்கிய நிறுவனங்களை மறுபடியும் பழைய முதலாளி களுக்குத் திருப்பித் தரவேண்டும் என்றும், ஜார் மன்னன் காலத்தில் ஏற்பட்டக் கடன்களைப் புதிய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அண்டை நாட்டவர் கூறியபடியால், விரைவில் பன்னாட்டு வாணிபம் செழித்து வளரவில்லை.

1920ஆம் ஆண்டில் ஒரு வியாபார உறவுச் செயலகம் இலண்டனில் நிறுவப்பெற்றது. இதன்மூலம் இங்கிலாந்துக்கும், சோவியத் யூனியனுக்கும் வர்த்தக உறவு ஏற்பட்டு வளர லாயிற்று. இதற்குப் பிறகு, நார்வே, ஆஸ்திரியா, இத்தாலி, டென்மார்க், செக்கோஸ்லோவேக்கியா ஆகிய நாடுகளுடனும் உறவு ஏற்பட்டது. 1922-ல் ஜெனேவாவில் நடைபெற்ற மாநாட்டில் சோவியத் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 1924ஆம் ஆண்டு வாக்கில் கிட்டத்தட்ட எல்லா நாடுகளும் சோவியத் யூனியனோடு வர்த்தக உறவு கொள்ள ஆரம்பித்தன.

**28. ஆரம்பக்காலத்தில் சோவியத் பன்னாட்டு வாணிபம்**
**(பத்து இலட்சம் ரூபிள் கணக்கில்)**

| வருடம் | மொத்த வியாபாரம் | ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|---|---|
| 1913 | 2270 | 1192 | 1078 |
| 1921-22 | 262 | 50 | 212 |
| 1922-23 | 222 | 105 | 117 |
| 1923-24 | 476 | 293 | 183 |
| 1924-25 | 1,020 | 453 | 567 |
| 1925-26 | 1,145 | 552 | 593 |

இந்தக் கணக்கின்படி பார்க்கும்போது, இவ்வாண்டுகளில் இறக்குமதி ஏற்றுமதியைவிட அதிகமாயிருந்ததைக் காண்கிறோம். இவ்வாறு ஏற்பட்ட இறக்குமதி—ஏற்றுமதி சமநிலைமையின்மையைச் சோவியத் நாடு தங்கத்தைக் கொடுத்துத் தீர்த்துக் கொண்டது.

1927 லிருந்து பலவித இடையூறுகளுக்கிடையேயும் சோவியத் நாட்டின் பன்னாட்டு வாணிபம் வளர்ச்சி அடைந்து வந்தது.

**29. 1927-க்கும் 1930-க்கும் இடையில் பன்னாட்டு வாணிபம்**
(பத்து இலட்சம் ரூபிள் கணக்கில்)

| வருடம் | மொத்த வியாபாரம் | ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|---|---|
| 1927-28 | 1362 | 621 | 741 |
| 1929 | 1415 | 724 | 691 |
| 1930 | 1643 | 813 | 830 |
| 1931 | 1503 | 636 | 867 |
| 1932 | 1003 | 451 | 552 |

உலகப் பொருளாதார மந்தம் காரணமாக 1932-க்குப் பிந்திய வாணிபம் குறைந்து சென்றதைப் பின்வரும் பட்டியல் விளக்குகிறது. இதற்குள்ளாகச் சோவியத் யூனியனில் திட்டமிடப்பட்ட பொருளாதார அமைப்புத் தோன்றி, கனரகத் தொழில் வளர்ச்சிக்கு அஸ்திவாரம் இடப்பட்டு முடிவுற்றிருந்தது.

**30. (1930-க்கும்—1940-க்கும் இடையே பன்னாட்டு வாணிபம்**
(பத்து இலட்சம் ரூபிள் கணக்கில்)

| வருடம் | மொத்த வியாபாரம் | ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|---|---|
| 1933 | 662 | 389 | 273 |
| 1934 | 510 | 328 | 182 |
| 1935 | 477 | 288 | 189 |
| 1936 | 485 | 243 | 242 |
| 1937 | 524 | 295 | 229 |
| 1938 | 475 | 230 | 245 |
| 1939 | 271 | 104 | 167 |
| 1940 | 485 | 240 | 245 |

1933–37-க்கும் இடைப்பட்ட காலத்தில் சோவியத் யூனியன் தனது இரண்டாம் ஐந்தாண்டுத்திட்டத்தில் ஈடுபட்டிருந்தது. இறக்குமதிகளை வெகுவாகக் குறைத்து, ஏற்றுமதிகளை அதிகரிப்பதன் மூலம் சமநிலைக் கொடுப்பல் வாங்கல் நிலையை நிறுத்த முடிந்தது.

1941-ல் நாஜிப்படைகள் சோவியத் யூனியன் மீது படை எடுத்து நுழைந்தன. இந்த யுத்தம் நடைபெறும்போது வெளிநாட்டு வாணிபம் மிகவும் குறைந்தது. நாட்டின் எல்லாச் செல்வாதாரங்களையும் யுத்தத்தில் ஈடுபடுத்தி, பகைவனை முறியடித்து, நாட்டை விடுதலை செய்யும் முயற்சியில் இருந்த காரணத்தால் இது நேர்ந்தது. கீழ்க்காணும் பட்டியல் இக் காலப் பன்னாட்டு வாணிப நிலையை விளக்குகிறது.

### 31. ஏற்றுமதி இறக்குமதி அளவுகள்

(10 இலட்சம் ரூபிள்)

| | 1941 | 1942 | 1943 | 1944 | 1945 |
|---|---|---|---|---|---|
| மொத்த வியாபாரம் | 456 | 248 | 240 | 314 | 562 |
| ஏற்றுமதி | 178 | 66 | 67 | 115 | 302 |
| இறக்குமதி | 278 | 182 | 173 | 199 | 260 |

போர்க் காலத்தில் சோவியத் யூனியன் இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுடன் போர்க்கால ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருந்தது. இந்த நாடுகள் சோவியத் யூனியனுக்கு, யுத்தத் தளவாடங்கள், இயந்திர சாதனங்கள் முதலியவற்றை அளித்து, அதன் விளைவாகப் பொதுவான பகையை முறியடிக்க முடிந்தது. போர்க்காலத்திற்குப் பிறகு, சோவியத் யூனியனின் பன்னாட்டு வாணிபத்தில் புதிய சகாப்தம் தோன்றிற்று.

**32. 1946-க்கும் 1966-க்கும் இடைப்பட்ட காலத்தில் சோவியத் பன்னாட்டு வாணிபம்**

(10 இலட்சம் ரூபிள் கணக்கில்)

| | 1946 | 1950 | 1960 | 1965 | 1966 |
|---|---|---|---|---|---|
| மொத்த வியாபாரம் | 1280 | 2,925 | 10,073 | 14,610 | 15,079 |
| ஏற்றுமதி | 588 | 1,615 | 5,007 | 7,357 | 7,957 |
| இறக்குமதி | 692 | 1,310 | 5,066 | 7,253 | 7,122 |

மேலே காணும் வளர்ச்சி 1938ஆம் ஆண்டைவிட 1966-ல் 14 மடங்கு அதிகமாகும். அண்மைக் காலத்தில் இது இன்னும் அதிகமாக அதிகரித்து வருகிறதைக் காணலாம்.

இந்த வியாபாரமானது சோஷியலிச நாடுகள், வளர்ச்சியடைந்துவரும் நாடுகள், முதலாளித்துவ நாடுகள் ஆகியவற்றோடு செய்து கொண்டவையாகும்.

**33. வியாபாரப் பகிர்வு**

(10 இலட்சம் ரூபிள் கணக்கில்)

| | 1950 | 1960 | 1966 |
|---|---|---|---|
| சோஷியலிச நாடுகளுடன் | 1,678 | 5,343 | 8,437 |
| வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் | 113 | 785 | 1,874 |
| முதலாளித்துவ நாடுகள் | 440 | 1,917 | 3.182 |
| மொத்தம் | 2,925 | 10,073 | 15,079 |

இதன்படி பார்க்கும்போது 70 சதவீத வாணிபம் சோஷியலிச நாடுகளுடன் இருக்கிறது. அண்மைக் காலங்களில் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுடன் வாணிபம் பெருகி வருகிறது.

34. சோஷியலிச நாடுகளுடன் வாணிபம்
(10 இலட்சம் ரூபிள் கணக்கில்)

| நாடுகள் | 1950 | 1955 | 1960 | 1966 |
|---|---|---|---|---|
| ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு — | 311 | 887 | 1783 | 2380 |
| செக்கோஸ்லோவேக்கியா — | 380 | 668 | 1155 | 1632 |
| போலந்து — — — | 406 | 647 | 790 | 1383 |
| பல்கேரியா — — | 150 | 224 | 565 | 1216 |
| ஹங்கேரி — — | 189 | 236 | 504 | 915 |
| ருமேனியா — — — | 228 | 430 | 487 | 713 |
| யூகோஸ்லேவியா — — | 0 | 31 | 97 | 366 |
| அல்பேனியா — — | 14 | 19 | 61 | — |

ஆசிய நாட்டுச் சோஷியலிச நாடுகளுடனும் வாணிபம் நடைபெறுகிறது. கொரியா, வியத்நாம், மங்கோலியா ஆகிய நாடுகளுடன் வாணிபம் பெருகி வருகிறது. சீன நாட்டோடு 1950-ல் ஏற்படுத்திய நட்புறவு உடன்படிக்கையின்படி சிறப்பான வாணிபம் நடைபெறுகிறது. 1950-க்கும் 1960-க்கும் இடைப்பட்ட காலத்தில் சீனு 200 கோடி ரூபிள் கடனைப் பெற்றது. 1965-க்குள் திருப்பிச் செலுத்தப்பட்டது. மொத்தப் பன்னாட்டு வாணிபத்தில் சீனுவோடு சோவியத் யூனியன் பெற்றிருந்த பங்கு 20 சதவீதமாகும். கியூபாவோடும் இத்தகைய வாணிப உறவு வளர்ந்து வருகிறது.

### வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளுக்கும் சோவியத் யூனியனுக்கும் உள்ள வாணிபம்

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுடன் சோவியத் யூனியன் நெருங்கிய வாணிப உறவும் நட்புறவும் கொண்டு விளங்குகிறது. 1955ஆம் ஆண்டில் 30 கோடி ரூபிளாக இருந்தது, 1966ஆம் ஆண்டில் 187 கோடி ரூபிளாக உயர்ந்தது. சோவியத் பன்னாட்டு வாணிப அளவில் 1955-ல் 5·2 சதவீதப் பங்கைப்பெற்றிருந்த வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் வாணிபம் 12·4 சதவீதமாக 1966-ல் உயர்ந்துள்ளது.

வாணிப ஒப்பந்தங்கள் மட்டுமின்றி வேறுவகையான பொருளாதார உறவுகளும் தோன்றி வளர்ந்து வருகின்றன. வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் சோவியத் யூனியனிடமிருந்து தொழில் நுட்ப உதவிகள், மூலதனங்கள் முதலியன பெற்றுக் கொள்கின்றன. விரைவான தொழில் வளர்ச்சிக்கு இவை வழி கோலுகின்றன. கனரகத் தொழில் வளரப் பெரிதும் துணை புரிகின்றன. மென்ரகத் தொழில்கள், நுகர்வுப் பண்டங்கள் உற்பத்தித் தொழில் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் உதவி பெறுகின்றன. விவசாய வளர்ச்சி, மீன் பிடிப்பு, போக்குவரத்து, கலாச்சாரம் ஆகிய துறைகளின் பெருக்கத்திற்கும் உறுதுணை புரிகின்றது.

### 35. பல்வேறு திட்டங்கள்

| ஒப்பந்தங்கள் | | 1967ல் நிறைவு பெற்றவை |
|---|---|---|
| மின்சாரத் திட்டங்கள் | 28 | 6 |
| உலோக உற்பத்தி ஆலைகள் | 24 | 7 |
| எண்ணெய், இரசாயனம் | 19 | 5 |
| பொறிஇயல், இயந்திரங்கள் | 40 | 14 |
| கட்டடப் பொருள்கள் | 15 | 5 |
| மென் ரகத் தொழில், உணவுப் பொருள் வழங்குதுறை | 69 | 24 |
| விவசாயத் துறை | 108 | 23 |
| போக்குவரத்து | 57 | 26 |
| கல்வி, கலாச்சார, சுகாதாரத் துறைகள் | 123 | 61 |
| மொத்தம் | 600 | 221 |

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளிடமிருந்து இறக்குமதியாகும் பண்டங்கள் மீதுள்ள சுங்கவரி 1965 ஆம் ஆண்டிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. இதன் விளைவாக இந்த நாடுகளின் இறக்குமதி பெருகுவதற்கு அனுகூலமாய் அமைந்தது.

சோவியத் யூனியனுக்கும், வளர்ச்சி பெற்று வரும் நாடுகளுக்கிடையே ஏற்படும் வாணிப ஒப்பந்தங்களின்படி குறிப்பிட்ட சில

பண்டங்கள் இறக்குமதி செய்யப்பட வேண்டும் என்று எழுதிக் கொள்ளப்பட்டிருக்கிறது. சில நாடுகளோடு, நீண்ட கால வர்த்தக ஒப்பந்தங்களும் செய்யப்பட்டுள்ளன. இயந்திரங்களும் பொறிகளும், இதர தொழில் நுட்பக் கருவிகளும் சமீப காலத்தில் அதிக அளவில் ஏற்றுமதியாகின்றன. வளர்ச்சியடைந்த நாடுகளின் ஏற்றுமதியில் முற்றுப் பொருள்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. சில முக்கிய நாடுகளோடு உள்ள வாணிபம் கீழே உள்ள பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது.

**36. சில வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளுடன் வாணிபம்**
**(10 இலட்சம் ரூபிள் கணக்கில்)**

| நாடுகள் | 1955 | 1960 | 1966 |
|---|---|---|---|
| **ஆப்கானிஸ்தான்** | 22·0 | 44·0 | 82·9 |
| **இந்தியா** | 10·6 | 104·0 | 346·0 |
| **இந்தோனேஷியா** | 3·4 | 42·9 | 32·0 |
| **பாகிஸ்தான்** | 0·3 | 6·2 | 61·5 |
| **துருக்கி** | 11·3 | 12·1 | 41·6 |
| **கானா** | 10·4 | 24·5 | 34·4 |
| **மொராக்கோ** | 3·4 | 8·8 | 18·2 |
| **இலங்கை** | | 8·6 | 34·8 |
| **எகிப்து** | 23·7 | 172·0 | 133·8 |

இது தவிர இலத்தீன் அமெரிக்க நாடுகளுடனும் சோவியத் யூனியன் வாணிபம் செய்கிறது. அர்ஜென்டைனா, பிரேசில், உருகுவே ஆகிய நாடுகளோடு வாணிப உறவுகள் இருந்து வருகின்றன. சமீப காலத்தில் சிலி, கொலம்பியா ஆகிய நாடுகளோடும் வர்த்தகம் தொடங்கியுள்ளது.

சோவியத் ஏற்றுமதியில் கடந்த 50 ஆண்டுகளில் (1913-க்கும் 1967-க்குமிடையில்) பெருத்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. 1913-ம்

ஆண்டில் தொழில் பொருள் 30 சதமாகவும், விவசாயப் பண்டங்கள் 70 சதமாகவும் இருந்தன. 1966-ல் இந்த நிலை தலைகீழாய் மாறியது. தொழில் பொருள்கள் 85 சதமாகவும், விவசாயப் பொருள்கள் 15 சதமாகவும் மாறின. சோவியத் ஏற்றுமதியில் பொருள்கள் காலா காலங்களில் மாறுதல் அடைந்துள்ள நிலையைக் கீழ்க்காணும் பட்டியல் விவரிக்கிறது.

**37. சோவியத் ஏற்றுமதியில் பண்டங்கள்**

*(சதவீதக் கணக்கில்)*

| | 1913 | 1928-32 | 1933-40 | 1960-64 | 1966 |
|---|---|---|---|---|---|
| இயந்திரக்கருவிகளும், சாதனங்களும் | 0·3 | 0·4 | 2·3 | 18·9 | 20·8 |
| நிலக்கரி | 0·1 | 1·6 | 1·9 | 5·0 | 4·1 |
| எண்ணெயும், உபபொருட்களும் | 3·3 | 15·4 | 11·9 | 12·1 | 12·0 |
| கனிகளும், உலோகங்களும் | 1·4 | 2 8 | 3·8 | 4·8 | 4·5 |
| இரும்பு, மாங்கனீஸ் | 0·6 | 1·1 | 2·2 | 15·0 | 15·2 |
| இரசாயனப் பொருட்கள், உரங்கள் | 0·9 | 1·0 | 2·9 | 2·3 | 2·7 |
| மரங்கள், காகிதப் பொருட்கள் | 10·9 | 15·6 | 19·7 | 6·0 | 7·0 |
| துணிக்கு வேண்டிய கச்சாப் பொருட்கள் | 8·9 | 6·0 | 7·5 | 5·3 | 5 2 |
| கம்பளி - கச்சாப் பொருட்கள் | 0·4 | 8·4 | 9·0 | 0·8 | 0·8 |
| தானியம் - மாவு | 35·1 | 12·2 | 11·7 | 6·7 | 3·0 |
| இறைச்சி-பால் பண்டங்கள், முட்டைகள் | 12·0 | 5·7 | 2·3 | 1·7 | 1·7 |
| நுகர்வாளர் பண்டங்கள் | 4·7 | 10·5 | 9·6 | 2·7 | 2·4 |
| மொத்தம் | 100 | 100 | 100 | 100 | 100 |

சோவியத் இறக்குமதிகளின் தன்மையும் இதே காலங்களில் மாறுபட்டு வந்துள்ளதையும் நாம் காணலாம். அண்மைக் காலத்தில் நுகர்வு பண்டங்கள் அதிகமாக இறக்குமதியாகிறதைக் காண்கிறோம். 1931-ல் இது மிகவும் குறைவாக இருந்தது. ஆனால் 1966-ல் இது கணிசமாக உயர்ந்தது.

**38. சோவியத் இறக்குமதியில் பண்டங்கள்**
**(சதவீதக் கணக்கில்)**

| | 1913 | 1928-32 | 1933-40 | 1960-64 | 1966 |
|---|---|---|---|---|---|
| இயந்திரக் கருவிகள், சாதனங்கள் | 16·6 | 45·5 | 33 5 | 33·0 | 32·4 |
| எரி பொருட்கள் | 7·1 | 0·1 | 1·4 | 3·2 | 2·4 |
| கனிகள்-சுரங்கப் பொருட்கள் | 0·5 | 0·2 | 1·6 | 4·8 | 4·0 |
| இரும்பு, மாங்கனீஸ் | 6·7 | 17·4 | 25·4 | 7·4 | 3 9 |
| இரசாயனப் பொருட்கள், உரங்கள் | 4·8 | 3·3 | 1·6 | 2·9 | 3·8 |
| இரப்பர், இரப்பராலான பண்டங்கள் | 3·1 | 1·3 | 4·5 | 3·3 | 2·6 |
| துணி நெசவுக்கு வேண்டிய கச்சாப் பொருட்கள் | 18·3 | 13·7 | 10·7 | 4·8 | 4·8 |
| தானியமும், மாவும் | 2·8 | 1·7 | 1·4 | 3·3 | 7·2 |
| காய்கறி, பழங்கள் | 2·8 | 0·8 | 0·8 | 2·6 | 2·7 |
| சர்க்கரை, பிஸ்கட் போன்றவை | 0·2 | 1·0 | 0·1 | 3·5 | 3·3 |
| நுகர்வாளர் பண்டங்கள் | 10·3 | 1·6 | 1·7 | 17·2 | 16·4 |
| மொத்தம் | 100 | 100 | 100 | 100 | 100 |

## பன்னாட்டு வாணிப அமைப்பு

எல்லா வகையான பன்னாட்டு வாணிப நடவடிக்கைகளையும் வெளிநாட்டு வாணிப அமைச்சகம் கட்டுப்படுத்துகிறது. இந்த

அமைச்சகமானது திட்ட குறிக்கோள்களின்படி வெளிநாட்டு அரசாங்கங்களுடனும், நிறுவனங்களுடனும் வர்த்தக ஒப்பந்தங்களையும், உடன்படிக்கைகளையும் செய்துகொள்கிறது. சோவியத் யூனியனின் வியாபாரத் தூதுவர்கள் பல நாடுகளிலும் இருக்கிறார்கள். மந்திரி சபையின், வெளி நாடுகளோடாகும் பொருளாதார உறவுக் குழு, இந்த நாடுகளோடாகிய உறவுகளை ஒழுங்குறுத்துகிறது. வெளிநாட்டு வர்த்தக அமைச்சகமும், இந்தக் குழுவும் இணைந்து செயல்படுகின்றன.

சோவியத் யூனியனின் ஏற்றுமதி இறக்குமதி ஆகியவை பல வகை கழகங்களால் நடத்தப்படுகின்றன. 1970-ல் 45 கழகங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட பண்டத்தின், அல்லது பண்டங்களின் ஏற்றுமதி இறக்குமதியைக் கவனித்துக் கொள்கிறது. எடுத்துக்காட்டாக, மெஷினோ எக்ஸ்போர்ட்[1] என்ற கழகம் இயந்திர தொழிற்சாதனங்களை ஏற்றுமதி செய்வதாகும். அவ்டோ எக்ஸ்போர்ட்[2] மோட்டார் கார்கள் விற்பனை செய்யும் கழகமாகும். இந்தக் கழகங்கள் ஒவ்வொன்றிற்கும் சில அடிப்படையான உரிமைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கழகத்திற்கும் தனித்தனி மூலதனம் உண்டு. தனித் தனி பாங்குக் கணக்குகளும் உண்டு. இந்தக் கழகத்தின் நஷ்ட இலாபங்கள் அரசாங்கத்தைப் பாதிக்காது. கூட்டுக் கம்பெனிகளைப் போல இது இயங்குகிறது. எனினும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. கூட்டுக் கம்பெனிகளைப்போல இதில் தனி நபர் பங்குதாரர்களாக இருப்பதில்லை.

இவைகளது ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகள் நாட்டுப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளையும் தழுவியதாக இருக்கின்றன. இவைகள் பொருளாதார உறுதி மிகுந்தவையாகவும் நிதிவசதி பெற்றதாகவும் உள்ளன. வெளிநாட்டில் இருந்து இவைகளோடு தொடர்புகொள்கிறவர்கள் இந்தக் கழகங்களின் அந்தஸ்து, நிதி நிலைமை, உறுதிப்பாடு, ஆகியவற்றைப் பற்றி ஐயுற வேண்டிய அவசியமேயில்லை. இந்தக் கழகங்கள் வெளி நாட்டு அமைப்புகளோடும், நிறுவனங்களோடும் நேரடியாகத் தொடர்பு வைத்துக்கொள்கின்றன.

சோவியத் நாட்டின் பன்னாட்டு வாணிபம் பலவித வர்த்தக உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நடைபெறுகின்றன. இந்த வர்த்தக உடன்பாடு சட்ட ரீதியான

[1]Machino Export. [2]Auto Export.

பாதுகாப்புகளை வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளுக்கு அளிக் கின்றது. இது போக, என்னவகையான பண்டங்கள் ஏற்றுமதி அல்லது இறக்குமதியாகவேண்டும் என்றும், அவை களின் அளவுகள் இன்னவென்றும், அவற்றிற்கான மதிப்பை இன்ன வகையாக, இன்ன பணத்தில், கொடுக்கவேண்டும் என்றும் ஒப்பந்தம் செய்துகொள்ளப்படுகிறது. எவ்வளவு காலத்திற்குள்ளாக இந்த வாணிபம் நடந்தேற வேண்டும் என்றும், பணம் கொடுத்துத் தீர வேண்டும் என்பதும் இந்த ஒப்பந்தங்களில் அடங்கும்.

நீண்டகால வர்த்தக உடன்பாடுகள், நாடுகளின் பொரு ளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிகின்றன.

இவை தவிர, தொழில் நுட்பப் பொருளாதாரக் கூட்டுறவு களும் அண்மைக்காலத்தில் தோன்றியுள்ளன. இதற்கான உடன் படிக்கைகள் பல கையெழுத்தாகி உள்ளன. உதாரணமாக ஒரு நாட்டின் கனி வளம் அல்லது எண்ணெய் வளம் ஆகியவற்றைத் தோண்டிப் பார்த்து, அவற்றிற்கு வேண்டிய இயந்திர சாதனங்களை அமைத்து, கட்டடங்கள், சாலைகள் ஆகியவற்றை நிர்மாணித்துத் தருவதென்று ஒப்பந்தம் செய்துகொள்ளப் படுகிறது. இத்தனை ஆண்டுகளில் இந்தத் திட்டத்தை முடித்துத் தருவதென்றும், இந்தக் கடனைத் திருப்பித் தரும் வாயிலாக, இன்னின்ன பண்டங்கள் சோவியத் யூனியனுக்கு இந்த நாட்டி லிருந்து ஏற்றுமதி செய்யப்படும் என்றும் இந்த உடன்பாடுகள் ஏற்பாடு செய்துகொள்கின்றன.

நாட்டின் பொருளாதாரத் திட்டத்தோடு, மற்றச் சோஷியலிச நாடுகளின் பொருளாதாரத் திட்டங்களோடு சேர்த்துப் பன்னாட்டு வாணிப திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. சோவியத் நாட்டின் தேவைகள், வளர்ச்சிப் போக்குகள், சமுதாய மாற்றங்கள் ஆகியவைகளை மனத்தில் கொண்டு திட்டங்கள் வகுக்கப் படுகின்றன. இந்தத் திட்டத்தின் அடிப்படையில் பன்னாட்டு வாணிகம் நடைபெறுகிறது. பன்னாட்டு வாணிப திட்டம் ஆண்டுத் திட்டமாகவும், ஐந்தாண்டுத் திட்டமாகவும், நீண்ட காலத் திட்டமாகவும் வரையப்பட்டுப் பொருளாதாரத் திட்டத் தோடு இணைக்கப்பட்டுள்ளது.

சில ஏற்றுமதிகள், இறக்குமதிகளின்மீது சோவியத் நாடு சுங்கவரி விதிக்கிறது. எங்கெங்கே சோவியத் நாட்டுப் பொருள் களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படுகிறதோ, அந்த நாட்டுப் பொருள்களுக்கு, சோவியத் யூனியனிலும் வரிவிலக்கு அளிக்கப்

படுகிறது. தபாலில் அனுப்பப்படுகிற பார்சல்கள், சோவியத் நாட்டிற்குப் பிரயாணிகள் கொண்டு வருகிற பண்டங்கள், மாஸ்கோவில் உள்ள தூதரகங்கள் இறக்குமதி செய்யும் பண்டங்கள் ஆகியவற்றின்மீது வரி விதிக்கப்படுகின்றது. ஆனால் இந்த வரி விதிப்பிற்கும், நாட்டில் நிலவும் விலைகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை. சில பொருள்களுக்கு எந்தவித வரியுமே விதிப்பதில்லை. இன்னும் சில பொருள்களுக்குக் குறைந்த வரி விதிக்கின்றார்கள். ஏற்றுமதியாகும் பண்டங்களில் சிலவற்றின்மீதே வரி விதிக்கப்படுகிறது. சோவியத் அரசாங்கத்தின் வருவாயில் மிகக் குறைந்த சதவீதமே சுங்க வரியின் மூலமாய் பெறப்படுகிறது.

## இந்தியாவும்—சோவியத் யூனியனும்

இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் 1953 டிசம்பரில் துவங்கின. 2வது ஒப்பந்தம் 1958-ல் கையெழுத்தாகியது. மூன்றுவது 1963லும் நான்காவது 1966லும் கையெழுத்தாகின. இருபது ஆண்டுகால வாணிபம் மிகப் பெரும் அளவில் வளர்ச்சியடைந்திருக்கிறது. இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதிகளில் சோவியத் யூனியன் இரண்டாவது இடம் வகிக்கிறது. 1970ஆம் ஆண்டில் 300 கோடி ரூபாய் மதிப்புள்ள வியாபாரம் இரு நாடுகளுக்குமிடையேயும் நடந்தது. இரண்டு நாடுகளுக்கிடையிலேயும் நேரடியான கப்பல் போக்கு வரத்து நடைபெறுவது வர்த்தக வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிகிறது. 1965ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் பண்டங்களின் மீது சோவியத் யூனியன் வரி விலக்கு அளித்தது. நீண்டகால வியாபார ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக, ரூபாய் நாணயத்தில் இறக்குமதியாகும் பண்டங்களுக்குச் செலுத்தும் ஒப்பந்தங்கள் இந்தியாவிற்கு மிகவும் அநுகூலமாக இருக்கிறது. இந்தியா இறக்குமதி செய்யும் பண்டங்களில் 65 சதவீதம் இயந்திரங்களாகவும், தொழில் நுட்பக் கருவிகளாகவும், இரசாயனப் பொருள்களாகவும் உள்ளன. எண்ணெய் இறக்குமதி செய்வது இந்தியாவிற்கு அதிக இலாபம் தேடித் தருவதாக இருக்கிறது.

சோவியத் நாட்டிற்கும் இந்தியாவிற்கும் இடையிலே ஏற்பட்ட பொருளாதார ஒப்பந்தத்தைச் சிறந்ததாகவே குறிப்பிட வேண்டும். 1955ஆம் ஆண்டில் பிலாய் உருக்காலை நிர்மாணிப்பதற்கு இரு அரசாங்கங்களும் ஒப்பந்தம் செய்துகொண்டன. 1966ஆம் ஆண்டிற்குள்ளாக 489 கோடி ரூபாய் கடன் சோவியத் யூனியனால் இந்தியாவிற்கு வழங்கப்பட்டது. இந்தக் கடனில்

பெரும்பாலானவை 12 ஆண்டுத் தவணையிலாகும். இவற்றிற்கு வட்டி வீதம் 2·5 ஆகும். திருப்பிக் கொடுக்க வேண்டிய பணம் இந்தியப் பணமாகும். ஆகவே, இந்தியாவின் ஏற்றுமதிக்கு அடி கோலுவதாக இந்தக் கடன்கள் அமைந்தன.

தொழில் வளர்ச்சிக்கும் சோவியத் யூனியன் உதவிகள் புரிகின்றது. நிலக்கரிச் சுரங்கங்கள் தோண்டுவதிலும், சோவியத் யூனியன் துணை புரிகின்றது. சிறப்பாக இந்தியாவின் எண்ணெய் வளத் தோட்டத்தில் சோவியத் யூனியன் செய்துள்ள சாதனை மகத்தானது. இதுவரை 14-க்கும் மேற்பட்ட எண்ணெய்க் கிணறுகள், எரிவாயு கிணறுகள், சோவியத் யூனியனால் கட்டப்பட்டுள்ளன. 'அங்கலேஸ்வரி'ல் உள்ள எண்ணெய்க் கிணறு இந்தோ–சோவியத் பொருளாதாரக் கூட்டுறவின் சின்னமாக விளங்குகிறது. ஹரித்துவாரிலும், இன்னும் சில இடங்களிலும் மின்சார இயந்திரங்கள் செய்யப் பட்டு வருகின்றன. 'பொக்காரோ'விலும் இன்னும் சில இடங் களிலும் சோவியத் யூனியன் உதவியுடன் உலோகத் தொழில் வளர்ச்சியடைந்து வருகின்றது. எண்ணெய்க் கிணறுகள் தோண்டும் கருவிகள் சுரங்கங்களை அமைக்கும் இயந்திரங்கள் இராட்சத மண்வெட்டிகள் ஆகியவற்றை இந்தியாவின் பல் பகுதிகளில் காண முடிகிறது. இவையெல்லாம் சோவியத் யூனியனின் உதவியுடன் செய்யப்பட்டுள்ளது.

மத்திய இந்தியாவில் கோர்பா அனல் மின்சார நிலையம் சிறப்பான சேவை செய்கிறது. 'சூரத்கார் விவசாயப் பண்ணையில் சோவியத் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சென்னையில் அறுவை சிகிச்சைக் கருவிகள், சோவியத் யூனியனின் கூட்டுறவோடு செய்யப்படுகின்றன. நெய்வேலி யிலும், துர்க்காப்பூரிலும், நிலக்கரிச் சுரங்கங்கள் தோண்டி எடுக்கின்ற பணியில் சோவியத் யூனியன் இந்தியாவிற்கு உதவி புரிகிறது.

மேலும், பல விஞ்ஞானிகள், பொறியாளர்கள், சிறப்புத் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளித்து, அவர்கள் மூலமாக இந்தியத் தொழில் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்துள்ளனர். சோவியத் அறிஞர்கள் பலர் இந்தியாவின் பல பல்கலைக் கழகங்களிலும், தொழில் நுட்பக் கழகங்களிலும் பணியாற்றுகின்றனர். இந்திய மாணவர்கள் ஆயிரக்கணக்கில் சோவியத் யூனியனில் பயின்றுவருகின்றார்கள். இந்தியாவின் திட்டமிடப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கு, சோவியத் யூனியன் ஏற்கெனவே பெற்றுள்ள அனுபவம் பெரும் துணைபுரிகிறது.

# 14. முடிவுரை

பொருளாதாரம் ஓர் இயலாகப் பரிணமித்த நாள் தொட்டு ருஷ்யாவில் புரட்சி எழுந்த நாள் வரைக்கும் முதலாளித்துவ அமைப்பிற்குள்ளான பொருளாதாரம் பற்றியே அறிஞர்கள் நூல்கள் எழுதினார்கள். முதலாளித்துவ அமைப்பை அடிப் படையாகக் கொண்டே பொருளாதார விதிகளையும் அமைப்பு களையும் உண்டாக்கினார்கள். எடுத்துக்காட்டாக, பல பொருளா தார விதிகள் தடையிலா வாணிப முயற்சியை அடிப்படை யாகக்கொண்டு எழுப்பப்பெற்றன. பல அனுமானங்களும் நிபந்தனைகளும் அவ்வாறே எழுப்பப்பெற்றுப் பொருளாதார இயல் அமைக்கப் பெற்றது. ஆனால் சோவியத் அமைப்பு ஏற்பட்ட பிறகு, இந்த விதிகளுக்கு முற்றிலும் முரணான, மாறு பட்ட ஒருவகையான பொருளாதார விதிகளுக்குட்பட்டதாக அது அமைந்து இருப்பது தெரியலாயிற்று. சந்தையில் விற்போரும் வாங்குவோரும் கூடி விலை நிர்ணயம் செய்கிறார்கள் என்ற கருத்து மாறி, திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தில் மையமயமாக்கப்பட்ட அமைப்பு விலைகளை நிர்ணயம் செய்கிறது என்பது ஏற்பட்டது. எல்லாக் காலத்துக்கும் எல்லாச் சூழ்நிலை களுக்கும் பொருத்தமானதாகக் கருதப்பட்டு வந்த பொருளாதார விதிகள் சோவியத் பொருளாதாரத்திற்குப் பொருந்தாதவை களாக நிரூபிக்கப்பட்டன. அமைப்பிற்கு அமைப்புப் பொருளாதார விதிகளும் மாறும் என்ற உண்மை பெறப்பட்டது. எனவே, சோஷியலிச அமைப்புப் பற்றியும் அதன் விதிகள் வழி முறைகள் பற்றியும் அறிந்துகொள்வது அவசியமாயிற்று.

உலகிலேயே முதன் முதலாகத் திட்டமிடப்பட்ட பொருளா தார அமைப்பு நடைமுறையில் வந்தது ருஷ்ய நாட்டில் தான். எனவே, திட்டமிடப்பட்ட பொருளாதாரம் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் கொண்டோர் அனைவரும் மாஸ்கோவுக்கு யாத்திரை மேற்கொண்டார்கள்.

சோவியத் யூனியன் மேற்கொண்ட திட்டங்கள் மீதும் அதை நிர்வகிக்கும் வழி முறைகள் மீதும் பொருளாதார அறிஞர்கள் கவனம் செலுத்தினர். அவற்றைப் பற்றி ஆய்வுரைகள் செய்தனர். உலகெங்கிலும் அவை பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

இரண்டாம் உலகப் போருக்கு முன்பாகச் சோவியத் நாட்டின் பலத்தைக் குறித்து ஏனைய பெரிய நாடுகள் அசட்டையாகவும் ஏனோதானோவென்றும் இருந்தார்கள். ஆனால் இரண்டாம் உலகப் போரில் சோவியத் மக்களும் அதன் அரசும் காட்டிய தீரமும் வீரமும், அந் நாட்டின் அமைப்புப் பற்றி அறிஞர்களை சிந்திக்கத் தூண்டுவதாக இருந்தது. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இரண்டாம் உலகப் போருக்குப் பின் சோஷியலிச அமைப்பை மேற்கொண்டன. எனவே சோவியத் நாட்டின் பொருளாதார அமைப்புப் பற்றித் தெரிந்துகொள்வது மேலும் அவசியமாயிற்று.

இன்று உலகின் பல பாகங்களில்—ஆசியாவிலும் அமெரிக்கக் கண்டத்திலும்—சோஷியலிச அமைப்புத் தோன்றியுள்ளது. இவ்விதப் புரட்சிகரமான மாற்றத்திற்கு வித்திட்ட பெருமை சோவியத் நாட்டைச் சாரும்; அதன் அமைப்பைச் சாரும். எனவே அதன் அமைப்பு, ஒருங்கிணைப்புச் செயல்முறை போன்றவைகளைக் குறித்துப் பொருளாதாரமாணவர்கள் கவனம் செலுத்துவதில் வியப்பில்லை.

வளர்ந்து வரும் நாடுகளுக்கும் முன் மாதிரியாகச் சோவியத் பொருளாதாரம் இருக்கின்றது. அக்டோபர் புரட்சிக்கு முன்பு மிகவும் பின்தங்கிய நாடாக ருஷ்யா இருந்தது. விவசாயத்தை நம்பியதாக, பொருளாதார வளர்ச்சி மிகவும் குன்றியதாக இருந்தது. ஏராளமான இயற்கை வளங்கள் காணப்பட்டாலும், நாட்டில் வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் தாண்டவ மாடின. நாட்டு மக்களின் தலா வருமானம் மிகவும் குறைவாக இருந்தது. புரட்சித் தோன்றி புதிய பொருளாதார அமைப்பு ஏற்பட்ட மிகக் குறுகிய காலத்திற்குள்ளாக அதன் பொருளாதார வளர்ச்சி வியக்குமளவாய் உயர்ந்தது. அன்று பின் தங்கிய இந்த விவசாய நாடு, இன்று உலகின் உற்பத்திப் பொருட்களில் 50 சதவிகிதம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளைக் கொண்ட நாடாக மலர்ந்துள்ளது. மிகக் குறுகிய காலத்தில் திட்டமிட்ட அமைப்பின் கீழ் விவசாயத் துறையில் பெரு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கனிகளும் இயற்கை வளங்களும் ஆய்வு செய்யப் பட்டு நாட்டுக்கும் மனித இனத்துக்கும் பயன் தரும் வகையில்

தொழில்களாகப் பரிணமித்துள்ளன. அறிவியல் துறையில் மிகவும் பின்தங்கிய நாடாக இருந்த ருஷ்யா, இன்று விண்வெளி ஆராய்ச்சியிலும், சந்திரமண்டலப் பயணத்திலும் முதன்மை பெற்றுள்ளது. இவ்வாறு குறுகிய காலத்தில் ஏற்பட்ட பிரமிக்கத்தக்க சாதனையானது வளர்ந்துவரும் பொருளாதார நிலையில் உள்ள இளம் நாடுகளைக் கவர்வது வியப்பில்லை. பொருளாதார வளர்ச்சி ஏற்பட நெடிது காலம் வேண்டும் என்று இதுகாறும் நம்பப்பட்டு வந்தது. இன்று அது கதையாகிப் போனது. எனவே புதியநாடுகள்—அண்மையில் குடியரசுகளாகச் சுதந்திரம் பெற்ற நாடுகள்—எல்லாம் தங்களது பொருளாதார வளர்ச்சிக்கு முன்மாதிரியாகச் சோவியத் யூனியனைத் தெரிந்து கொள்கின்றன. மேலும் பெரும்பான்மையான நாடுகள் சோஷியலிச சமுதாயத்தை நிறுவவும் உறுதிகொண்டுள்ளன. சோஷியலிச நாடுகளுக்கு முன்மாதிரியாகவும் ஆசானாகவும் தோழனாகவும் சோவியத் நாடு திகழ்கிறது.

சோவியத் பொருளாதாரத்தைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டுவதற்கு இன்னும் பல காரணங்கள் உண்டு.

திட்டமிட்ட பொருளாதார அமைப்புப் பற்றிய நுணுக்கங்கள் தெளிவுரைகள், விளக்கங்கள் எல்லாம் சோவியத் பொருளாதார வரலாற்றின் ஏடுகளில் காண முடியும். மனித இன வரலாற்றிலே முதன் முதலாக இவ்வகை அமைப்பை ஏற்படுத்தி அதை அமல் செய்ய முற்பட்டவர்கள் சோவியத் மக்கள். எத்தனையோ பரிசோதனைகளை நடத்திச் சரியானவற்றை நிறுத்துக் கொண்டு தவறுகளைக் களைந்து, தலைசிறந்த பொருளாதார அமைப்பாக மாற்றியுள்ளனர். புதிதாகச் சோஷியலிச வழியைப் பின்பற்று கிறவர்கள் மீண்டும் மீண்டும் சில தவறுகளைச் செய்யாதபடி இவைகளைப் பற்றி முன்கூட்டியே தெரிந்து அவற்றை விலகிச் செல்ல சோவியத் பொருளாதாரம் உதவி செய்யக்கூடும்.

இதுகாறும் சோவியத் பொருளாதாரம் இருவேறு தன்மை யுள்ளோரால் பயிலப்பட்டும் ஆராயப்பட்டும் வந்தது. சோவியத் பொருளாதாரத்தைச் சிறப்புப் பாடமாகப் பயின்ற மிகச் சிலப் பேரறிஞர்கள் ஒரு சாரார். மற்றொரு சாரார் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள். சிறப்புக் கலையாகப் பயின்றவர்கள் கலை கலைக்காகவே என்ற கொள்கை நோக்கோடு தாம் பெற்ற இன்பத்தை எல்லோரும் அனுபவிக்க இயலாது என்று அதை மூடிவைத்த பெட்டகமாக மாற்றி வைத்திருந்தார்கள். அதன் கருவூலத்தில் காணப்படும் அடிப்படைக் கருத்துகளை மக்கள்

புரிந்துகொள்ள முடியாது என்பதாக இவர்கள் கருதி, தாங்கள் ஆய்ந்தறிந்து கொண்ட உண்மைகளை எவருக்கும் விளங்காத நடையில் எழுதிச் சென்றனர். அரசியல் கட்சியாகிய கம்யூனிஸ்ட் கட்சியினர் சோவியத் நாடு செய்வதெல்லாம் சரி என்று சொன்னதால் பாரபட்சமற்ற ஆய்வு சாத்தியமில்லாது போனது. மிகையான பாராட்டுதலும் அரசியல் நோக்கும் பொருளாதார இயலின் இலக்கணத்திற்கு எதிராக அமைந்தன. கட்சியோர் சொல்வதால் அதை எதிர்க்கட்சியினர் எதிர்த்துத்தான் ஆக வேண்டும் என்ற நிலையும் ஏற்பட்டு, வாதப் பிரதிவாதங்களில் முடிந்ததே யொழிய உண்மையான—பொருளாதார விதிகளும் அமைப்பு முறைகளும் எல்லோராலும் அறியப்படுவதற்கு வழி வகைகள் வகுக்கப்பெறவில்லை. சோவியத் பொருளாதாரம் பற்றி விருப்பு வெறுப்பின்றி ஆராயும் நூல்கள் எழுதப்படும் காலம் இது. பொதுவாக, சோவியத் பொருளாதாரத்தை அரசியலில் இருந்து பிரித்துப் பார்ப்பது கடினமான காரியம். கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பொருளாதார அமைப்பு என்பதால் அரசியல் கண்ணோட்டமே பெரிதும் விரவி நிற்பது வழக்கமாகிவிட்டது. ஆயினும் அது அரசியல் கட்சியின் ஆளுகைக்குட்பட்டுச் செயல்படுகிறது என்ற நிலையை மறந்து ஆய்வு செய்ய முற்பட்டால், பல பொருளாதாரப் பொதுமைகளும், கருத்துகளும் கிடைக்கின்றன. நடைமுறையில் காணப்படும் ஒன்றைக் குறித்து அப்படியே ஆராய்வதும் பயில்வதும் பொதுவாக விரும்பப்படுவதில்லை. விஞ்ஞான ரீதியாகப் பல அனுமானங்களின் அடுக்கிலே ஒருவகைச் சமுதாய அல்லது பொருளாதார அமைப்பைக் கற்பனை செய்து அதில் எழக் கூடும் பற்பல சிக்கல்களையும் பிரச்சினைகளையும் ஏற்படுத்திக் கொண்ட செயற்கையான சூழ்நிலைகளின் பேரில் ஆராய்வது அறிவியல்வாதிகளின் வழக்கமாக இருக்கிறது. எடுத்துக் காட்டாக, முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் சந்தையின் இலக்கணத்தைத் தெளிவு செய்துகொண்டு அதன் விதிகளை ஆராய்வது வழக்கம். ஒரு போட்டிச் சந்தை இருப்பதாக அனுமானித்துக் கொண்டு பல விதிமுறைகளை அவற்றிலிருந்து கல்லியெடுப்பதுதான் வழக்கம். பூரணப் போட்டி நிலவும் சந்தை, இன்று உலகின் எந்தப் பகுதியிலாவது நிலவுகிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இது போலவே, சோஷியலிச சித்தாந்தத்தின் அடிப்படையில் இன்னின்னபடி இருக்கவேண்டும் என்றும், அவை இன்ன அனுமானங்களின் படியும் என்று எழுதுவது ஒரு காரியம். சோஷியலிசத்தின் அடிப்படையில் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளை அப்படியே விவரித்து அதன் அடிப்படையில் சோஷியலிசசமுதாயத்தின் பொருளாதார

விதிகளைக் கண்டறிவது சாலச் சிறப்புடைய வழியாகும். கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகச் சோவியத் மக்கள் சோஷியலிச சித்தாந்தத்தின்படியும், மார்க்ஸ்-எங்கெல்ஸ்-லெனின் ஆகியோரது விளக்கவுரைகளின்படியும் ஒரு சோஷியலிச சமுதாயத்தை உருவாக்கி வந்திருக்கிறார்கள். இவ்வாறு உருவாக்கிய சோவியத் நாட்டின் பொருளாதார அமைப்பு, அதன் திட்டமிடும் ஸ்தாபனங்கள், திட்டம் நிறைவேற்றும் பிரிவுகள், அதன் ஆட்சிப் பிரிவுகள், கிடைப்பரிய மூலாதாரங்களைப் பங்கீடு செய்யும் வழிமுறைகள் ஆகியவை பற்றி ஆராய்ந்து அவற்றைக் கொண்டு பொதுமைகளைக் காண முடியும்.

குறிப்பாக, ஸ்டாலின் காலம் வரையில் கிழக்கு ஐரோப்பிய சோஷியலிச நாடுகள் தங்களது பொருளாதார அமைப்பைச் சோவியத் அமைப்பை ஒட்டியதாகவும், முழுக்கப் பின்பற்றுவதாகவும் அமைத்துக்கொண்டு இருந்தார்கள். ஆனால் ஸ்டாலின் காலத்துக்குப் பிறகு சோவியத் முன் மாதிரியை முழுக்க அப்படியே வேதவாக்காக எடுத்துக்கொள்ளாது, நாட்டுக்கு நாடு காணப்படும் வேறுபாடுகளைக் கவனத்தில் கொண்டு, சோஷியலிசப் பொதுமைகளை உருவாக்குவதில் இந்த நாடுகள் சோவியத் நாட்டோடு சேர்ந்து உழைக்க ஆரம்பித்தன.

பொருளாதார வளர்ச்சித் தத்துவங்களில் மார்க்சீய வளர்ச்சித் தத்துவத்தின் அடிப்படையில் வளர்ந்து வருவது சோவியத் பொருளாதாரம். ஒரு நாட்டின் எல்லா செல்வ வளங்களையும் இயற்கை தரும் கனிகளையும் மக்கட் செல்வத்தையும் குறிப்பிட்ட சில கலவைகளில் கலந்து பொருளாதார வளர்ச்சிப் பெறுவதற்குத் திட்டமிடும் வழியே சோவியத் வழி. 1928ஆம் ஆண்டில் ருஷ்யாவின் மக்கட் தொகை 150 மில்லியனாக இருந்தது—இங்கிலாந்தின் மக்கட் தொகை இதில் நாலில் ஒரு பங்குதான். ஆனால் ருஷ்யாவின் தொழில் உற்பத்தியைவிட நான்கு மடங்கு அதிகமாக உற்பத்தி செய்தது. முப்பத்து ஐந்து ஆண்டுகளில் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின் மூலமாகச் சோவியத் யூனியன் இன்று உலகின் தொழில் உற்பத்தியில் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. ஒரு காலத்தில் மிகச் சிறப்பான இடங்களை வகித்த மேற்கு ஐரோப்பிய நாடுகள் எல்லாம் உற்பத்திப் போட்டியில் பின்தங்கி விட்டன. அமெரிக்காவுக்கு அடுத்த இடத்தைச் சோவியத் நாடு பிடித்துள்ளது. இப்பொழுது அமெரிக்காவையும் மிஞ்சிவிட வேண்டும் என்பதே சோவியத் அரசின் திட்ட நோக்காக இருக்கிறது. இவ்வளவு குறுகியதொரு காலத்தில் இவ்வளவு மிகையான வளர்ச்சியைப்

பெற்றுத் தரக்கூடிய தத்துவம் அல்லது வழி முறை. பிறநாடுகளின் கவனத்தைக் கவர்வது வியப்பிற்குரியதல்ல. அது இயற்கையே. இந்தியா போன்ற மிகவும் பின்தங்கிய நாடு தனது மக்களின் வறுமையையும் பசிப் பிணியையும் இல்லாமற் செய்து வளங் கொழிக்கவும் மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேறிச் செல்லவும் வழிவகை காண முற்பட்டுள்ள இந்தக் காலத்தில் சோவியத் முறை மிகவும் கவர்ச்சிகரமாகத் தோன்று வதில் வியப்பேதும் இல்லை.

சோவியத் பொருளாதாரம் கவர்ச்சிகரமாய் இருப்பதற்கு இன்னொரு முக்கிய காரணம் உண்டு என்று பேராசிரியர் மாரிஸ் டோப் தமது நூலில் குறிப்பிடுகிருர்.[1] பிரஞ்சுப் புரட்சி அரசியல் மாணவர்களின் கவனத்தை ஈர்த்த வண்ணமாய் சோவியத் புரட்சியும் பொருளாதார வளர்ச்சியும் பொருளாதார மாணவர்களை ஈர்ப்பதாகக் குறிப்பிடுகிருர். ஏனெனில் உலகி லேயே முதன் முதலாகப் பாட்டாளி வர்க்கத்தினுல் நடத்தப் பெற்ற அரசு சோவியத் யூனியனுகும். பாட்டாளி வர்க்கம் ஆட்சி செலுத்தும் ஒரு சமுதாயம் பற்றித் தெரிந்துகொள்வதற்குச் சோவியத் யூனியனின் பொருளாதார வளர்ச்சி பற்றித் தெரிந்து கொள்ள வேண்டி உள்ளது.

பல்லாண்டுகளாகப் பொருளாதார அறிஞர்கள் சமநிலைப் (Equilibrium) பொருளாதாரம் பற்றியே ஆராய்ந்து வந்தார்கள். மாற்றங்களைக் குறித்து அவர்கள் அக்கறை கொள்ளவில்லை. தாங்கள் அனுமானிக்கும் 'சமநிலை' இயங்கும் சமநிலையாக இருந்தாலும், அவைகளையும் சமநிலைத் தத்துவத்தின் அடிப் படையில் கணிப்பது வழக்கமாக இருந்து வந்தது.

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் பல்லாயிரக்கணக்கான உற்பத்தியாளர்கள் பலவகையான பொருட்களை உற்பத்தி செய்கின்றனர். இவ்வகையான உற்பத்தியில் ஒவ்வொரு உற்பத்தியாளனும், அவனவன் தான் உற்பத்தி செய்யும் பொருள் விற்பனை ஆகுமா ஆகாதா என்பது பற்றி முடிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாருன முடிவுகளைச் செய்வதற்கு முன்பு உற்பத்தியாளன் தன்னேடொத்த ஏனைய உற்பத்தி யாளர்களின் முடிவுகளைத் தெரிந்தவனுகவும் இருக்கவேண்டும். தான் உற்பத்தி செய்யும் பொருளின் உற்பத்திச் செலவுகளையும்,

[1]1917 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சோவியத் பொருளாதார வளர்ச்சி. பக்கம். 2

விற்பனைச் செலவுகளையும், போக்குவரத்துச் செலவுகளையும் கணித்து அதன் அடிப்படையில் தன் பொருளுக்கு விலை ஒன்றை நிர்ணயம் செய்கிறுன். ஆனல் தேவையின் நிலையைத் தெரிந்த பின்னரே விலையை நிர்ணயம் செய்கிறுன். ஆரம்பக் கட்டத்தில் விலைகள் ஏறவோ இறங்கவோ அனுமதிக்கப்படுகின்றன. தேவையின் புறத்தே செயல்படும் பல சக்திகளுக்கும் அளிப்பின் பின்னே காணப்படும் சக்திகளுக்கும் ஏற்படும் போட்டியில் சமநிலை காணப்படும் கட்டம் ஒன்று நேரிடுகிறது. இந்த நிலையில் செய்யப் படும் உற்பத்தி அளவே உச்ச கட்ட உற்பத்தி அளவாக அந்த உற்பத்தியாளன் எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த நிலையில் என்ன விலை நிலவுகிறதோ அதுதான் அவனது பொருளின் விலையாக எடுத்துக் கொள்கிறுன். பல்லாயிரக்கணக்கான உற்பத்தியாளர்கள் இவ்வாறு தங்கள் தங்கள் உற்பத்தி—விற்பனையின் சமநிலையைக் கணித்துக் கொண்டு பொருளாதாரத்தை இயங்கச் செய்கின்றனர். தாங்கள் எதிர்பார்க்கும் இலாபத்திற்கும், இதர துறைகளில் ஈடுபட்டிருந்தால் கிடைத்திருக்கக்கூடிய இலாபத் திற்கும் ஒரு சமநிலை காணப்படாத நிலையிலும், உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்தியைத் தொடர்ந்து செய்கிறுர்கள். இதை எல்லாக் காலத்துக்கும் எல்லா இடங்களுக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாருத சமநிலை என்று நினைத்துவிடாமல், காலா காலத்துக்கு நுகர்வாளரின், விருப்ப மாற்றத்திற்கு ஏற்பவும், தராதர உற்பத்திச் செலவுகளில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்பவும் சமநிலை மேலும் கீழுமாய் இயங்குகிறது. இவ்வாறுன இயக் கத்தையும் சமநிலை சரி செய்துகொள்ளுதலாக (Adjustment) எடுத்துக்கொள்வது முதலாளித்துவப் பொருளாதார வாதிகளின் வழக்கமாகும்.

இதற்கு நேர் எதிரானதே திட்டப் பொருளாதார அமைப் பாகும். பல்வேறு வகையிலும் வண்ணத்திலும், அமைப்பிலும் உருவிலும் வேறுபட்டுத் தனித் தன்மையான நுகர்வாளரைத் திருப்தி செய்யும் நோக்கம் இப்படிப்பட்ட பொருளாதார அமைப்பில் இருக்க முடியாது. அவ்வாறு முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் இருக்கிறதா என்றுல் அங்கும் இல்லை என்று கூறலாம். இருப்பினும் குறிப்பிட்ட ஒரு எல்லைக்குள் பல தரமான, பல்வகைப் பண்டங்களை உற்பத்தி செய்வது முதலாளித்துவப் பொருளாதாரத்தின் பண்பாகும். ஆனல் சோஷியலிசத் திட்டமிடப்பட்டப் பொருளாதாரத்தில் குறிப் பிட்ட சில பொருட்களைக் கொண்ட குவியல்களை அல்லது சேர்க்கைகளையே நுகர்வாளரும் உற்பத்தியாளரும் தெரிந்து கொள்ளும்படியாகக் கட்டாயப்படுத்தப் பெறுகிறுர்கள்.

உற்பத்தியாளரின் சமநிலை என்பது திட்டக் குழுவினரால் தரப்படும் ஒரு சேர்க்கையாகத் திகழ்கிறது.

இப்படிப்பட்ட பொருளாதார நிலையில் மூலதனங்களை முதலீடு செய்வதும் அந்தந்தப் பொருட்களின் அளிப்பு—தேவை சமநிலையின் மேல் சார்ந்திராமல் திட்டக் குழுவினரின் தீர்மானத்துக்கு ஒப்ப அமைகிறது. இவர்களது தீர்மானத்துக்கு உடந்தையாகப் பல காரணங்களும், காரியங்களும் இருந்திருந்தாலும் அவை வெளியே தெரிவதற்கு மார்க்கமில்லை. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் 'சமநிலை' என்பது குருட்டாட்டமான பல எதிர்மறையான சக்திகளின் இழுப்பினுல் தற்செயலாக நிகழும் ஒரு நிலையாகும். ஆனுல் திட்டமிடப்படும் பொருளாதாரத்தில் இச் சமநிலையைத் திட்டவட்டமாகக் கணித்து எய்த முடியும் என்பதைச் சோவியத் பொருளாதார வரலாறு காட்டுகிறது. ஆதம் சுமித் என்ற பேரறிஞன் 'காணப்படாத கரம் ஒன்று பொருளாதார அமைப்பை வழி நடத்துவதாக'க் கூறினுர். திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தில் வழி நடத்தும் கரம் காணப்படுவதாகவும் உணரக் கூடியதாகவும் இருக்கிறது என்பதைச் சோவியத் பொருளாதாரம் காட்டுகிறது.

கடந்த ஐம்பதாண்டுகளாகச் சோவியத் யூனியனில் நிறைவேறி வந்துள்ள திட்டங்களும், பொருளாதார வளர்ச்சியும் அந் நாட்டின் சமுதாய அமைப்பை உறுதியாக உருவாக்கத் துணை செய்தன என்பது அதன் கவர்ச்சிக்கு இன்னெரு காரணமாகும். ஒரு சமுதாயத்தில் பல்வேறு பொருளாதார மாற்றங்கள் கொண்டுவரப்படுமாயின், அச் சமுதாயத்தில் மாறுதல்கள் தோன்றுவது இயற்கையே. சோவியத் சமுதாயம் புரட்சிக்கு முன்னர் விவசாயப் பெருங்குடி மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதாக இருந்தது. அவர்களது உற்பத்தி உறவுகளும் நிலப்பிரபுத்துவ முறையினதாக இருந்தன. பொருளாதார வளர்ச்சியின் காரணமாக இந்தச் சமுதாயம் மறுமலர்ச்சி அடைந்தது. இதிலிருந்து பெறப்படும் பொதுமைகள் பொருளாதார—சமுதாய இயலாருக்கு மிகவும் கவர்ச்சிகரமாகத் தோன்றுவதில் வியப்பில்லை. பொருளாதார வளர்ச்சி ஏற்படும்போது சமுதாயத்தின் கட்டுக்கோப்பிலும், அதன் அமைப்புறுதியிலும், அதன் தாபனங்களிலும், எண்ணப் போக்குகளிலும் ஏற்படும் மாறுதல்களைப் பற்றிப் படிக்க விரும்புவோர் எவருக்கும் சோவியத் பொருளாதாரம் ஒரு வற்ருத ஊற்ருக விளங்குகிறது.

# மேற்கோள் நூற்பட்டியல்


1. Boris Zabelin, 'Industrial Management, Soviet Experience, Novosti press Agency Publishing House, Moscow 1967.'

2. Lev Volodarski, 'USSR, Figures, Facts, Comparisons 1917–67 Novosti press Agency, Moscow 1969'

3. L. I. Brezhneu, 'Following Lenins Course Progress Publishers, Moscow, 1972.'

4. Leo Lenpert (Transl) 'Society and Economic Relations, progress publishers, Moscow, 1969.'

5. Leo Lenpert (Trans) 'Soviet Planning—principles and Techniques progress Publishers, Moscow 1972.'

6. Lev Volodarski, 'Soviet Economy NPA Publishing House, Moscow, 1969.'

7. B. Gogol, 'Organisation of domestic Trade in the USSR Progress publishers, Moscow, 1970.'

8. V. Pereslegin 'Finance and credit in the USSR Progress Publishers, Moscow 1971.

9. Alexei Kosygin, 'A Report Directives of the five-years Economic Development plan of the USSR for 1971-1975 Moscow, 1671.'

10. N. Georgiyev, 'Soviet Union Today Progress Publishers, Moscow, 1971.'

11. A. Podkolzin, A 'short Economic History of the USSR Progress Publishers, Moscow, 1968.'

12. A. YEFIMOV, 'Soviet Industry, P.P. Moscow, 1968.'

13. A. YEZHOV, 'Organisation of Statistics in the USSR P. P. M. 1967.

14. EVERYMAN'S 'REFERENCE BOOK, 'The Soviet Union NPA P.H.M I968.'

15. JOAN ROBINSON, 'An essay on Marxian Economics Macmillan, London, 1967.'

16. — 'Soviet Union, 50 Years P. P. H. 1969.'

17. அ. பொத்கோல்சின், சோவியத் யூனியன் பொருளாதார வரலாற்றுச் 'சுருக்கம் முன்னேற்றப் பதிப்பகம் மாஸ்கோ 1969.'

18. G. SOROKIN, 'Planning in the USSR P.P.M. 1967.'

19. — 'Soviet Financial System P.P.M. 1966.'

20. V. KASYANENKO, 'How Soviet economy won Technical independence, P. P. M. 1966.'

21. வி' எஸ்.ளி ஸெலின்,சோவியத் யூனியனும் இந்தியாவின் எண்ணெய் வளத் தேட்டமும்.'

22. BIMLA PRASAD, (Ed) 'India and the Soviet Union P P H Delhi 1969.'

23. Report : USSR 'Third Congress of Collective Farmes N. P. A. P. H. Moscow 1969.'

24. தியொடோர் ஒய்செர்மான் : மார்க்சீயம் : தோற்று வாயும் சாராம்சமும் சோவியத் நாடு பிரசுரங்கள் சென்னை 1968.'

25. இ. லெ. மனேவிச், 'சோவியத் யூனியனில் முழுவேலை வாய்ப்பு, சோவியத் நாடு பிரசுரங்கள், சென்னை 1968.'

26. KONSTANTIN YAICHKOV, 'Rights Accuring from Loss of Health P.P.H. 1969.'

27. விசவலாத் பெத்ரோவ், செராபிம் உஷகோவ் 'சோவியத் போக்கு வரத்துத் துறை' சோவியத்நாடு பிரசுரங்கள், சென்னை

28. V. POPOV, 'Agriculture in the USSR P.P.H. 1967.'

29. V. GOLIKOV, 'Agricultural Co-operatives P.P.H. 1970.'

30. ABRAMOV, V. Agricultural 'production in the USSR (Principles of Organisation) P.P.H. 1970.'

31. OMAROV, A. 'Industry and Construction in the USSR PPH 1970.'

32. LIDIA LYKOVA, 'Social Security in the USSR NPA PHM 1967.'

33. MIKHAIL LEUESHEV, 'Agriculture in the USSR PPH M. 1967.'

34. A. SEMYONA, 'Labour Protection in the USSR NPA PH M 1970.'

35. HARRY SCHWARTZ, 'Russia's Soviet Economy premice Hall, 1963.'

36. DOBLE, MAURICE, 'Economic Development of USSR.'

37. ALEC NOVE, 'Soviet Economy.'

38. A. BAYKOV, 'Soviet Economic system.'

# கலைச்சொற்கள்

## A

| | | |
|---|---|---|
| Absolute advantage | — | சிறப்பு நலம் |
| Acceleration | — | வேக வளர்ச்சி |
| Accumulation of capital | — | முதல் திரட்சி |
| Advalorem | — | மதிப்பு விகிதம் |
| Agents of production | — | உற்பத்திச் செயலிகள் |
| Agrarian revolution | — | விவசாயப் புரட்சி, வேளாண்மைப் புரட்சி |
| Agricultural depression | — | விவசாய மந்தம் |
| Agricultural produce | — | விவசாய விளையுள் |
| Agricultural holdings | — | விவசாய நில உடைமைகள் |
| Agriculture, Commercial | — | வாணிக விவசாயம் |
| Agricultural labourers | — | விவசாயத் தொழிலாளிகள் |
| Allocation of resources | — | சாதனப் பங்கீடு |
| Arable land | — | சாகுபடி நிலம் |
| Artisan | — | கைவினைஞன் |
| Assess (Tax) | — | மதிப்பீடு, வரிவிதி |
| Assets | — | சொத்துக்கள் |
| Audit | — | தணிக்கை |
| Authorised Capital | — | அனுமதித்த மூலதனம் |

## B

| | | |
|---|---|---|
| Backing of Currency | — | செலாவணிக் காப்பு |
| Balance of Trade | — | வாணிபக் கொடுப்பல் நிலை |
| Balanced growth | — | சரிசம வளர்ச்சி |

Balance of Trade, Favourable — சாதக வாணிக இருப்புநிலை
Balance of Trade, Unfavorable — பாதக வாணிக இருப்புநிலை
Balance of payments — அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலை
Bank — பாங்கு, வங்கி
Banking — பாங்குத் தொழில், வங்கித் தொழில்
Banks Commercial — வாணிக பாங்குகள்
Bartee — பண்டமாற்று
Base year — அடிப்படை ஆண்டு
Betteement levy — மேம்பாட்டு வரி
Bilateral Trade — இருமுக வாணிகம்
Bill — உண்டியல்
Birth rate — பிறப்பு வீதம்
Boom — பொருளாதார வீக்கம்
Board of directors — இயக்குநர் வாரியம்
Bolshevism — போல்ஷவிசம்
Book Keeping — கணக்குப் பதிவியல்
Boycott — புறக்கணிப்பு
Brassage — நாணய அச்சுக் கட்டணம்
Business — வியாபாரம், தொழில்
Business cycle — தொழில் (வியாபாரச்) சகடம்
Business firm — தொழில் நிறுவனம்

## C

Capital — முதல், மூலதனம், அசல்
Capital formation — முதல் ஆக்கம்
Capitalism — முதலாளித்துவம்
Capital goods — முதற் கருவிப் பொருள்கள்
Capital account — முதலினக் கணக்கு
Cartel — கார்ட்டெல்
Central bank — மைய பாங்கு
Centralised planning — மையத்துத் திட்ட முறை

| | | |
|---|---|---|
| Central banking | — | மைய பாங்கு முறை |
| Cheque | — | செக்கு, காசோலை |
| Circulation of money | — | பணச் சுழற்சி |
| Collateral security | — | துணை ஈடு |
| Collective bargaining | — | கூட்டுப் பேரம் |
| Commerce | — | வாணிபம், வாணிகம், வர்த்தகம் |
| Communism | — | கம்யூனிஸம், பொது உடைமை |
| Commercial enterprise | — | வாணிகத் துணிவு, வாணிக நிறுவனம் |
| Commercial policy | — | வாணிகக் கைக்கோள் |
| Commercial Rivaly | — | வாணிகப் போட்டி |
| Commodities | — | பண்டங்கள் |
| Consumer | — | துய்ப்போர், நுகர்வோர் |
| Concentration of industry | — | தொழில் குவிவு |
| Co-operation | — | கூட்டுறவு |
| Cost of production | — | ஆக்கச் செலவு, உற்பத்திச் செலவு |
| Cottage industry | — | குடிசைத் தொழில் |
| Court of directors | — | இயக்குநர் மன்றம் |
| Currency | — | செலாவணி |
| Currency notes | — | கரன்சி நோட்டுகள் செலாவணித் தாள்கள் |
| Currency management | — | செலாவணி நிர்வாகம் |
| Customs duty | — | சுங்கத் தீர்வை |

## D

| | | |
|---|---|---|
| Date | — | அடி விவரங்கள் |
| Decentratisation of Industries | — | தொழில் பரவலாக்கல் |
| Deductive method | — | பகுத்தறி முறை |
| Deficit | — | பற்றுக்குறை |
| Depreciation | — | தேய்மானம், மதிப்பிறக்கம் |
| Depreciation fund | — | தேய்மான ஈட்டு நிதி |
| Depression | — | மந்தம் |
| Devaluation | — | மதிப்புக் குறைப்பு |

Dry land — புன்செய்
Dry farming — புன்செய்ப் பண்ணை

## E

Economic development — பொருளாதார வளர்ச்சி
Economy — பொருளாதாரம், பொருளாதார அமைப்பு, சிக்கனம்
Economy, Mixed — கலப்புப் பொருளாதாரம்
Economic life — பொருளாதார வாழ்க்கை
Economic structure — பொருளாதாரக் கட்டமைப்பு
Economics — சிக்கனங்கள்
Economists — பொருளாதார இயலினர்
Economic history — பொருளாதார வரலாறு
Economy, international — பன்னாட்டுப் பொருளாதாரம்
Employment — வேலை, வேலை வாய்ப்பு
Fquilibrium — சமநிலை
Expenses of production — உற்பத்திச் செலவுகள்
Expenditure — செலவீடு, செலவு
Expenditure, Capital — முதலீட்டுச் செலவு
Exploitation — சுரண்டல்
External Economics — புறச் சிக்கனங்கள்

## F

Factory System — தொழிற்சாலை முறை, ஆலை முறை
Factors of production — உற்பத்திக் காரணிகள்
Farm — பண்ணை
Farm output — பண்ணை உற்பத்தி
Farming mixed — கலப்புப் பண்ணை
Feudalism — படை மானியம், நிலப்பிரபுத்துவம்
Feudal system — படைமானிய திட்டம், நிலப்பிரபுத்துவ திட்டம்

Finance — நிதி
Finance bill — நிதிமசோதா
Foreign trade — வெளிநாட்டு வாணிபம்

## G

Goods — பொருள்கள்
Government undertaking — அரசாங்கத் தொழில்

## H

Handicraft — கைவினைத் தொழில்
Historical school — வரலாற்று முறைக் கருத்தோர்
Hours of work — உழைப்பு நேரம்

## I

Imports — இறக்குமதிகள்
Imperial preference — ஏகாதிபத்தியச் சலுகை
Import duties — இறக்குமதி வரிகள்
Income Tax — வருமான வரி
Indirect Tax — மறைமுக வரி
Industry — தொழில், கைத்தொழில்
Inflation — பணவீக்கம்
Insurance — காப்புறுதி, இன்சூரன்சு
Interest — வட்டி
International trade — பன்னாட்டு வாணிபம்
Investment — முதலீடு
Investment goods — முதலீட்டுப் பொருள்கள்

## L

Labourer — தொழிலாளி, பாட்டாளி
Labour — பாடு, உழைப்பு, தொழிலாளர்
Labour legistation — தொழிலாளர் சட்டம்
Labour Supply — உழைப்பு அளிப்பு
Labour theory of value — உழைப்பளவை மதிப்புக் கோட்பாடு

Labour movement — தொழிலாளர் இயக்கம்
Labour Organisation — தொழிலாளர், நிறுவனம்
Land — நிலம், இயற்கை
Land tenure — நில உரிமை முறை
Large scale production — பெருவாரி உற்பத்தி, பேரளவு உற்பத்தி
Land held in Villeinage — ஊழியக்காரர் நிலம், வில்லன் நிலம்
Legal tender — சட்ட முறைப் பணம்
Land lord — நிலக்கிழார்
Lease — குத்தகை
Levy — வரி, வரிவிதிப்பு
Loans — கடன்கள்
Luxuries — போகப் பொருள்கள்

## M

Manor — மேனர்
Manoriel system — மேனர் பண்ணைமுறை
Manual labour — உடல் உழைப்பு
Manure — உரம், எரு
Materialistic Conception — பொருள் சார்பான கருத்து
Material goods — சடப் பொருள்கள்
Means of production — உற்பத்திச் சாதனங்கள்
Mobility of labour — தொழிலாளி இடப் பெயர்ச்சி
Money — பணம்
Money income — பண வருமானம்
Monopoly — விற்பனைச் சர்வாதீனம் விற்பனை முற்றுரிமை

## N

Nationalization — நாட்டுடைமையாக்கல்
National wealth — நாட்டுச் செல்வம்
Notes — நோட்டுகள், பணத்தாள்கள்
Note issue — நோட்டு வெளியீடு
Notes Currency — செலாவணித் தாள்கள்

## O

Occupation, skilled — திறனுள் தொழில்
Out put — உற்பத்தி, வெளிப்பாடு

## P

Partnership — கூட்டு வியாபாரம்
Payments — செலுத்துக்கள், செலுத்தினங்கள், செலுத்துவன
Per-capital income — தலா வருமானம்
Population — மக்கள் தொகை, ஜனத்தொகை
Population Growth — மக்கள் தொகை வளர்ச்சி
Price retail — சில்லறை விலை
Price control — விலைக் கட்டுப்பாடு
Prosperity — செழுமை, வளம்
Product — விளைவு, உற்பத்தி, ஆக்கம்
Produce — விளைச்சல்
Production — ஆக்கம், உற்பத்தி, தயாரிப்பு
Progress — முன்னேற்றம்
Public finance — பொது நிதியியல்
Public debts — பொதுக் கடன்கள், நாட்டுக் கடன்
Public revenue — அரசாங்க வருவாய்
Public expenditure — அரசாங்கச் செலவு
Public investment — அரசாங்க முதலீடு
Public Utility — பொது வசதி
Purchasing power — வாங்குந்திறன்

## R

Raw material — கச்சாப் பொருள்கள்
Reactionary — பிற்போக்கான
Reserve fund — காப்பு நிதி, ஒதுக்கு நிதி
Resources — வளப் பொருள்கள், சாதனங்கள்

## S

Salary — சம்பளம்
Saving — சேமிப்பு
Schedule — அட்டவணை
Settlements — குடியிருப்புகள்
Slump — மந்தம்
Small scale industries — சிற்றளவுத் தொழில்கள்
Small scale production — சிற்றளவு உற்பத்தி
Socialism — பொதுவுடைமை, சோஷலிசம்
Sociology — சமூகவியல்
Social Insurance — பொதுநல ஈட்டுறுதி, பொது நல இன்சூரன்சு
Social welfare — சமூக நலன்
Supply — அளிப்பு
Supply price — அளிப்பு விலை
Surplus — மீதம், உபரி
Surplus produce — உபரி விளைச்சல்
Surplus Value — உபரி மதிப்பு

## T

Table — அட்டவணை, பட்டி
Taxation — வரி விதிப்பு
Tax, direct — நேர்முக வரி
Technical — தொழில் நுட்பமான
Technique — நுட்ப வினை முறை
Technician — நுட்பத் தொழில் வல்லான்
Technical skill — நுட்பத் திறமை
Tenure (land) — (நில) உரிமை முறை
Three field system — மூவயல் திட்டம்
Turnover — விற்பனைப் புரள்வு, கொள் முதல்

## U

Under developed — வளர்ச்சி குறைந்த
Un developed — வளர்ச்சியில்லாத

Unemployment — வேலையின்மை
Uint of account — கணக்கீட்டலகு

## V

Value — மதிப்பு

## W

Wage — கூலி
Wast land — தரிசு நிலம்
Water ways — நீர் வழிகள்
Wealth — செல்வம்
Welfare — நலம்
Welfare economics — நலப் பொருளாதாரம்
Working classes — பாட்டாளி வகுப்பினர்கள்
Worker — பாட்டாளி, உழைப்பாளி
Work load — வேலைப் பளு
Workman's compensation — வேலையாள் நட்ட ஈடு